देवस्य सुन्दरभुजस्य वनाद्रिभर्त्तुर्हैं शीलवत्त्वमथवाऽऽश्रितवत्सलत्वम् ।
पेशस्वभावमजहद्भिरिहावतारैर्योऽलञ्चकार जगदाऽश्रिततुल्यधर्मा ॥८४

सिंह्याद्रिनाथ तव वाङ्मनसातिवृत्तं
रूपं त्वतीन्द्रियमुदाह रहस्यवाणी ।
एवं च न त्वमिह चेत्समवातरिष्य-
स्त्वज्ज्ञानभक्तिविधयोऽद्य मुधाऽभविष्यन् ॥ ८५

ये भक्ता भवदेकभोगमनसोऽनन्यात्मसञ्जीवना-
स्तत्संश्लेषणतद्विरोधिनिधनाद्यर्थं वनाद्रीश्वरः ।

मध्येऽण्डं यदवातरस्सुरनराद्याकारदिव्याकृति-
स्तेनैव त्रिदशैर्नरैश्च सुकरं स्वप्रार्थितप्रार्थनम् ॥ ८६

श्रीमन्महावनगिरीश विधीशयोस्ते
मध्ये तु विष्णुरिति यः प्रथमावतारः ।
तेनैव चेत्तव महिम्नि जनाः किलान्धा-
स्त्वन्मत्स्यभावमवगम्य कथं भवेयुः ॥ ८७

हे देव सुन्दरभुज त्वमिहाण्डमध्ये
सौलभ्यतो विसदृशं चरितं महिम्नः ।
अङ्गीकरोषि यदि तन्न सुरैरमीभिः
साम्यान्निकर्षपरिपालनमेव साधु ॥ ८८

इहावतीर्णस्य वनाद्रिनाथ ते निगूहतः स्वं महिमानमैश्वरम् ।
उमापतेः किं विजयः प्रियङ्करः प्रियङ्करी चेन्द्रजिदस्त्रबन्धना ॥ ८९

पुच्छोत्पुच्छनमूर्च्छनोद्धतिधुतव्यावर्त्तितावर्त्तव-
त्संवर्त्तार्णवनीरपूरविलुठत्पाठीनदिव्याकृतेः ।
सिह्माद्रीश न वैभवं तव कथं स्वालक्षमालक्ष्यते
पद्माक्षस्य जुघुक्षतोपि विभवं लक्ष्मीधराधोक्षज ॥ ९०

साचलावटतटाकदीर्घिका जाह्नवीजलविवर्द्धितः क्षये ।
शृङ्गसङ्गमितनौर्मनोरभूरग्रतोण्डजवपुर्हि सुन्दर ॥ ९१

प्रलयजनीरपूरपरिपूरितस्वनिलयावसन्नवदन-
भ्रमदशरण्यभूतशरणार्थिनाकिशरणं भवन् स्वकृपया ।
चलदुदधीरिताम्बुकलुषीक्रियाढ्यगमनस्वपृष्ठविधृता-
चलकुल एष मीनतनुरत्र सुन्दरभुजो वनाद्रिनिलयः ॥ ९२

स्वपृष्ठे पृष्ठाद्रिभ्रमणकरणैःकिञ्च फणिनो
विकृष्टिव्याकृष्टिव्यतिविधुतदुग्धाब्धिचलितैः ।

अविस्पन्दोनन्दन्विकसदरविन्देक्षणरुचिः
पुराऽभूस्सिह्माद्रेः प्रियतमहरे कच्छपवपुः ॥ ९३

जगत्प्रलीनं पुनरुद्दिधीर्षतः सिंहक्षितिक्षिन्निलयस्य सुन्दर ।
पुरा वराहस्य तवेयमुर्वरा दम्ष्ट्राह्वयेन्दोः किल लक्ष्मलक्षिता ॥ ९४

न वायुः पस्पन्दे ययतुरथवाऽस्तं शशिरवी
दिशोऽनश्यन् विश्वाप्यचलदचला साचलकुला ।
नभश्च प्रश्च्योति कथितमपि पाथो नरहरौ
त्वयि स्तम्भे शुम्भद्वपुषि सति हे सुन्दरभुज ॥ ९५

अरालं पातालं त्रिदशनिलयः प्रापितलयो
धरित्री निर्धूता ययुरपि दिशः कामपि दिशम् ।
अजृम्भिष्टाऽम्भोधिर्धुमुघुमिति घूर्णन् सुररिपो-
र्विभिन्दाने वक्षस्त्वयि नरहरौ सुन्दरभुज ॥ ९६

नखक्रकचकप्रथिक्रथितदैत्यवक्षस्स्थली-
समुत्थरुधिरच्छटाछुरितबिम्बितं स्वं वपुः ।
विलोक्य रुषितः पुनः प्रतिमृगेन्द्रशङ्कावशा-
द्य एष नरकेसरी स इह दृश्यते सुन्दरः ॥ ९७

क्षितिरियं जनिसंहृतिपालनैर्निगिरणोद्गिरणोद्धरणैरपि ।
वनगिरीश तवैव सती कथं वरद वामन भिक्षणमर्हति ॥ ९८

भार्गवःकिल भवन् भवान्पुरा कुन्दसुन्दरवनाचलेश्वर ।
अर्जुनस्य बलदर्पितस्य तु छेत्स्यति स्मरति बाहुकाननम् ॥ ९९

आज्ञा तवात्र भवती विदिता त्रयी सा
धर्मं तदुक्तमखिलेन वनाद्रिनाथ ।
अन्यूनमाचरितुमास्तिकशिक्षणार्थ-
मत्रावतीर्य किल सुन्दर राघवोऽभूः ॥ १००

वनगिरिपतिरीशितेति देवैस्त्रिपुरहरत्रिपुरघ्नचापभङ्गात् ।
व्यगणि परशुरामदर्शितस्य स्वकधनुषः परिमर्शदर्शनाच्च ॥ १०१

अनवाप्तमत्र किल लिप्स्यते जनै र्न च लब्धमेतदिह भोक्तुमिष्यते ।
अनवाप्तमत्र किल नास्ति राम तज्जगती त्वया तृणमवैक्षि सुन्दर ॥ १०२

शिखरिषु विपिनेष्वप्यापगास्वच्छतोया
स्वनुभवसि रसज्ञो दण्डकारण्यवासान् ।
तदिह तदनुभूतौ साभिलाषोऽद्य राम
श्रयसि वनगिरीन्द्रं सुन्दरीभूय भूयः ॥ १०३

उपवनतरुषण्डैर्मण्डिते गण्डशैल-
प्रणयिभवदुदन्तोद्गायिगन्धर्वसिद्धे ।
वनगिरितटभूमिप्रस्तरे सुन्दर त्वं
भजसि नु मृगयानानुद्रवश्रान्तिशान्तिम् ॥ १०४

कूलेऽब्धेः किल दक्षिणस्य निवसन् दूरोत्तराम्भोधिगान्
दैत्यानेकपतत्रिणाऽच्छिनदितीयं किंवदन्ती श्रुता। (अच्छिन इतीयं)
तत्रैवेश्वरमम्भसां व्यजयथास्तस्माद्वनाद्रीश्वर
श्रीमन् सुन्दर सेतुबन्धनमुखाःक्रीडास्तवाऽडम्बरम् ॥ १०५

रघुकुलतिलक त्वं जातुचिद्यातुधान-
च्छलमृगमृगयायां सम्प्रसक्तः पुराऽभूः ।
तदुपजनितखेदच्छेदनायाद्य गाय-
न्मधुकरतरुषण्डं रज्यसे किं वनाद्रिम् ॥ १०६

द्वे सुन्दरैकतरजन्मनि कृष्णभावे
द्वे मातरौ च पितरौ च कुले अपि द्वे ।
एकक्षणादनुगृहीतवतः फलं ते
नीला कुलेन सदृशी किल रुक्मिणी च ॥ १०७

त्वं हि सुन्दर यदा स्तनन्धयः पूतनास्तनमधास्तदा नु किम् ।
जीर्णमेव जठरे पयोविषं दुर्जरं वद तदात्मना सह ॥ १०८

आश्रितेषु सुलभो भवन् भवान् मर्त्यतां यदि जगाम सुन्दर ।
अस्तु नाम तदुलूखले कियद्दामबद्ध इति किं तदाऽरुदः ॥ १०९

सुन्दरोरुभुजनन्दनन्दनस्त्वं भवन् भ्रमरविभ्रमालकः ।
मन्दिरेषु नवनीततल्लजं वल्लवीधियमुत व्यचूचुरः ॥ ११०

कालियस्य फणतां शिरस्तु मे सत्कदम्बशिखरत्वमेव च ।
वष्टि जुष्टवनशैल सुन्दर त्वत्पदाब्जयुगमर्पितं ययोः ॥ १११

गूहितस्वमहिमापि सुन्दर त्वं व्रजे किमिति शक्रमाक्रमीः ।
सप्तरात्रमदधाश्च किं गिरिं पृच्छतश्च सुहृदः किमक्रुधः ॥ ११२

हे नन्दनन्दन सुसुन्दर सुन्दराह्व
बृन्दावने विहरतस्तव वल्लवीभिः ।
वेणुध्वनिश्रवणतस्तरुभिस्तदा वै
सश्रावभिर्जतुविलायमहो विलिल्ये ॥ ११३

गायंगायं वनगिरिपते त्वं हि बृन्दावनान्त-
र्गोपीसङ्घैर्विहरसि यदा सुन्दर व्यूढबाहो ।
रासारम्भोत्सवबहुविधप्रेमसीमन्तिनीनां
चेतश्चेतस्तव च तु तदा कां दशामन्वभूताम् ॥ ११४

इङ्गितं निमिषितं च तावकं रम्यमद्भुतमतिप्रियङ्करम् ।
तेन कंसमुखकीटशासनं सुन्दराल्पकमपि प्रशस्यते ॥ ११५

वाराणसीदहनपौण्ड्रकभौमभङ्ग-
कल्पद्रुमाहरणशङ्करजृम्भणाद्याः ।
अन्याश्च भारतबलक्रथनादयस्ते
क्रीडास्सुसुन्दरभुज श्रवणामृतानि ॥ ११६

त्वं हि सुन्दर वनाद्रिनाथ हे वेङ्कटाह्वयनगेन्द्रमूर्द्धनि ।
देवसेवितपदाम्बुजद्वयस्संश्रितेभ्य इह तिष्ठसे सदा ॥ ११७

हस्तिशैलनिलयो भवन् भवान् साम्प्रतं वरदराजसाह्वयः ।
इष्टमर्थमनुकम्पया ददद्विश्वमेव दयसे हि सुन्दर ॥ ११८

मध्येक्षीरपयोधिशेषशयने शेषे सदा सुन्दर
त्वं तद्वैभवमात्मनो भुवि भवद्भक्तेषु वात्सल्यतः ।
विश्राण्याखिलनेत्रपात्रमिह सन् सह्योद्भवायास्तटे
श्रीरङ्गे निजधाम्नि शेषशयने शेषे वनाद्रीश्वर ॥ ११९

कल्कीभविष्यन् कलिकल्कदूषितान् दुष्टानशेषान् भगवन् हनिष्यसि ।
स एव तस्यावसरः सुसुन्दर प्रशाधि लक्ष्मीश समक्षमेव नः ॥ १२०

ईदृशास्त्वदवतारसत्तमास्सर्व एव भवदाश्रिताञ्जनान् ।
त्रातुमेव न कदाचिदन्यथा तेन सुन्दर भवन्तमाश्रये ॥ १२१

त्वामामनन्ति कवयः करुणामृताब्धि
त्वामेव संश्रितजनिघ्नमुपघ्नमेषाम् ।
येषां व्रजन्निह हि लोचनगोचरत्वं
हे सुन्दराह्व परिचस्करिषे वनाद्रिम् ॥ १२२

अशक्यं नो किञ्चित्तव न च न जानासि निखिलं
दयालुः क्षन्ता चास्यहमपि न चागांसि तरितुम् ।
क्षमोऽतस्त्वच्छेषो ह्यगतिरिति च क्षुद्र इति च
क्षमस्वैतावन्नो बलमिह हरे सुन्दरभुज ॥ १२३

लङ्कायुद्धहतान् हरीन् द्विजसुतं शम्बूकदोषान्मृतं
सान्दीपिन्यभिजं मृतं द्विजसुतान् बालांश्च वैकुण्ठगान् ।
गर्भे चाऽऽर्ज्जुनिसम्भवं व्युदधरः स्वेनैव रूपेण यः
स्वाभीष्टं मम मद्गुरोश्च ददसे नो किं वनाद्रीश्वर ॥ १२४

आयोध्यगान् सपशुकीटतृणांश्च जन्तून्
किङ्कर्मणो नु बत कीदृशवेदनाढ्यान् ।
सायुज्यलभ्यविभवान्निजनित्यलोकान्
सान्तानिकानगमयो वनशैलनाथ ॥ १२५

हरितवारणभृत्यसमाह्वयं करिगिरौ वरदस्त्वमपूर्विकाम् ।
दृशमलम्भय एव हि सुन्दर स्फुटमदाश्च परश्शतमीदृशम् ॥ १२६

इह च देव ददासि वरान् परान् वरद सुन्दर सुन्दरदोर्द्धर ।
वनगिरेरभितस्तटमावसन्निखिललोचनगोचरवैभवः ॥ १२७

इदमिमे शृणुमो मलयध्वजं नृपमिह स्वयमेव हि सुन्दर ।
चरणसात्कृतवानिति तद्वयं वनगिरीश्वर जातमनोरथाः ॥ १२८

विज्ञापनां वनगिरीश्वरसत्यरूपा-
मङ्गीकुरुष्व करुणार्णव मामकीनाम् ।
श्रीरङ्गधामनि यथा पुरमेष सोऽहं
रामानुजार्यवशगः परिवर्त्तिषीय ॥ १२९

किञ्चेदं च विरिञ्चिभावन वनाद्रीश प्रभो सुन्दर
प्रत्याख्यानपराङ्मुखो वरदतां पश्यन्नवश्यं कुरु ।
श्रीरङ्गश्रियमन्वहं प्रगुणयंस्त्वद्भक्तभोग्यां कुरु
प्रत्यक्षं सुनिरस्तमेव विदधत्प्रत्यर्थिनां प्रार्थनम् ॥ १३०

कारुण्यामृतवारिधे वृषपते हे सत्यसङ्कल्पन
श्रीमन् सुन्दर योग्यताविरहितानुत्सार्य सद्वत्सल ।
क्षाम्यन्साधुजनैःकृतांस्तु निखिलानेवापचारान्क्षणा-
त्तद्भोग्यामनिशं कुरुष्व भगवन् श्रीरङ्गधामश्रियम् ॥ १३१

इदं भूयो भूयः पुनरपि च भूयः पुनरपि
स्फुटं विज्ञाप्स्यामीत्यगतिरबुधोऽनन्यशरणः ।

कृतागा दुष्टात्मा कलुषमतिरस्मीत्यनवधे-
र्दयायास्ते पात्रं वनगिरिपते सुन्दरभुज ॥ १३२

इति श्रीमद्रामानुजाऽचार्यशिष्यप्रवरश्रीवत्साङ्कमिश्रविरचितायां
पञ्चस्तव्यां श्रीमत्सुन्दरबाहुस्तवस्समाप्तः ।

॥ इतिशम् ॥

कृष्णो रक्षतु नो जगत्त्रयगुरुः कृष्णं नमस्याम्यहम्
कृष्णेनामरशत्रवो विनिहताः कृष्णाय तस्मै नमः ।
कृष्णादेव समुत्थितं जगदिदं कृष्णस्य दासोऽस्म्यहम्
कृष्णे तिष्ठति सर्वमेतदखिलं हे कृष्ण रक्षस्व माम् ॥

जयतु जयतु देवो देवकीनन्दनोऽयम्
जयतु जयतु कृष्णो वृष्णिवंशप्रदीपः ।
जयतु जयतु मेघश्यामलः कोमलाङ्गः
जयतु जयतु पृथ्वीभारनाशो मुकुन्दः ॥

॥ ॐ तत्सत् ॥

॥ श्रीमत्सुन्दरराजार्पणमस्तु ॥

॥ ओँ ॥





பலபலநாழும் சொல்லிப் பழித்தசிசுபாலன் தன்னை — அலவ்லைமை தவிர்த்த அழகன் அலங்காரன்மலை
குலமலை கோலமலை குளிர்மாமலை கொற்றமலை — நிலமலை நீண்டமலை திருமாலிருஞ் சோலையதே.

—Periyalwar.

40. The Three Gopurams — "Raya Gopuram"—circa 1500 A. D. (middle), "Padinettambadi Gopuram" —Pre christian era - (Right), "Thondaman Gopuram" (Left) ***renovated*** 1464 A. D.—with Vrishabagiri (Alagar's Hills) in the Back Ground—(*To face Part I pp* 48, 222, 224, 227 and part III Page 102).



41. "Sri Solaimalaikkarasar" of the Nalayira Divya Prabandam —The idol is of Solid Aparanji gold.—He stands in the centre.—He is adorned with and surrounded by some of the most valuable jewels of the Temple. (*To face* Part I -169, 247—Part III-99).

"சோலைமலைக்கரசே ! கண்ணபுரத்தமுதே ! — என்னவலம்களைவாய் ! ஆடுக செங்கீரை —
ஏழுலகமுமுடையாய் ! ஆடுக ! ஆடுகவே !!

—Periyalwar.

ஸ்ரீ:

THIRUMALIRUNJOLAIMALAI

(SRI ALAGAR KOVIL)

STALA PURANA

PART III.

ஸ்ரீ விருஷபாத்ரி மாஹாத்ம்யம் எனும்
திருமாலிருஞ்சோலைமலை (ஸ்ரீ அழகர் கோவில்) ஸ்தல புராணம்,
ஸ்ரீ ஆழ்வார்கள் ப்ரபந்தங்கள், ஸ்ரீ அழகர் கலம்பகம்,
ஸ்ரீ அழகர் அந்தாதி முதலியன.

ஓம்.

ஸ்ரீ:



ஸ்ரீகல்யாணசுந்தரவல்லீ ஸமேத ஸ்ரீசுந்தராராஜபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவிருஷபாத்ரி மாஹாத்மியம்.

'க்ஷேத்ரவைபவ' மென்னும்

முதல் அத்யாயம்.

நைமிசாரண்யவாஸிகளான மஹரிஷிகளானவர்கள் தாங்கள் காலையில் செய்யவேண்டிய 'ஜப, தப' ஹோமாதிகளைச் செய்தபின் பகவத்பக்தியிலீடுபட்டுள்ளவர்களாய் ஒன்று கூடி, பதினெண்புராணங்களையும் வெளியிட்டவரான ஸ்ரீவேதவியாஸ மஹாமுனிவரின் சிஷ்யரும், எல்லாப் புராணங்களின் மர்மங்களையும் அறிந்த ஸ்ரீஸூதமஹாமுனிவரை அழைத்து ப்ரஹ்மாஸனத்தில் வீற்றிருக்கச்செய்து, சொல்லுகின்றனர்.

ரிஷிகள்:—"அறிவாளிகளுக்குள் சிறந்த ஸூதமஹாமுனிவரே! இதற்குமுன் பல புராணங்களைத் தங்களிடமிருந்து கேட்டிருக்கிறோம். பர்வதங்களுடையவிசேஷங்களும், ஸமுத்திரங்களின் விபரங்களும், ஏழு ஸ்தானங்களை ஆச்ரயித்த த்வீபங்களின் விஷயங்களும், அதிக புண்யகரமான தீர்த்தங்களின் பெருமைகளும், பெரிய நகரங்களின் அமைப்புகளும், ஸாமான்யதர்மங்களும், மிகவும் சிரமத்தின் பேரில் செய்யக்கூடிய அநேகம் விசேஷ தர்மங்களும், ப்ரஹ்ம, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ரர்களுடையவும், அநுலோம, ப்ரதிலோமஜர்

களுடைய ஸ்வரூபங்களும், அவரவர்களுடைய தொழிலும், ரஹஸ்யமானதும், ப்ரகாசமானதும், மற்றும் செய்யத்தக்கதும், செய்யத்தகாததும், இகபர சுகங்களைத் தரக்கூடிய தர்மங்களும், நியாய அந்யாயங்களின் ஸ்வரூபமும், மற்றும் செய்கைக்குத்தகுந்த பலனைக் கொடுக்கக்கூடிய தர்மங்களும், "யாவற்றும்" ப்ரபுவான ஸ்ரீபகவானுடைய ச்ரேஷ்டமான ஸாத்வீக புராணங்களிலிருந்து தங்களிடம் கேட்டிருக்கிறோம். 1 to 7

"முன் வராஹபுராண வரலாற்றைச் சொல்லிவருகையில் பெருமைதங்கிய ஸ்ரீபாண்டியநாட்டில் எப்பொழுதும் பகவத் ஸாந்நித்யம் பொருந்திய ஸ்ரீ விருஷபாத்ரியின் பெருமையைச் சுலபமாகச் சொல்லி இருக்கிறீர்கள். அவ்விருஷபாத்ரியின் இருப்பிடமும், அதின் மாஹாத்மியமும் அறிய விரும்புகிற எங்களுக்கு ஸர்வ புராணார்த்தங்களை அறிந்த தாங்கள் உள்ளபடி விபரமாகக் கூறும்படி பிரார்த்திக்கின்றோம். அமுதபானம் செய்பவனுக்குப் போதுமென்ற த்ருப்தி வாராததுபோல், தங்களுடைய முகாரவிந்தத்திலிருந்து பெருகுகிற ஸ்ரீ விஷ்ணு கதாம்ருதபானஸக்தர்களான எங்களுடைய தாபத்தை உங்களுடைய கருணாம்ருதவர்ஷத்தினால் விலக்கி, போக மோக்ஷங்களைக்கொடுக்கும் க்ஷேத்ரங்களுள் உத்தமமும், தேவர்கட்கும், மனிதர்கட்கும் சுபாஸ்பதமான "ஸ்ரீ விருஷபகிரி" க்ஷேத்திரத்தின் மாஹாத்மியத்தைக் கேட்க ஆவல்கொண்டிருக்கிறோம்". 8 to 13

எப்பொழுதும் ஸ்ரீ பகவத்சிந்தாதத்பரர்களான சௌநகாதி மஹாமுனிவர்களால் இவ்விதம் கேட்கப்பட்ட ஸ்ரீ ஸூதமஹாமுனிவர், உலகக்ஷேமங்களை விரும்பும் தங்களால் ஷாட்குண்ய பரிபூர்ணரான "ஸ்ரீஸுந்தரராஜர்" நினைக்கும்படி செய்யப்பட்டார் என்றுசொல்லி, ரிஷிகளுக்குள் தலைவரும், ஸ்ரீமந்நாராயணாம்சபூதரும், தனக்கு பரமாசார்யருமான ஸ்ரீ வேதவியாஸ மஹாமுனிவரை வணங்கி பின்வருமாறு சொல்லுகிறார். 14 to 16

ஸ்ரீ ஸூதர்:—"சௌநகாதி மஹாமுனிவர்களே! நான் கேட்ட ப்ரகாரமும் எனக்குத் தெரிந்தவரையிலும் ஸ்ரீ விருஷபகிரியின்

பெருமையைச் சொல்லுகிறேன். கவனமாகக் கேளுங்கள். நித்ய ஸூரிகளான ஸ்ரீஸநகாதிகளால் நூற்றுக்கணக்கான வருஷங்களாலும் வர்ணிக்கமுடியாத நிகரற்ற அதன் பெருமையை என்போன்றவர்களால் வர்ணிக்கப்படுவது எவ்விதங்கூடும்? என்று எல்லா மஹரிஷிகளைப் பார்த்துச் சொல்லிவிட்டு, ஸ்ரீவிருஷபாசலத்தை நினைத்து, ஸ்ரீஸுந்தரராஜமூர்த்தியை வணங்கி, நற்குணக்கடலில் ஆழ்ந்த மனதையுள்ளவராய்க்கொண்டு, அடிக்கடி மஹான்களால் தூண்டப்பட்டு, ப்ரஹ்மாஸனத்தில் வீற்றிருந்து, ஸபையின் மத்தியில் அவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார். 17 to 20

"முனிவர்களே! உயர்குலப்பிறப்பை நான் அடையாமலிருந்த போதிலும், மஹான்களுடைய கருணையினால் பிறப்பினாலுண்டான தோஷம் நீங்கி உயர்வான ப்ராஹ்மண்யத்தை நான் இப்பால் அடைந்திருக்கிறேன். இவ்விதமான எனக்கு ப்ரம்ஹாஸனங் கொடுத்து இந்தக் கதையை நீங்கள் கேட்பதால் உங்களுடைய அனுக்ரஹத்தினாலேயே சொல்லுகிறேன். எவ்வித குற்றங்களிருப்பினும் பொறுத்துக்கொள்ள வேண்டும். 21 to 22

"மலயபர்வதத்திற்கு வடக்கில் பத்து யோஜனை தூரத்திலும், காவேரி என்னும் 'ஸஹ்யா' நதிக்குத் தெற்கே ஆறு யோஜனை தூரத்திலும், வராஹ பர்வதத்திற்கு கிழக்கே ஆறு யோஜனை தூரத்திலும், கிழக்கு ஸமுத்திரத்திற்கு மேற்கே ஏழு யோஜனை தூரத்திலும், பூமிதேவிக்கு ஸ்தனம் போலுயர்ந்த 'ஸ்ரீ விருஷபாத்ரி' என்று ப்ரஸித்தமான மலை உண்டு. இந்த "விருஷபம்" என்ற கிரிக்கு இதர பர்வதங்களை ஒப்பிடுங்கால் அவைகளெல்லாம் கேவலம் பசுக்கள்போலாகின்றன. மேலும், எல்லாப் பர்வதங்களைக் காட்டிலும் இம்மலை விசேஷப்ரக்யாதியை யடைந்திருந்தமையாலும் இந்த மலைக்கு 'விருஷபாத்ரி' என்ற பெயர் முன்னோர்களால் வாய்ந்திட மற்றொரு காரணமும் ஆயிற்று. மேலும், யமதர்மன் 'விருஷ' என்ற தர்மரூபத்தோடு தபசு புரிந்து பகவானிடத்தில் இம்மலைக்கு 'விருஷபாத்ரி' என்று பெயரிடும்படி பிரார்த்தித்தான். மற்ற பர்வதங்களைக் காட்டிலும் உயர்ந்திருப்பதாலும், சந்திரன் ஸஞ்சரிப்பதாலும்; இம்மலையைப் பெரியோர்கள் 'பர்வத ச்ரேஷ்ட'

மென்று சொல்லுகின்றனர். இம்மலையை இதர பர்வதங்கள், அதனதன் குணவிசேஷங்களால் ஜயிக்கப்படாமலிருப்பதால் 'ஸிம்ஹாத்ரி' என்று ப்ரஸித்தமாயிற்று. மேலும் ஸ்ரீகேசவருடைய ஸாந்நித்யத்தால் இது 'கேசவாத்ரி' என்றும் கருதப்படுகிறது. மிகவும் செழிப்பும் அழகும் வாய்ந்ததான, நூறுயிரக்கணக்கான சோலைகளால் நிறைந்திருப்பதால், இம்மலையைச் "சோலைமலை" (உத்யானசைலம்) என்று முனிவர்கள் அடிக்கடி புகழ்கின்றனர். 23 to 30

"இம்மலையின் சிகரத்தில் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் பாதச் சிலம்பிலிருந்து பெருகியதான நதியொன்றுண்டு. ஜன்மஜன்மாந்தரங்களில் செய்த பாபங்களைப் போக்கடித்து விடுகிறதும், புண்யத்தைத் தருகிறதும், இகபர சுகத்தைத் தருவதாகவும் இருத்தலால் இந்நதிக்கு "இஷ்டஸித்தி" என்று ப்ரஸித்தமுள்ள மற்றொரு பெயரும் உண்டு. பகவத் சரணாரவிந்தத்தினின்று இடைவிடாமல் பெருகுகிறதும், பரமேச்வரன் ஜடாஸம்பந்தமற்றதும், ஜன்ஹு மஹரிஷியினால் உச்சிஷ்டம் செய்யப்படாததும், ஸம்ஸாரபந்தத்தினாலுண்டான அழுக்கைப்போக்கடிக்கிறதும், ஆச்ரயித்தவர்களின் புண்யத்தை அபிவ்ருத்திசெய்வதால் "புண்யச்ருதி" என்ற மற்றோர் பெயருடனும், ஸகல ஜனங்களுடைய ஜனனமரண துக்கத்தை நீக்கக்கூடியதால் "பவஹாரீ நதீ" என்ற மற்றும் ஓர் பெயருடனும், இந்த "நூபுரகங்கா" நதியானது விசேஷ க்யாதியுடன் ப்ரவஹிக்கிறது. 31 to 34

"மேலும், இம்மலையானது ஸகல பாபங்களையும் அடியோடு துலைப்பதால் "ஸவநாத்ரி" (யக்ஞபர்வதம்) என்று ஒரு பெயரை அடைந்திருக்கிறது. ப்ராஹ்மணக் கூட்டங்களாலும் ஸர்வகாலமும் ஆச்ரயிக்கப்பட்ட இந்த விருஷபாத்ரியானது, முன்னோர்களாலும் விசேஷமாகப் போற்றப்பட்டிருக்கின்றது. நாற்புறங்களிலும் சிகரங்களோடு கூடினதும், சங்குபோன்றும், முத்துச்சிப்பிபோன்றுமுள்ள காந்தியுள்ளதும், நாநாவிதமான பக்ஷிஜாலங்களால் நிறையப்பெற்றதுமாயுமுள்ள இந்த விருஷபாசலத்தை மஹரிஷிகள் நமஸ்கரிக்கின்றனர். ரிஷீச்வரர்களாலும், அநேக ப்ரஹ்மநிஷ்டர்களாலும் நிறைந்ததும், பலவித தாதுக்களால் நிறைந்ததுமான சிகரங்களோடு

கூடிய இம்மலையானது ஆகாசத்தைப் பிளப்பதுபோலு மிருக்கிறது. சிலவிடங்களில் ஸ்வர்ணத்துக்குச் சமானமான ப்ரகாசத்தோடும், மற்றும் சிலவிடங்களில் வெள்ளிக்கு ஒப்பான வர்ணத்தோடும், சிலவிடங்களில் மாஞ்ஜிஷ்டத்தைப்போல் மஞ்சள்நிறத்துடனும், சிலவிடங்களில் இரத்னசிரேஷ்டங்களைப்போலும் சிலவிடங்களில் உயர்ந்த மாணிக்கத்தைப்போலும், சிலவிடங்களில் மாகதத்திற்குச் சமானமான காந்தியுடனும், இவ்விதமாக, மற்றும் அநேக வர்ணங்களால் சூரியனின் பலவித தேஜஸ்ஸுகளையும் விசிறியடித்துக் காட்டுவதுபோல் இம்மலை ப்ரகாசிக்கின்றது. சிலவிடங்களில் தாழம் பூவின் ப்ரகாசத்தைப்போலும், சிலவிடங்களில் சந்திரிகையின் ப்ரகாசத்தைப்போலும், பற்பலவிதமாக வெல்லாம் தன்னிடமாகக் கொண்டு நிறைந்து நின்றுள்ள தாதுவிசேஷங்களால் இவ்விருஷ பாத்ரியின் சிகரங்கள் ப்ரகாசித்து விளங்குகின்றது. மேலும், இக்கிரியானது, அலங்கரிக்கப்பட்டிருக்கிற அரசன்போலக் கொடி முடியில் ப்ரகாசிக்கும் சந்திரிகையால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகிறது. 35 to 39½

மேலும், அநேகவித மிருகக்கூட்டங்களாலும், விசேஷ குணங்களுள்ள மரங்களால், நிறைந்ததுமான இம்மலையின் பல ப்ரதேசங்கள், யானைகளாலும், ஸிம்ஹங்களாலும், காட்டு எருமைகளாலும், உத்தமமான மயில்களாலும், மான்களாலும் நிறைந்தும், அவைகளால் செய்யப்பட்ட விசேஷ கர்ஜனைகளினால் பூரித்து இருப்பினும், இம்மிருகங்களெல்லாம் ஸந்தோஷமுள்ளவைகளாயும், க்ரூரமில்லாதவைகளாயும், பலம் பொருந்தியவைகளாயும், ஒன்றை ஒன்று ஹிம்ஸிக்காதவைகளாயுமுள்ள குணாதிசயமுள்ளவைகளாக இருந்தமையால் விசேஷ சோபையோடு விளங்குகின்றது. 41½

நாவல், மா, பலா, லோத்ர, ப்ரியாளு, மகிழ், தவம், திமிசம், திந்துகம், மூங்கில், அளிஞ்சி, பவ்யகம், சண்பகம், அரிஷ்டம், சரிணம், மதூகம், மஞ்சிட்டி, இலந்தை, நெல்லி, கடம்பம், எலுமிச்சை, இது முதலிய விருக்ஷ விசேஷங்களின் புஷ்பங்களால் நிறைந்தும், பழங்களோடு கூடியதும், மனதிற்கு இன்பத்தைத் தந்து கவரக்கூடியது

மான மற்றும் பலவிதமான அழகுகளாலும், இம்மலையினது சோபை வ்ருத்தியடைந்து ப்ரகாசிக்கின்றது. காமவழியில் அகப்பட்ட மனஸ்விகளான கிந்நரஸ்திரீ புருஷர்களும் இருவரிருவராக இம்மலையின் இரம்யமான தாழ்வரைகளில் த்ருப்தியுடன் க்ரீடிக்கின்றனர். கிந்நரமிதுனர்களால் தொங்கவிடப்பட்டிருக்கிற வஸ்திரங்களாலும், வெண்பட்டுகளாலும், வித்தியாதரர்களுடைய நந்தனவனத்தைக் காட்டிலும், இம்மலை ப்ரதேசங்கள் மிகவும் மனதைக் கவருகின்றன. வித்யாதரர்கள் நான்கு பக்கங்களிலும் விளையாடுவதிலிருந்து அப்ரதேசங்கள் மனதைக்கவரக்கூடியதுகளாக இருக்கின்றன. 42 to 46½

சிலவிடங்களில் மேலே இருந்து சப்தத்துடனும், அதிவேகத்துடனும், சிதரிக் கீழே விழக்கூடிய நீர்வீழ்ச்சிகளாலும், ஸாதாரணமாகப் பெருகுகிற அருவிகளாலும், இம்மலையானது முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட யானைபோல் விளங்குகிறது. 47½

குகைகளிலிருந்து வரும் காற்றானது நாநாவிதமான புஷ்பமென்ன, பழவர்க்கங்களென்ன இவைகளிலிருந்து உண்டாகிறதும், அதனாலேயே கிராணேந்திரியத்திற்கு த்ருப்தி அளிக்கிறதாயுமுள்ள வாஸனையோடு ஸதா வீசுகின்றது. இப்பேர்ப்பட்ட இம்மலைப் பிரதேசமானது யாரைத்தான் ஸந்தோஷிக்கச் செய்யாது? 48½

அனேக நூறாயிரக்கணக்கான உத்யானங்களோடும், அனேகம் நூறாயிரக்கணக்கான மலை அருவிகளோடும், நீலோத்பலம், செங்கழுநீர், தாமரஸம், இவைகளால் நிறைந்த பற்பல தடாகங்களோடுங்கூடியதான இம்மலை எங்கும் ரம்யமான தோற்றத்துடன் கூடி இருக்கிறது. இவ்விருஷபகிரியின் கற்பாரைகளோவென்றால் எல்லாம் விசாலமுள்ளவைகளாகவும், நூற்றுக்கணக்கான வர்ண சோபையுடன் கூடினதாகவுமிருக்கின்றன. மேலும், இம்மலையின் பற்பல ப்ரதேசங்களும், புண்யகரமான புஷ்பராகங்களாலும், சில ப்ரதேசங்கள் ஆயிரக்கணக்கான சிகப்புகளாலும், சில ப்ரதேசங்கள் இந்திரநீலக்கற்களாலும், மற்றும் சில ப்ரதேசங்கள் சந்திரகாந்தக்கற்களாலும், சூரியகாந்தக்கற்களாலும் நிறைந்து பிரகாசிக்கின்றன. 49 to 52

இவ்விருஷபாத்திரியிலுள்ள ஜ்யோதிர்லதாதி ஔஷதிகள் இரவில் இங்குமங்கும் அசைந்தாடிக்கொண்டு தங்களுடைய காந்திகளை வீசுவதால் இரவோடுகூடின அக்னி ஜ்வாலைகளின் ஜ்யோதிஸ்ஸை ஒத்து, ப்ரகாசித்துக்கொண்டிருக்கின்றன.

இவ்வனக்கூட்டங்களில் உள்ள சந்தனம், அகில், மஞ்சாடி, முதலிய விருக்ஷங்கள் பூர்ணமாக புஷ்பித்திருப்பதைப் பார்த்தால் சிலவிடங்களில் வீடுகளைப்போலவும், சிலவிடங்களில் உத்யானவனங்கள்போலவும், அலங்காரமாக ப்ரகாசிக்கின்றன. 54

மேலும், இம்மலைப்பிரதேசமானது, சிலவிடங்களில் ஒற்றைக் கற்பாறைகளாலும், சிலவிடங்களில் விசாலமான ப்ரூந்த்யங்களாலும் பொருந்தியிருக்கின்றது. காமிகளுக்கு த்ருப்திகரமான தாமரஸம், நீலோத்பலம், செங்கழுநீர், முதலிய புஷ்பக்கூட்டங்களால் ஆகியதோர் நெருங்கிய விரிப்புகளாலும் இப்பிரதேசங்கள் எங்கும் அலங்கரிக்கப்பட்டு ப்ரகாசிக்கின்றன. மேலும், இப்பருவதமெங்கும் தன் பூஸாரத்தின் விசேஷத்தாலும், அதிகமான ஸம்பத்தாலும், அநேகம் வெள்ளி, தங்கம், இரத்னங்களாலும், நிறைந்து இருப்பதால் குபேரனின் நகரமான அழகாபுரிக்கும் பன்மடங்கு மேலாக விளங்குகின்றது. 55 to 56½

நாநாவர்ணமான மணல் திட்டுகளால் ரம்யமாகவும், ஹம்ஸம், ஜலபக்ஷி (வண்டாழ்வான்பக்ஷி) இவைகளால் நிறைந்தும், நேத்ரானந்தத்தைத் தரக்கூடிய புஷ்பங்களால் நிறைந்த விருக்ஷ சோபையோடு கூடியதாயும், ஸித்தர்களாலும், கந்தர்வர்களாலும், ஸேவிக்கப்பட்டதாயுமுள்ள, 'நூபுரகங்கை' என்ற தேவகங்கை இங்கு விளங்குகிறது. இன்னும் அனேகவித புஷ்பங்கள், பழங்கள், இவைகளால் நிறைந்த பற்பல விருக்ஷ ஜாதிகளாலும், எங்கு பார்த்தாலும் தாமரை ஓடைகளால் நிறையப்பெற்றும் உள்ள 'இம்மஞ்ஜீரதடினீ' குபேரனுடையதுபோல் விளங்குகிறது. 57 to 59

இவ்விடத்திலுள்ள தீர்த்தங்கள் சிலவைகள், யானைக்கூட்டங்களுடைய ஸ்நாநபானாதிகளால் கலங்கினதாக இருக்கின்றன. மேலுமெங்குபார்த்தாலும் ஸ்நாநாதிகள்செய்யக்கூடிய ரமணீயமான தீர்த்

தங்களும், விசேஷமாக இருக்கின்றன. அவ்விடத்திலேயே அநேகம் தபஸ்விகள் ஜடாதாரிகளாகவும், அஜினதாரிகளாகவும் இச்சிலம்பாறில் காலந்தோறும் ஸ்நாநம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்நூபுரகங்காநதியானது சிலவிடங்களில் மணல்திட்டுகளிலுள்ள விருக்ஷங்களைத் தன் ஜலப்பெருக்கினால் நனைத்துக்கொண்டோடுகிறது. சிலவிடங்களில் இரத்னங்களின் காந்தியை யடைந்தும், சிலவிடங்களில் முத்துக்களின் சோபையை யடைந்தும், இந்நதியானது பிரகாசித்து விளங்குகிறது. சிலவிடத்தில் ஸித்தர்களாலும் தபோதனர்களாலும் மனோஹரமாக ஸேவிக்கப்படுகின்ற இச்சிலம்பாறானது விசேஷ சோபையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. மற்றும் சிலவிடங்களில் ஸித்தகணங்களால் குமிழப்பட்டுமிருக்கிறது. 60 to 63

இந்நதியானவள் சிலவிடங்களில் மந்தார, சந்தன, சண்பக, மருதாணி, அசோக, பாதிரி, மகிழ், முதலிய புஷ்பங்களால் வாஸனையுள்ளவளாகச் செய்யப்பட்டும் அழகு வாய்ந்தவளாகவும் தன்பாலுள்ள அநேக சுழல்களால் பார்ப்பவர்கள் மனதைக் கவரும் சக்தியுடனுங்கூடி ப்ரவஹித்தும் செல்கிறாள். மேலும், ஸ்ரீ ஸுந்தரபாஹுவின் திருவடித் தாமரையின் மதுவைப் பருகியதால் இல்லாவண்யவதீ அதிக மதத்தை யடைந்து, கையை விரித்து புருஷனை அழைக்கிறவள்போலும். சிலவிடங்களில், மந்தகதியுள்ளவனிதை போலும், சிலவிடங்களில் மதம் பிடித்த யானையின் நடையை யொற்றவள்போலும், கோபமுள்ள பாமினீபோலும், சிலவிடங்களில் கூச்சலிடுபவள் போலும், சிலவிடங்களில் வெண்மையான நுரையை உடையவளாகவும், சிலவிடங்களில் அலைகளாகிற கைகளால் விரிக்கப்பட்ட புஜலதையையுடையவளாகவும், சிலவிடங்களில் சப்தித்துக்கொண்டும் சிலவிடங்களில் ஒதுக்கப்பட்ட பாசிக் கொத்துக்களால் விரிக்கப்பட்ட கூந்தலை உடையவள் போலும், சிலவிடங்களில் தன் வெண்மையான ஜலங்களால் ஆச்சரியத்துடன் சிரிப்பவள் போலும், 'நிர்மலஸ்வரூப' முள்ள மஹான்களால் பார்க்கப்பட்டு ஆச்சரியப்பட்டவள் போலும், அபஸ்மாரத்தால் பீடிக்கப்பட்டு பயப்படுத்துபவள் போலும், சிலவிடங்களில் கர்வமடைந்து கூச்சலிடும் காமினீ போலுமுள்ள இந்நூபுரகங்கா நதியானவள்

விளங்காநிற்கிறாள். மேலும், இந்நதியானவள் ஸித்தர்களாலும், உயர்ந்த யானைகளாலும், மந்தகதியுள்ள திர்யக் ஜந்துக்களாலும் ஸேவிக்கப்படுவதாலும், கற்களால் மோதப்பட்டு சிலவிடங்களில் மெதுவாகவும், சிலவிடங்களில் அதிக வேகமாகவும், பாய்கிறதினாலும், சிலவிடங்களில் மந்தமாருதங்களால் வீசப்பட்டு ஸேவிக்கப்படுவதாலும், மதோன்மத்தையான காமினிபோல் விளங்குகிறாள். சிலவிடங்களில் நீலநிறம் பொருந்தினவளாகவும், சிலவிடங்களில் வெண்ணுறைகளால் வெளுத்துப்போனவளாகவும் காணப்படுகிறாள். ஸித்தகந்தர்வர்கள், அப்ஸரஸ்திரீகள், மனுஷ்யர்கள், ஸ்நானதத்பரர்களான தேவர்கள், இவர்களெல்லோராலும், எப்பொழுதும், ஆச்ரயிக்கப்படுகின்றாள். ஆதலால் அத்யந்தம் நெருக்கடியுள்ள ஸாமீப்யத்தையுடையவளாகிவிடுகிறாள். 64 to 72½

மேலும், ஸ்நாநகாலங்களில் இவளை ஆச்ரயித்துவருகிற தேவர்களும், மனிதர்களும், ரிஷிகளும், தேவஸ்திரீகளும், மானிடஸ்திரீகளும் அந்தந்த ஸ்நாநகாலங்களில் தங்கள் தங்களை மறந்தும், உயர்ந்தோர் தாழ்ந்தோரென்றும் வித்யாஸமிருந்தும், தன்னுடையது, பிறருடையது என்று தன்னையும் மறந்தும், ஒருவருக்கொருவர் முகங்களைப் பார்த்துக்கொண்டும், திருப்பிக்கொண்டும், அவஸரத்தில் அவரவர்களுடைய ஜலபாத்திரங்களை அடையாமல் ஒருவர் பாத்திரத்தை மற்றொருவர் எடுத்துக்கொண்டும், அதேவிதம் ரிஷிகளுங்கூட தங்கள் தங்கள் வல்கலங்கள், வஸ்திரங்கள் விஷயத்திலும் தடுமாறுதலடைந்தும், அதுபோல் தேவஸ்திரீகள் மனுஷ்யஸ்திரீகள் இவர்களுக்குள் ஒருவருக்கொருவர் தங்கள் தங்கள் விபூஷணங்களில் எவர் எவர் உயர்ந்தவரென்று விவாதித்துச்சண்டைக்கு ஆரம்பித்த மாத்திரத்தில் ரூபத்தாலும், யௌவனத்தினாலும், ஸம்பத்தினாலும், வஸ்திராபரணங்களினாலும், ஸ்ரீ நூபுரகங்கா ஸாமீப்யத்தை யடைந்த மாத்திரத்தால், தேவர்களென்றும், மனுஷ்யர்களென்றும், ரிஷிகளென்றும், ஸித்தர்களென்றும், இத்யாதிபேதங்களும், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதங்களும், எனது உனதென்ற பேதங்களும், நீங்கி மறைந்துபோய் அபேதபுத்தியுடன் ஸமத்ருஷ்டிஸித்தர்களாக ஆகிவிடு

கிறார்கள். ஆகாய மார்க்கத்தில் விமானங்களில் ஸஞ்சரிக்கும் தேவர்கள் இவ்வாச்சரியமாறுதலைப் பார்த்து ஆச்சர்யமடைகின்றார்கள். 73 to 77½

இம்மலையில் பக்தபராதீனரான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் முதன்முதலாகத் தன்னுடைய பரிபூர்ண க்ருபையினால் நித்யமும் எப்பொழுதும் ஸாந்நித்ய மடைந்திருப்பதால் இம்மலையை எவன் எப்பொழுதும் பார்த்து ஸேவிப்பானோ அவன் எவ்விடத்திலும், ஜயசீலனாகவே ஆவன். 79

இவ்விதம் ஸ்ரீவராஹபுராணத்தில்,
க்ஷேத்திரகாண்டத்தில், ஸ்ரீ விருஷபாத்ரி மாஹாத்ம்யமென்ற
இதிஹாஸ ஸ்தலபுராணத்தில் 'க்ஷேத்ரவைபவ'மென்னும்
முதல் அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

ஸ்ரீ:

ஸ்ரீ ஸுந்தரராஜ பரப்ரஹ்மணே நமஹ.

ஸ்ரீவிருஷபாத்ரி மாஹாத்ம்யத்தில் ஸ்ரீதர்மதேவனுக்கு வரமளித்ததென்ற

இரண்டாம் அத்யாயம்.

ரிஷிகள்—

"ஸ்ரீஸூதமஹாமுனிவரே! ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணரான வர் எக்காரணத்தைப்பற்றி வைகுண்டத்திலிருந்து ஸ்ரீ விருஷப கிரியில் அவதாரஞ் செய்தருளினரென்பதையும், எக்காலத்தில் எவரால் பூஜிக்கப்பட்டாரென்பதையும், கேட்க விரும்புகிற எங்க ளுக்கு ஸமஸ்தமான பகவத் சரித்திரத்தையும், நன்றாகச் சொல்ல வேண்டும்" என்று சௌநகாதி மஹாமுனிவர்களால் கேட்கப்பட்ட மஹாபுத்திமானாகிய ஸ்ரீஸூதமஹாமுனிவர் பகவத் ப்ரேமையினால் புளகாங்கித சரீரமுடையவராய்க்கொண்டு சொல்லலுற்றார்.

"பாபரஹிதர்களான ஹே முனிவர்களே! ஸ்ரீவியாஸமஹரிஷி யின் அநுக்ரஹத்தினால் சோலைமலைக்கரசனின் ப்ரபாவத்தைச் சொல்லுகிறேன்; இச்சரித்திரத்தை ஸாவதான மனதோடு கேட்க வேண்டும். 1 to 3½

(வியாஸர் சொல்லியவாறு ஸ்ரீஸூதமஹாமுனிவர் சொல்லுகிறார்).

"ஸ்ரீ பகவானானவர் ஜகத்ரக்ஷணார்த்தமும், எல்லோருடைய ச்ரேயஸ்ஸின் பொருட்டும், மற்றும் ஏதோ நிமித்தத்துடனும் க்ஷீர ஸமுத்திரத்தையடைந்து அவ்விடத்திலேயே ஆதிசேஷசயனத்தில் உலகத்தைக் காப்பாற்றுவதையே காரியமாகக்கொண்டு சயனித் தும், தேவகாரியத்தின்பொருட்டு தேவதைகளால் பூஜிக்கப்பட்டும், அவர்களின் பிரார்த்தனைகளாலேயே யோகநித்திரையை யடைந்து விளங்குகிறார். அவ்வித சேஷசாயியான ஸ்ரீ பகவான் உலகங்கட்கு ஹிதத்தைச்செய்யும் விருப்பத்தினால் இம்மலையில் சீக்கிரமாகத் தன் வாஸஸ்தானத்தை ஏற்படுத்திக்கொண்டார். யாவர்க்கும் சுலப ராய் நினைத்தமாத்திரத்தில் இவ்வுலகத்திலுள்ள ஸகல பிராணிகளை

யும் பரிபாலனம் பண்ணும் பொருட்டும், கர்மமார்க்க தத்பரர்களாக விருக்கும் யக்ஞசீலர்களான ப்ராஹ்மணர்களைக் காப்பாற்றுவதின் நிமித்தமும், இராக்ஷஸர்களை நாசஞ்செய்வதின் பொருட்டும், ஸாது ஸம்ரக்ஷணத்திற்காகவும், க்ஷீராப்திசயனத்தை விட்டு ஸ்ரீபகவான் சோலைமலையை யடைந்தார். க்ஷீராப்தி சென்று பகவத் தர்சனஞ் செய்ய அசக்தர்களான பக்தர்களுடைய ஆபத்தை நிவர்த்திப்ப தற்கும், பாவின ஸம்பத்துக்களை ஓரிடத்தில் சேர்த்துவைப்பதின் நிமித்தம், பக்தர்களிடமுள்ள கருணையினால் ஸர்வகாலமும் இம்மலையில் ஸ்ரீபகவான் ஸர்வாங்க ஸுந்தர பரிபூர்ணராகப் பிரகா சித்துக்கொண்டு வருகிறார். மேலும், ப்ரஸித்தியடைந்த ஸ்ரீஸுந் தரராஜமூர்த்தியானவர், முன் க்ருதயுகத்தில், நூபுரகங்காநதிக் கரையில், மஹாவடவிருக்ஷத்தின் கிழக்கு பாகத்தில் ஸ்ருஷ்டி கர்த்தாவான ப்ரஹ்மாவினால் பூஜிக்கப்பட்டு, பிறகு அந்த வடவிரு க்ஷத்தினடியிலேயே இந்திராதி ஸமஸ்த தேவதைகளாலும், மஹா ரிஷிகளாலும், ஸ்ரீபுருஷஸூக்த மஹாமந்திரத்தினால் பூஜிக்கப்பட் டார். 4 to 11½

"ஒருஸமயத்தில் ஸ்ரீதர்மதேவரானவர் ஸ்வேச்சையாக, ப்ராஹ் மணவடிவத்துடன் இப்பூமியிலுள்ள புனிதமான ஆலயங்களையும், நதிகளையும், ஸமுத்திரங்களையும், பர்வதங்களையும், ஏரிகளையும், மஹான்களால் ஸ்நாநஞ்செய்யத்தகுந்த ரமணீயமான புண்யதீர்த் தங்களையும், சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகையில் பூலோகத்தி லுள்ள அபாவைகுண்டம்போல் விளங்கும் 'சோலைமலையை'யடைந்த வுடன் இதன் வைபவத்தால் மனந்தெளிவடைந்து, க்ஷேத்ரங்கட் குள், உத்தமமான க்ஷேத்ரமென்றும், ஸ்ரீபகவானுடைய வைப வத்தினால் சீக்கிரம் சிந்திதபலத்தைக் கொடுக்கக்கூடிய ஸ்தலம் இஃதென்றறிந்து, இவ்விடத்திலேயே தவம் புரிய மனதுகொண்டு, தெளிவை யடைந்த சித்தமுடையவராகவும், த்ருடமான மன உறுதியை யுடையவராகவும், பஞ்சாக்னி மத்தியிலிருந்து தேவவர் ஷத்தில் எண்ணாயிரம் வாஷகாலம மகத்தான தபம் புரிந்தார். அத்தர்மதேவர், ஸ்ரீ நூபுரகங்கைக்கரையில் "மாதவீ" மண்டபமென் னும் வஸந்தமண்டபத்திற்கு முன்னே மந்தாரபுஷ்பத்திலிருந்து

பெருகும் மகரந்தத்தினால் நனைந்த பூப்ரதேசத்தில் வஸிப்பவரும், ஸ்ரீஸுந்தரராஜரென்ற பெயருடையவரும், சௌந்தர்யத்திற்கு இருப்பிடமாயும் உத்யானவனங்களால் அலங்கரிக்கப்பட்டவராயும், எல்லோரையும் ஸந்தோஷமடையச் செய்வதில் ராஜாதிராஜனாக இருப்பவரும், கருடவாஹனத்தின்மீது வீற்றிருப்பவரும், தேவாதி தேவர்களால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டவருமான ஸ்ரீஸுந்தர ராஜமூர்த்தியை ஸ்தோத்திரஞ் செய்தார். 12 to 20½

"ஸ்ரீ விருஷபாத்ரிநிவாஸனான ஹே ஸ்ரீமந்நாராயண! உன் பொருட்டு, பத்து, நூறு, ஆயிரம், அளவின்றி அடிக்கடி நமஸ்கரிக்கிறேன்" என்று ரோமாஞ்சபூரித சரீரியாகவும், ஆநந்தபாஷ்பத்தால் வ்யாப்தமான கண்களோடும், அடிக்கடி எழுந்தெழுந்து, வணங்கியும், ப்ரதக்ஷிணம் வந்தும், மதுரமாகப் பேசும் திறமை கொண்ட ஸ்ரீதர்மதேவன் ஸ்ரீஸுந்தரராஜருடைய ஸமுகத்தில் விக்ஞாபித்தார். "ஹே ப்ரபோ! தங்களுடைய தர்சனத்தினால் அசுபம் நீங்கி என் ஜன்மமும் ஸாபல்யத்தை யடைந்தது" இவ்விதஞ் சொல்லிநிற்கின்ற ஸ்ரீதர்மதேவனைப் பார்த்து, தேவதேவனான ஸ்ரீபகவான் ப்ரீதியடைந்து, "ஹே வ்ரதசீல! உன்னுடைய தபஸுக்கு மெச்சினேன். உனக்கு மங்களமுண்டாகுக. வேண்டும் வரத்தைக் கேள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். 21 to 25½

ஏகாக்ரசித்தமுடைய ஸ்ரீ தர்மதேவனும் அச்சமயத்தில் ஸ்ரீஸுந்தரபுஜங்களையுடைய ஸ்ரீவிருஷபாத்ரீசரைப் பார்த்து, "ஹே கருணைக்கடலே! புராணபுருஷரான தாங்கள் க்ருபைசெய்து இவ்வஸ்வத்த விருக்ஷத்தினடியிலேயே இருந்து என்னால் செய்யப்பட்ட பூஜைகளை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தனன். இவ்விதம் பிரார்த்தித்துக்கொண்ட ஸ்ரீ தர்மதேவரின் வசனத்தைக் கேட்டு மறுபடியும் ஸ்ரீ தர்மதேவனை நோக்கி பரமப்ரீதியை யடைந்தவராய் ஸ்ரீபகவான் திருவாய்மலர்ந்தருளியதாவது:— 26 to 28

"இந்நூபுரகங்கையின் கரையிலேயே எனக்கு ஆலயம் ஒன்றை நிர்மாணஞ் செய்வாயாக. எனக்குப் ப்ரியமுள்ளதாய்க் கட்டப்படும் அவ்வாலயத்தில் என்னை நீ பூஜித்துக்கொண்டிருப்பாயாக" என்று

தர்மதேவனை நோக்கிச் சொல்லிவிட்டு ஸ்ரீ விருஷபாத்ரிநாதன் அவ்விடத்திலேயே அந்தர்தானத்தை யடைந்தார். உடன் தர்ம தேவரும் அவ்விடத்திலேயே வஸித்துக்கொண்டு மறுபடியும் தவம் புரிந்துவரத் தொடங்கினர். 28 to 29½

சூர்யன் அஸ்தமித்தபின் சந்திரன் உதித்து இரவில் ஸம்பூர்ண கலாவிசிஷ்டனாகச் சோலைமலையின் சிகரத்தை யடைந்தான். தாபத்தை விலக்கக்கூடிய அச்சந்திரனைப் பார்த்து ஸகல வ்ருக்ஷங்களும், எல்லாச் சோலைகளும், அச்சமயத்தில் பரமப்ரீதியை யடைந்தன. வெகுகாலம் பிரிந்திருந்த புத்திரர்களைக்கண்டு தன் கைகளால் தடவிக் கொடுத்து, அமுதவர்ஷம் போலுள்ள ப்ரியவசனங்களால் லாலனஞ்செய்யும் வியோகமடைந்த பிதா போலும், அதிப்ரேமையால் முகமலர்ச்சியடைந்து, காதலியைக் கண்ணுற்று, பிரியவசனங்களால் லாலனஞ் செய்து கொண்டாடும் காதலன் போலும், இந்த ஔஷதீசனான சந்திரன் 'சூரியகிரணங்களால்' வாட்டமடைந்த விருக்ஷராசிகட்கு, ஸந்தோஷத்துடன் தனதமுத கிரணங்களால் திருப்திசெய்து வைக்கிறான். மேலும், நீலவர்ணத்தால் மங்கலுற்ற உன்னதமான வ்ருக்ஷராசிகளையுங்கூட அமுதம் நிரம்பிய தன் கிரணங்களால் மிகவும் உத்ஸாஹத்தை உண்டுபண்ணியவனாகக் காணப்படுகிறான். இம்மலையின் உயர்ந்த சிகரங்களின் அக்ரபாகங்களாலே நன்றாய் உரசப்பட்ட சந்திரனானவன் அவ்வுரசலினாலே தன் அம்ருதப் பெருக்கினால் இச்சோலைமலையை நனைத்துக்கொண்டிருக்கிறான். இங்குள்ள வானரங்கள் மதுபானத்தால் மதித்தவுகளாகி, சந்திரனின் அம்ருதங்களைக் குதித்துக்குதித்துக் கைகளால் ஏந்தி வாங்கி அதிகமாகத் தன் பந்துக்களுக்கும் தன் குழந்தைகளுக்கும் கொடுக்கின்றன. இவ்வைபவத்துடன் சந்திரன் இங்கு பிரகாசித்து வருகிறான். 30 to 37½

தர்மதேவனும், எல்லோருக்கும் ஆனந்தத்தைத் தரும் சந்திரனை நன்கு நோக்கி சௌந்தர்யநிதிபான ஸ்ரீஸுந்தரராஜனுக்கு அச்சந்திரமண்டலாகாரமான ஓர் விமானத்தைச் செய்ய ஆவல் கொண்டு அவ்விருஷபாசலத்திலிருந்தபடியே தேவத்தச்சனான விச்வகர்மாவை நினைத்தார். மந்தாரவிருக்ஷங்களால் ப்ரகாசிக்கிற

நூபுரகங்காநதிதீரத்தில், அச்வத்த விருக்ஷத்திற்குக் கிழக்கே நின்றுகொண்டு, ஸ்ரீதர்மதேவரானவர் எதிரில் வந்து வணங்கி நிற்கும் விச்வகர்மாவை நோக்கி சொல்லலுற்றார். "ஹே விச்வகர்மாவே! புண்யமாயுள்ள இம்மலைச்சிகரத்திலேயே இப்போதே சந்திரமண்டலத்துக்கு ஸத்ருசமான விமானத்தை ஸ்ருஷ்டி செய்யவேண்டும். அவ்விமானம் ஸர்வலக்ஷண ஸம்பன்னமாக இருக்கவேண்டும். அவ்விமானம் நான்கு வ்யூகங்களோடுங் கூடியிருக்கவேண்டும். வ்யாக்ரபாதர், ப்ருகு, முதலிய முனிவர்களும், அஷ்டதிக்பாலர்களும், அஷ்டவஸுக்களும், ப்ரஹ்மாதி தேவதைகளும், ஸநகாதி முனீந்ரர்களும், நாரதர், கச்யபர், அத்ரி, மாரீசர் முதலிய மஹரிஷிகளும், மார்க்கண்டேயர் முதலான தாந்த்ரிகர்களும் அவ்விமானத்தில் இருக்கவேண்டும். மேலும், இவ்விமானமானது சூரியனுடைய ப்ரகாசத்தை ஒத்திருக்கவேண்டும். இவ்விமானத்திலோ அனேக வித கணநாதர்களையும், நான்கு திக்குகளிலும் இருக்கவேண்டிய சக்திகளையும், அதேவிதம் பூதபேதாளங்களையும் ஈசான்ய திக்கில் வீரலக்ஷ்மியையும், யதாக்ரமமாக ஸந்நிவேசம் செய்யப்பட வேண்டும். ஸமஸ்தஜகத்திற்கும் ஆதாரமாக "ஸோமச்சந்த" விமானத்தை நீயே நிர்மாணஞ் செய்யவேண்டும். 38 to 47½

இவ்விதம் தர்மதேவனுடைய ஆக்ஞைப்படியே விமானத்தையும் செய்து முடித்து அதற்கு வேண்டிய ரக்ஷைகளையும் ந்யாஸம் செய்தும் அதேவிதம் "ஸ்ரீ"யையும் விதிப்படி நிர்மாணஞ்செய்து முடிக்கப்பட்டது. விச்வகர்மாவும் தன் ஹஸ்தகௌசலத்தைப் பார்த்துத் தானாகவே பரம ஆச்சரியமடைந்து ஸ்ரீதர்மதேவனை நோக்கி "தங்கள் சொற்படி ஆபூர்வமானதும், ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடியதுமான இவைகளை எல்லாம், செய்து முடித்திருக்கிறேன். தேவதேவரான ஸ்ரீஸுந்தரராஜருக்கு நிர்மாணஞ் செய்யப்பட்ட விமான லக்ஷணத்தைத் தாங்கள் பார்வையிடவேண்டும். ஹே ப்ரபோ! மேலும் இவ்விமானத்திற்குப் பாவனமாக எது எது செய்யப்பட வேண்டுமோ அவைகளை எனக்கு ஆக்ஞாபித்தருள வேண்டும்" என்று சொல்லிமுடித்து, ஸ்ரீதர்மதேவரின் ஸமீபத்தில் வந்து மௌனமாக நின்று கொண்டிருந்தான், நிர்மாணஞ் செய்யப்

பட்ட விமானத்தைப் பார்த்துவிட்டு, விச்வகர்மாவைப் பார்த்து ஸ்ரீதர்மதேவர் சொல்லுகிறார். 48 to 51½

ஸ்ரீதர்மதேவர்—"உம்முடைய கைகளின் அபாரகௌசலத்தை இப்பொழுதுதான் நன்கறிந்துகண்டு கொண்டேன். உம்மிடம் பரம ஸந்தோஷமுமடைந்தேன். இச்சிருஷ்டித்தொழிலில் உயர்ந்தவரே! உம்முடைய அபீஷ்டத்தைச் சீக்கிரஞ்சொல்லும், கொடுக்கிறேன்" என்று ஸ்ரீதர்மதேவரால் கேட்கப்பட்ட விச்வகர்மாவானவர் அவரைப்பார்த்துச் சொல்லுகிறார். ஸ்ரீவிருஷபகிரிநாதரான எம்பெருமான், என்னால் கட்டப்பட்ட இவ்விமானத்தில் எப்பொழுதும் எனக்காக வஸித்து வரவேண்டும். அவ்விதம் ஸ்ரீபகவானானவர் எப்போதும் இங்கு வஸித்துவருவதே எனக்கு ஒப்புயர்வற்ற பலனாகும். மேலும் எதுவரையில் இப்பூமியும் சந்திராதித்யர்களும் இருந்து வருகிறார்களோ அதுவரையும், எதுவரை ப்ரஹ்மகல்பமுண்டோ அதுவரையிலும், இவ்விமானம் என்னால் கட்டப்பட்டதென்று இப்பூவுலகில் எல்லோராலும் விசேஷமாய்ச் சொல்லப்படப் போகிறது. அதே எனக்குப் பரமலாபம். மற்றொன்றிலும் எனக்கு ஆசையில்லை" என்று சொல்லி விச்வகர்மாவும் தான் எப்படித் தோன்றினாரோ; அவ்விதமே அந்தர்த்தானமடைந்தார். 52 to 56½

ஸ்ரீதர்மதேவரும் இவ்விமானத்தின் ஸமீபத்தில் 'அஷ்டாக்ஷர மஹாமந்திரத்தை ஜபித்துக்கொண்டு தேவாதி தேவனான ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் ஸாந்நித்யம் இவ்விமானத்தில் ஏற்படவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஸௌந்தர்யஸாகரனாகவும், ஸுந்தரத்தோளுடையோனும், கருணாநிதியாகவும் உள்ள ஸ்ரீபகவானானவர் தர்மதேவனுக்கு அனுக்ரஹஞ்செய்ய வேண்டுமென்ற ப்ரியத்தோடுகூட ஸ்ரீதேவி, பூதேவி, இவர்களோடு கூட இந்த திவ்யவிமானத்திற்குள் ஆவிர்ப்பவித்தார். அப்பொழுது தேவர்கள், ஸித்தர்கள், கந்தர்வர்கள், சாரணர்கள், குஹ்யகர்கள், தேவந்ருத்யர்களான அப்ஸரஸ்திரீகள் முதலிய எல்லோரும் தேவதேவனான ஸ்ரீஸுந்தராஜனை ஸ்தோத்திரஞ் செய்தார்கள். தேவதுந்துபிகள் முழங்கின. ரிஷிகணங்களும் அச்சமயம் ஸ்தோத்திரஞ் செய்யலானார்கள். ஸ்ரீதர்மதேவனும், ரோமஹர்ஷண முண்டுபண்

ணக்கூடியதும், அத்புதமுமான இக்கோலாஹலத்தைப் பார்த்து விட்டு ஸ்படிகமயமாயும், இரத்னமயமாயுமுள்ள ஸ்ரீசோமச்சந்த விமானத்தின் மத்தியில் இந்திரநீல இரத்னம்போலுள்ள ஸ்ரீஸுந்தர ராஜனை தரிசித்தார். இரத்னங்களால் அழகாகவும், சிகப்பாயுமுள்ள ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட உயர்ந்த திருமேனியை உடையவராகவும், ஸுந்தரமான தோளுடனும், காம்பீர்யமான அவயவசோபையோடும், ஸ்வர்ணதேஜஸ்ஸோடு கூடிய மனோகரமான சரீரத்தோடும், சோலைமலைக்கரசரான ஸ்ரீ ஹரியானவர் விளங்கினார். பீதாம்பரதாரியாயும், ஸ்ரீவத்ஸாங்கிதனாகவும், மஹாலக்ஷ்மியோடுங்கூட விளங்குகிற வக்ஷஸ்தலத்தையுடையவராயும், ஸ்படிகம் போல் பளபளப்பாய் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் திருமேனியையுடையவராகவும், அலைகள்போல் அசைந்துகொண்டிருக்கும் லோசனங்களை யுடையவராகவும், தோள்களின் மத்தியிலுள்ள நக்ஷத்ரஸமூஹம் போன்ற ஹாரங்களின் காந்தியை யுடையவராயும், ப்ரயோக சக்ரத்தினால் (உத்யோக சக்ரம்) பிரகாசிக்கும் தக்ஷிண கராரவிந்தத்தையுடையவராயும், வலம்புரியோடு கூடிய சங்கத்தினால் (பாஞ்சஜன்யம்) ப்ரகாசிக்கிற வாமகராரவிந்தத்தையுடையவராயும், கௌஸ்துபமென்ற மஹா இரத்னபாணத்தினால் அலங்கரிக்கப்பட்ட கழுத்தையுடையவராயும், அம்ருதாலத்தை ப்ரவஹித்துக் கொண்டிருகின்ற தாமரஸம், சந்திரன், இவைகளைப்போல் மலர்ந்த பிரகாசித்த முகமண்டலத்தையுடையவராயும், செம்பரத்தம் பூப் போலும், கொவ்வைக்கனிபோலும், பவளம்போலும், தளிர்போலுமுள்ள அதரோஷ்டங்களையுடையவராயும், மிகவும் நீண்டு அழகு பொருந்திய கெண்டைமீன் ஜோடிகள் போன்ற கண்களை யுடையவராயும், இருகண்களாகிற இரண்டு ஸமுத்திரங்கட்கும் மத்தியில் போடப்பட்டுள்ள அணைக்கட்டு போல் பிரகாசிக்கிற அழகு பொருந்திய நாஸிகையை யுடையவராயும், தாமரை புஷ்பத்தின் மத்தியிலுள்ள வண்டுகளால் வைக்கப்பட்டதுபோல் தோற்றுகிற ஊர்த்வ புண்டரத்தோடு கூடியவராகவும், மன்மதனுடைய பிரஸித்திபெற்ற வில்போல் வளைந்த இரண்டு புருவங்களால் அலங்கரிக்கப்பட்டவராயும், அர்த்தசந்திரன்போல் அழகு பொருந்தி விஸ்தாரமான

நெற்றிப் பிரதேசத்தினால் மனோகரராயும், நூறுயிரக்கணக்கான பாலசூர்யோதயத்தைப்போல் ப்ரகாசிக்கிற இரத்னகிரீடத்தினால் ஜ்வலித்துக்கொண்டிருப்பவராயும், தன் பாதாரவிந்தம்முதல், திருமுகமண்டலமுள்பட ஒவ்வோர் அங்கமும், ஸாமுத்ரிகா சாஸ்த்ர ப்ரகாரமுயர்வான அபிஜாத ஸம்பத்துடன் கூடியவராயுமுள்ள ஸ்ரீஸர்வாங்க ஸுந்தரராஜனைக் கண்ணால்கண்டு ஸேவித்தும், எழுந்து நமஸ்கரித்து வணங்கியும், அதற்குப்பிறகு ஸ்ரீ தர்மராஜாவானவர் ஸ்ரீ விஷ்ணுஸூக்தத்தாலும் ஸ்ரீபுருஷஸூக்தத்தாலும் சோலைமலைப்பெருமானை தியானித்து பூஜித்தார். 60 to 73

அந்த ஸ்ரீவிருஷபகிரிநாதரும், ஸ்தோத்திரத்தைக்கேட்டு மனமகிழ்ந்து அத்தர்மதேவனைப் பார்த்துச் சொல்லுகிறார். உன்பாலுள்ள ப்ரியத்திற்காகவே இம்மலையில் பரிசுத்தமான ஸ்ரீ நூபுரகங்கையினுடைய பக்கத்திலுள்ள, "ஸ்ரீ" விருக்ஷத்தினடிப்ரதேசத்தில் (பில்வமரம், அரசமரம்,) விச்வகர்ம நிர்மிதமான விமானத்தில் கல்பகோடி வரையில் வஸித்து வருகிறேன். என்னுடைய ஆராதனைக் காரியங்களையும், உத்ஸவங்களையும் சிறப்பாகச் செய்து, நீ சௌக்கியமாக இருப்பாயாக. கல்பத்தின் முடிவில் என்னை நீ அடைவாய் என்று சொன்ன ஸ்ரீபகவானின் வார்த்தையைக்கேட்டு ஸ்ரீதர்மதேவரானவர் ஒப்புயர்வற்ற ஓர் வரத்தை வேண்டிக்கொண்டார். 74 to 76½

தாங்கள் தேவர்களுக்கு எப்படிச் சுலபராக இருக்கிறீர்களோ அதுபோல் மனுஷ்யர்களுக்கும் அவ்விதமே சிரமமில்லாமலடையத் தக்கவராக இருக்கவேண்டும். வேண்டிய வரத்தையளிக்கும் "ஹே ப்ரபுவே! தாங்கள் ஸகலவித மனிதர்களாலும், ஸுலபராக பூஜிக்கப்படும்படி இருந்து, எல்லோரும் வேண்டிக்கொள்ளும் வரங்களைக் கொடுத்தருள வேண்டும்; எனது இந்தப் பிரார்த்தனையை நிறைவேற்றி வைக்கவேண்டும்" என்று இவ்வாறு ஸ்ரீ தர்மராஜனால் பிரார்த்திக்கப்பட்ட ஸுந்தரத்தோளுடையானும், தேவாதிதேவனுமான ஸ்ரீஸுந்தரராஜன் அத்தர்மதேவனைப் பார்த்துச் சொல்லுகிறார். "ஹே மகா புத்திமானே! சந்திரவம்சத்தில் மலயத்துவஜனென்று பெயருடைய என் பக்தன் உண்டாகப்போகிறான். அவன்

என்னை தினந்தோறும் தவறாமல் பூஜித்து வருவான். அதுமுதல் எல்லோருக்கும் பூஜிக்கத் தக்கவனாவேன். நீ கேட்ட வரத்தைக் கொடுத்தேன். ஹே தர்மதேவனே! இன்னும் என் முன்னிலையில் நீ என்ன வரங்களை விரும்புகிறாய்'' என்று சொன்ன ஸ்ரீவனசைல நாதனை ஸ்ரீதர்மராஜர் மறுபடியும் வணங்கிப் பிரார்த்திக்கிறார்.

77 to 81½

இந்த ஸ்ரீவிருக்ஷமானது, எப்பொழுது மாறுதலையடையும், இதற்கு வேறு பெயர் எப்பொழுது ஏற்படும் என்று கேட்கப்பட்டதிற்கு ஸ்ரீபகவான் கூறுகிறார்.

இந்த ஸ்ரீவிருக்ஷமானது, க்ருதயுகத்தில் ஆலவிருக்ஷமாகவும், த்ரேதாயுகத்தில் அச்வத்த மரமாகவும், த்வாபரயுகத்தில் பில்வ வ்ருக்ஷமாகவும், கலியுகத்தில் ஜ்யோதிர் (ப்ரதீப) விருக்ஷமாகவும் ஆகிறது.

இந்த ஜ்யோதிர் விருக்ஷத்தினடியிலுள்ள என்னை என் பக்தர்களுங்கூட அர்ச்சிக்கக் கடவார்கள். அவர்கள் அர்ச்சனையினால் நானும் உடனே ப்ரீதியடைந்து அவர்களுக்கு என்னுடைய பரம பதத்தை அளித்திடுவேன் என்று ஸ்ரீபகவான் திருவாய்மலர்ந்தருளினார்.

82 to 84

இவ்விதம் ஸ்ரீவாமனபுராணத்தின்
பத்தாவது அத்யாயத்தில் க்ஷேத்ரமாஹாத்ம்ய காண்டத்தில்
ஸ்ரீவிருஷபாத்ரி மாஹாத்ம்யமென்னும்
இதிஹாஸ ஸ்தல புராணத்தில்
ஸ்ரீதர்மதேவனுக்கு வரமளித்ததென்னும்
இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

ஸ்ரீ:

ஸ்ரீவிருஷபாத்ரி மாஹாத்ம்யத்தில் "சிலம்பாற்றின் வைபவ" மென்னும்

மூன்றும் அத்யாயம்.

எந்த மலையின் சிகரத்தில், ஸ்ரீபகவானுடைய இரத்னபாதச் சிலம்பிலிருந்து உண்டான ஸ்ரீநூபுரகங்கா நதியானது, பூமியில் விரஜாநதியே நேரில் வந்தாற்போல் விளங்குகிறதோ, அந்தச்சோலை மலையை ஸேவிக்கிறோம். 1

வ்ரதநியமங்களை யுடையவர்களாயும், பகவத் பக்தியினால் ப்ரகாசிக்கிறவர்களாயும், பரமப்ரீதியை யடைந்தவர்களாயுமுள்ள சௌநகர் முதலான எல்லா மஹரிஷிகளும், புராணங்களின் உண்மைகளையறிந்தவராயும், மிகவும் புத்திசாலியாயும், வியாஸமஹரிஷிக்குச் சிஷ்யராயும், உதாரசித்தவ்ருத்தியை யுடையவராயும், எல்லாவித உத்தமகுணங்களை யுடையவராயுமுள்ள ஸ்ரீ ஸூதபுராணிகரை ஸ்தோத்திரஞ்செய்து சொல்லுகிறார்கள். ஸ்ரீவிருஷபகிரியினுடைய ஸமஸ்தமான வைபவங்களையும் நன்றாகக் கேட்டோம். மறுபடியும் அங்கு தானே வஸிக்கிற ஸ்ரீஸுந்தரரான ஸ்ரீஹரியினுடைய பெருமையையும், ஸ்ரீநூபுரகங்கையின் பெருமையையும், கேட்க மிகவும் ஆவலுள்ளவர்களாக இருக்கிறோம். அளவில்லாத தேஜோவானான ஸ்ரீஸூதமஹாமுனிவரே! உம்முடைய வாக்காகிற அம்ருத ஸாரங்களால் எங்கள் ச்ரோத்ரங்களை மூழ்கடிக்கச் செய்யுங்கள். உம்முடைய முகாரவிந்தத்தினின்று பெருகுகிற கர்ணசுகரமான அம்ருதரஸத்தின் ருசியை ஒருதரமேனும் அனுபவிப்பானேயாகில் பவஸாகரத்தில் நன்றாய் முழுகிக்கிடக்கிற சித்தவ்ருத்தியையுடையவனுங்கூட முக்தியையடைகிறான். வியாஸரென்ற மேகத்திலிருந்து பெருகுகிற அம்ருதரஸத்தால் நீங்கள் எங்கும் நனைக்கப்பட்டிருக்கிறீர்கள், உம்முடைய வாக்கம்ருதங்களால் நூறாயிரக்கணக்கான, நதிகள் பூர்ணமாய் நிறையப்பெற்று, ப்ரவஹித்துக்கொண்டு அடிக்கடி ஜனங்களின் தாபத்தைப் போக்கடித்துக்கொண்டும், வருகின்

றன. ஸம்ஸாரமென்கிற அக்னியினால் பொசுக்கப்பட்டவர்களாயும் பகவானை அடையவேண்டுமென்ற விருப்பமுடையவர்களுமான பிராணிகளுக்கு உங்களுடைய வார்த்தைகளே அவர்கள் உஜ்ஜீவித்திருப்பதற்குக் காரணமாய் ஏற்பட்டிருக்கிறது. எங்களுக்கும் இது ஜீவநாடிகளாகவே ஆகுகின்றன. ஆகையால் நியமவானான ஹே முனிவரே! ஸ்ரீ நூபுரகங்கையானது, எல்லோருக்கும் மங்களத்தைச் செய்கிறதாயும், ஜனங்களுக்கு மோக்ஷத்தையளிப்பதில் உபகாரிணியாயும் விளங்குகிறதே! அந்த நதியானது ஆதியில் எப்படி உண்டானது? என்ற உண்மையையும், யாருக்கு முக்தியளித்ததென்ற விவரத்தையும், யாருக்கு நேரில் தர்சனங் கொடுத்ததென்ற விஷயத்தையும், இந்தப் பூவுலகத்தில் அதில் ஸ்நாநம் பண்ணியகாரணத்தால் முக்தியடைந்தவர் யாரென்ற எல்லா விபரத்தையும், இப்பொழுது எங்களுக்கு விஸ்தாரமாகவே சொல்ல வேண்டும். 2 to 12

இவ்விதம் சொன்ன சௌனகாதி முனிவர்களின் எல்லா வார்த்தைகளையுங் கேட்டு, ஸ்ரீஸூதபுராணிகர் முதலில் தனது குருவினது பாதாரவிந்தங்களை மனதினால் தியானித்தும், மானஸீகமாகநமஸ்காரம் செய்துவிட்டும் புராண சரித்திரத்தைச் சொல்ல ஆரம்பித்தார். 13

ப்ரஹ்லாதாழ்வாருக்கு 'விரோசன' னென்ற ப்ரஸித்தனான ஒரு புத்திரனிருந்தான். அவ்விரோசனனுக்கு அசராம்சம் பொருந்தியவனாயும், மஹாபலசாலியாயும், எப்பொழுதும் செவ்வையாக வார்த்தை சொல்லுகிறவனாயும், எதையுங் கொடுக்கக்கூடிய (தாதாவாயும்) வள்ளலாகவும், ஸத்யமான ப்ரதிக்ஞையை யுடையவனாகவும், ஜனங்களுக்குள் அளவற்ற தேஜோவானாயுமுள்ள "பலி" என்று ஒரு புத்திரனிருந்தான். அவன் வெகுகாலந் தவம் புரிந்து, தேவர்களாலும், மற்ற எல்லோராலும், எவ்வித ஆயுதங்களாலும், தனக்கு மரணமில்லாமலிருக்கும்தன்மையான வரத்தைப்பெற்றான். அவன் வரத்தைப்பெற்ற ஆரம்பத்தில் யுத்தத்தில் தேவர்களை ஜயித்து பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் என்ற மூவுலகங்களையும் தன் வசமாக்கிக்கொண்டு அனுபவித்துக்கொண்டும்

வந்தான். இந்திராதிதேவர்கள் எல்லோரும், திக்பாலகர்களும், தங்கள் தங்களதிகாரப்பதவிகளை இழந்தும், தங்கள் தங்கள் உயிரையேனும் காப்பாற்றிக்கொள்வதிலாவலுடையவர்களாகி, மலைகளின் குஹைப்ரதேசங்களுக்குள் ஓடிப்போய் ஆந்தைகளைப்போல் ஒளிந்து கொண்டும், வெகு யுகங்கள் மேருபர்வதத்தில் வஸித்து வந்தும், பிறகு எல்லோருஞ் சேர்ந்து, ப்ரஹ்மாவைச் சரணமடைந்து, நமஸ்கரித்துச் சொல்லுகிறார்கள். "ஹே ப்ரபோ! நாங்கள் சத்ருக்களால் அவமதிக்கப்பட்டோம். தாங்களே சகல பிராணிகளுக்கும் ஸ்ருஷ்டிகர்த்தாவாகவும், ரக்ஷகராகவுமிருக்கிறீர்கள். தங்களால் கொடுக்கப்பட்ட வரச்செறுக்கடைந்த அசுரன் தேவர்களுடையவும், மனுஷ்யர்களுடையவும், கந்தர்வர்களுடையவும், ஐச்வர்யங்களையெல்லாம் தானே அனுபவிக்கிறான். தேவாதிதேவனே! ஐச்வர்யமிழந்த எங்களெல்லோருக்கும், எங்கள் ஸ்தானங்களைத் தாங்கள் தானே கொடுக்கவேண்டும். நாங்கள் உங்களுடைய சரணாரவிந்தங்களைத் தவிர மற்றொன்றையுமறியோம்" என்று தேவர்களால் நன்றாய்ப் பிரார்த்தித்துக்கொள்ளப்பட்ட பிதாமகரான ப்ரஹ்மாவும் சொன்னார். "குழந்தைகளே! உங்களுக்குப் பயம் வேண்டாம். உங்களுடைய ஐச்வர்யங்களையும் நீங்களிழந்த ஸ்தானங்களையும் அதிசீக்கிரமாக அடைவீர்கள்" என்று அவர்களை ஆச்வாஸப்படுத்திவிட்டுப் புராணபுருஷராயும், ஜகத்காரணராயும், ஆத்யந்தரஹிதராயும், அழிவற்றவராயும், ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்கட்கும் எல்லா உலகங்களுக்கும் முக்யகாரணராயும் உள்ள ஸ்ரீமந்நாராயணனை ஸ்தோத்திரஞ் செய்யலாயினர். 14 to 24½

அப்பொழுது பக்தவத்ஸலரான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் அன்பினால் அந்த மஹாத்மாவான பிரஹ்மாவின் முன்பு தோன்றினார். சரணமடைந்தவர்களின் துக்கத்தைப் போக்கடிக்கிறவனும், லோகநாதனுமான ஸ்ரீபகவானை நமஸ்கரித்து, மஹாதேஜஸ்வியாயும், ப்ரஜைகளுக்கு நாதராயும், அழிவற்றவருமான பிரஹ்மாவானவர் ஸ்ரீமந்நாராயணனைப் பார்த்து "ஹே ப்ரபோ! இப்பொழுது இந்திராதி ஸகல தேவர்களும் அவரவர்களுடைய ஸ்தானத்தை இழந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய

மனோபீஷ்டங்களை உடனே பூர்த்தி செய்யவேண்டியவராயிருக்கிறீர்கள்" என்று சொன்னார். இவ்விதம் உரைக்கப்பட்ட ப்ரஹ்மாவின் வார்த்தையைக்கேட்டு ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் ஸ்ரீ ப்ரஹ்மாவைக் குறித்துச் சொல்லுகிறார். "உம்முடைய மனதின் அபிப்பிராயத்தை நாம் முன்னமேயே அறிந்தோம். கச்யபருக்கும், அதிதிக்கும் புத்திரனாகியும், இந்திரனுக்குத் தம்பியாகியும் உதயமாகி, பிரஹ்மசாரிப் பையன் வடிவமடைந்து, யாசகமென்னும் வியாஜத்தினால் அப்பலிச்சக்ரவர்த்தியின் ஸகல ஐச்வரியங்களையும், அபஹரித்துப் பிறகு மேல்படி உத்தமமான பதவியை இந்திரனுக்கு மறுபடியும் கொடுக்கிறேன்" என்று ப்ரஹ்மாவைச் சமாதானஞ் செய்து நாசரஹிதரும் எல்லோருக்கும் ப்ரபுவானவருமான ஸர்வேச்வரன் தன் ஸாமர்த்தியத்தினால் காச்யபரின் மனதில் புகுந்தார். உடனே அதிதியின் கர்ப்பத்தை யடைந்து வாமனாவதாரத்துடன் ஆவிர்ப்பவித்து 'உபேந்திர' னென்ற ப்ரஸித்தமான பெயர் வாய்ந்து தபஸ்ஸைச் செய்துகொண்டும், மனதில் தன் கார்யத்தைச் சிந்தனை செய்துகொண்டும், ப்ரபுவான வாமனமூர்த்தியானவர் இப்புவியில் ஸித்தாச்ரமத்தில் சிலகாலம் வஸித்துக்கொண்டிருந்து, பிறகு பலிச்சக்ரவர்த்தியின் யாகசாலையை யடைந்து, மூன்றடியை யாசித்தார். தர்மத்தின் ஸ்வரூபத்தை அறிந்த பலிச்சக்ரவர்த்தியும், "அப்படியே கொடுக்கப்பட்டது" என்று அதற்குப் பதிலளித்தார். "ஹே! அஸுர ராஜேந்திரனே! தபஸ் செய்யப்போகு மெனக்கு மூன்றடி பூமி சீக்கிரம் கொடுக்கப்படவேண்டும்" என்று சொல்லப்பட்ட வார்த்தையினால் பலிச்சக்ரவர்த்தியை மோஹிக்கும்படிசெய்து பலிஷ்டர்களுக்குள் பலவானான எம்பெருமானானவர் தன் கையினால் தான் ஜலத்தை வாங்கின தத்க்ஷணத்திலேயே வளர்ந்து, பெரியதோர் உருவத்தை எடுத்து மூவ்வுலகத்தையும் இரண்டடியால் ஆக்ரமித்து, மூவ்வுலகத்தையும் தனக்கு வசமாக்கிக்கொண்டு மஹாபலியைப் பார்த்து மறுபடியும் சொல்லுகிறார். "தர்மங்களை அறிந்தவர்களுக்குள் சிரேஷ்டனே! உன்னால் இன்னும் ஓரடி இடம் கொடுக்கப்படவேண்டுமே" என்று சொன்னார். வெட்கத்தை அடைந்த பலிச்சக்ரவர்த்தியும் இன்னுமோரடியை என்னுடைய

சிரஸ்ஸின்மேல் வைத்தளந்து எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்ல, ஸகல வைபவங்கட்கும் இருப்பிடமான ஸ்ரீபகவான் அதிக த்ருப்தியடைந்து மந்தஹாஸஞ் செய்துகொண்டு பலிச்சக்ரவர்த்தி யைப் பாதாள லோகத்தில் அழுத்தினார். 25 to 38

அந்த த்ரிவிக்ரமாவதார காலத்தில் பிரஹ்மாவினால், ப்ரக்ஷாளனஞ் செய்யப்பட்ட பகவத் சாணூரவிந்த ஜலமானது, ஆகாசத்தில் ஜயக்கொடிபோல் விளங்குகிறது. இப்பொழுதும் அது ஆகாச கங்கையாக ப்ரவஹித்து ஸித்தர்களாலும், கந்தர்வர்களாலும் ஸேவிக்கப்பட்டு ஆகாசத்தில் ஹம்ஸக்கூட்டம் போல் விளங்கி வருகிறது. அக்கங்கை மறுபடியும், மூன்று ப்ரகாரங்களான ப்ரவாஹங்களாக ஸ்வர்க்கத்திலும், பூமியிலும், அந்தரிக்ஷத்திலும் செல்லுகிறது. த்ரிவிக்ரமபகவானுடைய திருவடியிலுள்ள இரத்னப் பொற்சிலம்பு அசையும்பொழுது அந்த ஜலமானது இவ்விருஷப கிரியின் சிகரத்தில்விழுந்தது. அருவியாக ப்ரவஹித்து இம்மலையில் தேவர்களால் ஸேவிக்கப்பட்டு இரமணீயமான காந்தியுடனும், வைரத்திற்குச் சமானமான காந்தியோடும், சிலவிடங்களில் வெண்மையான வர்ணத்தோடும், சிலவிடங்களில் இந்திரநீலக்காந்தியோடும், சிலவிடங்களில் மரகதச் சாயையோடும், சிலவிடங்களில் அழகான வைடூர்ய காந்தியோடும், சிலவிடங்களில் முத்துக்குச் சமானமான பளபளப்போடுங்கூடி, முத்துக்களுக்கு உத்பத்தி ஸ்தானமான இந்நதியானது, அதிகஅழகோடும், அதிக பரிசுத்தத்தோடும், அதிருசிகரமாயும், ஸித்தர்கள், சாரணர்கள், கந்தர்வர்கள், வித்யாதரர்கள் இவர்களால் ஸேவிக்கப்பட்டும், நிகரற்றதாயும், குறைவற்றதாயும், நூபுரத்திலிருந்து உண்டான இத்தேவகங்கையானது இம்மலையிலுள்ள சோலை விருக்ஷங்களினடியை நனைத்துக்கொண்டும், அவ்விடத்திய கொடிகளையும், அவ்வன ப்ரதேசத்திலுள்ள சண்பக, அசோக, புந்நாக, பகுள, ஆம்ர, விருக்ஷங்களையும், யூதிகா, ஜாதி, கமல, கல்ஹாரம் முதலிய புஷ்பஜாதிகளையும், தாயைப்போல் அடிக்கடி நனைத்து நனைத்து வளரச்செய்துகொண்டும், சோலைமலையிலிருக்கும் ஸ்ரீஸுந்தரராஜமூர்த்திக்கு ப்ரியபத்னியைப்போலவும், எப்பொழுதும், நாதன் திருவடி ஸமீபத்திலிருந்து

மூவுலகமளந்த பாதாரவிந்தங்களுக்கு சிச்ரூஷை செய்யும் காரா விந்தங்களையுடைய மங்களகாரிணியாகவுள்ள ஸ்ரீபார்ப்திகன்யையான மஹாலக்ஷ்மிபோலும், முத்துமாலையினாலலங்கரிக்கப்பட்டும், ரிஷிகளால் ஸேவிக்கப்பட்டும், கார்யஸித்தியை விரும்பும் தேவாஸுர மனுஷ்யர்களாலும் ஸாத்விக குணம் பொருந்திய முனிவர்களாலும் கொண்டாடப்பட்டு 'இஷ்டஸித்தி' என்கிற பெயரோடு இந்நூபுர கங்கை விளங்கிவருகிறது. "மரீசி" முதலிய முனிவர்கள் இந்நூபுர கங்கையில் ஸ்நானஞ் செய்து அழுக்கற்றவர்களாய் ஸ்ரீ விஷ்ணு ஸாயுஜ்யத்தையடைந்திருக்கிறார்கள். அதன்பிறகு "தர்மதேவனும்" ஸ்ரீ விஷ்ணு ஸாலோக்யத்தையும், அதன்பிறகு "ப்ரஹ்மதேவனும்," நூபுரகங்கா ஸ்நானத்தினால் ஸ்ரீ விஷ்ணு ஸாமீப்யத்தையு மடைந்திருக்கிறார்கள். 'ஸுதபஸ்' என்ற ரிஷியும் ஸ்ரீநூபுரகங்காஸ்நானத்தினாலும், ஸ்ரீவிருஷபகிரி வாஸத்தினாலும், ஸ்ரீஸுந்தராஜமூர்த்தியின் ஸேவையினாலும் ஸ்ரீ விஷ்ணு ஸாரூப்யத்தை யடைந்திருக்கிறார். 39 to 53½

முனிவர்கள்—"ஸ்ரீஸூதபுராணிகரே! முக்தியடைந்ததாகச் சொல்லப்பட்ட அந்த யோகி என்பவர் யார்?" என்று கேட்ட சௌனகாதிமஹரிஷிகளைப்பார்த்து ஸமர்த்தரான ஸ்ரீஸூதபுராணிகர் சொல்லுகிறார். "முன்னொருஸமயம் பரத்வாஜகுலத்திலுதித்த 'ஸுதபஸ்' என்று பெயருடைய ஒருவர் மோக்ஷத்தை விரும்பி இந்த ஸ்ரீ விருஷபகிரியில் தபஸ் பண்ணிக்கொண்டிருந்தார். ஒருஸமயம் அவர் ஸ்ரீநூபுரகங்கா மத்தியில் அகமர்ஷண ஸூக்த ஜபஞ் ஜெபித்துக்கொண்டு ஜலத்தினுள் முழுகிக்கொண்டிருக்கும் ஸமயம், அங்கு துர்வாஸர் முதலிய மஹாமுனிவர்கள் எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். மோக்ஷகாமியாய் அகமர்ஷணஸூக்த ஜபத்தினால் ஜலத்தைவிட்டு வெளிவராமல் வெகுநேரம் வரையில் மூழ்கி இருக்கும் ஸுதபஸ் என்னும் ரிஷியானவர் வந்திருக்கும் பரிசுத்தர்களும் முனிச்ரேஷ்டர்களுமான தங்களை அவமதித்ததாகப்பாவித்து துர்வாஸ ப்ரமுகர்களான ரிஷிகள் எல்லோரும் ஸுதபஸ்ஸை சபிக்கத்தொடங்கினார்கள். "அர்க்யம், பாத்யம் முதலான உபசாரத்திற்கு அர்ஹதையாயுள்ளவர்களாயும், இந்நதிக்கரையில் வெகு

நேமாக நின்றுகொண்டு இருப்பதாலேயே பரமபாவனர்களான எங்களை இலக்ஷ்யம் செய்யாமலும், ஆதரவு செய்யாமலும், நீ தீர்த்தத்திலேயே மூழ்கிக்கிடந்தமையால் "ஹே! துர்ப்புத்தி யுடையவனே! நீ மண்டூகமாகக் கடவாய்!" என்று இவ்விதம் சபித்துக் கூறிய துர்வாஸாதி மஹரிஷிகளைப் பார்த்து, பிராஹ்மணரான ஸுதபஸ் சொல்லுகிறார். "அகமர்ஷண ஸூக்தத்தின் முடிவை எதிர்பார்த்து ஜலத்தில்கொஞ்சந் தாமதித்துவிட்டேன். ரிஷிகளாயுள்ள தாங்கள் அதுவிஷயத்தில் க்ஷமித்துக்கொள்ளல்வேண்டும்" என்று சொல்லி அழுக்கற்ற சித்தவ்ருத்தியுடையவர்களான துர்வாஸாதிகளை நமஸ்கரித்துவிட்டு, நின்றுகொண்டிருந்தார். அப்போது அந்த ஸுதபஸ்ஸைப் பார்த்து துர்வாஸ ப்ரமுகர்கள் சொல்லுகிறார்கள். "நீர் ஸ்ரீஸுந்தரராஜமூர்த்தியின் ஸேவையாலும் 'இஷ்டஸித்தி' என்ற ஸ்ரீ நூபுரகங்காநதியில் ஸ்நானஞ்செய்வதினாலும், இம் மண்டூக சரீரத்தை விடப்போகிறீர்" என்று சாபாவஸானத்தைச் சொல்லிவிட்டு துர்வாஸாதி எல்லா முனிவர்களும், ஸ்ரீ நூபுரகங்கா நதியில் ஸ்நானஞ்செய்துகொண்டும், பாலவடிவுடன் கூடியிருக்கும் ஸ்ரீஸுந்தரனென்று பெயருடன் விளங்கும் ஸ்ரீ விருஷபாத்ரிநாதனை விதிப்படி பக்தியுடன் அர்ச்சித்துக்கொண்டும், பன்னிரண்டு வருஷம் வரை அவ்விடத்திலேயே வஸித்துக்கொண்டிருந்து அவருடைய அநுக்ரஹத்தினால் ஸ்ரீவாராஹ க்ஷேத்ரத்தை யடைந்தார்கள். மண்டூக வடிவமடைந்த ஸுதபரும், அவர்களை வணங்கி எப்பொழுது என்னுடைய ஸ்வயரூபத்தை யடைவேன் என்று ஆச்சரியத்துடன் கேட்க, மண்டூகரைப்பார்த்து, பிராஹ்மணச்ரேஷ்டர்கள் சொல்லுகிறார்கள்.—"நீயும் எங்களோடு கூடவரக் கடவாய்! நாங்கள் எல்லோரும் சேர்ந்து, பன்னிரண்டு வருஷம் ஸ்ரீவாராஹ க்ஷேத்ரத்தில் வஸிக்கப்போகிறோம். எங்களுடன் நீயும் அங்குவந்து வஸிக்கக்கடவாய். நாம் வஸிக்கப்படும் அம்மலையானது உன் பெயரால் 'மண்டூகபர்வதம்' என்று அலங்கரிக்கப்பட்டதாய் விளங்கப் போகிறது. உன் பெயருள்ளதாக 'மண்டூகதீர்த்தம்' என்றும் ஒரு தீர்த்தமும் மேற்படப்போகிறது; இதில் ஸந்தேகமே இல்லை. "ஹே முனிசிரேஷ்டரே! ஸ்ரீ நூபுரகங்கையும், அங்கே தானே வரப் போகிறாள். தேவாதிதேவனான ஸ்ரீஸுந்தரரென்ற பெயருள்ள

ஸ்ரீ ஹரியும், தேவர்களோடுகூட தானே அங்கு வந்து ஸாந்நித்யம் செய்யப்போகிறார். நீர் அங்கேயே அவரை ஆராதித்து முக்தராவீர்" என்று சொன்ன துர்வாஸாதிகளின் வார்த்தைகளைக் கேட்டு அவர்களோடு கூடவே சென்றார். அங்கேயே மகத்தான உத்தம தவம் புரிந்தார். அங்கேயே "அழகர்" என்ற பெயருடன் கூடிய ஸ்ரீஸுந்தரராஜமூர்த்தியும், ஸாந்நித்யம் செய்தார். ஸ்ரீ நூபுர கங்காநதியும் கூட அங்கேயே தானே உண்டாயினாள். ஸந்தோஷமடைந்த மனதுடைய ஸுதபரும், அப்போது அந்நூபுரகங்கையைப் பூஜித்தும், அப்பிரவாஹத்தில் ஸ்நானம் செய்தும், பரிசுத்தராகி ஸ்ரீ நூபுரகங்காதீரத்தில் பரமாஸனத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீஸுந்தரராஜமூர்த்தியை வெகுகாலம் ஆராதித்து, ஸ்ரீஸுந்தரமூர்த்தியின் ஸாரூப்யத்தை யடைந்தார். இன்னும், பல முனிசிரேஷ்டர்களும், முக்தியை யடைந்திருக்கிறார்கள். 54 to 74

"த்வாதசி தினத்தில்" ஸ்ரீ நூபுரகங்கையில் ஸ்நானஞ் செய்பவர்கள் மனுஷ்யர்களானாலும், பக்ஷிகளானாலும், சண்டாளர்களானாலும், முக்தர்களாகி, ஸகலவித மலமும் நீங்கியவர்களாய் புண்யத்தை யடைந்து, ஸ்ரீவிஷ்ணு ஸாயுஜ்யத்தை யடைவார்கள். ஒரேதடவை ஸ்நானம் செய்த மாத்திரத்தினால் கோடி ஜன்மங்களில் செய்த பாபங்கள் நசித்துவிடுகிறதென்றால் எவன் தான் அதைப்போய் ஸேவிக்காமலிருப்பான்? "ஐப்பிசி மாதம் சுக்லபக்ஷ த்வாதசி"யன்று எவனொருவன் பரிசுத்தமான மனதோடு ஸ்ரீ நூபுரகங்காநதியில் ஸ்நானஞ் செய்கிறானோ அவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டவனாக ஆகிறான். இதில் ஸந்தேகமே இல்லை. விசேஷமாகச் "செவ்வாய்க்கிழமை"யிலுங்கூட இந்நூபுரகங்கையில் ஸ்நானம் செய்வதால் மனுஷ்யன் தன்னிஷ்டஸித்தியை யடைகிறான். 75 to 78

த்ரிவிக்ரமாவதாரஞ்செய்த ஸ்ரீ பகவானுடைய பாதச்சிலம்பிலிருந்து உண்டான ஸ்ரீ நூபுரகங்காதீர்த்தத்தை தர்சனஞ் செய்வதாலும் விசேஷமாக ஸ்மரிப்பதாலும் யாவரும் முக்தியடைகிறார்கள். அதே தேசத்தில் வஸிப்பவர்களுக்கு முக்தி எப்பொழுதும் கையிலேயே இருக்கிறது. 79

இவ்விதம், ஸ்ரீஸுந்தரேசருடைய ஸகல வைபவமுஞ் சொல்லப்பட்டது. ஸ்ரீ நூபுரகங்கையின் பெருமையும், அதில் ஸ்நானஞ் செய்கிறவர்களுடைய பலனையும், புத்திமானும், ஸ்ரீவிஷ்ணுபக்தனுமான மலயத்வஜ பாண்டியனுக்களிக்கப்பட்ட ஸாந்நித்யமும் விஸ்தாரமாகவே முன்னமேயே சொல்லப்பட்டது. இவ்விருஷபகிரிநாதனுடைய ஆச்சரியகரமான இம்மாஹாத்ம்யத்தை ச்ராத்தகாலத்தில் பாராயணஞ் செய்யும் மனிதன் தன்னுடைய பித்ருக்களை உத்தாரணஞ் செய்து, ஸ்வர்க்கலோகத்திற்கு அனுப்பி, இன்னும், தானும் விஷ்ணு லோகத்தில் கொண்டாடப்படுகிறான். தினந்தோறும், பரிசுத்தமான மனதோடு ச்ரத்தையுடன் ஒருவன் இம்மாஹாத்ம்யத்தைப் படித்தாலும், ச்ரவணஞ் செய்தாலும், வேதவேதாங்கங்களை அப்யஸித்ததினால் ஏற்படும் ஞானத்தின் ஒப்பற்றபலனை யடைவான் என்பதில் கொஞ்சமும் ஸந்தேகமில்லை. 80 to 84

இவ்விதம் ஸ்ரீப்ரஹ்மாண்டபுராணத்தின்
91-வது அத்யாயத்தில் க்ஷேத்ரமாஹாத்ம்ய காண்டத்தில்
ஸ்ரீவிருஷபாத்ரி மாஹாத்ம்யமென்னும்
இதிஹாஸ ஸ்தல புராணத்தில்
"சிலம்பாற்றின் வைபவ" மென்னும்
மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

ஸ்ரீ:

ஸ்ரீவிருஷபாத்ரி மாஹாத்ம்யத்தில் "குப்ஜபாண்டியனின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிவைத்த" தென்னும்

நான்காம் அத்யாயம்.

ஸ்ரீஸூதர்:— சௌநகாதி முனிவர்களே! பரிசுத்தமாயும், பரமாச்சர்யகரமாயுமுள்ள மாஹாத்ம்யத்தையும், சந்திரவம்சத்திலுதித்த அரசர்களுடைய சொல்லப்போகும் ஸத்கதையையும் இங்கிருந்து மறுபடியுங் கேளுங்கள். புரூரவசக்ரவர்த்தியின் புத்ரனும், மஹா பலசாலியாயுமுள்ள 'இந்திரத்யும்ன' னென்ற ஸ்ரீமான் ஒருவனிருந்தான். அவனுக்குப் புத்திரனாகவும் பெருமைவாய்ந்தவனாகவுமுள்ள 'மலயத்வஜ'னென்று ஒரு அரசனிருந்தான். இவ்வரசச்ரேஷ்டன் மேருவின் தெற்கு திக்கிலுள்ள ஸகல அரசர்களையுஞ் ஜயித்து, மேருபர்வதத்தில் தன்னுடைய பெயர் தெரியும்படி அடையாளஞ்செய்து, மறுபடியும் மதுரைக்கு வந்து புரோஹிதராயுள்ள அகஸ்த்ய மஹாமுனிவரையே மந்திரியாக்கிக்கொண்டு அவர் மூலம் சிகித்ஸனாகி ஆயிரம் வருஷம் வஸித்து வந்தான். 1 to 4

ஒருஸமயம் அகஸ்த்ய மஹா முனிவரைப் பார்த்து, "ஹே முனிபுங்கவ! எனக்கு நினைத்தவிடமெல்லாம் செல்லக்கூடிய விமானமொன்று தரவேண்டும்" என்று பிரார்த்திக்க, முனிவரும் ஸந்தோஷமடைந்து, நினைத்தவிடமெல்லாம் செல்லும் ஓர் விமானத்தை அவ்வரசனுக்குக் கொடுத்தருளினார். அம்மலயத்வஜ பாண்டியன் அவ்விமானத்திலாரோஹணித்து, தினந்தோறும் கங்காநதியும் ஸமுத்திரமும் சேருமிடத்தில் ஸ்நானஞ் செய்வதும், கயா க்ஷேத்திரத்திலுள்ள கதாதரனை ஸ்ரீமாதவனையும் அர்ச்சிப்பதும், வேதத்தின் கரையைக் கண்டவர்களும், பகவத் பக்தர்களுமாகிய பிராஹ்மணோத்தமர்களுடன் கூட ஸ்ரீமாதவனைப் பூஜிப்பதும், மறுபடியும் மதுரைவருவதும், இவ்விதமாகவே விமானத்தில் ப்ரதிதினமும் போய் வந்துகொண்டு பூஜா கார்யங்களை நடத்தி வந்தான், 5 to 8

ஒருஸமயம் மலயத்வஜபாண்டியன் விஷ்ணுவைப் பூஜிப்பதற்காக கயா க்ஷேத்திரத்திற்குச் சென்றுகொண்டிருந்தான். அது ஸமயம் ஸ்ரீவிருஷபகிரியின் பிரதேசத்தில் அவனுடைய விமானத்தின் நிழலானது விழுந்தது. உடனே எம்பெருமானடியார்களான பார்ஷதர்கள் அவ்விமானத்தை அதனுடைய நிழலைக்கொண்டே பிடித்து இழுத்துக்கொண்டார்கள். அதனால் மிகவுங்கவலையடைந்த அரசனும் அங்கு சஞ்சலசித்தனாக ஆயினன். அதுஸமயம் ஸ்ரீ விருஷபகிரீஸ்வரரும், மேககர்ஜனை போன்ற சப்தமுடையவராய் அசரீரியாக இருந்து இனிமையான வாக்யத்தைச் சொன்னார். "அரசனே! இம்மலையில் என்னுடைய பாதாரத்னச் சிலம்பிலிருந்து உண்டான நதிச்ரேஷ்டமானது கங்காஜலத்திற்கும் அதிகமான பெருமையுடையதாய் இம்மலையில் சுபகரமாய் ப்ரவஹிக்கிறது. என்னுடைய கலாம்சங்களிலிருந்து உண்டானதாயும், சுபஜலமுள்ளதாயும், நிகரற்றதாயுமுள்ள ஸ்ரீநூபுரகங்கையில் ஸ்நானஞ்செய். கோடி ஜன்மங்களில் செய்த பாபங்களையும் பாக்கியில்லாமல் நொடிப்பொழுதில் போக்கிவிடும். என் பாதத்திலிருந்து ப்ரவஹித்த நதியானதால் அது சுத்த பக்தனாலநுபவிக்கத்தக்கதாயும், எல்லோருக்கும் ப்ரியத்தைச் செய்யக்கூடியதாயும் இருக்கிறது. அரசனே! த்ரிவிக்ரமாவதாரகாலத்தில் என்னுடைய விஸ்தாரமானபாதமானது பிரஹ்மாவினால் ஜலரூபமாயிருந்த தர்மதேவனைக்கொண்டு பாத ப்ரக்ஷாளனஞ்செய்யப்பட்டது. அப்பொழுதுமுதல் அந்த தீர்த்தம் கங்கை என்ற பெயருடன் ஆகாசத்திலிருந்து மூன்றாகப் பிரிந்து மூவுலகங்களிலும் ப்ரவஹித்து மூன்று உலகங்களின் பாபங்களையும் எப்போதும் போக்கடித்துக்கொண்டிருக்கின்றது. அந்த கங்கையைச் சூலபாணியானவர் தன் ஆத்மசுத்தியின்பொருட்டுத் தலையில் தரித்தார். என்னுடைய பாதகலையிலிருந்து உண்டான இந்நதியானது எல்லோருக்கும் பலவகையானவருக்கும் பக்ஷிகளுக்குங்கூட முக்தியைக் கொடுக்கிறது. நீயும் இதிலேயே ஸ்நானஞ் செய்து என் ஆராதனையை ஆசரித்து வருவாயாக. என் பக்தர்களோடு கூட இருந்து பரிசுத்தமான மனதுடன் என்னுடைய சரணகமலத்வந்த்வத்தை அர்ச்சித்து, என் பூஜைகளைச் செய். நான் இங்கு ஸ்ரீதர்மதேவனால் இதற்குமுன் நிர்மாணஞ்செய்யப்பட்ட ஸ்ரீசோமச்

சந்தவிமானத்தில் பிரஹ்மாவின் ஆயுஸ்வரை வஸித்திருக்கப் போகிறேன். புத்திசாலியான ஹே மலையத்வஜனே! ராஜாக்கள் காலந்தோறு மென்னை அர்ச்சிக்கப் போகிறார்கள், நீயும் முன் செய்த ஸ்வார்ஜித புண்ய விசேஷத்தினால் என் பக்தர்களுக்குப் பக்தனாகி இருந்து ஸந்தேகமில்லாமல் என்னிருப்பிடத்தை யடைவாய்" என்ற ஸ்ரீஸுந்தரரின் வார்த்தையைக்கேட்டு அரசனுமங்கேயே வஸித்து வந்தான். 9 to 22

"ஸ்ரீவிருஷபாத்ரியின் ப்ரதேசத்தில் வஸிப்பவனும் அழகுக்கிருப்பிடமானவனும், ஸ்ரீகாந்தனும், லக்ஷ்மியினாலலங்கரிக்கப்பட்ட மார்பையுடையவனும், ஸ்ரீஸுந்தரனென்றும், சோலைமலையிலிருப்பவனென்றும், ஸ்ரீஸுந்தரபாஹு என்றும், அண்டினவர்களின் ஆபத்தைப் போக்குபவனென்றும் ஸ்ரீபரமஸ்வாமி என்றும் பெயருடைய உத்தமனான என்னை ஸகல வைபவங்களோடு நன்காராதித்து விசேஷ பூஜையைச் செய்வாயாக. இன்னும் ராஜேந்திரனே!! வேகவதியின் தெற்குக் கரையின் பூப்ரதேசத்தில் விச்வகர்மநிர்மிதமான விமானத்திலும் வஸித்துக்கொண்டிருக்கிறேன். அங்கும் வேதபாரகர்களான பிராஹ்மணர்களைக்கொண்டும், என்னுடைய ஆராதனையையே ப்ரியமாகக்கொண்ட என் பக்தர்களைக்கொண்டும், நீ அங்கும் வந்து பரிசுத்த மனதோடு உன்னுடைய விபவங்களால் என்னை நன்றாகப் பூஜை செய்" என்று ஸ்ரீவிருஷபாத்ரிவாஸியான ஸ்ரீ ஸுந்தரபுஜ மூர்த்தியினால் சொல்லப்பட்ட மலயத்வஜ பாண்டியனும் அவைகளை எல்லாவற்றையும் சொன்னபடியே செய்து வைத்தான். 23 to 27½

அம்மலயத்வஜபாண்டியனும் 'சந்திர கேது' என்ற புத்திரனிடத்தில் இராஜ்ஜியத்தை ஒப்பிவித்து, ஸன்யாஸமடைந்து, ப்ரார ப்தகர்மத்தின் முடிவிற்குப்பிறகு முக்தியை யடைந்தான். சந்திரகேதுவின் புதல்வன் 'குப்ஜஸுந்தர'னென்ற பெயருடைய அரசனும் இராஜ்யத்தைப் பிதாவிற்கு ஸமானமாக, தர்மத்தோடு ப்ரஜைகளை இரக்ஷித்துவருங்காலத்தில் புத்திரனில்லாதவனாக இருந்ததினால் ஸ்ரீவிருஷபாத்ரியை யடைந்து புத்திரன் வேண்டுமென்று தவம் புரிந்தான். உலர்ந்த சருகுகளைச் சாப்பிட்டுக்கொண்டு புத்

திரனை விரும்பி ப்ரதிதினம் ஸ்ரீவிருஷபகிரீஸ்வரனைப் பூஜை செய்து கொண்டுவரும் நாளில், பக்தர்களுடைய கஷ்டத்தைப்போக்கும் ஸ்ரீவிருஷபகிரீச்வரரான கேசவர், குப்ஜஸுந்தரபாண்டியனுடைய மனோபீஷ்டத்தைக் கொடுக்கும் விருப்பமுடையவராக எதிரில் தோன்றி ச்ரேஷ்டனான அவ்வரசனைப் பார்த்து "நானுனக்கு ப்ரஸன்னனானேன், உன்னுடைய தபஸ்ஸால் ஸந்தோஷமடைந்தேன். வேண்டும் வரங்கொடுக்கிறேன்" என்று சொன்னார். இவ்விதம் குப்ஜஸுந்தரபாண்டியனின் முன்னிலையில் சோலைமலைக்கரசர் வரங் கொடுக்கத் தயாராக எழுந்தருளியிருக்கும் ஸமயம், ஹிமய மலையிலிருந்து ஸ்ரீ விருஷபகிரியின் ஸமீபம் வருகிறவராயுள்ள ஸ்ரீ பரமேஸ்வரனைப் பார்த்து "ஹே குலபாலனே!! தாங்கள் உமாதேவியோடு கூட எதற்காக வந்தீர்? எங்கு செல்லுகிறீர்?" என்று கேட்ட ஸ்ரீஸுந்தரராஜனைப்பார்த்து கைலாஸபதியானவர், "உம்மை தர்சனஞ்செய்யவே நானிங்குவந்தேன். எனக்கருள்புரியவேண்டும்" என்று சொல்லி அனுமதி பெற்றுக்கொண்டு புறப்படத் தயாராகயிருந்தார். அப்பொழுது ஸ்ரீசோலைமலைக்கரசர் மஹேச்வரனைப் பார்த்து, "இந்த ஸோமஸுந்தரனென்ற பாண்டியச் சக்ரவர்த்தி ஒரு காரணத்தைமுன்னிட்டு தவம்புரிந்து வருகிறான். அபுத்ரனான இவ்வரசனுக்குப் பூமியில் சீக்ரத்தில் புத்திரனாக அவதரித்து, அவனுடைய பிள்ளைக்கலியை நீக்கி, எனக்கு ஸந்தோஷமுண்டு பண்ணும்" என்று சொன்ன ஸ்ரீஸுந்தரராஜமூர்த்தியைப் பார்த்து, ஸ்ரீ பரமேச்வரரானவர் இதை அங்கீகரித்து, "உம்முடைய ஸம்பூர்ண ப்ரஸாதம் எனக்கு எப்பொழுதுமிருக்கவேண்டும்" என்று சொல்லி பின்னும் சொல்லுகிறார். 28 to 39½

"அந்த குப்ஜஸுந்தரபாண்டியனின் தாய் என்னை விரும்பி என் ஆராதனையைச் செய்துவருங்காலத்தில் அவளுடைய விருப்பத்தை அறிந்து, உன்னுடைய வம்சத்தில் நான் அவதரிக்கிறேன்" என்று முன்னமேயே அவளுக்குச் சொல்லியிருக்கிறேன். "ஸ்ரீபார்வதி தேவியும் அப்படியே வாக்களித்திருக்கிறாள்" என்று ஸ்ரீஸுந்தரராஜமூர்த்தியினிடத்தில் ஸ்ரீ பரமேஸ்வரர் சொன்னார். அப்பொழுது ஸந்தோஷமடைந்த ராஜருஷியான குப்ஜஸுந்தரபாண்டியனும்,

ஸ்ரீ ஸுந்தரராஜமூர்த்தியினிடம் அநுக்ரஹம் பெற்றுக்கொண்டு, பத்னியோடுகூட மதுரையை யடைந்து சௌக்கியமாக இருந்தான். நிற்க, ஸ்ரீகைலாஸபதியும் அன்போடு ஸமீபத்திலிருக்கும் ஸ்ரீபார்வதிதேவியைப் பார்த்து, கவனத்துடன் இனிமையான இவ்வார்த்தையைச் சொன்னார். "மங்களகாரிணியே! நீ இவ்வரசனுக்கு மூன்று ஸ்தனமுடைய பெண்ணாகப் பிறப்பாய்" என்று பதியான பரமேஸ்வரனால் உத்திரவிடப்பட்ட ஸதீதேவியும் அவ்விதமே ஜனித்தாள். அவ்விதமே குழந்தை பிறந்து வளர்ந்துவரும் நாளில் அரசனுக்கும் நாளுக்குநாள் மகப்பேறு அடைந்த ஸந்தோஷம் வ்ருத்தியாய்க்கொண்டு வந்தது. அவ்வரசனிடத்தில் பிறந்த அப்பெண்குழந்தையும், மூன்று ஸ்தனங்களுடையவளாகஇருந்ததினால் "தடாதகா" என்ற ப்ரஸித்தமான பெயருடன் வளர்ந்து வந்தாள்.

40 to 46

வெகுகாலத்திற்குப் பிறகு, பத்னியினிருப்பை அறிந்த ஹிமாசலவாஸியும் சூலபாணியுமான ஸ்ரீ பரமேஸ்வரனும் ஆலோசித்து, பத்னியைப் பார்த்து இவ்விதமாகச் சொன்னார். "ஹே! சுபாநநே! நீ (ரதகஜ துரக பதாதி) சதுரங்கபலத்தோடு மதுராநகர ராஜ்யத்தைப் பரிபாலித்துக்கொண்டு இரு. நான் விந்த்யமலை ப்ரதேசத்தில் வேடுவர்களினிருப்பிடத்தில், வேடுவர்களால் பூஜிக்கப்பட்டு, எப்பொழுதும் அங்கிருப்பேன். நீ சதுரங்கபலத்தோடு திக்விஜயஞ் செய்துகொண்டு என்னை ஜயிக்க விரும்பி அங்கு வரக்கடவாய். அங்கே என்னை ஜயித்து அவ்விடத்தில் என்னைக் கைப்பிடியாகப் பிடிபடச் செய்; மங்களகாரிணியே! அதுஸமயம் என்னைப் பார்த்தவுடன் உன் மூன்று ஸ்தனங்களில் ஒன்று மறைந்துவிடும்; என்னைப் பார்த்து லஜ்ஜையடைந்து என்னையே பர்த்தாவாக வரிப்பாயாக. உன்னுடைய நகரமான மதுரைக்கு அழைத்துச்சென்று என்னோடு கூட ஸகல போகங்களையனுபவிப்பாய். ஸ்ரீ ஸுந்தரராஜரின் ஸேவாவிசேஷத்தால் என்னை "சேளம்யபாண்டிய"னென்று சொல்லுவார்கள். ஹே சுபே! நான் பகவத் ப்ரீதியின் நிமித்தம் சோலைமலையில் வஸிக்கப்போகிறேன். அச்சோலைமலைநாதரின் இடது புரத்தில் சுபகரமும் க்ஷேத்ரங்கட்குள் உத்தமமுமாகிய அவ்வனாத்ரியில் ஸ்ரீமகாவிஷ்ணுவின் க்ஷேத்ரத்தைப் பரிபாலனஞ் செய்து

கொண்டு, அம்மஹாவிஷ்ணுவின் அம்சம் பெற்றமையால் அங்கு "க்ஷேத்ரபால"னென்னும் பெயரை வஹித்து, அம்மலையில் வஸிக்கப் போகிறேன். ஹே வராநநே! அங்கு வரும் என் பக்தர்களின் இஷ்டத்தைப் பூர்த்திசெய்துகொண்டிருப்பேன்" என்று ஸ்ரீ பரமேஸ்வரன் பார்வதியைப் பார்த்துச் சொன்னார். இவ்விதம் பர்த்தாவான ஸ்ரீ பரமேஸ்வரரால் சொல்லப்பட்டு ஸ்ரீ பார்வதீ தேவியும் அப்பொழுது அவ்விதமே செய்தாள். குப்ஜஸுந்தர பாண்டியனும், தடாதகாதேவியை இராஜ்யத்தில் வைத்துவிட்டு ஸுவர்க்கத்தையடைந்தான். அத்தேவியும் பக்தர்களை ஸம்ரக்ஷித்துக்கொண்டு இராஜ்யபாரஞ்செய்து, பிறகு ஸ்ரீ பரமேஸ்வரனையடைந்து மதுரைக்குத் திரும்பி வந்து சாக்ஷாத் சூலபாணியுடன் கூட வஸித்து வந்தாள். பிறகு ஸ்ரீ விஷ்ணுவினுடைய வ்யூஹஸம்க்ஞைகள் எப்படி விமானத்தின் முன்னிலையில் பூஜையைச் செய்கின்றனர்களோ அதைப்போலவே, ஸ்ரீ பார்வதிதேவியும் ப்ரதிதினமும் மிக்க ஸந்தோஷத்தோடு ஸ்ரீ ஹரியின் அர்ச்சனத்தைச் செய்துகொண்டு வந்தாள். 47 to 57

"முனிசிரேஷ்டர்களே! இவ்விதம் அவைகளின் தத்வார்த்தங்களை நான் (வியாஸ மஹரிஷியிடமிருந்து) கேட்டுக்கொண்டபடி உங்களுக்குச் சொன்னேன். பாபரகிதர்களான ஹே மஹா முனிவர்களே! இன்னும் மேலும் உள்ளவிசேஷங்களைச் சொல்லுகிறேன்." என்று ஸ்ரீ ஸூதபுராணிகர் திருவாய் மலர்ந்தருளினார். 59

இவ்விதம் ஸ்ரீ ப்ரஹ்மாண்டபுராணத்தின்
92-வது அத்யாயத்தில் க்ஷேத்ரமாஹாத்ம்ய காண்டத்தில்
ஸ்ரீ விருஷபாத்ரி மாஹாத்ம்யமென்னும்
இதிஹாஸ ஸ்தல புராணத்தில்
ஸ்ரீ குப்ஜபாண்டியனின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றி
வைத்ததென்னும்
நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

ஸ்ரீ:

ஸ்ரீவிருஷபாத்ரி மாஹாத்ம்யத்தில்

"ஸ்ரீஸுந்தரராஜஸ்வரூபதர்சனஸ்தவ" மென்னும்

ஐந்தாம் அத்யாயம்.

ஸ்ரீஜனகமஹாராஜன் ஸ்ரீவாமதேவரைப் பார்த்துச் சொல்லுகிறார்.—

"புராணார்த்தங்களை உணர்ந்த மஹாயோகியாயும், ஸ்ரீமானுயுமுள்ள ஸ்ரீவாமதேவ மஹரிஷியே! பெருமை தங்கியதும், ஸர்வ மங்களத்தைப் பெற்றதுமான, ஸ்ரீவிருஷபாத்ரியின் மாஹாத்ம்யத்தைச் சொல்லும்படி வேண்டுகிறேன்."

ஸ்ரீவாமதேவர் கூறுகிறார்.—

"ஸர்வபந்தங்களையும் அபகரிக்கிறவராயும், எங்கும் நிறைந்த பரமாத்மாவாயும், ஸ்ரீவிருஷபாத்திரிநிவாஸியாயும், ஜயம் பொருந்திய ஸ்ரீமஹாவிஷ்ணுவாயுமுள்ள உமக்கு நமஸ்காரம். நாராயணரும், பக்தர்களுக்கு மோக்ஷபலத்தைக் கொடுப்பவரும், ஸ்ரீவத்ஸமென்ற மருவினாலலங்கரிக்கப்பட்ட விசாலமான மார்பையுடையவரும், கர்மபந்தமில்லாதவரும், அஞ்சனம் போன்ற காந்தியுள்ளவரும், ஸர்வ தேவருமான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் பொருட்டு நமஸ்காரஞ் செய்து, ஸ்ரீவிருஷபகிரியின் மாஹாத்ம்யத்தைச் சொல்லுகிறேன். ஹே ஜனகமஹாராஜனே! நீ கேள்பாயாக. 2 to 4

"முன்னொருகாலம் ஸ்ரீமார்க்கண்டேயாதிமஹரிஷிகளும், அம்பரீஷ மஹாராஜனும், ஸ்ரீஸுந்தரராஜ தர்சனத்திற்காகச் செல்லுகையில், அம்மலையில் நற்குணங்களுக்கிருப்பிடமானவரும், குற்றமற்றவரும், வேதங்களைப் பிரித்துப் பகுத்தவரும், ஸாஸ்வதிக்கிருப்பிடமானவரும், ஸ்ரீவிஷ்ணுவின் அம்சபூதரும், வேதவேதாங்கங்களின் உண்மையை அறிந்தவரும், புராணங்களின் அர்த்தங்களை அறிந்தவர்களுக்குள் ஸமர்த்தரும், நீருண்டமேகம் போன்ற காந்தியையுடையவரும், ஆத்மாராமனாக ஆத்மஸ்வரூபமுணர்ந்த

வரும், மஹாபுத்திமானுமான வேதவியாஸ மஹரிஷியைப் பார்த்தார்கள். புராணமறிந்தவர்கள் பதினெட்டு புராணங்களிருப்பதாகச் சொல்லுகிறார்கள். எல்லாப் புராணங்களுக்குள்ளும் முதலாவது "ப்ராஹ்மம்" இரண்டாவது "வாமனம்" மூன்றாவது "வைஷ்ணவம்" நான்காவது "சைவம்" ஐந்தாவது "பாகவதம்" ஆறாவது "நாரதீயம்" ஏழாவது "மார்க்கண்டேயம்" எட்டாவது "ஆக்னேயம்" ஒன்பதாவது "பவிஷ்யத்" பத்தாவது "ப்ரஹ்ம கைவர்த்தம்" பதினொன்றாவது "லைங்கம்" பன்னிரண்டாவது "வாராஹம்" பதின்மூன்றாவது "ஸ்காந்தம்" பதினான்காவது "பாத்மம்" பதினைந்தாவது "கௌர்மம்" பதினாறாவது "மாத்ஸ்யம்" பதினேழாவது "காருடம்" பதினெட்டாவது "வாயு" என்ற இப்பதினெண்புராணங்களையும் செய்தவர் ஸத்யவதியின் புதல்வரான ஸ்ரீவியாஸர் என்று சொல்லப்படுகின்றது. 5 to 12

ஸ்ரீ ஜனகமஹாராஜன் ஸ்ரீவாமதேவரைப் பார்த்துக் கேட்கிறார்.—

"ஹே ப்ராஹ்மந் ! மார்க்கண்டேயாதிமஹரிஷிகள், புண்யமும், பர்வதச்ரேஷ்டமுமாகிய அச்சோலைமலைக்குச்சென்று அங்கு என்ன செய்தனர்? இதை எனக்குச்சொல்லவேண்டும்; கேட்பதற்கு ஆவல் ஏற்படுகிறது. இத்துடன் அச்சோலைமலையில் எப்பொழுதும் லோகநாதனான ஸ்ரீஸுந்தரராஜன் ஸாந்நித்ய மடைந்திருக்கிறாரே! அங்கு அப்பகவானுடைய ஸாந்நித்யம் எவ்விதம் ஏற்பட்டதென்பதையும் தாங்களெனக்குச் சொல்லவேண்டும். அச்சரித்திரமானது அதைப் போற்றுகிறவர்களுக்குப் பாபத்தைப்போக்கிப் புண்யத்தை யுண்டு பண்ணி ஸந்தோஷத்தை விருத்தி செய்யக்கூடியது." என்று சொன்ன ஜனகரைப் பார்த்து மஹாதேஜஸ்வியான ஸ்ரீவாமதேவ முனிவர் கவனமாகக் கேட்கும்படி சொல்லி மேல்வரும் வார்த்தைகளைச் சொன்னார்." 13 to 17

ஸ்ரீவாமதேவர்:—"ஹே அரசனே ! ஆத்மஸ்வரூபமுணர்ந்த மார்க்கண்டேய மஹரிஷியினால் முன் எது கேட்கப்பட்டு, வேதவியாஸரால் விடை கூறப்பட்டதோ அதை நானுனக்குச் சொல்லுகிறேன். அதுஸமயம் மகாமுனியான ஸ்ரீமார்க்கண்டேய பகவானும், ருசீக பகவானும், கௌதம மஹா முனியும், மைத்ரேயரும்,

சௌநகாதிகளும், புலஸ்த்யரும், அங்கிரஸ்ஸும், மஹா தேஜஸ்வியான ச்யவனரும், சுநச்சேபரும், பகவானான பராசரரும், சௌனகபகவானும், சுனகமஹாராஜாவும், மஹா புகழ் பொருந்திய சவனரும், தர்மாத்மாவான நசிகேதஸ்ஸும், ஸ்ரீ வால்மீகி பகவானும், இவர்களுமின்னும் அனேக முனிவர்களும், அம்மலையில் கூட்டங்கூடி, குறைவற்றவரான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியைப் பார்ப்பதற்கு வந்திருந்தார்கள். அம்பரீஷ மகாராஜனும், அவ்வத்புத ஸுந்தரரான ஸ்ரீ பகவானை தர்சிப்பதற்கு, அந்த ஆச்சர்யகரமான ஸ்ரீவிருஷபகிரியில் வந்திருந்தார். அம்பரீஷ மஹாராஜாவும் ஸ்ரீ மார்க்கண்டேயாதி மஹரிஷிகளும், தர்மஸ்வரூபியாயும், ஸநாதனராகவும், வாஸுதேவராகவும், உத்க்ருஷ்டராயும், புராண புருஷராயும், மனதிற்கு எட்டாத பரமபுருஷராயுமுள்ள ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீவிஷ்ணுரூபந்தரித்து வஸிக்கக்கூடியதும், அனேகம் வ்ருக்ஷக்கூட்டங்களால் விளங்குவதும், அனேக நூற்றுக்கணக்கான உத்யானங்களால் நிறைந்ததும், புனிதமான புஷ்பங்களால் சோபிப்பதும், சுபகரமான கொடிகளால் நன்கு பரவியிருப்பதும், அனேகம் புதர்களால் விளங்குவதாயும், அனேக வர்ணங்களான தாதுக்களால் நிறைந்ததும், சுபகரமான மந்தமாருதம் வீசுவதாயும், அனேகம் நந்தவனங்களால் நன்கு நிறைந்ததும், பழங்களாலும், புஷ்பங்களாலும் ப்ரகாசிப்பதும், புஷ்ப வாஸனைகளோடும், தேனொழுகும் புஷ்பங்களோடும் பழங்களோடுங் கூடியதும், நூற்றுக்கணக்கான அழகிய புல்களாலும் விருக்ஷங்களாலும் நிறைந்ததாயும், எங்கும் மனோஹரமாக விருப்பதாயும், யானை, ஸிம்ஹம், மான்கள், புலிகள், காட்டுப்பன்றிகள் இவைகளின் கூட்டங்களால் ப்ரகாசிப்பதாயும், இன்னும் உத்தமமும் அழகும் பொருந்திய பல மிருகங்களால் நிறைந்து, பார்க்க அழகாகவுள்ள தோற்றத்தை யுடையதும், சுபமான வாபிகளால் நிறைந்ததும், தெளிந்த ஜலம் நிறைந்த மடுக்களோடு கூடியதும், சுபமான மலையினூற்றுக்களால் சேர்ந்திருப்பதும், வைடூரியம்போல் தெளிந்த ஜலமுள்ளதும், பாபத்தைப் போக்குகிறதும், பலத்தைக் கொடுப்பதுமாகிய அனேக நூறுயிரக்கணக்கான அருவிகளோடு கூடியதாயும்,

கருமைநிறம் பொருந்திய நீருண்டமேகம் போலும், அபரமந்தரகிரி போல் விளங்குவதும், முனிவர்களாலும், ப்ரஹ்ம ருத்ராதிகளாலும் கூட நூறு வருஷங்களானாலும் விஸ்தாரமாய் வர்ணிக்க முடியாத வைபவத்தோடு கூடியதும், மஹா புண்யம் பொருந்தியதும், பற்பல புஷ்பங்களால் சோபிப்பதும், பரமாச்சர்யகரமானதும், எல்லோராலும் அடிபணிந்து ஸேவிக்கப்படுவதுமாகிய ஸ்ரீவிருஷபாத்ரியை இந்திராதிதேவர்களும் பார்த்தார்கள். ஹே அரசனே! அத்தேவர்கள் அவ்வுத்தம மலையின்மீது அங்குமிங்கும் ஸஞ்சரித்து, ஸூர்ய ப்ரகாசம் பொருந்தியதும், குற்றமற்றதும், தேவநிர்மிதமானதும், பரமாச்சர்யகரமானதும், அனேகம் கொடுமுடிகளோடு கூடியதும், அனேகம் இரத்னங்களால் விளங்குவதும், பார்ப்பவர்களின் சோகத்தையும், ஸர்வ பாபத்தையும் விலக்கிப் புண்யந் தருவதுமான ஸ்ரீ சோமச்சந்தவிமானத்தைக் கண்டார்கள். 18 to 37

"பிறகு அம்முனீச்வரர்கள் பார்க்க அழகாயிருப்பதும், மஹா புண்யகரமாயும், வெகு ஆச்சர்யகரமாயும், எல்லாப் பாபங்களையும் போக்குவதாயும், யக்ஷ, கிம்புருஷர் முதலியவர்களாலும், குஹ்ய, வித்யாதர, தேவ, கந்தர்வ, மனுஷ்ய, சாரணர்களாலும், ரிஷிகளாலும், வாலகில்யர்களென்ற ஸித்தர்களாலும், மஹாத்மாக்களான ஸநத்குமாரர் முதலிய யோகீந்த்ரர்களாலும், இன்னும் தர்மார்த்த காம மோக்ஷங்களை விரும்பி நியமத்துடன் தவம் செய்யும் வெகு மஹாத்மாக்களால் நிறைந்து ஸேவிக்கப்படுவதும், எப்பொழுதும் ஸ்ரீஹரியின் நித்யவாஸமுள்ளதுமான, அந்த ஸ்ரீஸோமச்சந்த விமானத்தில் லோகநாதனான ஸ்ரீபகவானை நினைத்து, கடும்தவம் புரிந்தனர். மேலும் அம்முனிச்ரேஷ்டர்கள் ஆதிபுருஷனாயும், மதுசூதனனாயும் இருக்கிற ஸ்ரீபகவானுடைய ப்ரீதியின்பொருட்டு, அவ்விருஷபாத்ரிநிவாஸியான ஸ்ரீபகவானைப் பூஜித்தனர். 38 to 43

"அம்மார்க்கண்டேயர் முதலிய ப்ராஹ்மணோத்தமர்கள் ஏகாக்ர சித்தத்தோடு, பரப்ரஹ்மஸ்வரூபியாயும், ஸர்வவ்யாபகராயும் எல்லா உலகங்கட்கும் நாயகராயும், புருஷோத்தமராயுமுள்ள ஸ்ரீ கேசவரிடத்திலேயே மனதை வைத்து, ஸர்வ பலங்களையுங் கொடுக்கக் கூடிய "த்வாதசாக்ஷரம்" என்று பெயருடைய மஹாமந்திரத்தை

விதிப்படி ஜபஞ் செய்தார்கள். மேலும் ப்ரணவபூர்வகமான "நமச்சப்தத்தை"யுடையதும், பகவச்சப்தபூர்வகமான "வாசுதேவாய" என்பதை யுடையதுமான "த்வாதசாக்ஷர" மாகிற, "ஓம் நமோ பகவதே வாசுதேவாய" என்னும் மஹா மந்த்ரமானது மஹரிஷிகளாலும், ஜனங்களாலும், ஸநகாதி யோகிகளாலும், தேவர்களாலும், ஆத்மஞானிகளாலும், ஸர்வாபீஷ்ட பலப்ரதமென்று புகழப்படுகிறது. மேலும், மந்திரங்களை நன்கறிந்த மனிதனும் இம்மஹா மந்த்ரத்தை ஜபிப்பதால் உடனே முக்தியையடைகிறான். முக்தியை விரும்பும் வித்வான்களால் தினந்தோறும் ஜபஞ் செய்யப்படும் இவ்வுத்தம மந்திரத்தை ஜபிப்பதால் ஸகல அபீஷ்டங்களும் நிறைவேறும். பணத்தை விரும்புகிறவர்களாலும், மற்றும் பல விருப்பத்துடன் வனத்தில் ஸஞ்சரிக்கிறமற்றவர்களாலும் ஜபஞ்செய்யப்பட்டதாயுள்ள உயர்வான இம்மஹாமந்திரத்தை முன் "ஸ்வாரோசிஷர்" என்ற மனுவானவர் ஜபஞ்செய்தார். முன் அம்மனுவானவர் பிரஜைகளை ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்ற விருப்பத்தினாலே 'இத்வாதசாக்ஷர' மந்திரத்தை ப்ரஹ்மாவினுடைய ஆக்ஞையின் மூலம் ஜபஞ் செய்தார். இம்மகாமந்த்ரத்தை ஜபிப்பதால் நரர்கள் ஒருநாளும் நரகத்தையடையமாட்டார்கள். பாபஞ்செய்த மனிதர்களுங்கூட இம்மந்திரத்தை ஜபித்தால் நரகத்தையடையமாட்டார்கள். அல்ப ஜந்துக்களின் ஜன்மத்தையு மடையமாட்டார்கள். சாபங்களின் பலத்தினாலும் பாப யோனிகளின் பிறப்பை யடையமாட்டார்கள். துர்கதியையு மடையமாட்டார்கள். எதிரிகளை வெல்லக்கூடிய இம்மந்திரத்தை ஜபித்த ஸப்த ரிஷிகளும், கிடைத்தற்கரிய புண்ய மடைந்து எல்லாவற்றிற்கும் மேலான பதவியை யடைந்தார்கள். தேவர்களும், முன் கடுமையான யுத்தத்தில் இம்மந்திரத்தினால் ஜயத்தையடைந்தார்கள். 44 to 54

"சங்குசக்ரதாரியும், நான்கு கைகளோடு கூடியவரும், கிரீடந்தரித்தவரும், முனீந்த்ரர்களாலும், ஸித்தர்களாலும், சாரணர்களாலும், வர்ணிக்கமுடியாததான அந்த ஸ்ரீபகவானுடைய நிகரற்ற பெருமையை இப்புவியிலுள்ள மனிதர்களால் வர்ணிக்க முடியாது. அத்தகைய பரப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கிற பரம மந்த்ரத்தை

ஜபஞ் செய்துகொண்டு, தபஸ்ஸையே பொருளாகக்கொண்ட ஸ்ரீமார்க்கண்டேயாதி ஸமஸ்த முனிவர்களும், அம்பரீஷச் சக்ரவர்த்தியும், மங்களகரமானதும், நிர்மலமானதும், ஆச்சர்யகரமானதும், தேவஸங்கங்களால் ஸேவிக்கப்பட்டதுமான விமானத்தில் முன்னூற்றைம்பது வருஷம் வஸித்தார்கள். இவ்விதம் முன்னூற்றைம்பது வருஷங்கள் ஆயினபின் பரிசுத்தரும், ஸகல பாபநிவாரகரும், ஸர்வபூதஸ்வரூபரும், ஸர்வயக்ஞஸ்வரூபரும், ஸர்வவ்யாபகரும், எல்லாப் பூதங்களாலும் நமஸ்காரஞ் செய்யப்பட்டவரும் பராத்பரரும், மதுஸூதனரும், ஸநாதனரும், வாஸுதேவரும், பரமபுருஷராயுமுள்ள ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணர் வெகு ஸந்தோஷமடைந்து, அந்த ரிஷிச்ரேஷ்டர்களுக்குத் தன்னுடைய தர்சனத்தைத் தந்தருளினார். 55 to 61

"ஹே அரசனே! மேலும் கேளும். சங்குசக்ரகதாதரரும், ஸ்ரீவத்ஸாலங்க்ருத மார்பையுடையவரும், தாமரை இதழ்போன்ற கண்களையுடையவரும், திவ்யபீதாம்பரதாரியானவரும், இரத்ன குண்டலங்களால் ஜ்வலிப்பவரும், மின்னலோடு கூடின நீருண்ட மேகம்போன்றவரும், எல்லா இரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், நாகேந்த்ரனின் துதிக்கைபோன்றதும் வளையங்களோடு கூடினதும் வைடூர்யமணிகளால்நிறைந்த ஆபரணங்களாலலங்கரிக்கப்பட்டதும் நீண்டவைகளுமான இரமணீயமான நான்கு கைகளோடு கூடினவரும், அநேக இரத்னங்களால் இழைக்கப்பட்டு ஜ்வலிக்கின்ற கிரீடத்தையுடையவரும், உதயகால பூர்ண சந்திரனைப்போல் விளங்குகிற முகத்தோடு கூடியவரும், ஜாஜ்வல்யமாக ப்ரகாசிக்கிற ஹார நூபுர கேயூர வனமாலாதிகளான திவ்யபூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், கௌஸ்துபதாரியும், 'வைஜயந்தீ' என்ற தேவநிர்மிதமான மாலையினால் அலங்கரிக்கப்பட்டு, கருடபகவானின் மீது, "உதயஸூர்யன்போல்" வீற்றிருந்து விளங்குபவரும், கானஞ்செய்யும் கந்தர்வர்களாலும், கிந்நரர்களாலும், ஸேவிக்கப்பட்டவரும், நடனமாடுகின்ற நூறுயிரக்கணக்கான அப்ஸரஸ்திரீகளால் உபசரிக்கப்பட்டவரும், ரிஷிகணங்களாலும், ஸ்துதி பாடகர்களாலும், வேதவாக்யங்களால் ஸ்தோத்திரஞ் செய்கிற பிரஹ்மாதி

தேவதாகணங்களாலும் சூழப்பட்டவரும், அஷ்டமருத்துக்களுடன் கூடிய ஸித்தவித்யாதரர்கள் முதலியவர்களால் ஸேவிக்கப்பட்டவருமான ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை அவர்கள் கண்ணால் கண்டார்கள். 62 to 70

பிறகு பகவத் ஸேவை செய்கின்ற ப்ரஹ்மாதி தேவதாகணங்களும், அழுக்கற்ற மனமுடைய மார்க்கண்டேயாதி மஹாமுனிவர்களும், அம்பரீஷபூபாலனும், மற்றும் அங்கு கூடியிருப்பவர்களும், எல்லோரும் உலகநாயகனான ஸ்ரீபகவானைப் பார்த்து ஆச்சரியமடைந்து ஸர்வலோக பராயணனும், ஜகத்காரணனும், உலகங்கட்கு அவ்யக்தமான வடிவையுடையவனும், ஸர்வலோகங்களுக்கும் ரக்ஷகனுமான ஸ்ரீமந்நாராயணனை ஸ்தோத்திரம்செய்தனர். 71to73

"ப்ரஹ்மாதி தேவர்கள், தேவதேவேச்வரனும், ஸநாதனனும், தேவநாயகனுயும் விளங்குகிற ஸ்ரீவிருஷபாத்ரிநிவாஸியான ஈச்வரனை எவ்விதம் ஸ்தோத்திரம் செய்தார்களென்பதைச் சொல்லுகிறேன் கேளும்" என்று ஸ்ரீவாமதேவர் துதி செய்து சொல்லலுற்றார். 74½

"ப்ரபந்நர்களின் கஷ்டங்களை நிவர்த்திப்பவரே! அழிவற்றவரே! ஸர்வசக்தராய் நின்று எங்கும் நிறைந்திருப்பவரே! உலகத்தையே கண்ணாகக்கொண்டவரே! ஸர்வ தேவர்கட்கும் தலைவரான ஹே தேவ! ஹே விபோ! ஸ்ரீமந்நாராயண! உமக்கு நமஸ்காரம். யாவும் தானாய் விளங்குபவரே! முப்பத்திமுக்கோடி தேவர்கட்கும் அதிபதியே! எங்கும் வ்யாபகமான சரீரத்தையுடைய ஹே ஸ்ரீ ஜனார்த்தன! உமக்கு நமஸ்காரம். ஆதிபுருஷராயுள்ள ஹே ஸநாதனவரேண்ய! உன் பொருட்டு நமஸ்காரம். அண்டினவர்களை நழுவவிடாமல் ஆதரித்து வேண்டுவதைக் கொடுப்பவரே! ஸர்வலோக பராயணரும், விசாலமாயுள்ள நேத்ரங்களையுடையவரும், எல்லாவற்றிற்கும் ஆதாரமானவரும், எல்லாப் பிராணிகளாலும் நமஸ்கரிக்கப்பட்டவருமான ஹே ஸ்ரீ கோவிந்த! உமக்கு நமஸ்காரம். ஹே ஹ்ருஷீகேச! நாநாவர்ணமான பீதாம்பரத்தை தரித்திருக்கிற உம்மை இத்தேவதாகணங்கள் நமஸ்கரிக்கின்றனர். எங்கும்

வ்யாபியும், உலகத்திற்கு ஸாக்ஷியும், கெட்ட அசுரர்களை வென்றவனுமாகிய ஹே ஸ்ரீகிருஷ்ண! விச்வரூபமெடுத்தவனும், யாதவர்கட்கு மங்களமருளிச்செய்தவனும், ஸமஸ்த தைத்யர்களை விசித்ரமாக ஸம்ஹாரம் செய்தவனுமாகிய உன் பொருட்டு நமஸ்காரம். அரக்கர்களின் தலைவனை ஸம்ஹரித்தவனும், இன்னுமனேக இராக்ஷஸர்களை வதம் செய்தவனும், ஸர்வ ப்ராணிகட்கும் சரண்யனும், ஸ்ரீ ரகுகுலத்திலுதித்த ஸ்ரீராகவனுகவும் உள்ள உம்மை நமஸ்கரிக்கின்றேன். ஹிரண்யாக்ஷ, ஹிரண்யகசிபு முதலிய துஷ்ட தைத்யர்களை ஸம்ஹரித்தவரும், பயங்கரமான ஸ்வரூபமுடைய ஸ்ரீநரஸிம்ஹமூர்த்தியான உமக்கு நமஸ்காரம். எல்லாவற்றிற்கும் தலைவரே! எல்லாப் பிராணிகளின் ஸ்வரூபமுடையவரே! குற்றமற்றவரே! எளிதில் காணமுடியாதவரும், ஸ்ரீவிருஷபாத்ரிநிவாஸியுமான உம்மை நமஸ்கரிக்கின்றேன். இதோ எதிரில் தோன்றுகிற உம்முடைய திவ்யமும், ஸநாதனமுமாகிய பரிசுத்த ஸ்வரூபத்தையும் எங்களால் கண்டு அறிந்துகொள்ள முடியவில்லை. இவ்விதமிருக்க அழிவற்ற ப்ரஹ்மஸ்வரூபமும், எங்கும் வ்யாபியுமான வடிவத்தை எவ்விதம் காண்போம்; இந்த ஸ்ரீஜனார்த்தன ரூபத்தையும் உங்களுடைய அநுக்ரஹத்தினுலேயே கண்டோம். மங்களந்தரும் பார்வையையுடையவனே! உம்முடைய அநுக்ரஹமில்லாவிடில் எங்களாலும் மற்றவர்களாலும், இவ்வாச்சர்யகரமான உம்முடைய வடிவமானது காணத்தகுந்ததல்ல. உம்முடைய அநுக்ரஹத்தையே விரும்பி வந்தவர்களான இதோ எதிரில் நிற்கும் ஸுராதிபர்கள் உம்முடைய கருணையுடன் கூடிய தர்சனத்திற்குப் பாத்ரபூதர்களாகி இருக்கிறார்கள். மேலானதும், இவ்விதமென்று நிச்சயிக்கமுடியாததும், வேதங்களால் அறியத்தகுந்ததும், பரமாச்சர்யமானதும், இது இவ்விதமென்று சுட்டிக்காட்ட முடியாததும், நினைக்க முடியாததும், சீக்கிரம் மறைவதும், வெகுகாலமிருப்பதும், வ்யக்தமும் அவ்யக்தமுமானதும், ஸர்வ வேதங்களால் சொல்லப்பட்ட சூக்ஷ்மமும், இது இல்லை இது இல்லை என்று விலக்கத்தகுந்த பதார்த்தங்களுடன் சேராமல் அப்பால் விளங்குவதும், தூக்கமற்றதும், குற்றமற்றதும், துக்கமற்றதும், ஒரு குறைவுமில்லாததும்,

ஸர்வவ்யாபகமும் ப்ரக்ருதிக்கு அப்பால் சுத்தமும் நிர்க்குணமுமாகிய சுத்தஸ்வரூபந்தரித்தவனும், தாந்தனும், ஸ்ரீவிருஷபாத்ரியையே உயர்வான வீடாகக்கொண்டு நித்யம் வஸிப்பவருமான உம்மை நமஸ்கரிக்கின்றேன். எல்லாப் பூதங்களை ஸ்ருஷ்டிப்பதும், எல்லா ஜீவர்களுக்கும் வரங்கொடுப்பதும், தேவர்களால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டதும், ப்ரக்ருதிக்கு அப்பால் நிர்க்குணமும், உலக உத்பத்திக்குக்காரணமும், எப்பொழுதும் ஸதஸத் ஸ்வரூபமுமாகிய அம்மேலான தாமாவைத் தாங்களே அறிவீர்கள். பிறர்கள் அறியார்கள். ஸஹஸ்ராதித்யனின் தேஜஸ்ஸையுடைய ஸ்ரீவிருஷபாத்ரிநிவாஸியான உம்மை நாங்கள் யாவரும் அண்டி சரணமடைந்தோம். ப்ரஸன்னமான முகமலர்ச்சியுடன்பார்க்கும் ஹே ஸ்ரீபுண்டரீகாக்ஷ! எங்களை ரக்ஷிக்கவேண்டும். 75 to 93

ஆதியாயும், அத்புதமாயும், நித்யமாயும், அளவிலடங்காத புஜங்களையுடையதும், உலக உத்பத்திரக்ஷணங்கட்குக் காரணமும், ஸாமான்யர்களால் அறியமுடியாததும், எங்களுக்கு ஸாக்ஷாத்கரித்தருளியதாகிய இந்த ரூபத்தை எவ்வித பாக்யத்தினாலோ நாங்கள் அறிந்து நமஸ்கரிக்கின்றோம். 94

இவ்விதம் ஸ்ரீ வாமன புராணத்தின் க்ஷேத்ரமாஹாத்ம்ய காண்டத்தில் 43-வது அத்யாயத்தில் ஸ்ரீ விருஷபாத்ரி மாஹாத்ம்யமெனும் இதிஹாஸ ஸ்தலபுராணத்தில் ஸ்ரீஸுந்தராராஜஸ்வரூபதர்சனஸ்தவமென்னும் ஐந்தாம் அத்யாயம் முற்றுப்பெற்றது.

சுபம்.

ஸ்ரீ:

ஸ்ரீவிருஷபாத்ரிமாஹாத்ம்யத்தில் "ஸ்ரீ மார்க்கண்டேயருக்கு நித்யத்வமெனும் வரத்தைத் தந்தருளிச் செய்ததென்னும்"

ஆறும் அத்யாயம்.

ஸ்ரீவாமதேவர்:—

இவ்விதமிங்கு ஸ்தோத்திரஞ் செய்யப்பட்ட ஸனாதனரும், மஹீபாலனும், உலக ஸ்ருஷ்டியையும் உலக பரிபாலனஞ் செய்யும் பரமாத்மாவுமான ஸ்ரீ வாஸுதேவபகவான் தேவதாகணங்களின் மத்தியில் கருடவாஹனாரூடராயெழுந்தருளி மந்தஹாஸஞ் செய்து கொண்டு, அடிக்கடி தேவர்களைப் பார்த்துக்கொண்டு, அவ்விடத்தில் ஸேவை ஸாதித்தார். 1½

"ஹே அரசே! பிறகு பூதமயனாகவும் பரமாத்மஸ்வரூபியுமான ஸ்ரீப்ரஹ்மதேவனும், அவரையே தலைமையாகக்கொண்ட ஸகல தேவதாகணங்களும், ஸ்ரீமார்க்கண்டேயர் முதலிய ஆயிரக்கணக்கான மஹரிஷிகளும், ஸர்வேச்வரரான ஸ்ரீ பகவானைச் சூழ்ந்து நின்று ஸகல பூதங்கட்கும் ஸ்ருஷ்டி கர்த்தாவும், மஹாதேஜஸ்வியும், மஹாபலவானும், பரம்ப்ரஹ்மமுமாகிய புருஷோத்தமனுயுள்ள ஸ்ரீஹ்ருஷீகேசனை வணங்கிப் புகழ்ந்தனர். மேலும் விசித்திரமான வஸ்திரங்களை அணிந்தவர்களும், தைவீகமுள்ள பற்பலதான தங்கள் தங்கள் ரூபங்களைத் தரித்தவர்களும், அனேகவித ஆபரணங்களை அணிந்தவர்களும், தேஜோவிசேஷங்களால் ஜாஜ்வல்யமாகப் ப்ரகாசிப்பதால் தேவர்களால் கூட அறியமுடியாத சக்தி வாய்ந்தவர்களும், வேதங்களை நன்கறிந்தவரும், ஷாட்குண்ய பரிபூர்ணரும், உலக பிதாமஹருமான ஸ்ரீ ப்ரஹ்மாவினால் அறியப்பட்டவர்களுமாகிய ஸமஸ்த தேவர்களும், ஸந்தோஷமான மனதுடையவர்களாய்ச் "சந்திரனை க்ரஹங்கள் சூழ்ந்தால்போல்" ஸ்ரீஜனார்த்தனனைச் சூழ்ந்துநின்றார்கள். அவ்விடத்திலேயே அந்த எல்லா தேவர்களாலும் சூழப்பட்டவனாகவும், ஸ்ரீமானும், அரிய

பெரிய புஜங்களையுடையவருமான ஸ்ரீஸுரேச்வரர் சங்கு, சக்ர, கதாதாரியாய் விசேஷ வைபவத்துடன் விளங்கினார். 2 to 8

பிறகு தேவனும், ஷாட்குண்யம் பொருந்தியவனும், மஹா தேஜோவானுமாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் ப்ரவாஹ சப்தத்திற்கும், மேகக்கூட்டங்களின் கர்ஜனைக்கும் ஒப்புடையதுமாகிய சப்தத்தையுடையவராய், இனிமையும் அமைதியும் பொருந்திய ப்ரியமான வார்த்தையினால் பத்து திக்குகளிலும் எதிரொலி ஏற்படும்படிச் செய்துகொண்டும், ஸகல ப்ராணிகளையும் ஸந்தோஷமடையும்படிச் செய்துகொண்டும், அளவில்லாத மேலான பக்தியோடு கூடி கைகூப்பி எதிரில் நிற்கும் தபோதனரும், மஹாத்மாவாயுமுள்ள ஸ்ரீ மார்க்கண்டேய முனீந்த்ரரை நோக்கிச் சொல்லலுற்றார். "ஹே மஹாபாக! எம்மைக்குறித்துத் தவம் புரிந்ததால் நானுமக்கு ப்ரஸன்னனானேன். ஹே ப்ராஹ்மணச்ரேஷ்ட! என்னிடமிருந்து உம்மால் எது எது ப்ரார்த்திக்கப்படுகிறதோ அதனை ஸந்தேகமன்னியில் கொடுக்கின்றேன். ஸந்தோஷமடையும். என்று ஸ்ரீ தேவதேவனாயும் ப்ரபுவாயுமுள்ள ஸ்ரீமஹாவிஷ்ணுவினால் சொல்லப்பட்ட ஸ்ரீமார்க்கண்டேயமுனீந்த்ரர் அப்புருஷோத்தமனை வணங்கி, சார்ங்கதாரியான அத்தேவனின் பொருட்டுத் தலைமேல் கைகூப்பி, ஸந்தோஷத்தினால் மெய்மறந்த மனதுடையவராய், ஸ்ரீவிருஷபாத்ரியில் வஸிக்கிற எல்லா தேவர்களும் கேட்டுக்கொண்டிருக்க, அடியில் கண்ட விதமாகத் தெரிவித்துக்கொண்டார். என்று ஸ்ரீ ஜனக மஹாராஜனுக்கு ஸ்ரீவாமதேவர் திருவாய்மலர்ந்தருளினார். 9 to 14

ஸ்ரீ மார்க்கண்டேயர் ஸ்துதி செய்து சொல்லுகிறார்:—

உலகத்திற்குக் காரணரும், ஸநாதனருமாகிய நீர் பார்க்கப்பட்ட பொழுதே தன்யனானேன். உம்மால் திரஸ்காரஞ் செய்யப்பட்டவர்களும், புண்யங்களை யடையாதவர்களுமாகிய பிறப்பு இறப்பு முதலிய அவஸ்தைகள் தங்கிய மானிடர்கள், தேவர்களால் பூஜிக்கப்பட்டவனும், ஆதி புருஷனுமாயுமுள்ள உம்மை ஸ்வப்னத்தில் கூட காணமாட்டார்கள். என்னால் எது உம்மிடமிருந்து பிரார்த்திக்கப்படுமோ அதை நீரே இப்பொழுதே அறிவீர்.

ஹே ஸ்ரீ ஜனார்த்தன! ஸகல பூதங்களிடத்திலும் உம்மால் அறியப்படாதது ஒன்றும் கிடையாது. ஆனாலும் ஹே தேவேச! உம்பொருட்டு வேண்டியவற்றைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன் கேளும். ஜகத்பதியான உம்மைப் பார்த்தபிறகு வேண்டினால் கிடைக்காத வஸ்து ஒன்றுமே இல்லை. ஸர்வவ்யாபகனான ஹே ஸநாதன! உம்மிடமிருந்து என்னால் 'நித்யத்வம்' எனும் வரம் ப்ரார்த்திக்கப்படுகின்றது. (அதாவது எம்பெருமான் பக்கத்தில் எப்பொழுதும் அகலாதிருத்தல்) உம்மிடமிருந்து யான் வேறு வரம் வேண்டேன். எனக்கு இவ்வரத்தைத் தந்தருள நீரே யோக்யதையைப் பெற்றிருக்கின்றீர்'' என்று ப்ரார்த்திக்கப்பட்ட ஸ்ரீஜகந்நாதர் மந்தஹாஸத்துடன் மேககர்ஜனைபோன்ற கம்பீரமான வசனத்தினால் ஸ்ரீமார்க்கண்டேயரைப்பார்த்து இவ்விதம் திருவாய் மலர்ந்தருளினார். "மஹா பாகனான ஹே ப்ராஹ்மண ச்ரேஷ்ட! என்னால் உமக்கு "நித்யத்வ" மெனும் வரங் கொடுக்கப்பட்டது. சிரமப்பட்டுமடைதற்கரிய என் பக்கத்தில் எக்காலமும் வஸித்திருக்கப்போகின்றீர்'' என்று பரமேச்வரனாகிய ஸ்ரீ பகவான் ஸ்ரீமார்க்கண்டேய மஹாமுனிவரைப்பார்த்துக் கூறிவிட்டு அம்பரீஷ மகாராஜனைச் சற்றுநோக்கிச் சொல்லுகிறார். 15 to 21½

ஸ்ரீபகவான் சொல்லுகிறார்:—

"ஹே பூபால! உன் மனதிலுள்ள வரத்தைக் கேட்பாயாக; உன்னிடம் ஸந்தோஷமடைந்த நான் விசேஷமாக எனது பக்தனாயுள்ள உன் பொருட்டு வேண்டிய வரத்தைக் கொடுப்பேன்" என்று சொல்லும் தருணத்தில் தர்மாத்மாவாயுள்ள அம்பரீஷ பூபாலனும், ஸர்வேச்வரரான ஸ்ரீஹரியை வணங்கி இவ்வார்த்தையைச்சொல்லினன். "சென்றதையும் இனி வருவதையும் தானாகவே அறிந்தவர்களுக்கு ஈசனாக விளங்கும், ஹே பகவந்! உம்மிடமிருந்து என்னால் ப்ரார்த்திக்கப்படுவது என்பது ஹே கமலேக்ஷண! உமக்கே தெரியவரும். ஹே பாபஹரனே! ஆனாலும் என்னால் ப்ரார்த்திக்கப்படுவதை உம்மிடஞ் சொல்லுகின்றேன். எல்லா ஆத்மாக்களிலும் நிறைந்து, எல்லாப் ப்ராணிகட்கும் நியந்தாவாகி, எல்லா உலகங்களையும் அடையச்செய்விப்பவராகி விளங்

கும் ஹே ஸ்ரீகேசவ! நான் ஸம்ஸாரஸமுத்திரத்தில் முழுகி, மிகவும் கஷ்டமடைகிறேன். ஹே தாமரைக் கண்ணா! அந்த ஸம்ஸாரஸாகரத்தினின்று மோக்ஷத்தையடையும் வரத்தை நான் வேண்டுகின்றேன். ஹே ஸ்ரீ கோவிந்த! இவ்வரத்தையே கொடுத்தருள வேண்டும்; ஸ்ரீகேசவரான உம்பொருட்டுப் பலதடவை நமஸ்காரஞ் செய்து கேட்டுக்கொள்ளுகின்றேன். ஸம்ஸார ஸமுத்திரத்தில் மூழ்கின எல்லோருக்கும் முக்தியைக் கொடுத்தருளுபவர் ஸநாதனரான நீரொருவரே; வேறொரு புருஷனுமில்லை" என்று இவ்விதம் சொன்ன அம்பரீஷமஹீபதியை நோக்கி தர்மாத்மாவாயும், ஷாட்குண்யம் பொருந்தியவராயுமுள்ள ஸ்ரீ ஜனார்த்தனர் மறுபடியும் சொல்லுகிறார். 22 to 29

ஸ்ரீ பகவான் கூறுகிறார்:—

"ஹே அம்பரீஷ மஹீபாலனே! நான் உனக்குச் சொல்லுகிறபடி நீ கேட்டுச் செவ்வையாகச் செய்வாயாக; உன்னுடைய ப்ரார்த்தனை அப்படியே நிறைவேறும். ஹே இராஜேந்திர! உன்னுடைய புரோஹிதரும் மஹாதபஸ்வியுமான வஸிஷ்டர் எல்லாவற்றிற்கும் மேலான முக்தி உபாயத்தையும், மற்றும் எல்லாவற்றையுமுள்ளபடி அறிவார். ஸமஸ்த கர்மயோக ஞானயோகங்களையும் உண்மையாக அறிவார். அம்மஹாத்மாவினாலே இதற்குமுன் ஸகலமும் என்னிடமிருந்து கேட்கப்பட்டிருக்கின்றது. உலகில் பாபஞ்செய்த மனிதர்களுங்கூட முக்தியை யடையும் வழியை முனீந்த்ரர்கள் சொல்லுவார்கள். ஹே அரசனே! உனக்குப் பாபமே இல்லை. முனிச்ரேஷ்டரும், தர்மவான்களுக்குள் மேலானவருமான வஸிஷ்டர் சொல்லுகிறபடி நீ செய்து நொடிப்பொழுதில் இத்துக்க சமுத்திரத்தினின்று விடுபட்டு, ச்ரமப்பட்டு மடைதற்கரிய மேலான முக்தியை அடைவாயாக" என்று ஸ்ரீ பகவான் மறுபடியும் முன்கூறியவைகளெல்லாம் அம்பரீஷ மஹாராஜனுக்கு நினைவில் தங்கும்படி திருவாய்மலர்ந்தருளினார். இவ்விதம் ஸ்ரீதேவதேவன் அம்பரீஷமஹாராஜனுக்கு வரமருளிச்செய்துவருந்தருணத்தில் மஹாகாந்தியோடு கூடியவரும், தாமரஸத்தினின்று உதித்தவரும், பிதாமஹருமான ஸ்ரீ ப்ரஹ்மாவானவர் தேவர்க

ளுடன் தேஜோமயனாக விளங்கி, கருடனின் மீது ஆரோஹணித்து இருக்கிறவரும், ஸர்வகாரணருமான ஸ்ரீ பகவானைத் தலைமேல் அஞ்சலி பந்தஞ்செய்து வணங்கி, ஜகத்தின் நிலமையைப்பற்றி விக்ஞாபிக்கலானார். 30 to 41½

க்ரமப்படி முன்போலவே ஸ்தாவரஜங்கமாத்மகமாயுள்ள இவ்வுலகமும், ஸ்வாயம்பூ, முதலிய மனுக்களும், இவ்விதம் ஸ்வாயம்பூ முதலியவர்களை முதன்மையாகக்கொண்ட ச்ரேஷ்டர்களான முனிநாதர்களும், ஸ்ருஷ்டிக்கப்பட்டனர். இவர்கள் மூலம் அத்புதமான ஸகல உலகமும் ஸ்ருஷ்டிக்கப்பட்டது. மேலும் க்ரமமாகவே மஹா பாக்யசாலிகளான இந்திராதி ஸகல தேவர்களும், தைத்ய, தானவ, கந்தர்வர்களும், யக்ஷ, இராக்ஷஸ, பந்நகர்களும் குஹ்ய வித்யாதரர்களும், ஸௌபாக்யவதிகளான அப்ஸரோகணங்களும், ஸனத்குமாரர் முதலிய ஆயிரக்கணக்கான யோகீந்த்ரர்களும், த்வீபங்களைப் பெற்ற ஏழு ஸமுத்திரங்களும், பர்வத ச்ரேஷ்டங்களான மேரு முதலிய ஏழு குல பர்வதங்களும், மகா தேஜஸ்விகளான முனிவர்களும், புராதனமாயுள்ள பாதாளாத்ரியும், ஏழு உலகங்களும், க்ரஹங்களும், நக்ஷத்திரங்களும், நல்முத்துக்களும், பெருகுகிற நதிகளும், மனுஷ்யர்களும், பசுக்களும், ஸ்தாவரங்களும், பக்ஷிகளும், இவைகளாலும் இன்னும் அனேகங்களாலும் நிறைந்த பரமாச்சர்யமான இவ்விச்வமானது மேதாவியும், ஸர்வவ்யாபகனும், அளவுக்கடங்காத தேஜோவானும், ஸ்ரீமந் நாராயணனுமாகிய தங்களுடைய கட்டளையினாலே க்ரமமாக ஸ்ருஷ்டிக்கப்பட்டது" என்று பிதாமஹரானவர் நமஸ்கரித்து விக்ஞாபித்தார். இதன்மத்தியில் சார்ங்கபாணியும், ஸ்ரீதேவனும், ஸ்ரீதேவதேவனுமான பரப்ரஹ்மத்தின் ஸந்நிதானத்தில் எவ்விதமாக ப்ரஹ்மாவானவர் விக்ஞாபித்துள்ளாரோ, அவ்விதமாக இந்திரனை முன்னிட்ட ஸகல தேவர்களும் புராண புருஷோத்தமனையும், மஹாத்மாவாயும், கருடவாஹனாரூடராயும், ஸ்ரீ தேவதேவனையுமுள்ள லோகநாயகனைவணங்கி அஞ்சலிசெய்து இவ்வார்த்தையைக் கூறினார்கள். 42 to 53

தேவர்கள் கூறுகின்றனர்:—

"ச்ரேஷ்டர்கள் எல்லோரிலும் ச்ரேஷ்டரே! வ்யாபகமாயுள்ளவரே! ஹே ஹ்ருஷீகேச! ஹே ஸ்ரீ தேவதேவ! உலகத்தைக் காப்பாற்றும் ஷாட்குண்யம் பொருந்தியவரே! ஸநாதனரே! ஹே விச்வபாவன! ஹே ஜகத்பாலக! ஸதா ப்ரஸன்னமாகி இருக்கிற ஹே ஸ்ரீ தேவதேவ! எங்களெல்லோரையும், காப்பாற்றும்; காப்பாற்றும்; எங்களுக்கு நீரே மேலான கதி. ஈச்வரரான உம்மையே சரணமடைந்திருக்கின்றோம். நாங்களும் உம்மையே அண்டி சுகமாக வஸிக்கின்றோம். மறுபடியும் மறுபடியும் உமக்கே நமஸ்காரம். உம்மையே சரணமடைந்திருக்கின்றோம்" என்று தேவர்கள் சொன்ன பிறகு அத்தேவர்களால் வணங்கப்பட்டவராயுள்ள ஸ்ரீ பகவான் ஸமஸ்த துக்கங்களைப் போக்குவதின் பொருட்டு நீண்டதும், ப்ரஸன்னமானதும், சுபமாயுள்ளதும், பார்ப்பதற்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணக்கூடியதும், காந்தியுள்ளதுமாகிய கண்களால் அத்தேவர்களைப் பார்த்தார். 54 to 58

எந்த த்ருஷ்டி வீக்ஷணயத்தால் மனிதர்களும், தேவத்வத்தை யடைவார்களோ அந்த ஸ்ரீதேவதேவனின் த்ருஷ்டியினால் பார்க்கப்பட்ட அப்பொழுதே அந்த தேவச்ரேஷ்டர்கள் க்ருதார்த்தர்களாக ஆகி தைத்யர்களை ஜயித்துவிட்டதாக எண்ணினார்கள். மேலும் அத்தேவர்கள் ஸ்ரீதேவனான ஸ்ரீ விருஷபாத்ரிநிவாஸியான ஸ்ரீ ஸுந்தரராஜனின் அநுக்ரஹத்தினால் கஷ்டப்பட்டு மடைதற்கரியதும், என்றும் அழியாததுமான பெரும் செல்வத்தை யடைந்தார்கள். அங்கு ஸ்ரீ பகவானை ஸேவிப்பதற்குக் கூடியிருந்த ருஷிகளும், தேவச்ரேஷ்டர்களும், ஸ்ரீவிருஷபாத்ரிநிவாஸியான ஸ்ரீஸுந்தரராஜமூர்த்தியின் ப்ரஸாதத்தினால் கிடைத்தற்கரிய ஸகலமான அவரவர்களின் இஷ்டலாபங்களையடைந்தனர். ஸர்வாத்மஸ்வரூபியான ஸ்ரீபகவான் மதுஸூதனரும், அவர்களெல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே திடீரென்று மறைந்தார். 59 to 63

"ஹே அரசே! பிறகு ஆச்சர்யமடைந்த அங்குள்ள மார்க்கண்டேயாதி முனிச்ரேஷ்டர்களும், ப்ரஹ்மாதி தேவச்ரேஷ்டர்

களும், ஆயிரக்கணக்கான முனீந்த்ரர்களும், அந்தர்த்தானமடைந்த ஸ்ரீ விருஷபாத்ரிநிவாஸியும், ஜகத்காரணனும், மஹாத்மாவாயும், ஸ்ரீ புருஷோத்தமனுமாகிய ஸ்ரீமந்நாராயணனை அடிக்கடி வணங்கிப் பரம ஸந்தோஷத்தை யடைந்து, அந்த ஸ்ரீ விருஷபாத்ரியையும், ஸ்ரீ விமானத்தையும் மஹாத்மாவான ஸ்ரீ புருஷோத்தமனையும் அடிக்கடி புகழ்ந்தனர். 64 to 66

ஸ்ரீ ப்ரஹ்மா சொல்லுகிறார்;—

"அஹோ! மஹா புண்யமானதும், பரமாச்சர்யகரமானதும், பகவத் பாதாரவிந்தயோகம் பெற்றதும், பர்வத ச்ரேஷ்டமுமான இச்சோலைமலையில் ஸ்ரீ பகவந் மாஹாத்ம்யமானது நம்மால் எதிரில் பார்க்கப்பட்டது. ஜகத்காரணனான ஸ்ரீ கேசவன் ஸ்ரீ விருஷ பாத்ரியில் வஸிப்பதால் நூறு வருஷங்களானாலும் இதனது பெருமையைச்சொல்ல நம்மால் முடியாது. பெருமைதங்கியவனும், மறைந்திருப்பவனும், ஸ்ரீ தேவதேவனுமான ஸ்ரீ ஹரியினால் ஸேவிக்கப்படும் இவ்விமானத்தின் பெருமையை வர்ஷசதங்களானாலும் எடுத்துரைக்க முடியாது. 67 to 69

ஸ்ரீ வாமதேவர் கூறுகிறார்:—

"நரேச்வரனான ஹே ஜனகமஹாராஜனே! இவ்விதமாக ப்ரஹ்மாதி தேவர்கள் அம்மலையிலேயே பேசிக்கொண்டு இருக்கும் பொழுது ஸூர்யபகவான் மத்யாந்ஹகாலத்தை யடைந்தார். 70

இவ்விதம் ஸ்ரீ வாமன புராணத்தின்
க்ஷேத்ரமாஹாத்ம்யகாண்டத்தில் 44-வது அத்யாயத்தில்
ஸ்ரீ விருஷபாத்ரி மாஹாத்ம்யமெனும் இதிஹாஸ ஸ்தலபுராணத்தில்
"ஸ்ரீமார்க்கண்டேயருக்கு நித்யத்வமெனும்
வரத்தைத் தந்தருளிச்செய்த"தெனும்
ஆறும் அத்யாயம் முற்றிற்று.

சுபம்.

ஸ்ரீ:

ஸ்ரீவிருஷபாத்ரிமாஹாத்ம்யத்தில்

"ஸ்ரீஸுந்தராஜமூர்த்தி ஸ்வரூபவைபவ" மென்னும்

ஏழாம் அத்யாயம்.

முனிச்ரேஷ்டரான ஸ்ரீ வாமதேவரே! இம்மலையில் ப்ரஹ்மா முதலிய தேவச்ரேஷ்டர்களும், ஸ்ரீ மார்க்கண்டேயாதி முனிச்ரேஷ்டர்களும், ஒன்றுகூடி பின்பு என்ன செய்தனர்? என்று நரேந்த்ரனும், மஹாத்மாவுமான ஸ்ரீ ஜனகமஹாராஜாவினால் கேட்கப்பட்ட ஸ்ரீ வாமதேவ முனீந்த்ரரானவர் அரசனைப் பார்த்து இவ்வாறு சொன்னார். 2

ஸ்ரீ வாமதேவர் சொல்லுகிறார்:—

சூரியனும் மத்யாந்ஹகாலத்தை யடைந்து ஸ்ரீமந்நாராயண மூர்த்தியும் அந்தர்த்தானமடைந்த அப்பொழுது, ப்ரஹ்மாதி தேவதைகளென்னசெய்தார்களென்பதைச் சொல்லுகிறேன். ஹே பூபாலனே! கேட்பாயாக; ஆயிரக்கணக்கான ப்ரஹ்மாதி ஸகல தேவதைகளும், மார்க்கண்டேயாதி ஸகல முனிவர்களும், இன்னுமங்கு கூடினவர்களான கந்தர்வ, கின்னரர்களும், ஸ்ரீ தேவதேவனால் ஸேவிக்கப்பட்டதும், தேவநிர்மிதமும், ஸகல பாபங்களையும் நசிக்கச்செய்வதும், மிக்க உகந்த ஆச்சரியம் பொருந்தியதும், அரிய பெரியதும் புண்யகரமுமான இவ்விமானத்தை ஆயிரந்தடவை ப்ரதக்ஷிணஞ் செய்தும், எங்கும் நிறைந்திருப்பவரும், லோகநாயகனும், ஸ்ரீ விமானத்தில் வீற்றிருப்பவரும் ஸ்ரீ தேவதேவனும், ஸ்ரீ விருஷபாத்ரிநிவாஸியுமான ஸ்ரீ ஹ்ருஷீகேசரைப் பார்ப்பதற்கு, எல்லோரும் இவ்விமானத்திற்குள் பிரவேசித்தார்கள். 3to7

"ஹே ஜனகராஜனே! மேலும் கேட்பாயாக:—மிகவும் மங்களகரமும், மேலானதும் திவ்யமுமாகிய இவ்விமானத்தைப் பார்ப்பதற்கு ஸ்ரீ பிதாமஹரும், கமலாஸனருமான ஸ்ரீ ப்ரஹ்மாவைமுன்

னிட்டு, ப்ரவேசித்தவர்களான அத்தேவாதிகள், விமானத்தி னுள்ளே, சங்கசக்ரதாரியும், அழிவற்றவரும், ஆச்சர்யம் பொருந் தியவரும், உதயகால சூர்யனின் காந்தியையுடையவரும், தெளிந்து அழகிய முகத்தையுடையவரும், தாமரைமலர்போல் அகண்டு நீண்டகண்களையுடையவரும், பார்ப்பதற்குரியதுகளும், மனதைக் கவருவதுகளும், யானைத்துதிக்கைபோல் உருண்டு திரண்டும், அழகுபொருந்திய தோள்வளைகளாலும், கங்கணங்களாலும், இன் னும் மற்ற சோபனமான ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட் டவைகளும், நீண்டவைகளும், மனோக்ஞமான வர்ணமுடையது களும், சுபமான ரேகைகளாலும் நகங்களாலும் அலங்கரிக்கப்பட் டவைகளும், பெருத்து மிருதுவானவைகளும் அனேகம் ஆபரணங் களால் அலங்கரிக்கப்பட்டவைகளுமாகிய, திவ்யமான நான்குகை களோடுகூடினவரும், இன்னும் அனேக ஆபரணங்கள் பூண்டு விளங் குபவரும், எல்லா உலகங்கட்கு நாதரும், விசேஷமாக நான்கு பக்கங் களிலும் பார்வையைச் செலுத்தும் சக்திவாய்ந்ததுகளும், சஞ்சல முள்ளதுகளும், அகண்டு நீண்டதுகளுமாகிய கண்களையுடையவ ரும், மங்களகரமான பாதச்சிலம்புகளால் அலங்கரிக்கப்பட்ட பாதாரவிந்தங்களையுடையவரும், மங்களகரமான உதரத்தையுடை யவரும், அநேக இரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டதோர் கிரீடத் தினால் பிரகாசிப்பவரும், ஸ்ரீவத்ஸாங்கித வக்ஷஸ்ஸையுடையவரும், ஜகத்காரணரும், தேஜோமயனாய் விளங்குபவரும், திவ்ய பீதாம் பரம் தரித்தவரும், திவ்யமான சந்தனத்தினால் பூஷிதரும், எல்லா வேதங்களிலும் சூக்ஷ்மமாக வர்ணிக்கப்பட்டவரும், ஸகல பாபங் களைப் போக்குவதால் 'ஹரி' என்று பெயரையடைந்தவரும், எல்லா அபீஷ்டங்களையும் கொடுப்பவரும், எல்லா தைத்யர்களையும் ஸம்ஹரித்தவரும் எல்லா ப்ராணிகளுக்கு சரண்யரும், ஸர்வ பூதங் கட்கும் வரமருளிச்செய்பவரும், வைடூர்ய இரத்தினமயமான இரு குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், சுபமான மார்பையுடை யவரும், அழகிய தோற்பட்டையை யுடையவரும், அழகு பொருந் தியதோர் கழுத்தின் சோபையையுடையவரும், உன்னதசோபன மும் வாய்ந்த நாஸிகையையுடையவரும், ஜ்வலிக்கும் நெற்றிப்ரதே சத்தை யுடையவரும், ஸிம்ஹம்போன்ற உயர்ந்த தோளையுடைய

வரும், மஹா தேஜோவானும், பற்பல இரத்தினஹாரங்களால் மிகவும் மறைந்துள்ள விஸ்தாரமான வக்ஷஸ்தலத்தை யுடையவரும் தாமரைக்கண்ணனும், அத்யத்புதரும், எல்லா உலகங்களையும் ஸ்ருஷ்டிப்பவரும், அண்டினவர்களை யாதரிப்பவரும், அழிவற்றவருமான ஸ்ரீ பகவானை நமஸ்கரித்துப் பலதடவைகளில் ஸ்தோத்திரங்களால் போற்றித் துதித்தபின்பு ஸ்ரீ ப்ரஹ்மாதி தேவர்களும், ஸ்ரீ மார்க்கண்டேயாதி முனிவர்களான தபோதனர்களும், ஸகல புவனங்களாலும் ஸேவிக்கப்பட்ட அந்த ஸ்ரீ ஸோமச்சந்தவிமானத்திலிருந்து வெளிக்கிளம்பினர். "ஹே அரசே! அம்பரீஷச் சக்ரவர்த்தியும் இன்னும் அங்கு கூடின எல்லோரும், ஸித்த ஸேவிதமான அவ்விமானத்திலிருந்து வெளியே புறப்பட்டவுடன், அம்மலையின் மேல்புறத்தில் ஈசனும் கமலோத்பவனும், ஸ்ருஷ்டி கர்தாவாயுமுள்ள ஸ்ரீப்ரஹ்மாவைச் சூழ்ந்து உட்கார்ந்தார்கள். 8 to 23½

"போ மஹாபாகனை அரசனே! பிறகு தேவரான பிதாமஹ பகவானும், புருஷோத்தமரான ஸ்ரீபகவானை வணங்கி, அவர்களின் மத்தியில் உட்கார்ந்தார். அப்போது ஸகல தேவர்களும் ப்ரஹ்மாவை நோக்கி அவ்யக்த ஜன்மாவினதாயுள்ள ப்ரஹ்மத்தின் வரலாற்றைக்கேட்க மிக்க ஆவல் கொண்டோம். அருள்புரிவீர்களாக! என்று சொன்னார்கள். அப்போது ஸகல தேவர்களாலும், மார்க்கண்டேயாதி முனிவர்களாலும், சூழப்பட்டவரான அளவுக்கடங்காத தேஜஸ்ஸோடுகூடின ப்ரஹ்மாவும், ஸர்வ பூதாந்தராத்மாவான அபர நாராயணர்போல் இவ்விமானத்தில் வீற்றிருந்து விளங்கினார்" என்று ஸ்ரீவாமதேவர் ஜனகமஹாராஜனைக் குறித்துத் தெரிவித்த ப்ரகாரம் ஸ்ரீ ஸூதபுராணிகர் நைமிசாரண்யவாஸிகட்குத் திருவாய் மலர்ந்தருளினார். 24 to 27

இவ்விதம் ஸ்ரீ வாமனபுராணத்தின் க்ஷேத்ரமாஹாத்ம்ய
காண்டத்தில் 45-வது அத்யாயத்தில்
ஸ்ரீ விருஷபாத்ரி மாஹாத்ம்யமென்னும்
இதிஹாஸ ஸ்தல புராணத்தில்
"ஸ்ரீ ஸுந்தரராஜமூர்த்திஸ்வரூப வைபவ"மென்னும்
ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.
சுபம்.

ஸ்ரீ:

ஸ்ரீவிருஷபாத்ரி மாஹாத்ம்யத்தில் "ஸ்ரீநூபுரகங்காவைபவ" மெனும்

எட்டாம் அத்யாயம்.

ஸ்ரீவாமதேவர் கூறுகிறார் :—

"ஹே ஜனக மஹாராஜனே! மேலும் கேட்பீராக; நிர்மலமுள்ளதாயும், ஸகல அபீஷ்டங்களையும் நிறைவேற்றிவைப்பதாயுமுள்ள ஸ்ரீஸோமச்சந்தவிமானமானது கந்தர்வர்களாலும், உரக, இராக்ஷஸர்களாலும், மற்றுமுள்ள பக்திமான்களாலும் பார்க்கப்படவில்லை. ஜங்கமங்களும், பாபங்களைச் செய்த மனிதர்களும், இதரர்களும், தேவர்களும் ஆசையற்றவர்களா யிருந்தால் இவ்விமான தர்சனத்தின் மூலம் மோக்ஷபதவியையடைவார்கள். இவர்களே ஆசையுள்ளவர்களாயிருந்தால் ஸ்வர்காதிஸமஸ்த இஷ்டமான உலகங்களை யடைவார்கள். தேவர்களால் பூஜிக்கப்பட்டதும், ஆச்சர்யகரமானதும், அரியபெரியதும், திவ்யமுமாகிய இவ்விமானத்தை தர்சிக்கவேணுமென்று ஆவலுடன் புறப்பட்டுவரும் பகவத் பக்திமான்களான மானிடர்கள் இவ்விமானத்தை அடைவதற்கு சக்தியற்றவர்களாய் ஆனபோதிலுங்கூட, அவர்களும் ஸகல பாபங்களினின்றும் விடுதலையடைந்தவர்களாகி, பாபகர்மிகளால் அடையமுடியாததும், சுபமும் புண்யகரமும், இஷ்டமுமான கதியையடைகின்றனர். ஸ்ரீதேவதேவனும், அச்யுதனும், பகவானும், பூதபவ்யேசனும், வ்ருஷபோத்தமனும், ஸ்ரீவ்ருஷபாத்ரிநிவாஸியுமான எம்பெருமானுடைய பெருமையைக்கேட்டு, அவரை தர்சிக்கவெண்ணி, இவ்விமானத்தில்ப்ரவேசித்த நமக்கு, இதுகாறும் காணப்படாத அவருடைய திவ்ய மங்களதேஜோரூபமானது, இப்பொழுதுதான் அவர் அனுக்ரஹத்தால் எங்களுடைய திருஷ்டிக்கு அர்ச்சாவதாரமாகக் கோசரமாகி தர்சனம் தந்தருளப்பட்டு அந்தர்தானம் அடையப்பெற்றது.

1 to 7½

"ஹே ஜனகமஹாராஜனே! மேலும் கேட்பாயாக; சுபமான மந்தமாருதத்தினால் ஸேவிக்கப்பட்டவரும், அச்யுதனும்

அதோக்ஷஜனுமான என்னைப்பார்த்தபிறகு புண்யமும், பர்வதச்ரேஷ்டமுமாகிய இச்சோலைமலையில் தன்தன் கர்மவசத்தால் ஜன்மாவையடைந்ததும், இனியடையப்போவதுமான ஸ்தாவரங்களும் நரக வேதனையைத்தரும் ஸகல பாபபந்தங்களினின்று விடுதலையடைந்து ஸ்வர்க்கலோகப் பதவியைத் தந்தருளும் புண்யகர்மாவுடன் விரும்பியதாயுள்ள ஸ்வர்க்கலோகத்திற்கே வெகுகாலம் அங்கு வஸிப்பதின் பொருட்டு முன் செல்லுகின்றன. மேலும் எறும்புகள், பக்ஷி ஜாதிகள், பசுவினங்கள், பாம்பு முதலிய ஊரும்பிராணிகள், மேலும் இவ்வுத்தம பர்வதத்திலுதித்த மற்றும் இவ்விதமான ஜந்துக்களும், துக்க ஸமுத்திரமாகிய ஸகல பாபங்களிலிருந்து விடுதலையடைந்து, ஜன்ம ஜன்மாந்தரங்களில் செய்ததாயுள்ளதும், நரக வேதனையைத் தருவதுமாகிய துக்ககரமான செய்கையிலிருந்து விடுபட்டு, மஹான்களான ப்ராஹ்மணர்களும், துர்லபர்களான தேவர்களும், புனிதர்களாகினும் இவ்விருஷபாத்ரிநிவாஸியான ஸ்ரீ தேவதேவனின் ப்ரஸாதத்தின்மூலம் புண்யகர்மாவைச் செய்தவர்களால் அடையக்கூடிய மேலான இஷ்ட திவ்ய லோகங்களை யடைகின்றார்கள். 8 to 14

மேலும், இம்மலையினதுபெருமையை வருஷசதமானாலும் எடுத்துரைக்க முடியாது; ஏனெனில் பெருமை வாய்ந்ததோர் இம்மலையில் தர்மாத்மாவும், ஸநாதனருமாகிய ஸ்ரீவாஸுதேவபகவான் வஸிக்கின்றார். மேலும் திவ்யமும், மஹாத்புதம் வாய்ந்ததும், புண்யமும் கிரிச்ரேஷ்டமுமாகிய இம்மலையினது இரம்யமான குஹைகளிலும் சுபகரமான சிகரங்களிலும், மற்றுமுள்ள இன்பந்தரும் ப்ரதேசங்களிலும், ஸ்ரீகாந்தனான லோகநாயகன் சென்றதற்கும் இனி வருவதற்கும் ஈசனாகயிருந்தும், மங்களமான காற்றால் ஸேவிக்கப்பட்டு, பக்தர்கட்கு மேலான ஹிதத்தைச் செய்யும் சுபகரமான மனதோடு கூட ஸ்ருஷ்டிக்கப் பட்டதாயுள்ள ஸகல உலகங்கட்கும் ஹிதத்தையுஞ் செய்துகொண்டும், மனுஷ்ய, தேவ, சாரணர்கள் ஸித்தர்கள் வித்யாதரர்கள் முனிவர்கள் குஹ்யகர்கள் முதலியவர்களாலும் காணமுடியாதவராய் தன்னிஷ்டப்படி எப்பொழுதும், ஸ்ரீதேவியோடு லக்ஷ்மீஸமேதனாக ஸதாகாலமும் ரமித்துக்கொண்டிருக்

கிறார். இம்மஹா புண்யம்வாய்ந்த இந்த சோபனமான மலையில் அநேகம் புண்யதீர்த்தங்கள் இருக்கின்றன. 15 to 19½

ஹே ஸுரோத்தமர்களே! மேலும் கேளுங்கள். பகவத்ஸ்வரூபம் பொருந்தியவைகளான தீர்த்தங்களும், நிர்மலமான ஜலங்களைப்பெற்ற வாபிகளும், அனேகம் மடுக்களுமிருக்கின்றன. பரிசுத்தங்களாயும், மங்களத்தையளிக்கக் கூடியதாயுமுள்ள இத்தீர்த்தங்களிலும், ஸர்வலோகேச்வரரான ஸ்ரீ ஹரியை த்யானஞ் செய்துகொண்டு, ச்ரமத்தைப் பாராட்டாமல் ஸ்நானம் செய்யவேண்டும். மேலும் இப்புண்ய தீர்த்தங்களை இரு கைகளாலுமெடுத்து "அஷ்டாக்ஷர" மஹாமந்த்ரத்தினால் ஜபஞ் ஜபித்து ச்ரத்தையுடன் அடிக்கடி ப்ராசனம் செய்யவேண்டும். இவ்விதமாக இத்தீர்த்தங்களிலிருந்துகொண்டே ஸ்நானஞ் செய்து, மஹா மந்த்ரத்தை விதிப்படி நன்கறிந்து, தீர்த்தப்ராசனஞ் செய்த மனிதன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுதலையடைந்து, ஸ்ரீதேவனான ஸ்ரீ விருஷபாத்ரிநிவாஸியின் ப்ரஸாதத்தினாலும், தீர்த்தங்கட்கு மங்களத்தைத் தந்தருளும் தேவ தீர்த்தங்களின் மஹிமையினாலும் பரமபதத்தை யடைந்திடுவான். இத்தகைய பெருமைவாய்ந்ததோர் சோலைமலைக்கு வந்து உத்தம ஸ்ரீ சோமச்சந்த விமானத்தை ஸேவிக்கும் மனிதன் "வாஜபேய" யாகஞ்செய்வதால் ஏற்படும் பலனுக்குஒப்பான பலனை நொடிப்பொழுதே யடைந்திடுவான். ஹே தேவர்களே! மேலும் கேளுங்கள். இம்மலையைச்சுற்றி அர்த்தயோஜனை தூரத்திற்கப்பாலும் வஸிக்கும் மனிதர்களுங்கூட பரமபதத்தை யடைந்திடுவார்கள். இத்திவ்யமான மலையின் நிழல் திவ்யமான பூதலத்தை எதுவரை மறைத்து வ்யாபித்திருக்கின்றதோ, ப்ராசீனமும், அதிசுபமும், நிர்மலமுமாகிய அத்தலத்தில் வஸிக்கும் பாபிகளுங்கூட அளவுக்கடங்காத தேஜோவானாகிய ஸ்ரீ விஷ்ணுவின் லோகத்தை யடைகின்றனர். மேலுமித்திவ்ய விமானமும், இம்மலையினது எல்லாப்ரதேசமும், ஸகல மஹீதரங்களும், புராதனங்களான புராணங்களையறிந்த பெரியோர்களால் போற்றப்பட்டு ஸேவிக்கப்பட்டதாயிருக்கின்றன. இவைகளை பக்தியுடன் ஸகலவித ப்ரயத்னங்களாலும் தனக்கு ஹிதமாக எண்ணி ஸேவிக்கும் மனிதன் ஞாபகத்துட

னிருக்கும்பொழுதே பகவத் ஸ்வருபத்தையடைகின்றான். அதே க்ஷணத்தில் ஸர்வ பூதாந்தராத்மாவும், ஸ்ரீ பரமாத்மாவும், அண்டினவர்களையாதரிக்கும் அச்யுதருமான எம்பெருமான் அவன் ஹ்ருதயாகாசத்தில் தோன்றி ஸதாகாலமும் ரமித்துக்கொண்டிருக்கிறார். மேலும், எவ்விதம் ஸ்ரீபகவான் நாராயணகிரியில் ஸ்ரீதேவியை விட்டுப்பிரியாமல் ஸதாகாலமும் ரமித்துக்கொண்டிருக்கிறாரோ அதேவிதம் ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்தங்களைத் தாங்குகிற புண்யமான இச்சோலைமலையில் ஸ்ரீகாந்தன் லக்ஷ்மீ ஸமேதராக ரமித்துக்கொண்டு வருகிறார். 20 to 33

"ஹே தேவர்களே! என்னால் சொல்லப்பட்ட அதிரஹஸ்யங்களாயுள்ள இந்த விஷயங்களை விசேஷமாக ஞாபகம் வைத்துக் கொள்வீர்களாக. மேலுமிம்மலையில் ஸுரச்ரேஷ்டர்கள் ஸ்ரீவிஷ்ணு ஸாந்நித்யமடைந்து ஸ்ரீபகவானுடன் ரமித்துக்கொண்டு நன்கு விளங்குகின்றனர். மற்றவர்களுக்கு இப்பாக்யம் கிடைக்கமாட்டாது. உங்களுக்கு இவைகளை மிகச்சுருக்கமாக எடுத்துரைத்தேன். என்னாலும், தேவச்ரேஷ்டர்களான உங்களாலுங்கூட வருஷ சதங்களானாலும், இப்பர்வதேந்த்ரனின் மாஹாத்மியத்தை விரிவாகச் சொல்ல இயலாதென்றால் மற்ற அல்ப புத்தியுள்ளவர்களால் எவ்விதம் வர்ணிக்கமுடியும்" என்று ஸ்ரீப்ரஹ்மா தேவர்களை நோக்கிச்சொல்லலுற்றார். 34 to 36

ஸ்ரீ வாமதேவர் கூறுகிறார்:—

"ஹே ஜனகமஹாராஜனே! இவ்விதம் ஸ்ரீ ப்ரஹ்மா, தேவர்கட்குச் சொன்ன ப்ரகாரம் உனக்குச் சொன்னேன். மேலும் கேட்பாயாக;

"மந்தாரவனங்களால் சோபித்து விளங்குகிற உத்யானசைலத்திலுள்ள ஸ்ரீ நூபுரகங்கா நதீதீரத்தில் "ஸ்ரீஸுந்தரராஜர்" என்ற பெயருடன் ஸ்ரீபகவான் வஸித்துவருகிறார். ஸர்வ தீர்த்தங்கட்கும் தாயாகி விளங்குகிறதும், மஹாபாதகங்களை நசிக்கச்செய்கிறதும், ஸ்ரீவிஷ்ணுஸம்பந்தமடைந்திருக்கிறதுமாகிய ஸ்ரீ நூபுரகங்காநதியானது இம்மலையில் ப்ரவஹிக்கின்றது. கமலோத்பவரான ஸ்ரீப்ரஹ்

மாவானவர் கலீர்கலீரென்று ஓசையிடும் பாதச்சிலம்பினு லழகு பொருந்தியதோர் த்ரிவிக்ரமாவதார மூர்த்தியின் பாதாரவிந்தங்களைப் பூஜித்து இருகைகளாலும் த்ருடமாகப் பிடித்து பாதப்ரக்ஷாளனஞ் செய்துள்ளார். அப்பாதாரவிந்த ஜலமானது இம்மலையில் பெருகி "ஸ்ரீநூபுரகங்கை" எனும் பெயர் வாய்ந்து மஹா நதியாக விளங்குகின்றது. இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்வதை கங்கா ஸ்நானத்திற்கும் மேலானதாகப் போற்றுகின்றனர். 37 to 40

"பகவத் பாதாரவிந்தச் சிலம்பிலிருந்து பெருகிய இச்சிலம்பாறுனது நதிகளுக்கெல்லாம் மேலானதாகி, ஸ்ரீப்ரஹ்மாவினால் பூஜிக்கப்பட்டு, மங்களகாரிணீயாய் விளங்காநின்று, ஸ்ரீ விருஷபாத்ரியை நன்காச்ரயித்து இடைவிடாமல் ப்ரவஹிக்கின்றது. எந்த மனிதனும் இந்நதியைத் தர்சித்தமாத்திரத்தில் ஸகல பாபங்களினின்றும் விடுதலையடைகின்றான். 41 to 42

"அப்படிக்கிருக்க, ஏன்! ஸுரோத்தமர்கள் இத்தீர்த்தத்தை ஸ்பர்சிப்பதாலும், ப்ராசனம் செய்வதாலும், அதில் ஸ்னானம் செய்வதாலும், ஸகல ஸித்திகளையும் அடைந்த ஸம்பன்னர்களாக ஆக மாட்டார்கள்? இந்த திவ்ய நதிதீரத்தில் செய்யப்பட்ட தானங்கள், ஹோமாதிகள், ஜபங்கள் முதலிய ஸத்க்ரியைகளெல்லாம், மானிடர்கட்கு ஆயிரம்மடங்கான உகந்த சிறந்த புண்யமாகஆய்விடுகின்றது. இவ்வித விசேஷம் வாய்ந்த ஸ்ரீ நூபுரகங்கையில் யாவரும் ஸ்நானம் பண்ணி, ஸ்ரீ விருஷபாத்ரிநிவாஸியான ஸ்ரீ விஷ்ணுவை ஸ்மரித்தல் வேண்டும். பிறகு தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் ஸந்தர்ப்பணை மூலம் த்ருப்திசெய்துவிட்டு "ஸ்ரீ அஷ்டாக்ஷர" ப்ரணவமந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். அதன்பிறகு ஸர்வோத்க்ருஷ்டமான அங்குள்ள ஸ்ரீ ஸோமச்சந்த விமானத்தின் சுற்றிலுமுள்ள நாலுப்ராகாரங்களையும் வலம் வருதல் வேண்டும். கடைசியில் அங்குள்ள ஸாக்ஷாத் ஸ்ரீ ஸுந்தரராஜமூர்த்தியை ஆபாத மௌளிபர்யந்தம் ஸமாஹித மனதுடனும், ஸம்பூர்ண பக்தியுடனும், ஸம்ஹ்ருஷ்ட மனதுடனும் தர்சித்தும், நமஸ்கரித்தும், தன் ஹ்ருதயத்தினுள் வைத்து த்யானித்தும், அனுபவிக்கவேண்டியது. அவ்விதம் எந்த மனுஷ்யன் செய்கிறானோ அவன் ஸர்வாபீஷ்டங்களையும் அடைகின்றான்; தான்

கோரிய ஸகலவித போகங்களையும் அனுபவிக்கிறான்; கிடைத்தற்கரிய ஸ்ரீவிஷ்ணுலோகத்தையும், கடைசியில் சேர்கிறான். 43 to 47

"இந்த ஸ்ரீ நூபுரகங்கா நதியின் அலைகளிலிருந்துண்டான காற்றானது எந்தெந்த தேசத்தில் பரவி வீசுகின்றதோ அத்தேசத்தில் வசிப்பவர்களுக் கெல்லாம் முக்தி கிடைக்கிறதென்றால், அந்த ஸ்ரீ நூபுரகங்காநதி தீரத்திலேயே வஸிப்பவர்களுக்கு முக்தி ஸித்தமாக இருக்கிறதென்று சொல்லவும் வேண்டுமோ. இப்பூவுலகிலுள்ள பலான புண்ய க்ஷேத்ரங்களில் செய்யப்படும் தானாதிகர்மாக்களினால் கிடைக்கும் யாதொரு பலன் உண்டோ, அதைக் காட்டிலும் கோடி மடங்கு அதிகமான பலனை இவ்விருஷப பர்வத க்ஷேத்ரத்தில் செய்யப்படும் கர்மாக்கள் நித்யமும் அளித்து வருகின்றன. ஹே பார்த்திவ! இம்மூன்று லோகங்களிலும் இந்த க்ஷேத்ரத்திற்கு ஸமானமான க்ஷேத்ரம் வேறு கிடையாது. அதேவிதம் இந்நூபுரகங்கைக்கு ஸமானமான ச்ரேஷ்டமான நதியும் கிடையாது. இம்மஹீதலத்தில் ஸ்ரீஸுந்தரேசனுக்கு ஸத்ருசமான தேவனும் கிடையாது, என்னால் இவ்விதம் வெளியிடப்பட்ட இந்த ரஹஸ்யங்களை ஸாவதான மனதுடன் கேட்டு க்ரஹித்துக்கொள்ள வேண்டியது. எவனொருவன் பாண்டியதேசத்திலுள்ள ஸூரர்களால் பூஜிக்கப்பட்ட இவ்விருஷப பர்வதத்தையடைந்து, இம்மலைப்ரதேசங்களை தர்சிக்கின்றானோ அவன் அச்வமேதயாகம் செய்வதால் ஏற்படும் பலனையடைகிறான். மேலும் ஸ்ரீஸுந்தரராஜனை நமஸ்கரித்தலால் அச்வமேதாதி பலன்களும் ஏற்படுகின்றன"வென்று சொல்லிவிட்டு உலக பிதாமஹரும், முனீந்த்ரர்களுக்கும் ஸர்வ தேவர்களுக்கும் ச்ரேஷ்டரும், கமலோத்பவரும், ஸுராத்யக்ஷரும், ஸர்வ தேவர்களால் நமஸ்கரிக்கப்பட்டவரும், மஹா தேஜஸ்வியுமான பகவானான ஸ்ரீ ப்ரஹ்மாவானவர், தம்மிருப்பிடமான ப்ரஹ்மலோகத்திற்குப் புறப்பட எண்ணங்கொண்டு எழுந்திருந்தார். 48 to 54½

இந்த்ராதி ஸகல தேவர்களும், முனீந்த்ரர்களும், அவ்யக்த ஜன்மாவைப் பெற்ற ஸாக்ஷாத் ஸ்ரீ ப்ரஹ்மா எழுந்திருந்தவுடன், தங்கள் தங்கள் ஸ்தானங்களைவிட்டெழுந்திருந்து திரளாக ஸ்ரீ ப்ரஹ்மாவைச் சூழ்ந்து நின்றுகொண்டார்கள். அப்போது அவர்கள்

அங்கு குழுமியிருந்தது வெகு அற்புதமாக இருந்தது. அத் தேவக்குழாங்களால் சூழப்பட்ட லோக பிதாமஹரான ஸ்ரீ ப்ரஹ்மாவும், ஸ்ரீபுருஷோத்தமனான ஸ்ரீஸுந்தராராஜனை நமஸ்கரித்தும், ஸர்வோத்க்ருஷ்டமான ஸோமச்சந்தவிமானத்தை வலம் வந்தும், தனதிருப்பிடமாகிய ப்ரஹ்ம லோகத்தை நோக்கிச் சென்றார். 54½ to 58

ஸர்வ ப்ராணிகளுக்கும் வரமளிப்பவரும், ஸர்வதேவேசனுமான ஸ்ரீப்ரஹ்மாவினிடம் விடைபெற்றுக்கொண்ட ஸ்ரீமார்க்கண்டேயாதி மஹரிஷிகளும் ஸ்வஸ்தானங்களை நோக்கித் திரும்பிச் சென்றார்கள். 59

ஸ்ரீ பகவத் பாதாரவிந்தயோகம் பெற்ற மஹா புண்யகரமான ஸ்ரீவிருஷபாத்ரியில் நடந்ததும், புராதனமாகவுள்ள வ்ருத்தாந்தங்கள் இவ்விதமாக என்னால் விரித்துரைக்கப்பட்டது. மேலும் தேவர்களால் நன்குகேட்டு அனுபவிக்கப்பட்ட இந்த ஸ்ரீவ்ருஷபாத்ரியின் க்ஷேத்ர வைபவமும், அங்கு ஸாந்நித்யத்துடன் இருக்கும் பகவானுடையவும், அவரது தேவாலயத்தினுடையவும் மாஹாத்ம்யங்கள் எல்லாம் என்னால் சொல்லப்பட்டது. யாவனொருவன் இம்மலையினது ஆச்சர்யமான மாஹாத்ம்யத்தைக் கேட்கின்றானோ அம்மனிதன் ஸர்வ பாபங்களைப் போக்குகிறவனும், லோகநாதனும், ஜகதீசனும், ஸ்ரீவ்ருஷபாத்ரிநிவாஸியுமான ஸ்ரீக்ருஷ்ணனுடைய உத்தமானுக்ரஹத்தினால், ஸர்வோத்க்ருஷ்டமான ஸ்ரீ விஷ்ணுலோகத்தை நொடிப்பொழுதிலேயே அடைகின்றான். 60 to 63.

இவ்விதம் ஸ்ரீ வாமன புராணத்தின்

க்ஷேத்ரமாஹாத்ம்யகாண்டத்தில் 46-வது அத்யாயத்தில்

ஸ்ரீ விருஷபாத்ரி மாஹாத்ம்யமெனும் இதிஹாஸ ஸ்தலபுராணத்தில்

"ஸ்ரீ நூபுரகங்கா வைபவ"மெனும்

எட்டாம் அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீவிருஷபாத்ரிமாஹாத்ம்யத்தில்

" ஸ்ரீவிருஷபாசல நிழலின் வைபவமெனும் "

ஒன்பதாம் அத்யாயம்.

ஸ்ரீ வேதவ்யாஸர் சொல்லுகிறார்:—

"ஹே! தேவரிஷியான நாரதரே! மேலும் கேளும். புண்யம் வாய்ந்ததும் கேட்பதற்கு அதிமனோஹரமாக உள்ளதும் எந்தச்சரித்திரத்தைக் கேட்டமாத்திரத்திலேயே இப்பூலோகத்தில் வஸிக்கும் மனுஷ்யர்கள் தங்கள் தங்களுடைய ஸகலவித பாபங்களினின்றும் உடனே விடுபடுகின்றார்களோ அப்பேர்க்கொற்றதுமான மற்றும் ஓர் சரித்திரத்தைச் சொல்லுகின்றேன். 1

"விசேஷமான கர்வத்தையடைந்த கந்தர்வ ராஜன் ஒருவன் ஆகாசமார்க்கமாகத் தன்னுடன் கூட பின்தொடர்ந்து கானம்செய்து கொண்டுவருகிற இதர பல கந்தர்வர்களுடன் கூட, தானும் பாடிக்கொண்டும் சஞ்சரித்துக்கொண்டும் வருகையில், இவ்விருஷபாசலத்தின் சாயா விசேஷத்தை அறியாமல், அந்த மலையின் சாயாமயமான தாமாவை ஸாஹஸித்தனாய்த் தாண்டிச்செல்ல முயன்றான். ஆனால் இக்கந்தர்வ ராஜனைப் பின்தொடர்ந்து வரும் இதர கந்தர்வர்களோ வென்றால், இம்மலையின் சாயாமயமானதாமாவின் விசேஷங்களை நன்கறிந்தவர்களானதினாலே, எவ்விதத்திலும் இம்மலையின் சாயையானது தாண்டத் தகுந்ததல்லவென்று நினைத்துத் தாண்டாமல் நின்று விட்டார்கள். ஆனால் அந்த கந்தர்வ ராஜனோவென்றால் மோகாக்ராந்தனாய் அந்தச் சாயையைத் தாண்டிச் செல்லலுற்றான். அச்சமயத்தில் அக்கந்தர்வர்கள் அம்மலையின் சாயா விசேஷத்தாலேயே தடுக்கப்பட்ட ஆகாசமார்க்க கமனத்தை யுடையவர்களாக ஆனார்கள். ஆனால் அக்கந்தர்வராஜனோவென்றால், அம்மலையிலுள்ள பலவந்தர்களான ஸ்ரீவிஷ்ணு பாரிஷதேச்வரர்களால் சாயாமார்க்கமாகவே பிடித்திழுக்கப்பட்டவனாய்க்கொண்டு, தன்னுடன்கூட பின்

தொடர்ந்துவந்தவர்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டு இருக்கும் போதே, தூக்கி எறியப்பட்டவனாக ஆனான். கேளும் நாரதரே! இவ்விதம் எறியப்பட்ட இக்கந்தர்வராஜன், வெகு த்வீபாந்தரத்திற்கு அப்பாலிலேயே போய் அதேக்ஷணம் விழுந்தவனானான். கூடவந்த கந்தர்வர்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும் அதேக்ஷணத்தில், அதே ஸ்ரீவிஷ்ணுபாரிஷதேச்வரர்களால் மறுபடியும் அத்த்வீபாந்திரத்திலிருந்து திரும்ப இழுக்கப்பட்டவனாகக் கொண்டு, இக்கந்தர்வராஜன் இப்பூப்ரதேசத்தில் தள்ளப்பட்டவனானான். ஸ்ரீராகவனின் பாணத்தினால், ராத்ரிஞ்சரனானமாரீசன் எத்தகையதோர் கோரசம்பவத்தையடைந்தானோ அதே கதியை இக்கந்தர்வ ராஜனும் அடைந்தவனாகக் காணப்பட்டான். கந்தர்வ ராஜன் எந்தவிடத்தில் அசைவற்றவனாக விழுந்துகிடந்தானோ அதேவிடத்திற்கு அவன் கூடவந்த கந்தர்வர்கள் எல்லோரும் ஓடிப்போய் பார்த்தனர். அக்கந்தர்வராஜனும், அங்கு நின்ற கந்தர்வர்களைப்பார்த்து இக்கோர ஸம்பவம் எக்காரணத்தை முன்னிட்டு ஏற்படலாயிற்று? யாரால்தான் இவ்விதம் ஏற்படவும் நேர்ந்தது என்று வினவினன். 2 to 9

இவ்விதமாக வினவப்பட்ட கந்தர்வர்கள், நடந்த இக்கோர ஸம்பவத்தின் விவரங்களை அவனுக்கு விவரித்து எடுத்துச் சொல்ல வாரம்பித்து கங்காஸ்னானத்தை அபேக்ஷித்துச் செல்லுபவனும், ப்ரமத்தனுமாகியிருந்த உன்னால் மிக்கப் பெருமை வாய்ந்த ஸ்ரீ விருஷபாசலத்தின் நிழல்மயமாயுள்ள தாமாவானது உன்னால் தாண்டிச்செல்லப்பட்டதினால் ஏற்பட்டபலனல்லவோ! இது, என்று எடுத்து உரைக்கலாயினர். இவ்வித வரலாற்றைக் கேட்ட அக்கந்தர்வனும், நடுநடுங்கிய மனதையுடையவனாயிருந்தும், புனருலோசனை செய்யாமல், தன் பரிவாரங்களுடன் மறுபடியும் திரும்பிப் போக ஆசை கொண்டான். ஹே த்விஜச்ரேஷ்டரான நாரதரே! இவ்வித மெண்ணம் கொண்ட இந்த கந்தர்வ ராஜன் அவ்விடம் விட்டு புறப்படமுயன்றும் ஓரடிமேல் ஓர் அடி எடுத்துவைத்து நடப்பதற்குக்கூட சக்தியற்றவனாயினன். கலங்கின மனதுடனும், இக்கோர ஸம்பவத்தின் காரணத்தைக் கண்டுபிடிப்பதில் ஊக்க

முற்றவனுமான இக்கந்தர்வன், நிச்சயமாக இச்சம்பவம் ஸ்ரீவிருஷபாசலத்தின் சாயா விசேஷத்தைத் தாண்ட முயன்றதினால் ஏற்பட்ட பலனே தவிர வேறில்லை என்ற முடிவுக்கு வரலாயினன். இவ்வித கஷ்டங்களையனுபவித்தும் கூட இம்மலையினது பூர்ண வைபவத்தையும் நான் நன்றாக அறிந்துகொள்ளமுடியாதவனாக இருக்கிறேனென்றும் துயரமுற்றான். பிறகு அந்த கந்தர்வராஜன் இனி நாம் ஸ்ரீ எம்பெருமானுடைய அனுக்ரஹத்தின் மூலம், தாண்டிச்செல்ல முடியாததும், பூகதமாகவுள்ளதுமான ப்ரதேசங்களடங்கிய இந்த ஸ்ரீ விருஷபகிரியை நமஸ்கரித்தும் போற்றியும் தான் போகவேண்டுமென்ற முடிவுக்கு வந்தவனாய்க்கொண்டு உடனே தனது சகலவித பரிவாரங்களுடன் புறப்பட்டு இம்மலை ப்ரதேசத்திற்கு வந்து சேர்ந்தான். 10 to 15

பிறகு, அசேஷவிதமான ஸகல க்லேசங்களையும் நசிக்கச்செய்யும் சக்தி வாய்ந்த இத்திவ்யகிரியின் தாமாவை அடைந்த அக்கந்தர்வராஜனும் மனோக்ஞமான வசனங்களால் அக்கிரியை ஸ்தோத்ரம் செய்தும், மறுபடியும் மறுபடியும், ஆனந்தபரவசனாகவே கானம் செய்து புகழ்ந்தும், ப்ரதக்ஷிணம் செய்து நமஸ்கரிக்கலாயினன். இவ்விதம் அந்த ஸ்ரீ விருஷபகிரியையும் அவ்விடத்தில் ஸாந்நித்யத்துடன் இருக்கும் ரமாபதியையும் போற்றி, அனுக்ரஹிக்கப்பட்டு தடையற்ற ஸஞ்சாரத்தோடு மூன்று லோகங்களிலும் ஸஞ்சரிக்கும் சக்தியையடையும் பாக்யத்தைப் பெற்றான்.

16 to 17½

இம்மஹிமைதங்கிய மலையின் சாயையையும்கூட தாண்டுவதினால் ஏற்பட்ட தோஷங்களின் விவரமும், 'ஹே மகாமதே! உங்களுக்கு உரைத்தேன். இதிலிருந்து ஸுரகணங்களாலும்கூட இம்மலையினது சாயையானது தாண்டப்படத் தகாதது என்பதை நன்கறிந்துகொள்ளவேண்டும். எந்த நரனானவன் இம்மலையினது சாயா விசேஷத்தை அஜாக்ரதையினால் தாண்டிச் செல்வானேயாகில், நிச்சயமாகவே, மகா கோரமயமான ரௌரவாதி நரகங்களில்

மூழ்கி நாசத்தையடைவன். ஆகையினாலே இப்பூலோகத்தில் ஸகல வித ப்ராணிகளும், ஸ்ரீரமாபதியின் ஸான்னித்யத்தையடைந்த இச் சோலைமலையின் தாமாவை ஆச்ரயித்து ஸேவிக்கக்கடவார்கள்".

17½ to 20.

இவ்விதம் ஸ்ரீ ப்ரஹ்மாண்ட புராணத்தின் 55-வது அத்யாயத்தில்
ஸ்ரீ விருஷபாத்ரி மாஹாத்ம்யமென்னும்
இதிஹாஸ ஸ்தல புராணத்தில்
"ஸ்ரீ விருஷபாசல நிழலின் வைபவ"மென்னும்
ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

ஸ்ரீ:

ஸ்ரீ விருஷபாத்ரி மாஹாத்ம்யத்தில் "ஸ்ரீ மலயத்வஜபாண்டிய பூபதியின் மனோபீஷ்டங்களை நிறைவேற்றி வைத்த"தெனும்

பத்தாம் அத்யாயம்.

ரிஷிகள் சொல்லுகிறார்கள்:—

"ப்ரஹ்ம புத்ரரும், ப்ரஹ்மநிஷ்டரும், முனிச்ரேஷ்டருமான ஹே ஸ்ரீ நாரதமஹாமுனிவரே! மிகவும் ஆச்சர்யகரமும், மங்கள கரமுமான ஸ்ரீ விருஷபகிரியினுடைய மாஹாத்ம்யமும், அதன்பிறகு ஸ்ரீ பகவானுடைய பெருமையும் எங்களால் ச்ரவணம் பண்ணப் பட்டது. கேட்பவர்களின் பாபத்தை நசிக்கச் செய்வதும், புண்ய மானதும், நிகறற்றதும், மிக்க ஆச்சர்யம் பொருந்தியதும், புராணங் களில் ப்ரஸித்திவாய்ந்ததும், எல்லா உலகங்கட்கு ஹிதமானதும், ஸகலப்ராணிகளின் மனதைக் கவருவதும், ஸர்வாபீஷ்டங்களைத் தந்தருளுவதும், ஸர்வ ஸம்ஸாரபந்த விமோசனஞ்செய்வதுமான இதஹாஸத்தைக் சீக்கிரமெங்களுக்குச் சொல்லியருள்வீராக", என்று ரிஷிகள் இவ்விதங்கூற ஸ்ரீ நாரதர் பதிலுரைக்கின்றார். 1 to 4

ஸ்ரீ நாரதர் கூறுகிறார்:—

"அதிமேதாவிகளும், ச்ருதிஸம்பந்நர்களுமாகிய ஹே ரிஷிகளே! இவ்விதிஹாஸமாயுள்ள கதையைக்கேட்பதில் இருக்கும் உங்கள் பக்தியோ மிகவும் மெச்சத்தகுந்தது. ஸ்ரீ விருஷபாத்ரியின் வைப வத்தை விவரித்தும் கதைகளைக் கேட்பதிலுங்களுக்கு இருக்கும் பக்தியானது ஸ்ரீ பரப்ரஹ்ம ஸ்வரூபமான இச்சோலைமலைக்கரசன் பால் உள்ள பக்தியின் காரணமே தவிர வேறில்லை. ஆனதால் ஸ்ரீ அகஸ்த்ய மஹாமுனிவரான ஸ்ரீ பகவான் எனக்குத் திருவாய் மலர்ந்தருளியபடிக்கும் வ்ருத்தாந்தங்கள் நடந்தேறினபடிக்கும் உங்கட்குச் சிறப்பாகச் சொல்லுகின்றேன்; கேட்பீர்களாக. 5 to 6

"முன்னொரு ஸமயம் நான் மலயபர்வதத்தின் தாழ்வரையில் தவம்புரிந்து கொண்டு வஸித்துவருங்காலத்தில், அகஸ்த்யபகவானுனவர் முனிவர்களால் ஸேவிக்கப்பட்ட அம்மலைய பர்வதத்தையடைந்து வஸித்து வருகிறுரென்றும் செய்தியைக் கேள்விப்பட்டேன். அவரைத் தர்சிப்பதற்காக அங்கு சென்ற என்னைப் பார்த்து, அம்மஹா முனிவர் ஆஸனுதிகளால் என்னைக் கௌரவித்து ஸ்வாகதவசனங்களால் வரவேற்புக் கூறினுர். இவ்விதம் நல்வரவு கூறின அகஸ்த்யமஹா முனிவரை தர்சித்த நான் சொன்னதாவது ஹே "ப்ரஹ்மந்! இதற்குமுன் தங்கள் திருவாக்கிலிருந்து ஸ்ரீ விருஷபாத்ரியின் வைபவமானது என்னுல் கேட்கப்பட்டது. ஆயினும் ஹே முனே! இச்சமயத்தில் மறுபடியும் இவ்வைபவத்தைக்கேட்பதில் ச்ரத்தை அதிகம் ஏற்படுகின்றது. அதைச்சேர்ந்த கதைகள் இன்னும்இருக்குமாயில் எனக்கு அக்கதைகள் முழுவதையும் சொல்லுவீர்களாக; இதற்குமுன் எந்த மஹா ஸாதுக்களான மனுஷ்யர்களால் இந்த கிரியினது மாஹாத்ம்யம் ப்ரத்யக்ஷமாக வெளியாயினது. எவ்வித உபாயத்தைக் கைக்கொள்வதால் ஸ்ரீ விருஷபாத்ரி நாதனுன பகவான் எல்லோருக்கும் வெகு ஸுலபராக ஏற்படுவார்? ஞானக்கண்கள் படைக்கப்பெற்ற தங்களுக்கு எல்லாம் ப்ரத்யக்ஷமாக காணக்கூடும். அவ்விதமாகத் தங்களால் இதற்குமுன் பார்க்கப்பட்டதாயிருந்தாலும் புராதனமாயுள்ளதைச் செவியுற்றுக் கேட்கப்பட்டிருந்தாலும், ஸ்ரீ விருஷபாத்ரிநிவாஸியான ஸ்ரீ புராண புருஷருடைய புண்ய சரித்திரத்தை ஹே முனே! சொல்வீராக; என்று அகஸ்த்ய மஹாமுனிவரிடம் நான் கேட்ட பிறகு அம்மஹாமுனிவர் திருவாய்மலர்ந்தருளினுர். 7 to 13

அகஸ்த்யர் சொல்லுகிறுர்:—

"முன் சந்திரவம்சத்திலுதித்தவனும், வேதவேதாங்கங்களினுண்மையை யறிந்தவனும், ஸர்வ சாஸ்திரங்களிலும் ஸமர்த்தனும் நீதியுடையவனும், ஸ்வதர்மமான க்ஷத்ர தர்மத்தை யறிந்தவனும், ஸர்வசாஸ்த்ரங்களில் தேர்ச்சிபெற்றவர்களுக்குள் மிகச்சிறந்தவனும் வில்லாளிகளுக்குள் ச்ரேஷ்டனும், இந்திரனுக்குச் சமானமானவனுமாகிய "புரூரவஸ்" என்ற இராஜேந்த்ர ஸ்ரீமான் போரில் அஸுரர்

களை ஜயித்தான். மேலும் நான்கு ஸமுத்திரங்கட்கும் உள்பட்ட இப்பூமியைத் தனதாதிக்யத்தில் வைத்துக்கொண்டதிலிருந்து ஸகல இராஜமன்னர்களாலும் 'சக்ரவர்த்தி' என்று போற்றப்பட்டும் ஏழு த்வீபங்கட்கும் நியந்தாவாகி, அபரசக்ரவர்த்தி போலும்' விளங்குகிற இவ்வரசன் காசிமாநகரத்தையே தலைநகராக வைத்துக் கொண்டு இப்பூமியை அரசாண்டு வந்தான். 14 to 17

வெகு காலத்திற்குப் பின்பு ப்ரபுவான புரூரவஸ் என்ற சக்ரவர்த்தியானவர் சில்பிகள் மூலம் "மணலூர்" எனும் மங்களகரமான பட்டணத்தைத் தெற்கு திக்கில் நிர்மாணஞ் செய்து, சத்ரு ஸம்ஹாரகரனான இவ்வரசன் வெகுகாலம் இப்பட்டணத்திலேயே வஸித்து வந்தான். இச்சக்ரவர்த்திக்கு அளவுக்கடங்காத மஹா பராக்ரமசாலிகளான நான்கு புத்ரர்கள் உண்டாயினர். இந்நான்கு புத்ரர்களையும் ஒவ்வொவ்வொரு திசைகளிலும், ஸ்தாபனஞ்செய்து வைத்து, "புரூரவஸ்" என்ற இராஜன் முக்தியை யடைந்தான். 18 to 19½

இந்நான்கு இராஜ குமாரர்களுக்குள் மஹா தேஜோவானகிய ஜ்யேஷ்ட குமாரன் 'இந்திரத்யும்ன' னெனும் பெயர் வாய்ந்து ப்ரஸித்தியடைந்தான். மணலூரிலுள்ள குடிகளனைவரும் இராஜ குமாரனாகிய 'இந்திரத்யும்னனை' அரசனாகப் பட்டாபிஷேகஞ் செய்தனர். பிறகு இந்திரத்யும்னனும் பாண்டிய பூமிக்குப் பரம தர்மிஷ்டனான அரசனாக ஆயினன். இவ்வரசன் புத்ரனில்லாதவனாகி "வைஷ்ணவமான புத்ரகாமேஷ்டி" என்ற யாகத்தைச் செய்தான். அதன்பேரில் அரசனுக்கு 'அபர ஸ்ரீநிவாஸன்' போல் ஸ்ரீமானான புத்ரன் ஒருவன் உண்டாயினன். ஸர்வ லக்ஷணங்களால் நிறைந்தவனும், எல்லாமறிந்தவனும், நற்குணங்கள் வாய்ந்தவனும், சக்ரவர்த்தி லக்ஷணங்களடங்கியவனும், யுத்தத்தில் சக்ரபாணியான ஸ்ரீ மஹா விஷ்ணுவுக்கு ஒப்புடையவனும், மஹா பலசாலியுமான இப்புத்ரன் மலையபர்வதவாஸியாயிருந்து மலைக்கு த்வஜம் போல் விளங்கப்போகின்றான்" என்று பிதாவான இந்திரத்யும்னன் அறிந்து இவனுக்கு 'மலையத்வஜன்' எனும் பெயரை இட்டான். 19½ to 24

"மலயத்வஜனென்று ப்ரஸித்தி வாய்ந்தவனும், எல்லோராலும் போற்றப்பட்ட நற்குணசீலனும், நல்லொழுக்கமுடையவனும், எல்லா அஸ்த்ர வித்தைகளில் ஸமர்த்தனும், சூரனும், ஸூக்ஷ்ம கார்யங்களில் அதிஸமர்த்தனும், சந்திரனைப்போல் ஆஹ்லாதகரனாகவும், அழகு பொருந்தியவனாயிருப்பதால் ஸமஸ்த ஜனங்கட்கும் ப்ரியமான தர்சனத்தைக் கொடுப்பவனும், ஸத்யஸந்தனும், அதிபுத்திமானும், ஸமஸ்த வித்தைகளில் நிபுணனும், த்ரிகால ஞானிகட்குள் மிகச் சிறந்தவனும், ஸ்ரீ விஷ்ணு பக்தி நிறையப் பெற்றவனும், ஸர்வ சாஸ்திரங்களின் அர்த்தங்களை நன்குணர்ந்தவனும், நுண்ணறிவை யுடையவனும், க்ஷத்ரதர்மத்தை யறிந்தவனும், சிறந்த நீதிமானும், மிகவும் தர்மிஷ்டனும், ஸ்நானாதி கார்யங்களில் பற்றுதலுள்ளவனும், வைதிக தர்மாத்மகமாயுள்ள கர்மங்களைச்செய்பவனுமான தனது புத்திரனின் இயற்கையான நன்நடத்தையை நன்கறிந்து, எல்லாக் குடிகளோடுங் கூடவேயிருந்து தனக்குத் தன் தகப்பனாரான 'பூரூரவஸ்' என்ற சக்ரவர்த்தியானவர் எப்படி பட்டாபிஷேகஞ் செய்து வைத்தாரோ அதுபோலவே இந்திரத்யும்னனும், தனது புத்திரனான இம்மலையத்வஜனுக்குக் கால விளம்பமன்னியில் பட்டாபிஷேகத்தைச் செய்து முடித்துவிட்டு இனி இம்மலையத்வஜனால் இவ்விராஜ்யம் முழுமையும் த்ருப்தியடைந்துவிடுமென்ற எண்ணங்கொண்டவனாகி உடனே ஸ்ரீ விருஷபாசலத்தை யடைந்தனன். உடனே இம்மலையிலேயே கடுமையான தவம் புரிந்து, ஸ்ரீ புருஷோத்தமனை யுபாஸித்து, யோக மஹிமையின் மூலம் முடிவில் இச்சரீரத்தை த்யாகஞ்செய்து பரம பதத்தை யடைந்தான். 25 to 30

இதன்பிறகு தர்மாத்மாவாயும், சந்திரவம்சத்திலுதித்தவனாயுமுள்ள இம்மலையத்வஜ மஹாராஜன் தர்மவழி தவறாமல் ஸகல பூமிகளையும் அரசாக்ஷி செய்துவரும் காலத்தில் பரிசுத்தமான மனதுடன் தினந்தோறும் கங்கையில் ஸ்நானஞ் செய்வதும், பிறகு தன் பட்டணத்திற்குத் திரும்பி வருவதும், செய்யவேண்டிய கார்யங்களை யாவையும் கவனித்துச் செய்துகொண்டு வருவதுமாக இருந்தான். அப்படிக்கு இருந்துவரும் ஓர் நாளில், ஸ்நாநாதி கார்யங்

களை கங்காநதீ ஜலத்தில் முடித்துக்கொண்டு மறுபடியும் திரும்பி வரும் வழியில் ஸ்ரீ விருஷபாத்ரியின் ஆகாச மார்க்கத்தில் திடீரென்று நின்றான். மிகத் தேஜோவானாயிருந்தாலுங்கூட இவ்வரசச்ரேஷ்டன் பத்துமையில் தூரத்திற்கு அப்பாலிலேயே ஸ்ரீவிஷ்ணு தூதர்களால் இவ்விதம் தடுக்கப்பட்டவனாகி, தன் பின் தொடர்ந்தவர்களும், தடுக்கப்பட்டார்கள் என்பதையும் தான் சுற்றுநோக்கி, பார்வையை நான்கு பக்கங்களிலும் செலுத்தியவண்ணமாகவே இருந்துவந்தனன். உடன் இக்கோரஸம்பவத்தை நன்கறிய வேலைக்காரர்களனைவர்களையும் எல்லா திக்குகளிலும் பார்த்து வரும்படி ஆக்ஞாபிக்கலாயினன். உடன் இவ்வேலைக்காரர்களனைவரும் அங்குமிங்கும் அலைந்து பார்த்துவிட்டு பிறகு அரசனை நோக்கி, இக்கோரஸம்பவம் எங்களால் அறியமுடியவில்லை என்றிவ்வாறுகஉரைத்தனர். இவ்வாறுரைக்க அரசன் துக்கசோகங்களையடைந்தவனாய்த் தனது கிங்கரர்களைப் பார்த்து, ஆ! இது என்ன ஸம்பவம்! இதற்குமுன் இவ்விதமான அவுமானமானது என்னால் அநுபவிக்கப்படவில்லை என்று கூறி, சத்ருவினால் அவுமானம் ஏற்பட்டதென்றெண்ணி சத்ருவைச் சற்று நோக்கிச் சொல்வதுபோல் மலயத்வஜபாண்டியன் "எல்லோராலும் போற்றப்படத் தகுந்த என்னை இவ்வித அவுமானத்திற்கு உள்படுத்திய சத்ருவானவன் யார்? சொல்வாய்? அவர்களை உடனே ஸம்ஹரிக்கின்றேன்" என்றிவ்வாறாக அரசன் மொழிந்தனன். அரசனால் இவ்விதம் உரைக்கப்பட்டதருணத்திலே ஆகாசவாணி ஒன்று கிளம்பிற்று. "ஹே அரசச்ரேஷ்டனே! துக்கமடைய வேண்டாம். என்னுடைய ஸைந்யப் படைகள் மூலம் தடுக்கப்பட்டாய்; என்னைத்தவிர எந்த புமான் இப்புவியிலாவது, ஸ்வர்க்கத்திலாவது, உன்னைத் தடுக்க யோக்யதையுள்ளவனாக இருக்க முடியும்? ஹே குழந்தாய்! உன்னுடைய பிதா என்னையாராதித்த பின்பே (உன்னால் புத்ரீத்வத்தை) புத்ரபாக்யத்தைப் பெற்றனன். ஹே குழந்தாய்! நீயோ என்னிடம் பக்திவாய்ந்தவனாக யிருக்கின்றாய்; உன்னிடத்தில் எனக்கு அதிப்ரேமை யேற்பட்டிருக்கின்றது. நான் திண்ணமாகவே இம்மலையில் நித்யவாஸஞ்செய்துகொண்டிருக்கிறேன்" என்று திருவாய்மலர்ந்தருளிய ப்ரபுவும், ஸ்ரீதேவனு

மாகிய ஸ்ரீமத் ஸுந்தரராஜமூர்த்தியான ஸ்ரீஹரியானவர் அந்தர்த்தான மடைந்தார். 31 to 40½

பிறகு இராஜச்ரேஷ்டனும், மறுபடியும் ஸ்ரீ பகவானைத் தர்சனம் செய்யவேண்டுமென்ற ஆவலால் சோகத்தை யடைந்தவனும், பக்தியின் மேம்பாட்டால் பரவசனாகித் தன்னை மறந்தவனும், ஸந்தோஷத்துடன் நர்த்தனஞ்செய்துகொண்டும், பகவத் தர்சனத்தையே எதிர்பார்த்துக்கொண்டும், அங்கேயே வஸித்துவர எண்ணங்கொண்டான். இனி நான் அத்புதமான வடிவையுடைய ஸ்ரீ சோலைமலைக்கரசரான அச்யுதரின் திவ்ய தர்சனம் யேற்படும் வரை தவத்திலிருந்து நழுவமாட்டேன் என்றும், ஸ்ரீஹரியான ஸ்ரீ பகவானைத் தினம் ஆராதித்துப் பிறவிப்பிணியற்றவனாகவுமாவேனென்றும், ஸங்கல்பித்துக்கொண்டு பாண்டிய மஹாராஜாவான ஸ்ரீ மலயத்வஜபாண்டியன் ஸ்ரீ விருஷபாத்ரியிலேயே தங்கி நின்றனன். ப்ரபுவாயும், மதிமானுமாகிய இவ்வரசன் ப்ரஜாஸம்ரக்ஷணவிஷயத்தில் மந்திரிகளிடம் இராஜ்யபாரம் முழுமையும் ஒப்புவித்துவிட்டு காய், கிழங்கு, பழங்களையே ஆஹாரமாகக் கொண்டு சில வருஷங்களைக் கழித்து வந்தனன். பிறகு காற்றையே ஆஹாரமாக உட்கொண்டு ஸ்ரீ பகவானை வெகுவாக அர்ச்சித்து வந்தனன். பிறகு கொஞ்சகாலம் ஆஹாரமே இல்லாதவனாய் இந்திரியங்களை யடக்கியவனாகி, "அச்யுதா, அனந்தா, கோவிந்தா" என்ற திவ்ய நாமஸங்கீர்த்தனத்தைப் பல ஆவ்ருத்திகளாகத் த்யானஞ் செய்துகொண்டும், கருடவாஹனாரூடரான ஸ்ரீ மஹாவிஷ்ணுவை விதிப்படி பூஜித்தும், மனதால் ஆசரித்துள்ள யாவையும் இந்த பகவானின் நிமித்தமென்று அர்ப்பணஞ் செய்துகொண்டே பரம ஸந்தோஷசித்தனாக இருந்து வந்தான். 41 to 47½

பிறகு வைதிகமாயுள்ளதும், இதிஹாஸ ஸம்பந்தமுள்ளதுமாகிய பற்பல ஸ்தோத்ரங்களால் மிகுதியான தைவபக்தி வாய்ந்தவனான ஸ்ரீ மலயத்வஜபாண்டியனால் துதி செய்யப்பட்ட பிறகு ஸ்ரீ சோலைமலைக்கரசர் மலயத்வஜபாண்டியனின் முன்பு மேற்கண்ட ஸ்தோத்திரத்தினாலும், பூஜையினாலும், தவத்தாலும், ப்ரஸன்னராய் ஸ்ரீ கருடனின் மீது ஆரோஹணித்து, சங்கசக்ர கதாதாரியாக

வும், ஸ்ரீவத்ஸாலங்க்ருதனுகவும், ஸகலத்துக்கும் ஆதாரமானவனுக வும், ஸ்ரீமானுகவும், தாமரைக்கண்ணனுகவும், ஸகல ஆபரணங் களால் அலங்கரிக்கப்பட்டவனுகவும், ஸகல ப்ராணிகட்கு மின்பந் தருபவனுகவும், பீதாம்பரதாரியாயும், உத்தமமான வனமாலையை அணிந்துகொண்டவனுகவும், நீலமேகத்திற்குச் சமானமான காந்தியையுடையவனுகவும், விஷ்வக்ஸேனர் முதலான தூதகணங் களால் சூழப்பட்டவனுகவுமுள்ள ஸ்ரீ ஹரியானவர் இத்யாதி வைபவத்துடன் மலயத்வஜபாண்டியனுக்குக் காக்ஷி தந்தருளி, மேகத்திற்குச் சமானமான கம்பீரம் பொருந்தியதோர் தனது வார்த்தையினுல் அடியிற்கண்டவிதமாகத் திருவாய்மலர்ந்தருளி னுர். 48 to 52½

ஸ்ரீ பகவான் சொல்லுகிருர்:—

"கல்யாண குணங்கள் நிறைந்த ஹே குழந்தாய்! உனக்கு மங்களம் உண்டாகுக; ஹே குற்றமற்றவனே! உனக்கு நான் ப்ரஸன்னனுயினேன். இருகண்களாலும் என்னை நீ பூர்ணமாகத் தர்சனஞ் செய்வாயாக; உன்னிடத்தில் எனக்கு விசேஷப்ரேமை ஏற்பட்டுவிட்டது" என்றிவ்வாறு திருவாய்மலர்ந்தருளிய ஸ்ரீ தேவேசனும், அண்டினவர்களை ஆதரித்து வேண்டுவதைக் கொடுப் பவனுயுமுள்ள ஸ்ரீ பகவானை நோக்கி ஸ்ரீ மலயத்வஜபாண்டியபூபதி அஞ்சலிபந்தஞ் செய்து, நமஸ்கரித்து, அடிக்கடி திவ்ய தர்சனஞ் செய்தும், த்ருப்தியடையாமல் சஞ்சலாக்ஷனுகவுமிருந்தும், மறு படியும் மறுபடியும் எழுந்திருந்து தர்சிக்கலாயினன். ஸாக்ஷாத் ஸ்ரீ ஹரியின் தர்சனத்தின் மூலம் ரோமாஞ்ச பூரிதசரீரியாகத் தோன்றினன். இந்த ஸ்ரீ பகவானின் திவ்ய தர்சனத்தின் ஆவல் மிகுதியாக யிருந்தமையால் பரமஹர்ஷத்திற்குப் பாத்ரபூதனுகவும் ஆனன். மேலும், ஸ்ரீ பகவானைத் தர்சிப்பதும், கீழே விழுந்து நமஸ்கரிப்பதும், மறுபடியுமெழுந்திருந்து தர்சித்தவண்ணமாகவே இருந்ததின் மூலம் ஏற்பட்ட ஸந்தோஷத்தினுல் கத்கதத்தோடு கூடிய வாக்குக்களால் அடியிற்கண்டவிதம் ஸ்தோத்ரஞ் செய்யத் தொடங்கினன். 53 to 56

"ஹே ஜகந்நாத! ஹே விஷ்ணோ! உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம், கதாசக்ரபாணியாய் விளங்காநின்ற உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம், சரணுகதர்களுடைய துன்பங்களை அபஹரிப்பவரான உமக்கு நமஸ்காரம்; ஹே அமரேச! யான் செய்த ஸகலாபராதங்களையும் பொருத்துக் கொள்வீராக; ஹே ஜகந்நாத! பக்தர்களின் துன்பங்களை நாசஞ்செய்பவரே! உமக்கு நமஸ்காரம், ஸகல வேதங்களும் உம்முடைய பெருமையைச் சொல்ல சக்தியற்றதுகளாகயிருக்கின்றபொழுது ஹே ப்ரபோ! என்னால் உம்முடைய பெருமையை எடுத்துரைக்கவும் இயலுமோ? ஹே ப்ரபோ! ஸ்ரீ ப்ரஹ்மாவை முதன்மையாகக்கொண்ட தேவஸங்கங்களாலும் ரிஷிகணங்களாலும் கூட ஹே மஹேச்வர! உம்முடைய பெருமை தங்கிய குணங்களின் சில பகுதியைக்கூட அறியமுடியவில்லை என்றால் என்னால் எவ்வித மறியமுடியும்? ஹே கருணாகர! இவ்வுலகத்தை சீர்படுத்திய பிறகு வாமனவதார வடிவுடன் பலிச்சக்ரவர்த்தியையும் அஸுரர்களையும் ஜயித்து, தேவர்களால் நமஸ்கரிக்கத் தகுந்த சக்திவாய்ந்த தேவராஜனை இந்திரனை ஸ்வர்க்கத்தில் ஸ்தாபனஞ் செய்தருளிய ஹே தேவ! இவ்வுலகில் தாண்டமுடியாத இந்த ஸம்ஸாரத்திலிருந்து என்னைக் கருணையுடன் காப்பாற்றுவீராக; ஹே தேவ! ஹே தேவேச்வரேச்வர! உம்மைத் தவிர மங்களமருளிச் செய்பவர் வேறு ஒருவருமில்லை. கங்காஸ்நானஞ் செய்வதினால் ஏற்படும் பலனுக்கு ஒப்புற்ற பலனும், நூறு அச்வமேத யாகஞ் செய்வதினால் ஏற்படும் பலனுக்கு ஒப்புற்ற பலனும், கோதான, பூதான, ஸ்வர்ணதானங்களைச் செய்வதினால் ஏற்படும் பலனுக்கு ஒப்புடையதான பலனும், யாவும் உம்முடைய ஸேவையினால் கிடைக்கின்றன. தேவரீர் எனது திருஷ்டிக்குக் கோசரமாய் ப்ரத்யக்ஷமான இச்சமயத்தில் அப்புண்யங்கள் யாவும் என்னாலும் கூட அடையப்பட்டிருக்கின்றன. ஒருபொழுதாவது புண்யத்தின் நுட்பத்தை அறியாது புண்யஞ் செய்யாதவர்கட்கு உம்முடைய திவ்ய தர்சனமானது கிடைக்குமென்பதரிது என்றே எண்ணுகின்றேன்; அல்லது புண்யத்தின் நுட்பங்களை அறிந்து புண்யஞ் செய்தவர்கட்குங்கூட எப்பொழுதாவது உமது தர்சனங் கிடைக்குமென்பதுமில்லை என்றும் எண்ணுகின்றேன். ஆனால் புண்யங்களின்

நுட்பங்களை நன்கறிந்து புண்யகர்மாவைச்செய்த நரர்களுக்குங் கூட வெகு ஜன்மங்களானபின்பே சில நிமிஷமேதான் உம்முடைய தர்சனம் கிடைக்கலாம். அதுவும் த்ருஷ்டிக்குக்கோசரமாக அடைந்த தத்க்ஷணத்திலிருந்துகூட வெகுகாலம் காக்ஷியைத் தந்தருளுகிறதுமில்லை. ஆகையினால் என்னிடத்தில் தங்கட்கு ஏற்பட்ட அனுக்ரஹ விசேஷமானது பரமாச்சர்யம் வாய்ந்ததாகவே இருக்கின்றதாகக் காணப்படுகின்றது. ஹே கேசவ! அடியேனை நொடிப்பொழுதிலேயே காப்பாற்றி கருணை புரிவீராக. ஹே ஹரே! தங்கள் பேரில் வைக்கக்கூடிய உத்தமமான ஆஸ்திக்யபக்தியோ என்னிடம் இருக்கக்காணேன். அப்படிக்கிருப்பினும் ஹே குரோ! என்னை ரக்ஷிக்கும் விதியைத் தாங்கள் கைக்கொண்டிருப்பதானது கேவலம் தங்களுடைய அபாரகருணை தான் காரணமே தவிர வேறில்லை," என்று இவ்விதம் ப்ரார்த்தித்து ஸ்தோத்திரம் செய்யானின்ற ஸ்ரீமலயத்வஜபாண்டியனைக் கடாக்ஷித்துப்பார்த்து, ஷாட்குண்ய பரிபூர்ணனும், ஸ்ரீதரனும், ஸ்ரீ ஹரியும், ஸர்வாந்தர்யாமியும், ஸ்ரீமாதவனும், ஸ்ரீசோலைமலைக்கரசனுமான ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணன், சுத்த ஹ்ருதயத்துடன் கூடிய விசேஷஞானியாக ஸ்ரீமலயத்வஜன் இருக்கிறானென்றறிந்து, அடியிற்கண்டவிதம் மதுரமான வாக்கியங்களினால் அவ்வரசனை நோக்கித் திருவாய்மலர்ந்தருளினார்.

62 to 68½

ஸ்ரீ பகவான் சொல்லுகிறார் :—

"ஹே அரசனே! ஸத்யசீலர்களாயும், மஹா பராக்ரமசாலிகளாயும் இருந்துவந்த "பூரு" முதலிய அரசர்கள் என்னையே உபாஸித்து வெகுகாலம் இப்பிருதிவியை ஆண்டு, பிறகு கடைசியில் என் பதத்தை யடைந்தார்கள். ஹே அரசர்களுள் ச்ரேஷ்டனே! நீயும் நமது ப்ரஸாதத்தின்பயனாக இவ்விராஜபோகத்தை அடைந்தவனாக இருக்கிறாய். ஹே வ்ரதசீல! ஸந்தேகமணியில் உனது மனோபீஷ்டங்களை எல்லாம் நிறைவேற்றிவைப்பேன்" என்று அனுக்ரஹிக்க,

69 to 70½

ஸ்ரீ மலயத்வஜபாண்டியன் சொல்லுகிறான் :—

"எனக்கு இந்த ஸ்ரீ பகவத் தர்சனமொன்றே எல்லா வரங்களுக்கும் மேலானவரம். தங்கள் மனோஹரமான திருமேனி தர்சன

த்தை ப்ரார்த்தித்தவர்களான, ஸுரர்களும், ராஜரிஷிகளும், ஸித்தர்களும், தர்சனார்த்தம் இங்கு வந்து இப்பொழுதே கார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். அல்ப அறிவையுடைய மானிடர்களுக்குத் தங்களுடைய தர்சனம் கதாசித் ஏற்பட்டாலும் மறுபடியும் அவ்வித தர்சனம் கிடைக்குமென்பது துர்லபம். ஆனதால் நான் ப்ரார்த்தித்துக்கொள்வதும், எனக்கு வேண்டியது மென்னவென்றால் தாங்கள் என்னை அனுக்ரஹிக்க வேண்டுமென்று கருணை தங்களுக்குப் பூர்ணமாக இருந்தும், எனது பக்தியும் தங்கள்பால் ஸத்யமானதாகவும் இருப்பதாகத் தாங்கள் கருதும்பக்ஷத்தில் தாங்கள் இப்போது தர்சனம் தந்தருளும் திருமேனியுடனேயே ஹே ஸ்ரீ தேவதேவ! இந்த ஸ்ரீவ்ருஷபகிரியில் ஸான்னித்யத்துடன்இருந்துவரவேண்டும். ஸ்ரீ ஸ்ரீதேவி, ஸ்ரீ பூதேவி முதலிய ப்ராட்டிகளுடனும், ஸகலவித ஸேனாபதிகணங்களுடனும், சங்கம், சக்ரம் முதலிய சின்ஹங்களோடும், தாங்கள் இங்கு ப்ரஸன்னராகவே இருந்துவரவேண்டுமென்பதுதான் ஹே ஸ்ரீஸுந்தர! எனது ப்ரார்த்தனை. இதுதான் எனது ஆபீஷ்டம். ஹே ஸுரோத்தம! இவ்வரத்தையேதான் தாங்கள் எனக்கு அனுக்ரஹிக்க வேண்டுகிறேன்" என்று இவ்விதமாக ப்ரார்த்திக்கப்பட்ட அரசனின் வசனங்களை ஸ்ரீ சோலைமலைக்கரசனை ஸ்ரீ பகவான் கேட்டு, தனது மேகத்திற்குச் சமானமான கம்பீரமான வார்த்தைகளினால் அடியிற்கண்டவிதம் அனுக்ரஹம் புரிந்தார். 71 to 76

ஸ்ரீ பகவான் சொல்லுகிறார்:—

"ஹே அரசனே! இம்மலை ப்ரதேசத்தின் முன்னணியிலேயே நித்யமும் வஸித்துவருகிறேன். ஹே ராஜனே! இதே வ்ருஷகிரியிலேயே முன்பு ஒருஸமயம் மஹாதேவனான தர்மராஜாவும் என்னை விசேஷ தபஸ்ஸால் ஆராதித்து வேண்டிய வரத்தைப் பெற்றான். அவன் நம்மை வேண்டி ப்ரார்த்தித்ததாவது, "ஸ்ரீ ஸ்ரீதேவி, ஸ்ரீபூதேவி முதலிய ப்ராட்டிகளுடனேயும், தேவஸேனாபதிகணங்களோடும், ஸதாகாலமும் ஸான்னியத்துடனும் இருந்து, வைகானஸாதி முனிவர்களால் சிறப்புற்று அர்ச்யராகி இவர்களது பூஜையை ஏற்றுக்கொண்டு இவ்விடத்திலேயே வஸிக்க வேண்டும்,

ஹே ஸ்ரீ வ்ருஷபாசலாதிபதே! ஹே ப்ரபோ! இதுதான் நான் ப்ரார்த்திக்கும் வரம். இவ்வரத்தை எனக்குத் தந்தருளவேண்டும். ஹே விஷ்ணோ! இப்பொழுது மற்றும் ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், பிற்காலத்தில் ப்ரக்யாதிபெற்றவர்களும், பக்திமான்களுமாயுள்ள மானிடர்களும், த்ரிகாலஞானம் உள்ள மார்க்கண்டேயாதி மஹரிஷிகளும், ராஜரிஷிகளும், ஸித்தர்களும், ஸ்ரீ ப்ரஹ்மருத்ராதிதேவர்களும், தார்மிகர்களும், காலாநுஸாரமாக வெல்லாம் ஹே ஸ்ரீஹரே! தங்களை உபாஸிக்கப் போகிறார்கள்; ஹே ப்ரபோ! அப்பொழுதெல்லாம் தாங்கள் அவர்களுடைய அன்னாதி நைவேத்தியங்களோடு கூடிய உத்தமமான பூஜைகளை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு வேண்டிய வரங்களையளித்திடுவீராக! இதுதான் எனக்கு அபீஷ்டமானவரம்! தேவரீர் வரதரல்லவோ! ஆகையால் இவ்வரத்தையே எனக்குக் கொடுக்கவேண்டும்,"என்று பரமஹர்ஷத்தினால் கலங்கிய கண்களோடும், மேகத்துக்குச் சமானமான கம்பீரமான வசனங்களோடும் கூடின ஸ்ரீ தர்மதேவனின் வார்த்தைகளைக் கேட்ட நாம் சொல்லியதாவது:

ஸ்ரீ பகவானின் வசனம்:—

"ஹே தர்மராஜனே! என்னிடம் உன்னால் ப்ரார்த்திக்கப் பட்ட எல்லாவரங்களையும் தருகின்றேன். பின்பு ஓர்ஸமயத்தில் மஹாப்ரக்யாதிபெற்ற அரசச்ரேஷ்டன் ஒருவன் உண்டாகப்போகிறான். அவன் சந்த்ரவம்சத்திற்கே ஆபரணமாக விளங்காநின்ற மலையத்வஜன் என்ற பெயருடையவனாக ஆகுவான். எனது பக்த கணங்களுக்குள் அவன் விசேஷ பக்திமானாக இருப்பான். சூரனாகவும், பரிசுத்தனாகவும், ஸாமர்த்யமுள்ளவனாகவும், எப்போதும், பாபரஹிதனாகவுமே இருந்தும், தன் சரீரத்தையே நம்மிடத்தில் பூர்ணமாக ஸன்யஸ்தம் பண்ணியும், ஞானேந்திரியங்களையும் என்னிடம் ஸமர்ப்பணம் செய்துவிடப்போகிறான். அதனால் ஸந்தோஷத்தையடைந்து அந்தப் புத்திமானிடத்தில் ப்ரீதியை யடையப் போகின்றேன். அவனுடைய தபஸ்ஸினால் ஸந்தோஷத்தை யடைந்து வெகுசீக்ரத்தில் அங்கு ஆவிர்பாவம் கொள்வேன்" என்று முன்னமேயே, அரச ச்ரேஷ்டனான ஹே மலையத்வஜபாண்டியனே நாம் ஸ்ரீ தர்மராஜனுக்கு வரமளித்து இருக்கிறோம். ஆனதால், நாம்

குறிப்பிட்டுக் கூறிய அக்காலமும் இப்போது நேர்ந்திருக்கின்றது, ஆகையால், உனது அபீஷ்டவரங்களை இப்போதே தந்தருளுகிறோம். ஹே அரசனே! உனது அபீஷ்டப்படிக்கே "நம்மை இங்கு ப்ரதிதினமும் பூஜித்து வருவாயாக" வென்று திருவாய் மலர்ந்தருளிவிட்டு மேலும் அனுக்ரஹித்ததாவது:— 77 to 89

ஹே பாபமற்றவரசனே புனிதம்வாய்ந்த ஸ்ரீ நூபுரகங்காநதி தீரத்தில், "புத்ரதீபதருவென்ற" ஜ்யோதிர்விருக்ஷத்தினடியின் சிலாப்ரதேசத்தில், எமக்கு விசேஷ ப்ரீதியுண்டு. அந்த ப்ரதேசத்தில் விச்வகர்மாவினால் நிர்மாணம் பண்ணப்பட்டதான ஸோமச்சந்த விமானம் ஒன்று உண்டு. அது தேவ பூஜ்யமாக உள்ளது. ஸதா காலமும் தேவர்களால் ஆராதிக்கப்பட்டு வருகின்றது. ஸ்ரீ இந்திரன் முதலிய தேவர்களாலும், முனிவரர்களாலும், ஸதாஸார்வகாலமும் ஆச்ரயிக்கப்படுகின்றது. நாமும் ஸ்ரீ தர்மதேவனுடையவும் உன்னுடையவும் ப்ரீதிவிருத்தியின் நிமித்தம், ஸதாகாலமும் இந்த ஸ்ரீ சோமச்சந்தவிமானத்தில் வஸித்து வருகிறோம். "அர்ப்பிசி மாதத்தில்" ஸ்ரீ ப்ரஹ்மதேவரும், ஸ்ரீஸுந்தரராஜமூர்த்தியான எமக்கு உத்ஸவாதிகளைச் செய்து கண்டருளவேண்டுமென்ற நோக்கத்துடன், தேவர்களின் கூட்டங்கள் அனைத்தும், மூன்று ஸந்த்யா காலங்களிலும் விசேஷ தபஸ்ஸுகளைச் செய்தார்கள். அவர்களுடைய ப்ரார்த்தனையை நிறைவேற்றவேண்டியதின் நிமித்தம், ஹே அரசனே, நீயே அந்த ஸகல உத்ஸவாதிகளையும் இப்பொழுது முதல் ஏற்படுத்தி நடத்திவருவாயாக. ஹே அரசனே! அரிய பெரியதோர் பாக்யம் வாய்ந்ததும், பூஜிக்கத் தகுந்ததும், மஹோந்நதமானதும், மண்டபங்கள் ப்ராகாரங்கள் உயர்ந்த கோபுரங்கள் இவைகளோடு கூடிய மதீயமுமான ஓர் ஆலயத்தை எமக்குக் கட்டி முடிப்பாயாக. ஹே புருஷச்ரேஷ்டனே! ஸகலவித உத்ஸவங்களையும் எந்நிமித்தம் நடத்துவாயாக. அவ்வுத்ஸவங்களுக்கு வேண்டிய நமது பற்பல அர்ச்சாபேரங்களையும், ஸ்வர்ணத்தினாலேயே நிர்மாணம் செய்வாயாக. ஹே மஹாராஜனே! பார்ப்பவர்களின் மனதுக்குப் பரம ஆநந்தத்தை விளைவிக்கும் மஹோத்ஸவாதிகளை உனது ஜன்ம நக்ஷத்ரம் முடியும்வரையிலாக செய்வித்து

ஹேந்ருபச்ரேஷ்டனே நீ ஆனந்திப்பாயாக. ஹே அரசனே! எமது இச்சோலைமலையில், தேவர்களாலும், கந்தர்வர்களாலும் ஸேவிக்கப் பட்டதும், த்ரிவிக்ரமாவதாரம் செய்தகாலத்தில், நமது பாதச் சிலம்பிலிருந்து உற்பத்தியடைந்ததும், மிக விசேஷமுற்றதும், பவித்ரமானதும், நிர்மலமானதும், புண்யமாகவும் விளங்கும் ஸ்ரீ நூபுரகங்காநதிதீர்த்தத்தில் ஹே மஹாராஜ! நீ தினந்தோறும் ஸ்நானாதிவிதிகளைச் செய்து வருவாயாக. ஹே வஸுதாதிப! அவ்விதம் ஸ்நானம் செய்வதினால் கங்காஸ்நானத்தினால் ஏற்படும் பலன்களைக் காட்டிலும், விசேஷ அதிக புண்யத்தைக் கொடுப் போம். மேலும் எந்த நரர்கள் பக்திபூர்வகமாக இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வார்களோ அவர்களெல்லோரும் இப்புவியில், ஸதா ஸர்வகாலமும், இஷ்டமான போகங்களை அடைந்து, அனுப வித்து, ஸந்தோஷத்தை யடைவார்கள். மேலும் விசேஷமாகச் செவ்வாய்க்கிழமையிலும், சந்த்ர ஸூர்யக்ரஹண காலங்களிலும், புண்ய நக்ஷத்ர காலங்களிலும், இந்த ஸ்ரீ நூபுரகங்காதீர்த்தத்தில் அனுஷ்டிக்கப்படும் ஸ்நாநகர்மாக்கள் விசேஷமாக போற்றப் படுகின்றது. ஹே அரசனே! மேலும் நமது இச்சோலைமலையில் அனுஷ்டிக்கப்படும் ஜபங்கள், ஸ்நானாதிகள், தபஸ்ஸுக்கள், த்யானங்கள், ஹோமங்கள், தானங்கள் இவைகளின் பலன் களோவென்றால் குறைவற்றதாய் அக்ஷயமாக விளங்கு கின்றன. என் பக்தர்களின் பொருட்டு நரநாராயணர்போல் ஸ்ரீ விருஷபகிரி என்று பெயர்வாய்ந்த இப்பர்வதத்தின் ஸ்வரூபத்தை நான் தரித்துக் கொண்டிருப்பேன். இந்நூபுர கங்காதீர்த்தத்தின் ப்ரபாவத்தினால் எளியோர்கள் தனவந்தர்களாக ஆகவும், பிள்ளையில்லாதவர்கள் மக்கட்பேருடனும், மிக்க கஷ்ட மடைந்தவர்கள் ஸுகமுடையவர்களாகவும், இழிய குலத்திலுதித் தோர்களும், உயர்குலத்துதித்தோர்களாகவும், ஏற்படுவார்கள் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை. நிஷ்காமனாய் ஸ்நானம் செய்த திலிருந்து முக்தியை யடைந்தவர்களும், உயர்வான பதவியை யடைகிறார்கள். என்று இவ்விதமாகத் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீதேவாதிதேவனைப்பார்த்து ஸ்ரீ மலையத்வஜபாண்டியனான அரச னும் மறுபடியும் மறுபடியும் நமஸ்காரங்களைச்செய்து தெரிவித்துக்

கொள்ளலானான் "ஹே தேவ! தங்களனுக்ரஹத்தால் இவ்வரமே எனக்கு ஸித்தமாக யேற்படப்போகின்றது. ஷாட்குண்யம் பொருந்திய தேவரீரால் எது எது எனக்கு இப்பொழுது ஆக்ஞாபிக்கப்பட்டதோ அவைகள் எல்லாவற்றையும் நான் இப்பொழுதே செய்து முடிக்க ஸித்தமாகவிருப்பதையும் விக்ஞாபனம் செய்து கொள்கிறேன். எனது பித்ருக்களும் இப்பொழுதே க்ருதார்த்தர்களாகிவிட்டார்கள். கிடைத்தற்கறிய ஜனனத்தின்பலனையும் இப்போது நான் அடைந்துள்ளேன். தங்களுடைய அனுக்ரஹத்தால் மனுஷ்யர்களும்கூட இனி க்ருதார்த்தர்களாக ஆகப்போகிறார்கள். ஹே தேவேச! தங்களுக்கு 'ஆடி மாதத்தில்' விசேஷஉத்ஸவத்தைச் செய்கிறேன். ஹஸ்த நக்ஷத்திரத்தில் அங்குரார்ப்பணத்தை யாரம்பித்து புண்யமான உத்திராடநக்ஷத்திரத்தில் அவப்ருதஸ்னானம் நடத்தி, பிறகு புஷ்போத்ஸவத்தையும் நடத்திவைக்கிறேன்" இவ்விதம் விக்ஞாபனம் செய்துகொண்ட அரசனை நோக்கி, ஸ்ரீமானவ்ருஷபாத்திரிநாதன் மறுபடியும் திருவாய் மலர்ந்தருளியதாவது "ஹே ஸௌம்யனே! உனது ஆபீஷ்டப்படிச் செய்வதே ஹே அரசனே! எனக்கும் பரமத்ருப்திகரமாக ஆகும். மஹா புத்திமானான ஹேமலையத்வஜபாண்டியனே! இதற்குப்பிறகு அனேக இராஜச்ரேஷ்டர்களெல்லாம் என்னை யாராதிக்கப்போகிறார்கள். எனது அனுக்ரஹத்தினால், நிச்சயமாக போகமோக்ஷங்களை யடைந்து அனுபவிக்கப்போகிறார்கள். இதில் ஸந்தேகமே இல்லை. உன்னுடைய புத்திரர்களும், பௌத்ரர்களும், நம்முடைய பக்த ஜனங்களிடத்தில் விசேஷவாத்ஸல்யமுடையவர்களாக இருப்பார்கள். அவ்விதமிருந்து நீடித்தகாலங்கள் அரசாண்டு ஸகல ஸுகபோகங்களையுமனுபவித்துக்கொண்டும், அனேகம் தடவைகள் அச்வமேதாதியாகங்களைச் செய்துகொண்டும், அக்காலங்களில் பகுவிதமாக ஏராளமான தக்ஷிணைகள்முதலியவைகளைக்கொடுத்துக்கொண்டும்இருந்துவந்து, கடைசியில் "ஸ்ரீவிஷ்ணுபதம்" என்று சொல்லப்படுகிற எனது பதவியையடைவார்கள். இதில் ஸந்தேஹமே இல்லை. நீயும் ஸ்வல்ப காலத்தில் நமது லோகத்தையே யடையப்போகின்றாய். நீயும் இப்பொழுது க்ருதக்ருத்யனாக (செய்யவேண்டிய ஸகலகார்யங்களையும் செய்து முடித்தவனாக) ஆய்விட்டாய், என்றாலும், நீ செய்ய

வேண்டிய கார்யம் இன்னும் கொஞ்சமிருக்கின்றது. அதாவது, நமது ஸம்பந்தமாகச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்வதும், நமது உத்ஸவாதிகளை ஆரம்பித்து நடத்துவதும், இந்த ஸ்தலத்திலேயே அவைகள் எல்லாவற்றையும் செய்துவிட்டு, பிறகு உனது பட்டணத்தைக்குறித்துத் திரும்பிச் செல்வாயாக. உனது பட்டணத்தையடைந்ததும், மந்திரிகளோடும், ப்ராஹ்மணர்களோடும், தேசத்து ஜனங்களோடும் போய் நீயும் கூடவே இருந்து உனது புத்திரனுக்குப் பட்டாபிஷேகத்தைச் செய்துவைத்து, ஹே ச்ரேஷ்டனே! பரமஸந்துஷ்ட சித்தனாக சிலகாலம் அவர்களுடன் கூட வாஸம் செய்துவருவாயாக. பிறகு ஹே குழந்தாய்! எனது சோலைமலையின் ப்ராந்தியத்திலும், ஸ்ரீநூபுரகங்கா நதிதீரத்திலும், சுத்தமான விருக்ஷத்தின் அடியில் வஸித்துக்கொண்டும், ஹே ஸௌம்ய! வனத்திலுண்டாகும் கனிவர்க்கங்களை ஆஹாரமாக உட்கொண்டுவருவாயாக. ஹே அரசனே! வானப்ரஸ்தாச்ரமத்தையடைந்தவனாகக்கொண்டு, ராகாதி தோஷங்களிலிருந்து விடுபட்டவனாகி, நிர்மலசித்தனாகி, நம்மையே ஸதாகாலமும் நமஸ்கரித்தும், நமது அத்புதாக்ருதியையே ஸதாஸார்வகாலமும் உபாஸித்தும் வருவாயாக. ஹே அரசனே! நம்பால் உன்னால் வைக்கப்படும் அபாரபக்தி மேம்பாட்டாலும், மஹத்தான ஞானவிஷேத்தாலும் ஹே அரசனே! நம்பால் செலுத்தப்பட்ட சித்தவிருத்தியையுடையவனாகவே தர்மஸ்வரூபியாக இருந்து, நமது ஸம்பூர்ண ப்ரஸாதத்திற்குப் பாத்ரபூதனாகி நமது லோகத்தை ஹேமஹாபாக! நீ நிச்சயமாய் அடைவாய்'' என்று ஸ்ரீவநாசலபதியான ப்ரபுவும் பகவானுமான ஸாக்ஷாத் ஸ்ரீஹரியானவர் திருவாய்மலர்ந்தருளி உடனே விமானத்தினுள் அந்தர்தானத்தையடைந்தார். என்று ஸ்ரீமந்நாரதரிடம் அகஸ்த்ய மஹாமுனிவர் சொல்லிவிட்டு, மறுபடியும் மேற்கண்டவிதம் சொல்லலானார். 90 to 121

அகஸ்த்யர் வசனம்;—

"உடனே மலையத்வஜபாண்டியனும், சக்ரபாணியாயும், அப்ரமேயனுமான ஸ்ரீஹரியின்பொருட்டு நமஸ்காரங்களைச்செய்துவிட்டு, ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனுடைய ஆணையின்படிக்கு அங்கு தானே தனது வாஸஸ்தானத்தை யேற்படுத்திக்கொண்டான்.

வேதஸம்பந்நர்களான ப்ராஹ்மணர்களையும், மேலும் வேண்டிய சிற்பிகளையும் இன்னும் ஆலய நிர்மாணத்தைத் தொழிலாகக்கொண்ட தத்தத்கர்மபராயணர்களான தொழிலாளத் தலைவர்களையும், வரவழைத்து, அங்கு நடக்கவேண்டிய எல்லாக்கார்யங்களையும், அவர்கட்கு எடுத்துச்சொல்லியும், கேட்கும்படிச்செய்தும், கார்யங்களைச் செய்வித்தும், அவர்களோடு தானும் கூடவும் இருந்து, ஆலய நிர்மாணம் முதலிய ஸகலகைங்கர்யங்களையும் ஸங்கல்பித்தபடி நடத்தி வைத்தான்". 122 to 123½

"அகிலஜகத்திற்கும் ஆதாரபூதராகவும், எல்லா உலகங்கட்கும் மஹேச்வரருமான ஸ்ரீமத் ஸுந்தரராஜனின் திவ்யமங்கள விக்ரஹமானது எல்லா மானிடர்களின் த்ருஷ்டிக்குக் கோசரமாகி ப்ரத்யக்ஷமான காக்ஷியைத் தந்தருளியது. பிறகு, அரசனும், ஜனங்களுக்கெல்லாம் ஸந்தோஷத்தை வ்ருத்திசெய்விக்கக்கூடிய அரியபெரியதும், சிறப்புவாய்ந்ததுமான உத்ஸவத்தைச் செய்தும், பாக்கியுள்ள ஸகலவித கார்யங்களையும் நன்றாகவும், பக்தியுடனும் கூட அவ்வாசன் செய்துமுடித்தான். பிறகு தடஸ்தமான நிர்மலஸ்வரூபத்தை யடைந்து தனது யோக மஹிமையின் ப்ரபாவத்தால் மேலான முக்தி பதவியையும் அடைந்தவனானான்". 124 to 126

"ஹே ஸ்ரீ நாரதமுனிவரே! மேலும் கேட்பீராக, யாவான் ஒருவன் இவ்விதிஹாஸத்தை ஸ்தோத்ரம் செய்கிறானோ, எவன் கேட்கின்றானோ, கேட்கும்படிச் செய்கின்றானோ, அத்தகைய மனுஷ்யன் ஸகலவித பாபங்களினின்றும் விடுபட்டவனாகி, மேலான பரமகதியை யடைகின்றான். மேலும் யக்ஞகாலங்களிலும், ப்ரஹ்ம ஸத்ரகாலங்களிலும், இரண்டு ஸந்த்யா காலங்களிலும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஸன்னிதானங்களிலும், ஸ்ரீ விஷ்ணு பக்தர்களின் ஸன்னிதிகளிலும், வித்வானாகவும், வ்ரதசீலனாகவும் உள்ள ப்ராஹ்மணன் ஸ்ரீ விஷ்ணுஸம்பந்தமான இவ்விதிஹாஸ புராணத்தை எல்லோரும் நன்கு கேட்கும்படி படிக்கவேண்டும். ச்ரவணம் பண்ணிய மாத்திரத்திலேயே, பாபங்களை நசிக்கச் செய்வதும், ஸர்வ தீர்த்தங்களிலும் போய் ஸ்நானம் பண்ணுவதனால் யடையக்கூடிய பலன்களை எல்லாம் தானே யளிப்பதுமாகிய இவ்விதிஹாஸத்தைச்

சந்த்ர ஸூர்ய க்ரஹணகாலங்களிலும் எல்லோராலும் கேட்கப் படும்படி ப்ரவசனம் செய்யவேண்டும்'' என்று ஸ்ரீ அகஸ்த்ய மஹா முனிவர் ஸ்ரீ நாரதரை நோக்கித் திருவாய் மலர்ந்தருளினர். 127 to 130

இவ்வாறாக ஸ்ரீ நாரதரின் ப்ரச்னத்திற்கிணங்கியவண்ணம் ஸ்ரீ அகஸ்த்ய மஹாமுனிவர் விடை விரிவாகக்கூற, உடன் மஹா தேஜஸ்வியான ஸ்ரீநாரதர் ரிஷி வாக்யத்தை ஸ்ரீ ஸூதபுராணிக ரான எனக்குச் சொல்ல, நான் உங்கட்கு ஸ்ரீ அகஸ்த்யோதிதமா யுள்ளதும், சுபமும், புண்யமும், பாபத்தைத் துலைப்பதும், ஸகல அபீஷ்டங்களைத் தந்தருளுவதுமாகிய இவ்விதிஹாஸபுராண மஹி மையின் வரலாற்றை உரைத்தேன். ஹே நைமிஷாரண்யவாஸிகளே! இப்பொழுது மேலும் கேட்பீர்களாக; என்று ஸ்ரீ ஸூதபுராணிகர் திருவாய்மலர்ந்தருளினர். 132

இவ்விதம் ஸ்ரீவாராஹ புராணத்தின் 48-வது அத்யாயத்தில் ஸ்ரீ விருஷபாத்ரி மாஹாத்ம்யமெனும் இதிஹாஸ ஸ்தலபுராணத்தில் "ஸ்ரீ மலயத்வஜபாண்டிய பூபதியின் மனோபீஷ்டங்களை நிறைவேற்றிவைத்த'' தெனும்

பத்தாம் அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீ விருஷபாத்ரி மாஹாத்ம்யத்தில்

"ஸ்ரீ வாராஹக்ஷேத்ர மாஹாத்ம்ய" மெனும்

பதினொன்றும் அத்யாயம்.

ஸ்ரீ வாராஹ க்ஷேத்ரத்தின் மாஹாத்ம்யத்தைச் செவியுற்றுக் கேட்க மிக்க ஆவல்கொண்டவர்களான முனிவர்களனைவரும் மஹா மதியாயுள்ள ஸ்ரீஸூத மஹாமுனிவரின் அருகில் நின்று ப்ரச்னத்துடன் விக்ஞாபிக்கலாயினர். 1

"மஹா புத்திமானான ஹே ஸ்ரீ ஸூதபுராணிகரே! மிகவும் கீர்த்திவாய்ந்த இந்த ஸ்ரீ வாராஹ க்ஷேத்ரமானது இப்பாண்டிய தேசத்திற்குள் எந்தப் பக்கத்தில் விளங்கிவருகின்றது? இந்த க்ஷேத்ரம் எவ்வளவு யோஜனை விஸ்தீர்ணமுள்ளது? எந்த எந்த புண்ய தீர்த்தங்களுடன் கூடினதாக இருக்கின்றது! இத்தகைய வைபவம் பெற்ற இவ்வாராஹ க்ஷேத்திரத்திலேயே முற்காலத்தில் எந்த எந்த ஸாதுக்கள் முக்தியை யடைந்திருக்கின்றார்கள்! யாவற்றையும் அறிந்த தாங்கள் இவைகளனைத்தையும் எங்களுக்குத் திருவாய்மலர்ந்தருள்வீராக; என்று கேட்ட சௌனகாதி மஹரிஷிகளை நோக்கி ஸ்ரீஸூத மஹாமுனிவர் சொல்லுகிறார்." 3

"ஹே முனிவர்களே! இவ்விடத்தில் தாங்கள் எதைக் குறித்துக் கேட்டீர்களோ, அதை நானுரைக்கின்றேன், எல்லோரும் கேட்பீர்களாக; உங்களெல்லோராலும் கேட்கப்பட்ட கேள்வியே முன்னொரு ஸமயம் ஏகாந்தமாயுள்ள தனது தபோவனத்தில் விளங்காநின்ற ஸ்ரீ நாரத மஹாமுனிவரின் ஸந்நிதானத்தில் பராசர புத்ரரான ஸ்ரீ வியாஸமஹரிஷியினாலும் கேட்கப்பட்டது." 4

ஸ்ரீவியாஸர் ப்ரச்னஞ்செய்ததாவது:—

"ஹே ஸ்ரீ நாரத மஹாமுனிவரே! ஸ்ரீ வாராஹமென்று சொல்லப்படும் க்ஷேத்ரமானது எங்கு உளது? அதனது சுற்றளவு

எவ்வளவு? எத்தனை (தேஹிகள்) ஸாதுக்கள் அங்கு உத்தமமான ஸித்தியை அடைந்திருக்கின்றார்கள்? எத்தனை புண்யதீர்த்தங்கள் அங்கு விளங்கிவருகின்றன? இவை எல்லாவற்றையு மெனக்குச் சொல்வீர்களாக" என்று ஸ்ரீ வ்யாஸரால் ப்ரச்னஞ் செய்யப் பட்டது". 6

அதற்கு ஸ்ரீ நாரதர் பதில்தெரிவிக்கின்றார்:—

"ஹே முனிச்ரேஷ்டரே! ஸ்ரீவாராஹ க்ஷேத்ரத்தைச் சேர்ந்த ஸகல மாஹாத்ம்யத்தையும் சற்று எடுத்துரைக்கின்றேன். கவனமாகக் கேட்பீராக. பாண்டிய நாட்டிற்கு மேற்கு திக்கு ஓரத்திற்கு அப்பால் 'மலய'மெனும் பர்வதமொன்றிருக்கின்றது. அம்மலையில் எல்லா மஹரிஷி ச்ரேஷ்டர்களால் ஸேவிக்கப்பட்ட ஸ்ரீ அகஸ்த்ய மஹாமுனிவர் எப்பொழுதும் உலக யோகக்ஷேமத்தின் நிமித்தம் தவம்புரிந்துகொண்டு இருக்கின்றார். அம்மலய பர்வதத்திற்கு வட கிழக்குதிசையில் சில மலைக்குன்றுகள் இருக்கின்றன. அவைகளுள் 'மண்டுகே பர்வதமெனும்' ஒரு மலை இருக்கின்றது. அம்மலையில் மண்டுகேரெனும் பெயர்பெற்ற மஹா தபஸ்வியானவர் அனேக முனிவர்களால் சூழப்பட்டு விளங்கிவருகின்றார். அம்மலையின் கீழ்திசைப் பாதியிலிருந்து ஆரம்பித்து கிழக்கு திசையைச் சுற்றில் இரண்டு யோஜனைக்கு அப்பாலுள்ள ப்ரதேசத்தில் ஸ்ரீ வாராஹ க்ஷேத்ரமிருக்கின்றது. அவ்வாராஹ க்ஷேத்ரத்தில் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் ஸதா ஸாந்நித்யமடைந்திருக்கின்றார். மேலும் அங்கு தவம் புரிந்துவரும் ஸ்ரீ அகஸ்த்ய மஹாமுனிவருக்கும் இதர தபஸ்விகட்கும், அக்ஷேத்ரமஹிமையால் முயர்ச்சியில்லாமலே ஸகல ஸித்திகளும் ஸித்திக்கின்றன" என்று சொன்ன ஸ்ரீ நாரத மஹாமுனிவரை நோக்கி ஸ்ரீ வ்யாஸர் "ஹே ப்ரஹ்மந்! அந்த மண்டுகரென்பவர் யாரென்பதையும், இவருக்கு எத்தகைய காரணத்தினால் ஸித்தி ஏற்பட்டுளது! எந்நிமித்தமாக இம்மஹாமுனிவர் இங்கு வந்துள்ளார்! எவ்விதமான ஸித்தியைக் கொடுப்பதில் இவர் யோக்யதையைப் பெற்றிருக்கின்றாரென்பதையும், ரிஷிகளோடு கூட எங்கு வஸிக்கின்றாரென்பதையும், வெகு வ்யக்தமாக எனக்குச் சொல்வீராக" என்று கேட்டார். 7 to 13.

ஸ்ரீநாரதர் தெரிவிக்கின்றார்:—

"கௌண்டின்ய குலத்திலுதித்தவரும், தர்மாத்மாவுமான "ஸ்ரீ ஸுதபஸ்" என்பவர் ப்ரஹ்மஸாயுஜ்யம் பெறவேண்டுமெனும் விருப்பத்துடன் ஸ்ரீவிருஷபாத்ரியில் தவம் புரிந்துவந்தார். அவ்விருஷபாத்ரியிலுள்ள ஸ்ரீ நூபுரகங்கைக்கு அருகிலுள்ள புனிதமான தபோவனத்தில் ப்ரஹ்மத்யான தத்பரர்களான வாலகில்யாதி தபோதனர்களும், துர்வாஸர் முதலிய எல்லா முனிவர்களும், இந்நதிக்கு அருகாமையில் வந்து சேர்ந்தனர். வந்தவர்களான இம்மஹாமுனிவர்களை நோக்கி வரவேற்புக்கூறாமல் ஸ்ரீஸுதபஸ் என்ற மேற்கூறிய ரிஷியானவர் ஸ்நாநஞ்செய்ய வேண்டுமென்ற விருப்பத்தினால் அகமர்ஷண ஸூக்தத்தை ஜபித்துக்கொண்டபடியே மஹாநதியின் தீர்த்தத்தில் இரங்கினார்." 14 to 16½

"அச்சமயம் ஜலத்தினுள் மூழ்கின ஸ்ரீஸுதபஸ்ஸின் வருகையை வெகுகாலம் எதிர்பார்த்துக்கொண்டு எல்லா ரிஷிகளும் அருகாமையிலுள்ள இந்த ஸுதபஸ்ஸின் ஆச்ரமத்தில் அமர்ந்திருந்தார்கள். அப்படிக் கார்த்திருந்தும் ஸ்ரீஸுதபஸ் என்பவர் வெகுகாலமாகியும் வாராமையைக்கண்டு ஸ்ரீ ஸுதபஸ்ஸின்மீது ஸ்ரீ துர்வாஸர் வெகு கோபங்கொண்டார். உடன் ஸ்ரீ ஸுதபஸ்ஸானவர் க்ரமப்படி ஸ்நாநஞ்செய்து எழுந்திருந்தும், பிறகு செய்யவேண்டிய கர்மாநுஷ்டானங்கள் யாவையும் செய்து முடித்துக்கொண்டும், தனது ஆச்ரமத்தை நோக்கித் திரும்பி வந்து சேர்ந்தார். உடனே அம்மஹாமுனிவர்கட்கு அதிதி ஸத்காரஞ் செய்யவேண்டுமெனும் யத்னங்கொண்டு அதிதி பூஜைகளுக்கு வேண்டியதுகளாயுள்ள அதிதி பூஜா ஸம்பாரங்களை யாவையும் எடுத்துக்கொண்டு ரிஷிகளின் முன்னிலையை நோக்கிச் சென்றார்." 17 to 19

"அவ்விதம் வந்து நின்ற ஸ்ரீ ஸுதபஸ் ரிஷியை நோக்கி ஸ்ரீ துர்வாஸ முனிவரானவர் அடியிற்கண்டவிதம் சபிக்கலானார்."

"உமது ஆச்ரமத்தையே நோக்கித் தேடிவந்தவர்களும், மஹாநுபாவாளுமாகிய இம்மஹரிஷிகளையும் என்னையும் அநாதரவுடன் அவமதித்து, ஸ்நாநவிதியையே மேலாகவெண்ணி ஜலத்தை

விரும்பிச் சென்ற ஹே முனியே! எப்பொழுதும் நீ தவளையாகவே ஆகக்கடவாய்" என்று ஸ்ரீ தூர்வாஸரின் சாபவசனத்தைச் செவியுற்ற ஸுதபஸ்ஸும் பயந்து நடுநடுங்கிய சித்தவ்ருத்தியை யுடையவராய் மஹாமுனிவரான ஸ்ரீ தூர்வாஸரின் முன்னிலையிலும், அங்கு வந்திருந்த மஹான்களான ரிஷிகளின் முன்னிலையிலும் தண்டம்போல் அடிபணிந்து பூமியில் விழுந்தார். 21½

உடனேயே மஹாத்மாக்களும் ப்ரஸன்னர்களுமான மஹரிஷிகளனைவரும், சரணமென்றடிபணிந்தவரும், ப்ராஹ்மணருமான ஸ்ரீ ஸுதபஸ்ஸைச் சீக்கிரமாகக் கைதூக்கிவிட்டு அவரை நோக்கிச் சிறப்பும், உண்மையும்வாய்ந்ததோர் இவ்வார்த்தையைத்தெரிவித்தனர். "மஹாமுனிவரான ஸ்ரீ தூர்வாஸர் எவ்விதமாகச் சொன்னாரோ; அது அவ்விதமாகவே வாய்ந்திடும்." ஆனால் ஹே தபஸ்விந்! இது விஷயத்தில் நீர் பயத்தை யடையவேண்டாம். உமக்கு வேண்டிய அநுக்ரஹத்தை நாங்கள் செய்கிறோம். ஸ்ரீவாராஹக்ஷேத்ர ப்ராந்தியத்தில் "தர்மாத்திரி" எனும் பெயர் பெற்ற ஓர் பர்வதம் விளங்கி வருகின்றது. அம்மலையின் கீழ்பாகத்தில் மலையருவி ஒன்று பாய்கின்றது. அம்மலையருவியின் இருபக்கக் கரைகளும் மலர்ந்த புஷ்பங்களோடுகூடிய விருக்ஷங்களால் நிறையப்பெற்று அடர்ந்து ப்ரகாசிக்கின்றன. முன்னொரு ஸமயம் மஹாத்மாக்களும், நியமவான்களும், தபோதனர்களுமாகிய வஸிஷ்ட கோத்திரத்திலுதித்தவர்களும், கச்யப கோத்திரத்திலுண்டானவர்களும், கண்வ வம்சத்தில் ஜனித்தவர்களும், பரத்வாஜ குலோத்பன்னர்களும், கௌதம வம்சத்தில் பிறந்தவர்களும், வாத்ஸ்யாயன ருஷிபரம்பரையிலுண்டானவர்களும், சாகல்ய மஹரிஷிவம்ச ப்ரஸூதர்களும், சாஸிகாயன வம்சஸ்தர்களும், இம்முதலிய மற்ற ஆயிரக்கணக்கான மஹாமுனிவர்களனைவரும், தங்களுக்கு அபிமதமாயுள்ள மலையருவியில் ஸ்நாநம் செய்ததால் கிழத்தன்மையற்றவர்களாய் வஸித்துவந்து உத்தம தவம் புரிந்துகொண்டு ப்ரஹ்ம ஸாயுஜ்யத்தை யடைந்தார்கள்".
22 to 27½

"ஹே மஹாமுனே! கேட்பீராக; மஹான்களான அவர்களுக்கு த்ருப்திகரமான அத்தகைய பெருமைவாய்ந்த அம்மலையருவியில்

விதிப்படி ஸ்நாநஞ் செய்து, மண்டூக ரூபத்தை விட்டுவிடுவீர். உமக்கு அவ்விடத்தில் "மண்டூகமுனி" எனும் பெயருமுண்டாகப் போகின்றது. அங்கேயே நீர் தவமியற்றவேண்டியது. வெகு சீக்ரத்திலேயே ஸித்தியையும் அடைவீராக" என்று ஸ்ரீ துர்வாஸமஹரிஷியுடன் வந்தவர்களான மஹான்களின் சாபாவஸானச் சொல்லைச் செவியுற்றவுடனே த்ருப்தியடைந்தவராய் ப்ரஸன்னத்தையடைந்த ஸ்ரீ ஸுதபஸ்ஸானவர் அம்மஹாமுனிவர்களை நோக்கி மறுபடியும் தெரிவித்துக்கொண்டார்". 28 to 30

ஸ்ரீ மண்டூகமுனிவரான ஸ்ரீ ஸுதபஸ் சொல்லுகிறார்:—

"ஷாட்குண்யம் பொருந்திய உங்களால் எவ்விதமாக உரைக்கப்பட்டதோ, அது அவ்விதமே ஏற்படும். வேறுபாடாக இராது. ஆனாலும் ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஸ்நாநவிதியானது என்னால் தத்ஸமயம்தான் புதிதாக அநுஷ்டிக்கப்பட்டதென்பதில்லை. முன்னமேயே தினந்தோறும் பக்தி ச்ரத்தை வாய்ந்த மனதுடன் ஸ்ரீ நூபுரகங்கா நதியில் ஸ்நாநஞ்செய்து, முக்தி கிடைக்கும்வரை எப்பொழுதும் ஸ்ரீ ஸுந்தரராஜரென்று பெயர் கொண்ட ஸ்ரீ ஹரியை அர்ச்சிப்பது எனும் நியம வ்ரதமானது தொண்டுதொட்டே என்னால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டு அநுஷ்டிக்கப்பட்டுவருகின்றது." என்று இவ்விதம்சொன்ன ஸ்ரீ ஸுதபஸ்ஸின்வார்த்தையைக் கேட்டுப் பரமாச்சர்யபரிதர்களான முனிவர்களனைவரும் வெகு ஸந்தோஷத்தையடைந்து இம்மஹாமுனிவரைப் போற்றிக்கொண்டே அநுக்ரஹ பரிபூரிதமான இவ்வார்த்தையைச் சொல்லலாயினர். 31 to 33

முனிவர்கள் சொல்லுகிறார்கள்:—

"ஹே ஸாதோ! அம்மண்டூகபர்வதத்தில் "ஸ்ரீஸுந்தரராஜரெனும்" பெயர்பெற்ற ஸ்ரீஹரியானவர் ஸ்வயம் ஸாந்நித்யமடையப்போகின்றார். அவரது பாதச்சிலம்பிலிருந்துஉண்டான அருவியும் அங்கு நித்யஸாந்நித்யத்துடன் விளங்கப்போகின்றது. அச்சமயம் மஹா தபஸ்வியான உமது அதிதி ஸத்காரபூஜையை நாங்கள் அங்கு ஏற்றுக்கொள்ளுகிறோம்" என்று இவ்விதமாகத் திரு

வாய்மலர்ந்தருளி உடனே மஹரிஷிகளனைவரும் அந்தர்தான மடைந்தனர். பிறகு ஸ்ரீ ஸுதபஸ் என்ற ஸ்ரீ மண்டுகமுனிவர் பரமாச்சர்யமடைந்து சிஷ்யர்களாயுள்ள முனிவர்களுடன் கூடவே ஸ்ரீ விருஷபாத்ரியிலிருந்து ஆகாசயானத்தின் மூலமாக வெகு விரைவில் மண்டுகபர்வதத்தை அடைந்தார்". 31 to 37

பிறகு அம்மண்டுக பர்வதத்தின் ப்ராசீனமான மலையருவியில் ஸ்நானஞ்செய்தவரான ஸ்ரீ ஸுதபஸ் என்ற மஹா தபஸ்வியானவர் மண்டுக ரூபத்தைவிட்டு, மானிட உருவத்தையுமடைந்தார். அவ்விடத்திலேயே அப்பொழுதே ப்ரஸன்னாத்மாவாய் இருந்து, தவம் புரிந்து வந்தார். அதிசீக்கிரகாலத்திற்குள் ஸ்ரீஸுந்தராஜர் எனும் பெயர்பெற்ற ஸ்ரீ ஹரியானவர் பரம கருணையுடன் ஸ்ரீ வாராஹ க்ஷேத்திரத்தின் மஹிமையின்மூலம் ஸ்ரீஸுதபஸ்ஸுக்கு ஸ்வயம் ப்ரத்யக்ஷமான காக்ஷியைக் கருணையுடன் தந்தருளினர். உடனே அம்மண்டுகமுனிவர் இதரமுனிவர்களுடன் பரம ஆச்சர்யமடைந்து, பீதாம்பரதாரியாய் விளங்குபவரும், அலர்ந்த செந்தாமரைக் கண்ணனாக விளங்குபவரும், உதயகால ஸூர்யனின் தேஜஸ்ஸை உடையவரும், நீருண்ட மேகத்திற்குச் சமானமான ச்யாமளவர்ணமுடையவரும், கௌஸ்துபமெனும் இரத்னபாணத்தினால் ப்ரகாசிக்கும் மார்பையுடையவரும், ஹாரங்களாலும், தோள்வளைகளாலும், கங்கணங்களாலும், கிரீடத்தினாலும், இது முதலிய மற்றுமுள்ள ஆபரண விசேஷங்களாலும், ஜாஜ்வல்யமாய் ப்ரகாசிப்பவரும், ஸ்ரீதேவி பூதேவிமார்களால் அலங்கரிக்கப்பட்ட உபய பார்ச்வங்களையுடையவரும், சாமரம் வீசுகின்றவர்களாலும், சக்தி தேவதைகளாலும், நன்கு ஸேவிக்கப்பட்டவரும், அநந்த கருடர் முதலிய பாரிஷதர்களாலும், நித்ய ஸூரிகளான ஸநந்த ஸநகாதி முதலிய முனிச்ரேஷ்டர்களாலும் நன்கு சூழப்பட்டு ஸ்தோத்ரஞ் செய்யப்பட்டவரும், ப்ரஹ்மாதி ஸமஸ்த தேவர்களாலும் மற்றும் நாலாபக்கங்களிலுள்ள இதரர்களாலும் ஸேவிக்கப்பட்டவருமான ஸ்ரீ ஸுந்தராஜரென்று பெயர்பெற்ற ஸ்ரீ பரமபுருஷனை தர்சித்தார். 38 to 44

இத்தகைய காக்ஷியைத் தந்தருளுகிறவரும், ஸ்ரீ ஸுந்தர ராஜரென்று பெயர் பெற்றவரும், எப்பொழுதும் ஆத்ம ஸ்வரூபமான ஸ்ரீமந்நாராயண ஸ்வரூபத்தைத் தன் மனோவீதியில் த்யானிக்கப்பட்டவருமான ஸ்ரீ ஸுதபஸ்ஸானவர் ஸ்ரீ சுந்தரராஜ மூர்த்தியைக் கண்ணாரக்கண்டு, நமஸ்கரித்து, பரம ஸந்துஷ்ட சித்தராக ப்ரணவார்த்தத்தின் உட்பொருளை விளக்கக்கூடிய துதிச்சொல்லை பக்தர்களுடன் கூடவேயிருந்து துதி சொல்லலாயினர். 45

இவ்விதம் ஸ்ரீ வாராஹ சேஷமான இரஹஸ்ய கண்டத்தின்
ஸ்ரீ வாராஹக்ஷேத்ர மாஹாத்ம்யத்தில்
"ஸ்ரீ விருஷபாத்ரி க்ஷேத்ர மாஹாத்ம்யமெனும்
இதிஹாஸ ஸ்தலபுராணத்தில்"
பதினேன்றும் அத்தியாயம்
முற்றிற்று.

ஓம்.

ஸ்ரீ:

ஸ்ரீ விருஷபாத்ரி மாஹாத்ம்யத்தில்

"ஸ்ரீ மண்டூக மஹாமுனிவருக்கு ஸாயுஜ்யத்தைத்

தந்தருளிச்செய்த"தெனும்

பன்னிரண்டம் அத்யாயம்.

"ஸ்ரீ மண்டூகமுனிவர் துதி செய்கிறார்—

காரணங்கள் யாவையும் நிறையப்பெற்றவரும், (எல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பவரும்) ஸ்ரீப்ரஹ்மாவினால் அறியத்தகுந்த சக்தி வாய்ந்ததோர் ப்ரஹ்மஸ்வரூபமுள்ளவரும், யோகிகட்கு முக்தியைத் தந்தருளுபவரும், அவ்யக்த வடிவையுடையவரும், ஸர்வபூதாந்தராத்மாவாக விளங்குபவரும், சுத்தமான மனமுடையவரும், மாயாஸம்பந்தமற்றவரும், மாயாபந்தத்திலிருந்து விடுதலையடைந்துள்ள ஆத்மாவைக்கொண்ட முனிவர்களிடத்தில் ரமித்துக் கொண்டிருப்பதென்ற பற்றுதலையுடையவரும், சுத்தஸத்வஸ்வரூபிகளான நித்யஸூரிகளால் ஸேவிக்கப்பட்டவருமான தங்களின் பொருட்டு ப்ரணவபூர்வகமான நமஸ்காரம். 1 to 2½

"மேலும், ஸமஸ்த ஜகத்துக்களுக்குக் காரணப் பொருளாக விளங்குகிறீர் என்று முனிவர்களனைவரும் தங்களையே மனனஞ் செய்து அறிந்து போற்றிப் புகழ்கின்றார்கள். எல்லா உலகங்கட்கும் ஆதாரமாக விளங்காநிற்பவராகவும், உலக ஸம்ரக்ஷணத்தில் திறமை பெற்றவராகவும், ஸர்வ வ்யாபகராகவும், எல்லா ப்ராணிகளுக்குமே ப்ரளயஸ்தானமாக விளங்காநிற்பவராகவும், அழிவற்றவராகவும் விளங்குகிறீர். மேலும் தங்கள் தங்கள் காரணப்பொருள்களுள் பூதங்கள் யாவும் லயத்தை யடைந்து சலனமற்றிருக்குந் தருணத்தில் சேஷிபூதங்களான எல்லாவற்றுடனும், மற்றும் ஒன்றிலும் ஸம்பந்தமற்ற அஸ்ப்ருஷ்ட வடிவுடன் நீரொருவரே சேஷிபூதராகயிருந்து விளங்குகிறீர். மேலும் தாங்கள் ச்ரமநிவ்ருத்தியின் நிமித்தம் மறுபடியும் ஸ்ரீதேவி பூதேவி ஸமேதராய்த் தனது தாமாவான இருப்பிடத்தில் ஆதிசேஷதல்பத்தில் மஹாபோக குணபிராம்ஞக விளங்கி, பரமசாந்தர்களான ஸமஸ்தபக்தர்களுடன் சூழப்பட்டு சயனித்து இருந்துவருகின்றீர். இவ்விதம் இரண்டு பரார்த்தம் அளவுள்ளதான இரவைக் கழித்து சோலைமலைக்காசரான நீரே மறுபடியும் யோகநித்ரையைவிட்டெழுந்தருளி ஸர்வ சூன்யமாய் நிற்கின்ற ஸ்தாவர ஜங்கமாத்மகங்களையும் ஸம்ஞாவிஹீனமாக நிற்கின்ற அகில சேதனர்களோடும் கூடிய இப்புவனத்தையும், பரமசாந்தமடைந்தவர்போல், இப்புவியில் ஸர்வ புருஷர்களுடைய பற்பலவிதமான புராதன கர்மாக்களையும், சற்று நன்கு நோக்கி, நீரே பின்னால் அந்தந்த பூதங்கட்கு ஏற்பட்ட ஸ்வரூபம் வாய்ந்தவுடன் பலவிதமான வடிவுகளுடன் ஆவிர்ப்பாவங் கொள்ளுகின்றீர். 3 to 8

"பிறகு தாங்கள் தங்கள் புத்திசக்தியின் மூலம் விசேஷலயம் பெற்ற பலவித ஜீவராசிகளுடன் கூடியதோர் முக்யஸ்தனை நன்கு வெளிக்காட்டுகிறீர். மேலும் வ்யாபிக்கப்பட்ட அகாராதி வர்ணங்

களடங்கியதோர் சாந்தகுணமானது, நாலாபக்கங்களிலும் பரவின (இருள்களிலிருந்து) தமோகுணங்களிலிருந்து பிரிவடைந்து மஹத்தாக விளங்காநிற்கின்றது. அதன்பிறகு அம்மஹத்திலிருந்து எல்லா பூதங்களுக்கும் ஆதிபூதமான அஹங்காரமானது உத்பவிக்கின்றது. ஹே தேவ! அவ்வஹங்காரமானது ஸத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்றிவ்வாறாக மூன்றுவித பேதங்களை யடைந்து விளங்குகின்றது. இராஜஸ குணத்தோடு கூடிய ஸாத்விக குணத்திலிருந்து ஏகாதச இந்திரியங்களும், (சக்ஷுஸ், ச்ரோத்ர, ஜிஹ்வா, க்ராண, த்வக் இந்த ஞானேந்திரியம் ஐந்தும், வாக், பாணி, பாத, பாயு, உபஸ்தங்களாகிய கர்மேந்திரியங்கள் இந்த ஐந்தும், மனஸ் ஒன்றும் ஆக பதினொன்று இந்திரியங்களும்) உண்டாகின்றன. மேலும், தாமஸ குணத்திலிருந்தோவென்றால், மனது, புத்தி, சித்தம், அஹங்காரம், தமஸ் இவ்வைந்தாகிய 'பஞ்சதன்மாத்திரை, உண்டாகின்றது. இப்பஞ்சதன்மாத்திரையினின்று அரிய பெரியதான இப் ப்ரஹ்மாண்டமுண்டாயிற்று. இப் ப்ரஹ்மாண்டத்திலோவென்றால் ப்ரஹ்மா ஆவிர்ப்பாவம் கொள்கிறார். அப்ரஹ்மாவினால் இந்த ஜகத் யாவும் உண்டாகிறது. இவ்விதமாக ஸர்வ ஜகத்தையும் ஸ்ருஷ்டித்துத் தாங்களே ஸார்வகாலமும் பரிபாலித்து வருகின்றீர். முடிவு காலம் ஏற்பட்டபொழுது இஜ்ஜகமனைத்தையும் தாங்களே ஸ்வயமாகவே சுருக்கிக்கொள்ளுகின்றீர்கள். இந்த ப்ரகாரம் இவ்வகிலவிச்வத்தையும், ஸ்ருஷ்டிப்பதிலும், ரக்ஷிப்பதிலும், ஸம்ஹரிப்பதிலும் ஆனந்தத்தை யடைகின்றீர்கள். 9 to 13½

"ஹே மாதவ! நீரே எல்லா வேதங்களுள் உட்பொருளாகயிருந்து ப்ரதிபாதிக்கப்படுகின்றீர். ஸர்வாத்மாவாயும், ஸநாதனருமாகிய உம்மையே ஸகலவித யாகங்களின் மூலம் த்ருப்தி செய்துவைக்கின்றார்கள். உடன் தாங்களே ஸர்வ பூதாந்தராத்மாவாக விளங்காநின்று எல்லாவற்றிற்கும் பலத்தைத் தந்தருளுகின்றீர்.

14 to 15

"மேலும், தாங்கள் பரிசுத்தமான தேஜஸ்ஸோடு கூடிய ப்ரஹ்மாவினாலும் ஸகலவித கர்மாக்களினால் ஆராதிக்கத் தக்கவராகயிருக்கிறீர். ஸம்ஸாரபயத்திலிருந்து நிர்வாணபதத்தை அடைவதற்கு உமது சரணகமலத்வந்த்வத்தை மஹான்கள் உபாஸிக்கின்றனர். மேலும் ஏகாக்ரசித்த வ்ருத்தியுடன் கூடிய பரிசுத்தர்களாயுள்ள பக்திமான்கள் உம்மையே சரணமடைந்தவர்களாய் உமது ஸாயுஜ்யத்தையும் பெற்று, உம்முடன் கூடவே ஸதாஸார்வகாலம் பரமஹர்ஷத்துடன் விளங்கி வருகின்றார்கள். மேலும் எல்லாமறிந்த தாங்கள் ஸம்ஸார தாபத்தினால் வெறுப்புற்றவர்களான ஆத்மாவை அறியாதவர்களும், ஹிதமாயுள்ளதையும் அஹிதமாயுள்ளதையும்பற்றி பகுத்தறியாத ப்ராணிகளையும் பரம க்ருபையுடன் தேவரீர் பரிபாலித்து வரப்போகின்றீர். ஏதாவதொன்றை வ்யாஜமாக உண்டுபண்ணி, ஹே புருஷோத்தம! தாங்களே ஆத்மஞானிகளாகவும், உங்கள் பக்தர்களாகவும் உள்ளவர்களையும் பிறப்புள்ளவர்களாகத்தானாகவே செய்கின்றீர்கள். அவர்களையே மறுபடியும் ப்ரஹ்மவித்துக்களுடன் சேர்த்தும் வைக்கின்றீர்கள். ஹே ஹரே!

ஜனனவிசேஷங்களைப்பெற்ற அவர்களுடைய விக்னங்கள் யாவையும் தங்களதனுக்ரஹத்தின் மூலம் தாங்களே அடியோடு துலைத்தும் தங்கள் சரணாரவிந்தத்தையே மறுபடியும் அடையும்படிச் செய்து கொள்ளுகின்றீர்கள். மேலும் காலதோஷத்தினால் ஸாதுக்களுக்கு இப்புவியில் ஹிம்ஸைகள் யேற்படும் காலங்களிலும், வைதிக ஸம்ப்ரதாய மார்க்கங்களுக்கு விருத்தமாக துன்மார்க்க ப்ரவ்ருத்திகள் உண்டாகும் காலங்களிலும், அவைகளை தத்தத்காலங்களில் நிலை நிறுத்தி பரிபாலனம் செய்து வருவதன்நிமித்தம் வேண்டிய அவதாரங்களையும் எடுக்கிறீர்கள். 16 to 22

"இவ்வுலகில் மனுஷ்யர்களும், அம்மானிடர்கட்கும் ஸமானமானவர்களும் யுகந்தோறு முண்டானபொழுது, சிற்றறிவுற்றதுகளும், அறிவில்லாதவைகளும், முற்றறிவுபெற்றதுகளுமாகிய ப்ராணிகளுடைய பரிபாலனத்தின் பொருட்டு அந்தந்த ஸ்தானங்களில் ஸதா ஸந்நிஹிதராய் நின்று விளங்குகின்றீர். 23

"இவ்விதம் ஸ்ரீ மண்டுக மஹாமுனிவரால் துதிசெய்யப்பட்டவரான ஷாட்குண்ய பரிபூர்ணரான ஸ்ரீ பகவான் தனது கருணாரஸ பரிபூரித கடாக்ஷத்தினால் அம்முனிவரை நோக்கி, இனிமையும் தெளிவுமுள்ள வசனங்களால் அடியிற்கண்டவிதம் திருவாய் மலர்ந்தருளினார். 24

ஸ்ரீ பகவான் சொல்லுகிறார்:—

"ஹே முனே! இவ்விதமாகத் துதிசெய்த உம்பொருட்டு ப்ரஸன்னராகி ப்ரத்யக்ஷமானோம். உமக்கு அபிமதமாயுள்ள வரங்கள் யாவையும் நாம் கொடுக்கின்றோம் கேட்பீராக," என்று ஸ்ரீ பகவான் திருவாய்மலர்ந்தருள உடன் ஸ்ரீ மண்டுக மஹாமுனிவர் பரம ஸந்தோஷத்துடனும் அஞ்சலிஹஸ்தராயும் கத்கதஸ்வரத்துடனும் துதி செய்து சொல்லலுற்றார். ஹே ஸர்வபூத மனோஹர! தேவரீர் முனிவர்களனைவர்கட்கும் அந்தராத்மாவாக விளங்கு

கின்றீர். நானோ தங்கள் ஸாயுஜ்யத்தையே நாடி தவம் புரிந்து வந்துள்ளேன். இப்பொழுது தங்களை நன்கு தர்சித்தமாத்திரத்திலேயே பரிபூர்ண மனோரதனாக ஆயினேன். மேலும் தாங்கள் எவ்விடத்தில் காக்ஷியைத்தந்தருளிச்செய்தீர்களோ; அவ்விடத்தில் நான் வஸித்து வருகின்றேன். மேலும் உமது சரண கமலத்வந்த்வத்தைத்தர்சித்தவண்ணமாகவேயிருக்கு மெனக்கு ஹே அச்யுத! எங்கும், எப்பொழுதும், எல்லா அவஸ்தைகளிலும், எனக்கு தேவரீரிடத்திலேயே அசஞ்சலமாகியதோர் ஏகாக்ர பக்தி விசேஷமானது தங்கியிருக்கும்படித் தாங்கள் அருள்புரிதல் வேண்டும்." என்று ப்ரார்த்தித்த மஹா முனிவரை நோக்கி ஸ்ரீதேவனும், ஸ்ரீ வ்ருஷபாத்ரிநிவாஸியும், தயாபிராமனும், அனந்தகுணகணங்களால் நிறையப்பெற்றவரும், ஆதிபூத காரணருமான ஸ்ரீமந்நாராயண மூர்த்தியானவர் "தர்மார்த்த காமமோக்ஷ" மெனும் புருஷார்த்த ஸித்திகள் யாவையும் ஸ்ரீ மண்டுக முனிவருக்கு அனுக்ரஹித்துத் திருவாய்மலர்ந்தருளியதாவது. 25 to 30

ஸ்ரீ பகவான் சொல்கிறார்:—

"ஹே மஹாமுனே! இவ்வுத்தமமான வாராஹக்ஷேத்ரமானது ஸ்ரீ வ்ருஷபகிரியைக் காட்டிலும் எனக்கு அதிகம் ப்ரியமுள்ளது. அதனால் நீர் மந்த்ரஸித்தியை யடைந்தீர். நானுமிங்கேயே வஸித்து வருகின்றேன். நீரும் ப்ரளயகாலம்வரை தபோதனர்களான உமது சிஷ்யர்களுடன் கூடவே இங்குயிருந்து பிறகு உமதிஷ்டப்படி நமது ஸாயுஜ்யபதவியை யடைவீராக," என்று ஸ்ரீ மண்டுக மஹாமுனிவரைப்பார்த்துத் திருவாய்மலர்ந்தருளின பிறகு ஸ்ரீ பகவானான ஸ்ரீ சௌரியானவர் அங்கேயே அந்தர்தானமடைந்தார். அது முதல் அம்முனிச்ரேஷ்டரான ஸுதபஸ்ஸானவர் "மண்டுகமுனிவர்" என்று பெயர்பெற்று ப்ரஸித்தியோடுங்கூட பற்பல முனிவர்களுடனுங்கூட அங்கேயே வஸித்து வருகின்றார். 31 to 34

இவ்விதமாக அளவிடமுடியாத தேஜஸ்ஸோடு கூடிய வ்யாஸ மஹரிஷியின் பொருட்டு ஸ்ரீ நாரதரால் சொல்லப்பட்டதாயுள்ள இவ்வாராஹ க்ஷேத்ர மாஹாத்ம்யமானது ஆவலோடு கேட்கும் நைமிஷாரண்யவாஸிகளான உங்களுக்கு ஸ்ரீ ஸூதபுராணிகரான நம்மால் மிகச்சுருக்கமாய் எடுத்துரைக்கப்பட்டது. இப்புராணத்தை, பிறப்பு வளர்ப்பு இறப்பு முதலிய அவஸ்தைகள் தங்கிய மானிடர்கள் ச்ரத்தாபக்தி வாய்ந்தவர்களாய்க் கேட்பார்களேயானால் அத்தகைய மானிடர்களே, இம்மாஹாத்ம்யத்தின் மூலம் நிறைவுற்றதும், குறைவற்றதும் எவ்வகைகளிலும் அபிமதமும் வாய்ந்ததோர் பலனை யடைவார்கள். மானிடர்கட்கு உகந்த ஸித்தியாக விளங்குவதும், மற்றவர்களுக்கு எளிதில் கிடைப்பதரிதானதும், ஸ்ரீ மண்டூக மஹரிஷியினால் இங்கு சீக்ரத்தில் அடையப்பட்டதுமாகிய ஸம்ஸித்தியின் வரலாற்றை எம்மனிதன் ச்ராத்தகாலங்களில் ப்ரயத்னத்துடன் பித்ருக்களைக் கேட்கும்படிச் செய்விப்பானேயாகில் அம்மனிதன் மேலான ஆனந்தத்தை யடைகின்றான், என்று ஸ்ரீ சௌனகாதி மஹாமுனிவர்கட்கு ஸ்ரீ ஸூதபுராணிகர் திருவாய் மலர்ந்தருளினர்.

இவ்விதம் ஸ்ரீ வாராஹசேஷமான ஸ்ரீ வாராஹ புராணத்தில்
"ஸ்ரீ விருஷபாத்ரி மாஹாத்ம்யமெனும்
இதிஹாஸ ஸ்தலபுராணத்தில்"
"ஸ்ரீ மண்டூக மஹாமுனிவருக்கு ஸாயுஜ்யத்தைத்
தந்தருளிச் செய்ததெனும்
பன்னிரண்டாம் அத்யாயம் முற்றுப்பெற்றது.
ஸ்ரீ வ்ருஷபாத்ரி க்ஷேத்ர மாஹாத்ம்யம் முற்றுப்பெற்றது,

ஓம் தத் ஸத்.

ஸ்ரீமத் ஸுந்தரராஜார்ப்பணமஸ்து.

சுபம்.





42. "Trivikrama Avatara"

(To face Part II p. [illegible] and Part III p. [illegible])

"त्रिविक्रम पदाक्रिए मणिजपुर पुरिनम्"



43. "South Part Gate" (To face Part III Page [illegible])

44. Sri Sundararaja in "Kallar Thirukkolam"

"வஞ்சக்கள்வன் மாமாயன்"—Nammalwar.

"நீ ஒருவர்க்கும் மெய்யனல்லை"—Periyalwar.

(*To face* Part III—pp. 103 and 119).

ஸ்ரீ:



ஸ்ரீஸுந்தராராஜ பரப்ரஹ்மணே நம:

பொதுத்தனியன்கள்

அழகிய மணவாளனருளிச்செய்தது.

ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்-
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முனிம்.

கூரத்தாழ்வானருளிச்செய்தது.

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்-
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.

யோ நித்யமச்யுத பதாம்புஜயுக்மருக்ம-
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே-
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே.

ஆளவந்தாருளிச்செய்தது.

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்-
ஆத்யஸ்யந:குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்தசங்க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா.

பட்டரருளிச்செய்தது.

பூதம்ஸரஸ்ய மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலஶேகர யோகிவாஹாந்-
பக்தாங்க்ரிரேணு பரகாலயதீந்த்ரமிச்ரராந்
ஸ்ரீமத்பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.

நாதமுனிகளருளிச்செய்தது.

குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதிபரிகல்ப்தம் ஶுல்கமாதாதுகாமஹ-
ஸ்வஶுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம்தம் விஷ்ணுசித்தம்நமாமி.

பாண்டிய பட்டரருளிச்செய்தது.

நேரிசை வெண்பா

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தானென்றுரைத்தோம் கீழ்மையினில்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

தனியன்கள் முற்றும்.

ஸ்ரீ:

ஸ்ரீமத் ஸுந்தர குரவே நம:

ஆழ்வார் ப்ரபந்தங்கள்.

பெரியாழ்வார் அருளிச்செய்த திருமொழி.

(8-ஆம் பாசுரம், 1-ஆம் பத்து, 5-ஆம் பெ-தி.)

1. *உன்னையும் ஒக்கலையில் கொண்டுதமில் மருவி
உன்னோடு தங்கள் கருத்தாயினசெய்துவரும்
கன்னியரும் மகிழக்கண்டவர் கண்குளிரக்
கற்றவர்தெற்றிவாப் பெற்ற எனக்கு அருளி
மன்னு குறுங்குடியாய்! வெள்ளறையாய்! மதிள்சூழ்
சோலைமலைக்காரசே! கண்ணபுரத்தமுதே!
என்னவலம் களைவாய்! ஆடுகசெங்கீரை
ஏழுலகும்முடையாய்! ஆடுக ஆடுகவே.

(5-ம் பாசுரம், 3-ம் பத்து, 4-ம் பெ-தி.)

2. சுற்றிநின்று ஆயர்தழைகளிடச்
சுருள்பங்கி நேத்திரத்தால் அணிந்து
பற்றி நின்று ஆயர்கடைத்தலையே
பாடவும் ஆடக்கண்டேன் அன்றிப்பின்
மற்றொருவர்க்கு என்னைப்பேசலொட்டேன்
மாலிருஞ்சோலை எம்மாயற்கல்லால்
கொற்றவனுக்கு இவளாமென்றெண்ணிக்
கொடுமின்கள் கொடீராகில் கோழம்பமே.

[திருமாலிருஞ் சோலைமலைச் சிறப்பு.]

(4-ஆம் பத்து, 2-ஆம் திருமொழி)

அடாணா—ராகம். கலிநிலைத்துறை. ஜம்பை—தாளம்.

3. *அலம்பாவெருட்டாக்கொன்று திரியும் அரக்கரை
குலம்பாழ்படுத்துக் குலவிளக்காய்நின்றகோன் மலை
சிலம் பார்க்கவந்து தெய்வமகளிர்களாடும் சீர்
சிலம்பாறுபாயும் தென் திருமாலிருஞ்சோலையே.

4. வல்லானன்தோளும் வாளரக்கன்முடியும் தங்கை
பொல்லாதமூக்கும் போக்குவித்தான்பொருந்தும்மலை
எல்லாவிடத்திலும் எங்கும் பரந்து பல்லாண்டொலி
செல்லாநிற்கும்சீர்த் தென்திருமாலிருஞ்சோலையே.

5. தக்கார்மிக்கார்களைச் சஞ்சலம்செய்யும் சலவரை
தெக்கா நெறியே போக்குவிக்கும் செல்வன்பொன்மலை
எக்காலமும்சென்று சேவித்திருக்கும் அடியரை
அக்கானெறியைமாற்றும் தண்மாலிருஞ்சோலையே.

6. ஆனாயர்கூடி அமைத்த விழவை அமரர்தம்
கோனார்கொழியக் கோவர்த்தனத்துச்செய்தான்மலை
வானாட்டில்நின்று மாமலர்க்கற்பகத்தொத்திழி
தேனாறுபாயும் தென்திருமாலிருஞ்சோலையே.

7. ஒருவாரணம்பணிகொண்டவன் பொய்கையில்கஞ்சன்தன்
ஒருவாரணம் உயிருண்டவன் சென்றுறையும்மலை
கருவாரணம் தன்பிடி துறந்தோடகடல்வண்ணன்
திருவாணைகூறத்திரியும் தண்திருமாலிருஞ்சோலையே.

8. ஏவிற்றுச்செய்வான் என்றெதிர்ந்து வந்தமல்லரை
சாவத்தகர்த்த சாந்தணி தோள் சதுரன்மலை
ஆவத்தனமென்று அமரர்களும் நன்முனிவரும்
சேவித்திருக்கும் தென்திருமாலிருஞ்சோலையே.

9. மன்னர்மறுக மைத்துனன்மார்க்கு ஒருதேரின்மேல்
முன்னங்குநின்றுமோழை யெழுவித்தவன்மலை
கொன்னவில்கூர்வேற்கோன் நெடுமாறன்தென்கூடற்கோன்
தென்னன்கொண்டாடும் தென்திருமாலிருஞ்சோலையே.

10. குறுகாதமன்னரைக் கூடுகலக்கி வெங்கானிடைச்
சிறுகால் நெறியே போக்குவிக்கும்செல்வன்பொன்மலை
அறுகால் வரிவண்டுகள் ஆயிரநாமம்சொல்லி
சிறுகாலைப்பாடும்தென்திருமாலிருஞ்சோலையே.

11. சிந்தப்புடைத்துச் செங்குருதிகொண்டு பூதங்கள்
அந்திப்பலிகொடுத்து ஆவத்தனம் செய் அப்பன்மலை

இந்திரகோபங்கள் எம்பெருமான்கனிவாயொப்பான்
சிந்தும் புறவில் தென்திருமாலிருஞ்சோலையே.

12. எட்டுத்திசையும் எண்ணிறந்த பெருந்தேவிமார்
விட்டுவிளங்க வீற்றிருந்த விமலன்மலை
பட்டிப்பிடிகள்பகடுரிஞ்சிச் சென்றுமாலைவாய்த்
தெட்டித்திளைக்கும் தென்திருமாலிருஞ்சோலையே.

13. *மருதப்பொழிலணி மாலிருஞ்சோலைமலைதன்னை
கருதியுறைகின்ற கார்க்கடல் வண்ணனம்மான்தன்னை
விரதம்கொண்டேத்தும் வில்லிபுத்தூர் விட்டுசித்தன்சொல்
கருதியுரைப்பவர் கண்ணன் கழலிணைகாண்பர்களே.

[திருமாலிருஞ்சோலைமலையின் சிறப்பு]

(4-ஆம் பத்து, 3-ஆம் திருமொழி)

ஸஹாநா—ராகம். கலிநிலைத்துறை. ரூபக—தாளம்.

14. *உருப்பிணி நங்கை தன்னை மீட்பான் தொடர்ந்தோடிச்சென்ற
உருப்பனையோட்டிக்கொண்டிட்டு உறைத்திட்ட உறைப்பன்மலை
பொருப்பிடைக்கொன்றை நின்று முறியாழியும் காசும்கொண்டு
விருப்பொடு பொன்வழங்கும் வியன்மாலிருஞ்சோலையதே.

15. கஞ்சனும்காளியனும் களிறும் மருதும்எருதும்
வஞ்சனையில்மடியவளர்ந்த மணிவண்ணன்மலை
நஞ்சுமிழ் நாகமெழுந்தணவி நளிர்மாமதியை
செஞ்சுடர்நாவளைக்கும் திருமாலிருஞ்சோலையதே.

16. மன்னுநரகன்தன்னைச்சூழ்போகி வளைத்தெறிந்து
கன்னி மகளிர்தம்மைக் கவர்ந்த கடல்வண்ணன்மலை
புன்னைசெருந்தியொடு புனவேங்கையும் கோங்கும்நின்று
பொன்னரிமாலைகள்சூழ் பொழில்மாலிருஞ்சோலையதே.

17. மாவலி தன்னுடைய மகன்வாணன் மகளிருந்த
காவலைக்கட்டழித்த தனிக்காளை கருதும்மலை
கோவலர் கோவிந்தனைக் குறமாதர்கள் பண்குறிஞ்சிப்
பாவொலி பாடி நடம்பயில் மாலிருஞ்சோலையதே.

18. "பலபலநாழம் சொல்லிப் பழித்தசிசுபாலன் தன்னை
அலவலைமை தவிர்த்த அழகன் அலங்காரன்மலை
குலமலை கோலமலை குளிர்மாமலை கொற்றமலை
நிலமலை நீண்டமலை திருமாலிருஞ் சோலையதே.

19. பாண்டவர் தம்முடைய பாஞ்சாலிமறுக்கமெல்லாம்
ஆண்டுஅங்குநூற்றுவர்தம் பெண்டிர்மேல்வைத்த அப்பன்மலை
பாண்தகு வண்டினங்கள் பண்கள்பாடி மதுப்பருக
தோண்டலுடையமலை தொல்லைமாலிருஞ்சோலையதே.

20. கனங்குழையாள் பொருட்டாக்கனைபாரித்து அரக்கர்தங்கள்
†இனம்கழுவேற்றுவித்த எழில்தோள் எம்மிராமன்மலை
கனம்கொழிதெள்ளருவிவந்து சூழ்ந்து அகல்ஞாலமெல்லாம்
இனம் குழுவாடும்மலைஎழில் மாலிருஞ்சோலையதே.

21. எரிசிதறும் சரத்தால் இலங்கையினை தன்னுடைய
வரிசிலைவாயில் பெய்து வாய்க்கோட்டம் தவிர்த்துகந்த
அரையனமரும்மலை அமரரொடு கோனும்சென்று
திரிசுடர் சூழும்மலை திருமாலிருஞ்சோலையதே.

22. கோட்டுமண்கொண்டிடந்து குடங்கையில்மண்கொண்டளந்து
மீட்டுமதுண்டுமிழ்ந்து விளையாடுவிமலன்மலை
ஈட்டிய பல்பொருள்கள் எம்பிரானுக்கு அடியுறையென்று
ஓட்டரும்தண் சிலம்பாறுடை மாலிருஞ்சோலையதே.

23. *ஆயிரம்தோள்பரப்பி முடியாயிரம் மின்னிலக
ஆயிரம்பைந்தலைய அனந்தசயனன்ஆளும்மலை
ஆயிரமாறுகளும் சுனைகள்பலவாயிரமும்
ஆயிரம்பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே.

24. *மாலிருஞ்சோலையென்னும் மலையையுடையமலையை
நாலிருமூர்த்திதன்னை நால்வேதக்கடலமுதை
மேலிருங்கற்பகத்தை வேதாந்தவிழுப்பொருளின்
மேலிருந்தவிளக்கை விட்டுசித்தன் ‡விரித்தனவே.

---

† "இனம் கழுகேற்றுவித்த" என்றும் பாடம்.
‡ "விரித்தனனே" என்று சிலர் கூறுவர்.

[திருமாலிருஞ்சோலை எம்பெருமானைப்போகவோட்டேனென்றுதடுத்தல்]

(5-ஆம் பத்து, 3-ஆம் திருமொழி)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

[ஸஹானா ராகம் — அடதாளம்]

25 *துக்கச்சுழலையைச் சூழ்ந்துகிடந்த வலையை அறப்பறித்து
புக்கினில்புக்குன்னைக்கண்டுகொண்டேனினிப்போகவிடுவதுண்டோ!
மக்களறுவரைக்கல்லிடைமோத இழந்தவள் தன்வயிற்றில்
சிக்கெனவந்து பிறந்துநின்றாய்! திருமாலிருஞ்சோலையெந்தாய்!

26 வளைத்துவைத்தேனினிப்போகலொட்டேனுன்தனிந்திரஞாலங்களால்
ஒளித்திடில் நின்திருவாணைகண்டாய் நீ ஒருவர்க்கும் மெய்யனல்லை
அளித்தெங்கும் நாடும்நகரமும் தம்முடைத்தீவினைத்தீர்க்கலுற்று
தெளித்துவலஞ்செய்யும்தீர்த்தமுடைத் திருமாலிருஞ்சோலையெந்தாய்!

27 *உனக்குப் பணிசெய்திருக்கும் தவமுடையேன், இனிப்போய்ஒருவன்
தனக்குப்பணிந்து கடைத்தலை நிற்கைநின்சாயை யழிவுகண்டாய்
புனத்தினைகிள்ளிப் புதுவவிகாட்டி உன்பொன்னடி வாழ்கவென்று
இனக்குறவர் புதியதுண்ணும் எழில்மாலிருஞ்சோலையெந்தாய்!

28 காதம்பலவும் திரிந்துழன்றேற்குஅங்கோர் நிழலில்லைநீருமில்லை-உன்
பாதநிழலல்லால் மற்றோருயிர்ப்பிடம் நான்எங்கும்காண்கின்றிலேன்
தூதுசென்றாய்!குருபாண்டவர்க்காயங்கோர்பொய்ச்சுற்றம்பேசிச்சென்று
பேதஞ்செய்துஎங்கும்பிணம்படுத்தாய்! திருமாலிருஞ்சோலையெந்தாய்!

29 காலுமெழாகண்ண நீரும்நில்லாஉடல் சோர்ந்துநடுங்கிகுரல்
மேலுமெழாமயிர்க்கூச்சுமறு எனத்தோள்களும் வீழ்வொழியா
மாலுகளாநிற்கும் என்மனனே! உன்னைவாழத்தலைப்பெய்திட்டேன்
சேலுகளாநிற்கும் நீள்சுனைசூழ்திருமாலிருஞ்சோலையெந்தாய்!

30 எருத்துக்கொடியுடையானும் பிரமனும் இந்திரனும் மற்றும்
ஒருத்தரும் இப்பிறவியென்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை
மருத்துவனாய்நின்ற மாமணிவண்ணா! மறுபிறவிதவிரத்
திருத்தி உன்கோயிற் கடைப்புகப்பெய் திருமாலிஞ்சோலையெந்தாய்!

31 அக்கரையென்னு மனத்தக்கடலுள்ழுந்தி உன்பேரருளால்
இக்கரையேறி யிளைத்திருந்தேனை யஞ்சேலென்றுகைகவியாய்

சக்காரமும் தடக்கைகளும் கண்களும் பீதகவாடையொடும்
செக்கர் நிறத்துச்சிவப்புடையாய் ! திருமாலிருஞ்சோலையெந்தாய் !

32 எத்தனைகாலமும் எத்தனையூழியும் இன்றொடுநாளையென்றே [டேன்
இத்தனைகாலமும் போய்க்கிறிப்பட்டேன் இனிஉன்னைப் போகலொட்
மைத்துனன்மார்களை வாழ்வித்துமாற்றலர் நூற்றுவரைக் கெடுத்தாய் !
சித்தம் நின்பாலதறிதியன்றே திருமாலிருஞ்சோலையெந்தாய் !

33 அன்றுவயிற்றில் கிடந்திருந்தே அடிமைசெய்யலுற்றிருப்பன்
இன்றுவந்துஇங்குஉன்னைக்கண்டுகொண்டேன் இனிப்போகவிடுவதுண்
சென்றங்குவாணனை ஆயிரந்தோளும் திருச்சக்கரமதனால் [டோ!
தென்றித்திசைதிசைவீழச்செற்றாய் ! திருமாலிருஞ்சோலையெந்தாய் !

34 * சென்றுலகம் குடைந்தாடும் சுனைத்திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான் அடிமேல் அடிமைத்திறம் நேர்படவிண்ணப்பஞ்செய்
பொன்திகழ்மாடம்பொலிந்துதோன்றும் புதுவைக்கோன்விட்டுசித்தன்
ஒன்றினோடொன்பதும் பாடவல்லார் உலகமளந்தான் தமரே.

ஸ்ரீ:

ஸ்ரீபரமஸ்வாமி குரவே நம:

நாச்சியார் அருளிச்செய்த திருமொழி.

[திருமாலிருஞ்சோலை யெம்பெருமானை வழிபடுதல்]

(9-ஆம் திருமொழி)

கல்யாணி—ராகம். கலிநிலைத்துறை. ரூபக—தாளம்.

35 *சிந்துரச்செம்பொடிப்போல் திருமாலிருஞ்சோலையெங்கும்
இந்திரகோபங்களே எழுந்தெம்பரந்திட்டன வால்
மந்தரம்நாட்டி அன்று மதுரக்கொழுஞ்சாறுகொண்ட
ஸுந்தரத்தோளுடையான் சுழலையில்நின்று உய்துங்கொலோ !

36 போர்க்களிறுபொரும் மாலிருஞ்சோலையம்பூம்புறவில்
தார்க்கொடிமுல்லைகளும் தவளநகைகாட்டுகின்ற

கார்க்கொள் *பிடாக்கள்நின்று கழறிச்சிரிக்கத்தரியேன்
ஆர்க்கு இடுகோ! தோழீ! அவன்தார்செய்த பூசலையே!

37 கருவிளையொண்மலர்காள்! காயாமலர்காள்! திருமால்
உருவொளிகாட்டுகின்றீர் எனக்கு உய்வழக்கொன்று உரையீர்
திருவிளையாடுதிண்தோள் திருமாலிருஞ்சோலைநம்பி
வரிவளையில்புகுந்துவந்தி பற்றும் வழக்குளதே.

38 பைம்பொழில்வாழ்குயில்காள்! மயில்காள்! ஒண்கருவிளைகாள்!
வம்பக்களங்கனிகாள்! வண்ணப்பூவை நறுமலர்காள்!
ஐம்பெரும்பாதகர்காள்! அணிமாலிருஞ்சோலைநின்ற
எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கு என்செய்வதே!

39 தங்கமலர்ப்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற
செங்கண் கருமுகிலின் திருவுருப்போல்மலர்மேல்
தொங்கியவண்டினங்காள்! தொகுபூஞ்சுனைகாள்! சுனையில்
தங்கு செந்தாமரைகாள்! எனக்கு ஓர் சரண்சாற்றுமினே.

40 நாறுநறும்பொழில் மாலிருஞ்சோலைநம்பிக்கு நான்
நூறுதடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவிவைத்தேன்
நூறுதடாநிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்
ஏறுதிருவுடையான் இன்றுவந்துஇவைகொள்ளுங்கொலோ!

41 இன்றுவந்து இத்தனையும் அமுது செய்திடப்பெறில் நான்
ஒன்றுநூறுயிரமாகக் கொடுத்துப்பின்னும் ஆளும்செய்வன்
தென்றல் மணங்கமழும் திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான் அடியேன் மனத்தேவந்து நேர்படிலே.

42 காலையெழுந்திருந்து கரிய குருவிக்கணங்கள்
மாலின்வரவுசொல்லி மருள்பாடுதல் மெய்ம்மைகொலோ!
சோலைமலைப்பெருமான் துவராபதி யெம்பெருமான்
ஆலினிலைப்பெருமான் அவன்வார்த்தை யுரைக்கின்றதே.

43 கோங்கலரும்பொழில் மாலிருஞ்சோலையில்கொன்றைகள்மேல்
தூங்குபொன்மாலைகளோடு உடனாய்நின்று தூங்குகின்றேன்

---

* "படாக்கள்" என்று வழங்குவர்.

பூங்கொள் திருமுகத்து மடுத்துறிய சங்கொலியும்
சார்ங்கவில்நாணொலியும் தலைப்பெய்வதுஎஞ்ஞான்றுகொலோ.

44 *சந்தொடு காரகிலும் சுமந்து தடங்கள்பொருது
வந்திழியும் சிலம்பாறுடை மாலிருஞ்சோலைநின்ற
சுந்தரனை சுரும்பார்குழல் கோதை தொகுத்துரைத்த
செந்தமிழ் பத்தும்வல்லார் திருமாலடி சேர்வர்களே.

(10-ஆம் திருமொழி, 8-வது பாசுரம்)

45 மழையே! மழையே! மண்புறம்பூசி உள்ளாய்நின்று
மெழுகூற்றினாற்போல் ஊற்றுநல் வேங்கடத்துள்நின்ற
அழகப் பிரானார்தம்மை என்னெஞ்சத்தகப்படத்
தழுவிநின்று என்னைத்ததைத்துக்கொண்டு ஊற்றவும்வல்லையே!

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரியதிருமொழி.

(7-வது பாசுரம், 2-ஆம் பத்து, 7-ஆம் திருமொழி)

46 உளங்கனிந்திருக்கும் உன்னையே பிதற்றும்
உனக்கன்றி எனக்கு அன்பொன்றிலளால்
வளங்கனி பொழில்சூழ் மாலிருஞ்சோலை
மாயனே! என்றுவாய்வெருவும்
களங்கனி முறுவல் காரிகை பெரிது
கவலையோடு அவலம் சேர்ந்திருந்த
இளங்கனி யிவளுக்கு என் நினைந்திருந்தாய்!
இடவெந்தை எந்தை பிரானே!

(6-வது பாசுரம், 7-ஆம் பத்து, 3-ஆம் திருமொழி)

47 எட்டனைப்பொழுதாகிலும் என்றும்
என்மனத்தகலா திருக்கும்புகழ்
தட்டலர்த்த பொன்னேயலர் கோங்கின்
தாழ்பொழில் திருமாலிருஞ்சோலையங்
கட்டியை கரும்பீன்ற இன்சாற்றைக்
காதலால்மறைநான்கும் முன்னோதிய
பட்டனை பரவைத்துயிலேற்றை என்
பண்பனையன்றிப் பாடல் செய்யேனே.

(7-வது பாசுரம், 7-ஆம் பத்து, 9-ஆம் திருமொழி)

48 சேயோங்கு தண் திருமாலிருஞ்சோலைமலைஉறையும்
மாயா ! எனக்குரையாய் இதுமறைநான்கினுளாயோ!
தீயோம்புகை மறையோர் சிறுபுலியூர்ச்சலசயனத்
தாயோ! உனதடியார் மனத்தாயோ! அறியேனே,

(8-வது பாசுரம், 9-ஆம் பத்து, 2-ஆம் திருமொழி)

49 மஞ்சுயர் மாமதி தீண்ட நீண்ட
மாலிருஞ்சோலை மணுளர் வந்து என்
நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்கார்
நீர்மலையார் கொல்! நினைக்கமாட்டேன்
மஞ்சுயர்பொன் மலைமேலெழுந்த
மாமுகில் போன்றுளர் வந்துகாணீர்
அஞ்சிறைப்புள்ளுமொன்று ஏறிவந்தார்
அச்சோஒருவாழகியவா!

திருமாலிருஞ்சோலை (1)

9-ஆம் பத்து, 8-ஆம் திருமொழி.

சுருட்டி ராகம்] எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். [அட தாளம்.

50 *முந்துற உரைக்கேன்விரைக்குழல் மடவார்
கலவியை விடுதடுமாறல்
அந்தரமேழும் அலைகடலேழும்
ஆயனம்மடிகள் தம்கோயில்
சந்தொடுமணியும் அணிமயில்தழையும்
தழுவிவந்து அருவிகள் நிரந்து
வந்திழிசாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும் மடநெஞ்சே!

51 இண்டையும் புனலும் கொண்டிடையின்றி
எழுமிலே தொழுதுமென்று இமையோர்
அண்டரும் பரவ அரவணைத்துயின்ற
சுடர்முடிக்கடவுள் தம் கோயில்

விண்டலர் தூளிவேய்வளர் புறவில்
விரைமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன்
வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே.

52 பிணிவளராக்கை நீங்க நின்றேத்தப்
பெருநில மருளின் முன்னருளி
அணிவளர் குறளாய் அகலிட முழுதும்
அளந்த எம் அடிகள்தம் கோயில்
கணிவளர்வேங்கை நெடு நில மதனில்
குறவர்தம் கவண்டைத்துரந்த
மணிவளர் சாரல் மாலிருஞ் சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

53 சூர்மையிலாய பேய்முலைசுவைத்துச்
சுடுசரமடுசிலைத்துரந்து
நீர்மையிலாத தாடகைமாள
நினைந்தவர் மனம் கொண்டகோயில்
கார்மலி வேங்கை கோங்கலர் புறவில்
கடிமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன்
வார்புனல் சூழ்தண் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

54 வணங்கலி லரக்கன் செருக்களத்தவிய
மணிமுடி ஒருபதும் புரள
அணங்கெழுந்தவன் தன் கவந்தம் நின்றாட
அமர் செய்த அடிகள்தம் கோயில்
பிணங்கலில் நெடுவேய் நுதிமுகம் கிழிப்பப்
பிரசம் வந்திழிதர பெருந்தேன்
மணங்கமழ் சாரல் மாலிருஞ் சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

55 விடங்கலந்தமர்ந்த அரவணைத்துயின்று
விளங்கனிக்கு இளங்கன்று விசிறி
குடங்கலந்தாடிக்குரவைமுன்கோத்த
கூத்தனம் அடிகள்தம் கோயில்

தடங்கடல் முகந்து விசும்பிடைப் பிளிறத்
தடவரைக் களிறென்று முனிந்து
மடங்கல் நின்றதிரும் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

56 தேனுகனு விபோயுக அங்கு ஓர்
செழுந்திரள் பனங்கனியுதிர
தானுகந்தெறிந்த தடங்கடல் வண்ணர்
எண்ணிமுன் இடங்கொண்ட கோயில்
வானகச்சோலை மரகதச்சாயல்
மாமணிக்கல்லதர் நிறைந்து
மானுகர் சாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

57 புதமிகு விசும்பில் புணரிசென்றணவப்
பொருகடல் அரவணைத் துயின்று
பதமிகு பரியின் மிகுசினம் தவிர்த்த
பனிமுகில் வண்ணர்தம் கோயில்
கதமிகு சினத்தகடதடக்களிற்றின்
கவுள்வழிக்களிவண்டு பருக
மதமிகுசாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

58 புந்தியில் சமணர் புத்தரென்றிவர்கள்
ஒத்தனபேசவும் உகந்திட்டு
எந்தை பெம்மானார் இமையவர் தலைவர்
எண்ணிமுன் இடங்கொண்ட கோயில்
சந்தனப்பொழிலின் தாழ்சினை நீழல்
தாழ்வரை மகளிர்கள் நாளும்
மந்திரத்திறைஞ்சும் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

59 *வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை
மாமணி வண்ணரை வணங்கும்
தொண்டரைப் பரவும் சுடரொளி நெடுவேல்
சூழ்வயலாலி நன்னாடன்

கண்டல் நல்வேலி மங்கையர் தலைவன்
கலியன்வாயொலி செய்தபனுவல்
கொண்டு இவைபாடும் தவமுடையார்கள்
ஆள்வர் இக்குரை கடலுலகே.

திருமாலிருஞ்சோலை (2)

[பிரிவாற்றாது தலைவனை நாடிச்சென்ற தலைவியின் நிலையைக்குறித்துத் தாய் இரங்கிக்கூறிய பாசுரம்.]

ராகம்—கமாஸ்] கலிநிலைத்துறை. [தாளம்—ரூபகம்

60 * மூவரில் முன்முதல்வன் முழங்கார் கடலுள்கிடந்து
பூவலருந்தி தன்னுள் புவனம் படைத்துண்டுமிழ்ந்த
தேவர்கள் நாயகனைத் திருமாலிருஞ் சோலைநின்ற
கோவலர் கோவிந்தனைக் கொடியேரிடை கூடுங்கொலோ!

61 * புனைவளர் பூம்பொழிலார் பொன்னிசூழரங்க நகருள்
முனைவனை மூவுலகும் படைத்த முதல் மூர்த்திதன்னை
சினைவளர் பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலை நின்றான்
கனைகழல்காணுங்கொலோ ! கயற்கண்ணி எம்காரிகையே.

62 உண்டுஉலகேழினையும் ஒருபாலகன் ஆலிலைமேல்
கண்துயில் கொண்டுகந்த கருமாணிக்க மாமலையை
திண்திறல் மாகரிசேர் திருமாலிருஞ்சோலை நின்ற
அண்டர்தம் கோவினை இன்று அணுகுங்கொல்! என்னாயிழையே.

63 சிங்கமதாய் அவுணன் திறலாகம் முன்கீண்டுகந்த
பங்கயமாமலர்க்கண் பரனைஎம் பரஞ்சுடரை
திங்கள்நன்மாமுகில்சேர் திருமாலிருஞ் சோலைநின்ற
நங்கள்பிரானை இன்று நணுகுங்கொல் ! என்நன்னுதலே.

64 தானவன் வேள்வி தன்னில் தனியே குறளாய் நிமிர்ந்து
வானமும் மண்ணகமும் அளந்த திரிவிக்கிரமன்
தேனமர் பூம்பொழில்சூழ் திருமாலிருஞ் சோலைநின்ற
வானவர்கோனை இன்றுவணங்கித் தொழவல்லள்கொலோ!

65 *நேசமிலாதவர்க்கும் நினையாதவர்க்கும் அரியான்
வாசமலர்ப் பொழில்சூழ் வடமாமதுரைப் பிறந்தான்
தேசமெல்லாம் வணங்கும் திருமாலிருஞ்சோலை நின்ற
கேசவநம்பிதன்னைக் கெண்டையொண் கண்ணிகாணுங்கொலோ.

66 புள்ளினைவாய் பிளந்து பொருமாகரிகொம்பொசித்து
கள்ளச்சகடுதைத்த கருமாணிக்க மாமலையை
தெள்ளருவி கொழிக்கும் திருமாலிருஞ்சோலை நின்ற
வள்ளலை வாணுதலாள் வணங்கித்தொழ வல்லள்கொலோ!

67 *பார்த்தனுக்கு அன்றருளிப் பாரதத்து ஒருதேர்முன்நின்று
காத்தவன்தன்னை விண்ணோர் கருமாணிக்க மாமலையை
தீர்த்தனைப்பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலை நின்ற
மூர்த்தியைக் கைதொழவும் முடியுங்கொல்! என்மொய்குழற்கே.

68 *வலம்புரியாழியனை வரையார் திரள்தோளன்தன்னை
புலம்புரி நூலவனைப் பொழில் வேங்கடவேதியனை
சிலம்பியலாறுடைய திருமாலிருஞ்சோலை நின்ற
நலந்திகழ் நாரணனை நணுகுங்கொல்! என் நன்னுதலே.

69 *தேடற்கரியவனைத் திருமாலிருஞ்சோலை நின்ற
ஆடற்பறவையனை அணியாயிழை காணுமென்று
மாடக்கொடி மதிள்சூழ் மங்கையார் கலிகன்றிசொன்ன
பாடல் பனுவல் பத்தும் பயில்வார்க்கு இல்லை பாவங்களே.

(1-ஆம் பெரியதிருமொழி, 10-ஆம் பத்து, 8-வது பாசுரம்)

70 பத்தராவியைப்பால் மதியை அணித்
தொத்தைமாலிருஞ்சோலைத் தொழுதுபோய்
முத்தினைமணியை மணிமாணிக்க
வித்தினைசென்று விண்ணகர்க்காண்டுமே.

(11-ஆம் பத்து, 2-ஆம் திருமொழி, 8-வது பாசுரம்).

71 மஞ்சுறு மாலிருஞ்சோலை நின்றமணாளனார்
நெஞ்சம் நிறைகொண்டு போயினார் நினைகின்றிலர்
வெஞ்சுடர்போய் விடியாமல் எவ்விடம்புக்கதோ!
நஞ்சு உடலம் துயின்றால் நமக்கு இனி நல்லதே.

(11-ஆம் பத்து, 7-ஆம் திருமொழி, 9-வது பாசுரம்)

72 தேனொடு வண்டாலும் திருமாலிருஞ்சோலை
தானிடமாக்கொண்டான் தடமலர்க்கண்ணிக்காய்
ஆன்விடையேழன்றடர்த்தாற்கு ஆளாஞரல்லாதார்
மானிட வாலல்ல ரென்று என்மனத்தே வைத்தேனே.

(திருக்குறுந்தாண்டகம் 3-வது பாசுரம்)

73 பாயிரும் பரவை தன்னுள் பருவரை திரித்துவானோர்க்
காயிருந்து அமுதம்கொண்ட அப்பனை எம்பிரானை
வேயிருஞ்சோலை சூழ்ந்து விரிகதிரிரியநின்ற
மாயிருஞ்சோலை மேய மைந்தனை வணங்கினேனே.

(இயற்பா, சிறியதிருமடல் 74-வது பாசுரம்)

74 சீராரும் மாலிருஞ்சோலை திருமோகூர்—
பாரோர் புகழும்வதரி வடமதுரை

(இயற்பா பெரியதிருமடல் 125-வது பாசுரம்)

மன்னனை மாலிருஞ்சோலைமணாளனை
கொல்நவிலும் ஆழிப்படையானை —கோட்டியூர்

பூதத்தாழ்வார் அருளிச்செய்த இயற்பா.

இரண்டாந் திருவந்தாதி.

(இரண்டாந்திருவந்தாதி, இயற்பா 46-வது பாசுரம்)

75 பயின்றது அரங்கம் திருக்கோட்டி பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே பன்னாள் பயின்றது
அணிதிகழும்சோலை அணிநீர் மலையே
மணிதிகழும் வண்தடக்கைமால்

(48-வது பாசுரம்)

76 உணர்ந்தாய் மறைநான்கும் ஓதினாய் நீதி
மணந்தாய் மலர்மகள் தோள்மாலே! மணந்தாய்போய்
வேயிருஞ்சாரல் வியலிருஞாலம் சூழ்
மாயிருஞ்சோலைமலை.

(54-வது பாசுரம்)

77 வெற்பென்றிருஞ்சோலை வேங்கடமென்றிவ்விரண்டும்
நிற்பென்று நீமதிக்கும் நீர்மைபோல் — நிற்பென்று
உளங்கோயில் உள்ளம் வைத்துள்ளினேன் வெள்ளத்
திளங்கோயில் கைவிடேலென்று.

பேயாழ்வார் அருளிச்செய்த இயற்பா.

மூன்றாந் திருவந்தாதி.

(61-வது பாசுரம்)

78 *பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல்—வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங்கடிகை
இளங்குமரன் தன்வீண்ணகர்.

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி.

கீழ் நிஷ்கர்ஷித்த புருஷார்த்தத்தைப் பெறும்பொருட்டுத்
திருமாலிருஞ்சோலைமலையை ஆச்ரயிக்கும்படி பரோபதேசஞ் செய்தல்.

பண்—நாட்டம், தாளம்—ஏழொத்து, கேதாரகௌள ராகம்—ஆதி தாளம்.

கலிவிருத்தம்.

(2-ஆம் பத்து, 10-ஆம் திருவாய்மொழி)

79 *கிளரொளியிளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவியகோயில்
வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ்சோலை
தளர்விலராகில் சார்வது சதிரே.

80 சதிரிள மடவார் தாழ்ச்சியை மதியாது
அதிர்குரல் சங்கத்து அழகர்தம் கோயில்
மதிதவழ்குடுமி மாலிருஞ்சோலை
பதியதுவத்தி யெழுவது பயனே.

81 பயனல்ல செய்து பயனில்லை நெஞ்சே!
புயல் மழைவண்ணர் புரிந்துறை கோயில்

மயல்மிகு பொழில்சூழ் மாலிருஞ்சோலை
அயல் மலையடைவது அது கருமமே.

82 கருமவன் பாசம் கழித்துழன்றுய்யவே
பெருமலை யெடுத்தான் பீடுறைகோயில்
வருமழை தவழும் மாலிருஞ்சோலை
திருமலை யதுவே அடைவது திறமே.

83 திறமுடை வலத்தால் தீவினை பெருக்காது
அறமுயலாழிப் படையவன் கோயில்
மறுவில் வண் சுனைசூழ் மாலிருஞ்சோலை
புறமலை சாரப் போவதுகிறியே.

84 கிறியென நினைமின் கீழ்மைசெய்யாதே
உறியமர் வெண்ணெய் உண்டவன்கோயில்
மறியொடு பிணைசேர் மாலிருஞ்சோலை
நெறிபட அதுவே நினைவது நலமே.

85 நலமெனநினைமின் நரகழுந்தாதே
நிலமுனமிடந்தான் நீடுறைகோயில்
மலமறு மதிசேர் மாலிருஞ்சோலை
வலமுறை யெய்தி மருவுதல் வலமே,

86 வலஞ்செய்து வைகல் வலங்கழியாதே
வலஞ்செய்யும் ஆயமாயவன் கோயில்
வலஞ்செய்யும் வானோர் மாலிருஞ்சோலை
வலஞ்செய்து நாளும் மருவுதல் வழக்கே.

87 வழக்கென நினைமின் வல்வினை மூழ்காது
அழக்கொடியட்டான் அமர்பெருங்கோயில்
மழக்களிற்றினம் சேர் மாலிருஞ்சோலை
தொழக்கருதுவதே துணிவது சூதே.

88 சூதென்று களவும் சூதும் செய்யாதே
வேதமுன் விரித்தான் விரும்பிய கோயில்
மாதுறு மயில்சேர் மாலிருஞ்சோலை
போதவிழ் மலையே புகுவது பொருளே.

89 பொருளென்று இவ்வுலகம் படைத்தவன் புகழ்மேல்
மருளில் வண்குருகூர் வண்சடகோபன்
தெருள்கொள்ளச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்து
அருளுடையவன்தான் அணைவிக்கும் முடித்தே.

[இப்பதிஞென்று பாசுரத்தின் ஸாராம்சமான மணவாளமாமுனிவர் அருளிச்செய்த திருவாய்மொழி நூற்றந்தாதி.]

90 (கிளரொளிசேர் கீழுரைத்தபேறுகிடைக்க
வளரொளிமால் சோலைமலைக்கே — தளர்வறவே
நெஞ்சைவைத்துச்சேருமெனும் நீடுபுகழ்மாறன்தாள்
முன்செலுத்துவோம் எம்முடி.—(20)

[திருமாலிருஞ்சோலை அழகரது திவ்யஸௌந்தர்யத்தை அனுபவித்தல்.]

கைங்கர்யஸ்வரூபம், பாகவதஶேஷத்வ பர்யந்தமான
பகவத் கைங்கர்ய மென்னுதல்.

தாவுகொச்சகக்கலிப்பா.

பண் இந்தளம், தாளம்-நடையொத்து, குண்டக்கிரியை ராகம் ரூபகதாளம்

(1-ஆம் திருவாய்மொழி, 3-ஆம் பத்து)

91 முடிச்சோதியாய் உனது முகச் சோதி மலர்ந்ததுவோ!
அடிச்சோதி நீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ!
படிச்சோதியாடையொடும் பல்கலனுய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ! திருமாலே! கட்டுரையே.

92 கட்டுரைக்கில் தாமரை நின் கண்பாதம் கையொவ்வா
சுட்டுரைத்த நன்பொன்உன் திருமேனியொளி யொவ்வாது
ஒட்டுரைத்து இவ்வுலகு உன்னைப்புகழ்வெல்லாம் பெரும்பாலும்
பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ!

93 பரஞ்சோதி நீ பரமாய் நின்னிகழ்ந்து பின்மற்றோர்
பரஞ்சோதி யின்மையின் படியோவி நிகழ்கின்ற
பரஞ்சோதி நின்னுள்ளே படருலகம் படைத்தனம்
பரஞ்சோதி! கோவிந்தா! பண்புரைக்க மாட்டேனே.

94 மாட்டாதேயாகிலும் இம் மலர்தலைமாஞாலம் நின்
மாட்டாய மலர் புரையும் திருவுருவம் மனம்வைக்க

மாட்டாத பலசமய மதிகொடுத்தாய் மலர்த்துழாய்
மாட்டே நீ மனம் † வைத்தாய் மாஞாலம் வருந்தாதே!

95 வருந்தாத அருந்தவத்த மலர்கதிரின் சுடருடம்பாய்
வருந்தாத ஞானமாய் வரம்பின்றி முழுதியன்றாய்!
வருங்காலம் நிகழ்காலம் கழிகாலமாய் உலகை
ஒருங்காக அளிப்பாய்! சீர்எங்கு உலக்க ஓதுவனே!

96 ஓதுவாரோத்தெல்லாம் எவ்வுலகத்து எவ்வெவையும்
சாதுவாய் நின் புகழின் தகையல்லால் பிறிதில்லை
போதுவாழ் புனந்துழாய் முடியினாய்! பூவின்மேல்
மாது வாழ்மார்பினாய்! என்சொல்லியான் வாழ்த்துவனே!

97 வாழ்த்துவார் பலராக நின்னுள்ளே நான்முகனை
மூழ்த்த நீருலகெல்லாம் படையென்று முதல்படைத்தாய்!
கேழ்த்த சீர்அரன்முதலாக் கிளர்தெய்வ மாய்க்கிளர்ந்து
சூழ்த்தமரர் துதித்தால் உன்தொல் புகழ் மாசுணுதே!

98 மாசுணுச் சுடருடம்பாய் மலராது குவியாது
மாசுணுஞானமாய் முழுதுமாய் முழுதியன்றாய் !
மாசுணு வான்கோலத்து அமரர்கோன் வழிப்பட்டால்
மாசுணு உனபாதம் மலர்ச்சோதிமழுங்காதே !

99 மழுங்காத வைந்துதிய சக்கரநல்வலத்தையாய்
தொழுங்காதல் களிறளிப் பான் புள்ளூர்ந்து தோன்றினயே
மழுங்காத ஞானமே படையாக மலருலகில்
தொழும் பரயார்க்கு அளித்தால் உன் சுடர்ச்சோதி மறையாதே!

100 மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே!
முறையால் இவ்வுலகெல்லாம் படைத்திடந்துண்டுமிழ்ந் தளந்தாய்!
பிறையேறு சடையானும் நான்முகனும் இந்திரனும்
இறையாதல் அறிந்தேத்த வீற்றிருத்தல் இது வியப்பே!

101 *வியப்பாய வியப்பில்லா மெய்ஞ்ஞான வேதியனை
சயப்புகழார் பலர்வாழும் தடங்குருகூர்ச்சடகோபன்

---

† "வைத்தால் என்று உரையின்பாடம்.

துயக்கின்றித் தொழுதுரைத்த ஆயிரத்துள் இப்பத்தும்
உயக்கொண்டு பிறப்பறுக்கும் ஒலி முந்நீர்ஞாலத்தே.

(இப்பதினொன்று பாசுரத்தின் ஸாராம்சமான நூற்றந்தாதி),

102 (முடியார் திருமலையில் மூண்டுநின்ற மாறன்
அடிவாரந் தன்னில் அழகர்—வடிவழகைப்
பற்றி முடியும் அடியும் படிகலனும்
முற்றும் அனுபவித்தான் முன்.—(21)

[ஆழ்வார் அழகரைப் பூர்ணநுபவம் பண்ணமுடியாமல் வருந்த,
எம்பெருமான் இவரது கலக்கத்தைத் தீர்த்தல்.]

கலிவிருத்தம்.

பண்-சீகாமாம், தாளம்-ஏழொத்து, முகாரி ராகம், அடதாளம்

(2—ஆம் திருவாய் மொழி, 3-ஆம் பத்து)

103 முந்நீர் ஞாலம் படைத்த எம்முகில் வண்ணனே!
அந்நாள் நீதந்த ஆக்கையின் வழிஉழல்வேன்
வெந்நாள் நோய் வீய வினைகளை வேரறப்பாய்ந்து
எந்நாள் யான் உன்னை இனிவந்து கூடுவனே!

104 வன்மாவையமளந்த எம் வாமனா! நின்
மன்மாமாயப் பல் பிறவியில் படிகின்றயான்
தொன்மாவல் வினைத் தொடர்களை முதலரிந்து
நின்மாதாள் சேர்ந்து நிற்பது எஞ்ஞான்று கொலோ!

105 கொல்லாமாக்கோல் கொலைசெய்து பாரதப்போர்
எல்லாச் சேனையும் இருநிலத்து அவித்தளந்தாய்!
பொல்லா வாக்கையின் புணர்வினை யறுக்கலறு
சொல்லாய் யான் உன்னைச் சார்வதோர் சூழ்ச்சியே!

106 சூழ்ச்சிஞானச் சுடரொளியாகி என்றும்
ஏழ்ச்சிக் கேடின்றி எங்கணும் நிறைந்த எந்தாய்!
தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து நின்தாளினைக்கீழ்
வாழ்ச்சியான் சேரும்வகை அருளாய் வந்தே.

107 வந்தாய்போலே வந்தும் என் மனத்தினைநீ
சிந்தாமல் செய்யாய் இதுவே இதுவாகில்

கொந்தார் காயாவின் கொழுமலர்த் திருநிறத்த
எந்தாய்! யான் உன்னை எங்குவந்தணுகிற்பனே.

108 கிற்பன்கில்லே னென்றிலன் முனநாளால்
அற்பசாரங்களவை சுவைத்த கன்றொழிந்தேன்
பற்பல்லாயிரம் உயிர்செய்த பரமா! நின்
நற்பொற்சோதித்தாள் நணுகுவது எஞ்ஞான்றே!

109 எஞ்ஞான்று நாம்இருந்திருந்து இரங்கிநெஞ்சே!
மெய்ஞ்ஞானமின்றி வினையியல் பிறப்பழுந்தி
எஞ்ஞான்று மெங்கும் ஒழிவறநிறைந்து நின்ற
மெய்ஞ்ஞானச் சோதிக்கண்ணனை மேவுதுமே.

110 மேவுதுன்பவினைகளை விடுத்துமிலேன்
ஓவுதலின்றி உன்கழல் வணங்கிற்றிலேன்
பாவுதொல் சீர்க்கண்ணா! என்பாஞ்சுடரே!
கூவுகின்றேன் காண்பான் எங்கெய்தக் கூவுவனே!

111 கூவிக்கூவிக் கொடுவினைத் தூற்றுள் நின்று
பாவியேன் பலகாலம்வழிதிகைத்து அலமர்கின்றேன்
மேவியன்று நிரைகாத்தவன் உலகமெல்லாம்
தாவிய அம்மானை எங்கு இனித்தலைப் பெய்வனே!

112 தலைப்பெய்காலம் நமன்தமர் பாசம்விட்டால்
அலைப்பூணுண்ணும் அவ்வல்லலெல்லாம் அகல
கலைப்பல் ஞானத்து என்கண்ணனைக் கண்டுகொண்டு
நிலைப்பெற்று என்னெஞ்சம் பெற்றது நீடுயிரே.

113 உயிர்களெல்லா வுலகமு முடையவனை
குயில்கொள் சோலைத் தென்குரு கூர்ச்சடகோபன்
செயிரில் சொல்லிசைமாலை ஆயிரத்துள் இப்பத்தும்
உயிரின்மேலாக்கை ஊனிடையொழிவிக்குமே.

(இப்பதிஞென்று பாசுரத்தின் ஸாராம்சமான நூற்றந்தாதி).

114 முன்னமழகரெழில் மூழ்கும் குருகையர்கோன்
இன்னவள வென்ன எனக்கரித்தாய்த்—தென்ன
காணக்குறையின் கலக்கத்தை கண்ணன்
ஒருமைப் படுத்தான் ஒழித்து.—(22)

தம்முடம்பில் எம்பெருமான் மிகுதியாக வைத்துள்ள வாஞ்சையை ஆழ்வார்களால் கட்டி விடுவித்துக்கொண்டு அவனது குணத்தைப் பாராட்டிப் பேசியருளுதல்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பண்-தக்கேசி, தாளம்-ஏழொத்து, தன்யாசி ராகம், ஆதிதாளம்.

(7-ஆம் திருவாய்மொழி, 10-ஆம் பத்து)

115 *செஞ்சொற்கவிகாள்! உயிர்காத்தாட்செய்ம்மின் திருமாலிருஞ்சோலை
வஞ்சக் கள்வன்மாமாயன் மாயக்கவியாய் வந்து என்
நெஞ்சும் உயிரும் உள்கலந்து நின்றார் அறியாவண்ணம் என்
நெஞ்சுமுயிருமவை யுண்டு தானேயாகி நிறைந்தானே.

116 தானேயாகி நிறைந்து எல்லாவுலகும் உயிரும்தானேயாய்
தானேயானென்பானாகித் தன்னைத்தானே துதித்து எனக்குத்
தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ்சோலை
கோனேயாகி நின்றொழிந்தான் என்னைமுற்றும் உயிருண்டே.

117 என்னைமுற்றுமுயிருண்டு என்மாயவாக்கையிதனுள்புக்கு
என்னைமுற்றும் தானேயாய் நின்ற மாய அம்மான்சேர்
தென்னன் திருமாலிருஞ்சோலைத் திசை கைகூப்பிச்சேர்ந்தயான்
இன்னும்போவேனே கொலோ! என்கொல் அம்மான்திருவருளே!

118 என்கொல் அம்மான் திருவருள்கள்! உலகும் உயிரும் தானேயாய்
நன்கென்னுடலம் கைவிடான் ஞாலத்தூடே நடந்துழக்கி
தென்கொள் திசைக்குத்திலதமாய் நின்றதிருமாலிருஞ்சோலை
நங்கள் குன்றம் கைவிடான் நண்ணு அசுரர் † நலியவே.

119 நண்ணு அசுரர் ‡ நலிவெய்த நல்ல அமரர் பொலிவெய்த
எண்ணு தனகளெண்ணும் நன்முனிவர் இன்பம் தலைசிறப்ப
பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த்தன்னைத்தான்பாடி
தென்னாவென்னும் என்னம்மான் திருமாலிருஞ்சோலையானே.

120 திருமாலிருஞ்சோலை யானேயாகிச் செழுமூவுலகும் தன்
ஒருமா வயிற்றினுள்ளே வைத்து ஊழிபூழிதலையளிக்கும்

---

† "நலியவே" என்றும் பாடம், ‡ "நலிவெய்த" என்றும்பாடம்.

திருமால் என்னையாளுமால் சிவனும் பிரமனும் காணாது
அருமாலெய்தி அடிபரவ அருளையீந்த அம்மானே.

121 அருளையீ என்னம்மானே! என்னும்முக்கணம்மானும்
தெருள்கொள் பிரமனம்மானும் தேவர் கோனும் தேவரும்
இருள்கள்கடியும் முனிவரும் ஏத்தும் அம்மான் திருமலை
மருள்கள்கடியும் மணிமலை திருமாலிருஞ்சோலைமலையே.

122 *திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலே என்தலையே
திருமால் வைகுந்தமே தண்திருவேங்கடமே எனதுடலே
அருமாமாயத்து எனதுயிரே மனமே வாக்கே கருமமே
ஒருமா நொடியும் பரியான் என் ஊழிமுதல்வன் ஒருவனே.

123 ஊழிமுதல்வன் ஒருவனேயென்னும் ஒருவன் உலகெல்லாம்
ஊழிதோறும் தன்னுள்ளே படைத்துக்காத்துக் கெடுத்துழலும்
ஆழிவண்ணன் என்னம்மான் அந்தண் திருமாலிருஞ்சோலை
வாழிமனமே! கைவிடேல் உடலும்உயிரும் மங்கவொட்டே.

124 மங்கவொட்டு உன்மாமாயை திருமாலிருஞ்சோலைமேய
நங்கள்கோனே! யானே நீயாகி என்னை யளித்தானே!
பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம்
இங்கு இவ்வுயிரேய் பிரகிருதி மானுங்காரமனங்களே.

125 *மானுங்கார மனங்கெட ஐவர்வன்கையர் மங்க
தானுங்கார மாய்ப்புக்குத்தானே தானேயானானை
தேனுங்காரப் பொழில் குருகூர்ச்சடகோபன் சொல்லாயிரத்துள்
மானுங்காரத்திவைபத்தும் திருமாலிருஞ்சோலைமலைக்கே.

(இப்பதிகனொன்று பாசுரத்தின் ஸாராம்சமான நூற்றந்தாதி)

126 செஞ்சொற்பரன் தனது சீராரும் மேனிதனில்
வஞ்சித்துச்செய்கின்ற வாஞ்சைதனின்—விஞ்ச
தலைக்கண்டவனைக்கால் கட்டிக் கைவிடுவித்துக்கொண்ட
திண்திறல் மாறன் நம் திரு.

தம்மிடத்து எம்பெருமான் விசேஷமாக விருப்பஞ்செய்வதுகண்ட ஆழ்வார், முன்பு தம்மை அகல்வித்து இப்போது இப்படியிருத்தற்குக் காரணம் கூறமாட்டாது நிற்கும் அவனது திறத்தை விஸ்மிதமாய்ப்பேசுதல்

கலிவிருத்தம்.

பண்-இந்தளம், தாளம்-ஏழொத்து, மோஹந ராகம், ஆதி-தாளம்.
(8-ஆம் திருவாய்மொழி, 10-ஆம் பத்து)
1-வது பாசுரம்.

127 *திருமாலிருஞ்சோலைமலையென்றேன், என்ன
திருமால்வந்து என்னெஞ்சு நிறையப் புகுந்தான்
குருமாமணியுந்து புனம் பொன்னித் தென்பால்
திருமால் சென்று சேர்விடம் தென்திருப்பேரே.

128 திருப்பேர் நகரான் திருமாலிருஞ்சோலை
பொருப்பேயுறைகின்ற பிரான் இன்றுவந்து
இருப்பேனென்று என்னெஞ்சு நிறையப்புகுந்தான்
விருப்பேபெற்று அமுதமுண்டு நளித்தேனே.

இராமாநுச நூற்றந்தாதி.
(மோஹந ராகம்-ரூபக தாளம்)
(106-வது பாசுரம்)

129 *இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர் அவைதம்மொடும் வந்து
இருப்பிடம் மாயன் இராமனுசன் மனத்து இன்று அவன் வந்து
இருப்பிடம் என்தனிதயத்துள்ளே தனக்கின்புறவே.

பாசுரங்கள் முற்றுப்பெற்றன.

ஸ்ரீமத் ஸுந்தரராஜார்ப்பணமஸ்து.

ஹனுமார் துதி.

அஞ்சிலே யொன்று பெற்றான் அஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றாமாக வாரியர்க் காகவேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைகண் டயலாரூரில்
அஞ்சிலே யொன்றைவைத்தானவனெம்மை யளித்துகாப்பான்.

சுபமஸ்து.

* "தன்னொடும்" என்று வழங்குவர்.

ஸ்ரீராமஜெயம்.

திருமாலிருஞ்சோலைமலை

அழகர்கலம்பகம்.

பாயிரம்.

காப்பு.

கட்டளைக்கலித்துறை.

ஆனைக்கு முன்செல் லிடபா சலத்தி லழகனையெம்
மானை கருதிக் கலம்பகங் கூற வரற்காற்குத்
தானைச் சுரர்க்குச் சடகோபஞ் சித்திகத் தாங்குசெங்கோல்
சேனைத் தலைவர் திருத்தாள் கருத்தொடுஞ் சேவிப்பனே.

அத்தியின் மத்தியி லேவிளங் காலிலம் மாமகிழ
நித்திரை கொள்ளுந்த மாலத் துருவ னிவனென்பதே
சத்திய மென்னப் புளிக்கீழ் மகிழந் தமிழ்க்கரசே
நித்திய மாலழ கன்றமிழ் கூறமுன் னின்றருளே.

நேரிசை வெண்பா.

முதலாழ்வார் மூவர்தொண்டர் பாதப் பொடியார்
மதுரகவி மாறன்மழி சைக்கோ—இதவார்
குலசே கரன்கோதை பட்டர்பிரான் பாணன்
கலியன் றிருவடிகள் காப்பு.

அவையடக்கம்.

அழகர் பதின்ம ரருந்தமிழ்கொண் டார்யான்
குழறியபுன் சொற்றமிழுங் கொண்டார்—முழுதும்
கருத்திருத்தி வைத்தவெண்மர் காந்தருமாய்க் கூனி
உருத்திருத்தி கொண்டதுபோ லும்.

நூல்.

மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

எட்டடித்தாவுகள். (உ)

நீர்பூத்த பொற்றகட்டு நெட்டிதழ்ச்செந் தாமரைமான்.
கார்பூத்த முழுநீலக் கண்ணுமன முங்குளிரச்
சுரும்புதுவைத் தோகைமிகச் சூடியதா மமுங்கவியும்
தரும்புதுவைத் தோகைகன தனதடங்கள் புளகரும்பப்
பழமுதிர்நான் மறைகுமுறப் பதின்மர்கண்முத் தமிழ்முழங்கப்
பழமுதிர்பூஞ் சோலைமலை பச்சைமர கதத்திலங்க
வந்தவிமா னத்தமரர் மலர்தூவிப் பணிசோமச்
சந்தவிமா னத்தமருஞ் செளந்தரிய பரஞ்சோதி.

குறித்தமுகில் பந்தரிட்டுக் குறுந்துளிதூற் றிடவாயர்
தறித்தமர மத்தனையுந் தழைத்தலர்ந்து பழுத்துதவக்
கடும்புலிக ளயர்ந்துசித்திர காயமெனும் பேர்விளக்கக்
கொடும்பணிகண் மாலையதாய்க் குலரத்தின விளக்கேற்றக்
கருங்கற்றூன் வெண்ணெயெனக் கரைந்தோட விரைந்தோடி
வருங்கற்றூ னிமைப்பொழிய மழவிடையங் கயர்ந்துநிற்ப
மிகவிளங்கோ வியரெழுத வெள்கியதிரி பங்கியுடன்
சுகவிளங்கோ வியர்மழலை தொனித்தகுழ லிசைத்தோய்கேள்

ஈரடித்தாழிசைகள். (ஊ)

பலகடலுஞ் செதிலடங்கப் பசுந்துழாய் பரிமளிக்கப்
பலகடமீன் வடிவெடுத்தாய் பார்த்தெம்மைக் காக்கவென்றோ.
போகமடங் குலகமுற்றும் பூவெனவன் புறங்கிடக்க
நீகமட வுருக்கொண்டாய் நினைத்தெம்மைப் புரக்கவென்றோ. (உ)
நிலக்கினிய தேவகிபா னீபிறந்த சுபயோக
விலக்கினமேற் கடைப்பிடியோ விடபமலை யுவந்தனையே. (ங)
மதித்ததுநம் மிந்துகுல முயர்த்ததுநந் தமையென்றோ
பதித்தமலை யத்துவச பாண்டியனை யாண்டனையே. (ச)
தருமகதி யாய்ப்பாடி தனினவநீ தங்கவர்ந்தா
யொருமகதிமுனிமுதலோ ருள்ளமெனக் குறித்தேயோ. (ரு)

ஆரமுத வுததிபொங்க வமரர்குழாம் வாயூற
வாரமுத மதித்தெடுத்தா யடியவர்கட் கென்றேயோ. (சு)

ஈரடி அராகங்கள். (ச)

நிலமுத லியவெயி னிலவுமிழ் கதிர்மதி
குலதெய்வம் வழிபடு குருவென வருளினை. (க)
அரியய னரனென வவனவ ளதுவென
விரியிக பரமிரு வினையென மருவினை. (உ)
அருள்சில வறிபவ னறிவறி தருமொரு
பொருள்பல வெனமறை புகல்சுக வடிவினை, (ங)
ஒளியினு ளொளியுல குயிரினு ளுயிர்குகு
களியினுள் களியென மிகமகிழ் கருணையை (ச)

பெயர்த்தும் ஈரடித்தாழிசைகள். (ச)

அடலவுணன் பாற்குறுகி யற்பநிலங் கையேற்றாய்
கடலகிலம் யாவுமுந்தி காட்டுவது கண்டிலையோ. (க)
இலகங்கை யெனத்திரைக ளெறியமுனை துளைந்தாய்வான்
குலகங்கை கால்பிடித்துக் கூப்பிடுதல் கேட்டிலையோ. (உ)
கருதுகளி றேலமிடக் கலுழனெடும் விண்பறந்தாய்
மருதினுர லொடுதவழ்ந்தாய் மால்விளையாட் டென்றேயோ. (ங)
சிறந்தபெரும் பகிரண்டத் திரளெல்லாந் திருவுருவிற்
பிறந்தகுறும் புளகெனினின் பெருமையையா ருரைக்கவல்லார்.

நாற்சீர் ஓரடி அம்போதரங்கம். (உ)

சகலநற் பொருளிநீ தத்து வங்கணீ
புகறரு கரணநீ புவன போகநீ. (க)
மொழியுநீ பொருளுநீ மூக்கு ணங்கணீ
விழியுநீ மணியுநீ விந்து நாதநீ. (உ)

முச்சீர் ஓரடி அம்போதரங்கம். (ச)

தயரதர் தவசிலு தித்தனை.
தசமுக னுருளவ தித்தனை.
உயர்சது முகனைவி தித்தனை.
உரனுள சரபமி தித்தனை

இருசீர் ஓரடி அம்போதரங்கம். (கசு)

செகமி சைந்தனை.	கரும மண்டினை.
ககமி சைந்தனை	தரும மண்டினை.
செயல்க டந்தனை.	கதம டக்கினை.
மயல்க டந்தனை.	மதம டக்கினை.
சுகமு கந்தனை.	அருவி ழைந்தனை.
மகமு கந்தனை.	உருவி ழைந்தனை.
துன்பொ ழிந்தனை.	அமிழ்த ழைத்தனை.
பொன்பொ ழிந்தனை.	தமிழ்த ழைத்தனை.

தனிச்சொல்.

எனவாங்கு.

இருபத்துமூன்றடியால் வந்த

ஆசிரியச்சுரிதகம்.

தேறிய வடகலை தென்கலை யெனவிரண்
டாறொழு கரங்க வரவிந்த லோசன
குளிர்பத மிடுசட கோபமி தெனவான்
வெளிமுக டணிவட வேங்கட வாண
அதிர்குரல் வளைசுட ராழியா மெனமதி
கதிர்புடை வரநிமிர் கரிகிரி வரத
வலம்புரி போலயன் வாகனமீண்டிச்
சிலம்புறு தாளச் சிலம்பாற் றிறைவ
எழுமணி யால்கட லீந்தபொன் னுடனொரு
செழுமணி யுரமணி தெய்வ சிகாமணீ
உரனுடை மதலையு மிரணிய னுரமொடு
சாபமும் வகிர்தரு நரகரி ரூபா
பூமியி லசுரப் புன்பனிக் கினனெனும்
நேமியம் பரம சாமி வாழி
இரவினி லாடு மிறையணி யொளிக்க
அரவினி லாடுநின் னடிமலர் கியம்புவென்
அண்டகோ டியையு மயனையு முந்திப்
புண்டரீ கத்துப் பொதிந்தரு ணின்னை
நெஞ்செனு மலரு ணிறுத்துமெய் யடியர்க்

கஞ்சுற் றஞ்சுற் றுங்கவர் தம்மை
கண்ட விடத்துநுங் காற்றுக ளென்று
தொண்டுபட் டொழுகத் துணைசெய்
தண்டமிழ்ச் சங்கத் தனியிறை யவனே. (க)

நேரிசைவெண்பா.

அவனிவனென் றெண்ணி யலையா திருத்தி
அவனிவனி தைக்கா மழகன்—கவடார்
மருதிடந்தா னேகடவுண் மற்றில்லை நெஞ்சே
ஒருதிடந்தான் சொன்னே னுனக்கு. (உ)

கட்டளைக்கலித்துறை.

உனைக்கண் டகங்குளிர்ந் துன்னுமங் கூற வுனைவணங்க
வினைக்கண் டகரிடஞ் செல்லா திருக்கநல் வீடுபெற
முனைக்கண் டகங்கையை நேராக்குங் காந்தி முகுந்தநந்தன்
மனைக்கண் டகணித லீலாதென் சோலை மலைக்கொண்டலே. (ங)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கொண்டல்வண் ணனவன் றேயுன் குரைகழற் கமலம் பெற்றேன்
மண்டல மளந்த காலை மற்றுநான் புறம்போ சொல்லாய்
அண்டர்தெள் ளமுத முண்ண வாலமுண் டவர்க்கே சோமன்
துண்டமுன் றந்தாய் தந்தாய் சுந்தர ராச மாலே. (ச)

சந்தவிருத்தம்.

மாலைக் கரும்புபிறை புரைவா ளெயிற்றுநமன் வன்பாசம் வீசவுடலம்
ஆலைக் கரும்புபடு முன்னேகண் முன்னேபுள் ளரசோடும் வந்துதவுவாய்
வேலைக் கரும்புனித விந்திராதி யர்க்குநல் விருந்திட்டு வந்துவிதுரன்
சாலைக் கரும்புதுவி ருந்தா மருந்தே தடஞ்சோலை மலையழகனே. (ரு)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மலைக்குமேன் மலைவிளக்கா மழகா வேத
வான்குதலை நான்குதலை மகனார் வாளா
தலைக்குமே லெழுதுகின்ற ரரியென் றெங்கள்
தாலத்தின் மேலெழுதச் சமர்த்தி லாரோ
அலைக்குமே லுடுமலரா மிதக்குங் கால
மாலமொன்று காயாம்பூ வலர்ந்தாற் போற்பச்
சிலைக்குமேற் செங்கண்வள ரனந்தா னந்தா
விருக்கி விருக்கும் பொருளே யெம்பிரானே. (அ)

கட்டளைக்கலிப்பா.

பிரானெனைச் சொன்முராரி புராரிநீ பிரமனீ குணப்பேதநீ பூதநீ
தராதலத் திற்சராசரம் யாவுநீ சச்சிதாநந்த விம்பமுநீ யனறோ
மராமரங் கொலி ராமவிராகவ வாசுதேவ வனகிரி வாசமுன்
கராசலஞ்சொற் பராபர நாதசெங் கஞ்சலோசன வஞ்சன மேருவே. ()

நேரிசை வெண்பா.

அஞ்சார லும்மணிநீ ராறுங் கிடைக்கரிய
மஞ்சீர மாறு வனகிரியே—பஞ்சவர்தம்
பங்கங் களைந்தான் பனிரண்டு கண்ணொருவர்
பங்கம் களைந்தான் பதி. (அ)

கட்டளைக்கலித்துறை.

பதிக்கின்ற கற்பகப் பூஞ்சோலையை யெட்டிப் பார்த்து மந்தி
குதிக்கின்ற மாலிருஞ் சோலைவெற் பாநின் குளிர்வதனம்
உதிக்கின்ற திங்கண்மெய் யுற்பலக் காடங் கொழுகு பைந்தேன்
மதிக்கின்ற கட்டழ கெங்கள்கண் மூழ்கு மதுகரமே. (சு)

புயவகுப்பு.

ஆசிரியவண்ணவிருத்தம்.

தனதனன தந்ததன தனதனன தந்ததன
தனதனன தந்ததன—தனத்ததன தனந்தன.

மதுகயிட வன்சடல மெழுகுபட வெங்குருதி
மதுவினில்வ ழிந்தொழுக இறுக்கிநனி பிழிந்தன
வடிதயிர்மு கந்துரலின் வரியவுமி சைந்துபய
மருதையுமி டந்துபினும் அடுக்குறிநெய்கவர்ந்தன
மகளிர்க சந்த்ரகலை பதிபிடர்த ழும்பட
மணிகணிரெ னுஞ்சுரபி திருப்புகுணில்சுமந்தன
வயிறுகுழை யும்பொழுது சிறுகுமுத மொன்றநிரை
மடிமுலைவி ரைந்துருவி நுரைத்தசுரைகறந்தன

புதுவையின்ம டந்தைகவி பதின்மர்தமிழ் கொண்டினிது
புளகிதமெ றிந்துமர கதக்கிரியினிமிர்ந்தன
பொதுவர்தரு பெண்கள்முலை திமிர்மிர்கம தங்களொடு
புதியபசு மஞ்சள்குமு குமுக்கவிமிவளர்ந்தன
புவிகிடுகி டென்றதிர வெதிர்தொடைய றைந்துசமர்
பொருமலர்க லங்கமுகம் இடித்துமிகநுழைந்தன
புகையுமொரு கஞ்சன்விழ முரனடுங் டுங்கயம
புரநெளிய வும்பர்மலர் இறைக்கவமர்புரிந்தன

மிதிலைமயி லின்புருவ நிகரலதி தென்றரனும்
வெருவிடவ வன்சிலையை முறித்தவையிலெறிந்தன
விசையினொடு கொம்பினினை திருகிமணி சிந்தரண
வெறிகொள்கெச கும்பமது தகர்த்துவிருதணிந்தன
விசையன்ரத வெண்புரவி கருவிகொடு ரிஞ்சிமிக
மெழுகுசெய்து தண்புனலின் மினுக்கியுளைவகிர்ந்தன
விரனுனிசி வந்தபடி யுலவைகள்கொ ழுந்துவிட
வெணெயின்மலை யுங்கரைய இசைத்தகுழல்பயின்றன

அதிர்கனக னெஞ்சமிரு பிளவுசெய்து நுஞ்சமூக
அருகுதிர மொண்டுதவி நிணத்தகுடர்பிடுங்கின
அவைதொடைபு னைந்துரகம் வளைமலையை வென்றுதொழு
வரசிளம கன்குடுமி திருத்தியலர்புனைந்தன
அணிமகர குண்டலநல் விசயமக ளுஞ்சலென
வசையவவள் செம்பொனெயி லெனத்தொடிகள்செறிந்தன
அமுதமதி வந்துதவ ழிடபகிரி நின்றவடி
வழகர்துள வுந்தளவு மணத்ததிரள்புயங்களே.

நேரிசைவெண்பா.

புயங்க சயனு புயல்வண்ணு பூமின்
முயங்கு மணிமார்பா முகுந்தா—மயங்கும்
கருப்பழகா தன்பரையாள் கண்ணுதென் சோலைப்
பொருப்பழகா நீயே புகல். (கக)

வண்டுவிடுதூது.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நீயாகிலுஞ்சொல் லொணாதோ பிரிந்தேகும்
கிட்டோ ருக்கந்த நெட்டாலி னிலையோர்
பாயாக விழிதுஞ்சு முகில்சோலை வெற்பிற்
பசுந்தேன் விருந்துண் கருந்தேனி னரசே
மீயாகும் வெளிநாகம் வெண்பா லெனுந்தண்
மேகங்க ளாரிபுள்ளி மீனஞ்செவ் வானம்
வாயாகும் ரவிகான்ற மாணிக்க மெயிறோ
மதியால மறுமூச்சு வாடைக்கொ ழுந்தே. (கஉ)

இரங்கல்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கொழுநனைவிட் டாய்பூவை நிரைக்கின்றாய் வண்டிசையைக் குறித்தாய் கண்ணீர், விழுவதறா யொன்றுமருந் தாதுகைப்பா யிதழ்புலர்ந்தாய் வினையேன் போன்றாய், எழுவிடையுந் தழுவியொரு விடைமலையில் வாழழக ரிந்திர நீலச், செழுமலையொப் பார்நாட்டில் வெண்டளவே கண்டளவே தேறி னேனே. (கங)

தவம்.

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

தேறாது வனம்போயெள வனமும் போனீர்
சிறுகிழங்கைக் கொண்டுபெருங் கிழங்கைக் கொண்டீர்
ஏறாத பலஞ்சுவைத்தோர் பலமுங் காணீ
ரிலைமேய்ந்தும் பேறிலையே யிதுவோ யோகம்
மாறாது சருகுதின்று சருகு பட்டீர்
வாயுநுகர்ந் தீர்வாயு மௌன மானீர்
ஆறாத தீயினிற்பீர் தீய ரேனும்
மருந்தவமே தவமழகர்க் காட்ப டீரே. (கச)

கட்டளைக்கலித்துறை.

படவ வப்பள்ளி மாலலங் காரர் பழமறையும்
தடவர வச்சிரத் தண்டையு மார்ப்பச் சகடுதைத்த

திடவர வச்சத ரெல்லா விடுக்கணுந் தீர்த்தருளக்
கடவர வற்றைக் கருது மவரைக் கருதுமினே. (கரு)

மேகவிடுதூது.

நேரிசை வெண்பா.

மின்னுமுகி லேசோலை வெற்பழகர் வந்திலார்
உன்னையெதிர் கண்டே னுயிர்தரித்தேன்—ஒன்னார்
வெருவவிரு தூதுமவர் மேனிநிற முற்றும்
மருவவிரு தூதுபோய் வா. (கசு)

இரங்கல்.

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

வாளுந் திகிரிப் படையுங் கதையும்
வளையும் வளையுஞ் சிலையும் புனைவார்
ஆளுங் குலபூ தானுர் மலர்மா
னன்னுள் பிரியா ரெந்நாள் வருவார்
நீளுங் குழலீர் காமம் படுதீ
நெய்விட் டதுகா ணீர்பெய் பனிநீர்
வேளைங் கணையும் விறகா மவர்தாம்
வேயு துவதுந் தீயு துவதே. (கஎ)

வேறு.

வேயினு னிரையழைத்துக் களிறழைக்க வோடி
மென்பிடிக்காய் மான்பின்போய் விடைமலைமேலிருப்பீர்
பேயின்மா முலைபருகு மச்சுதரோ கேளீர்
பின்னைக்கு முன்னுளை பின்னைக்கென் னுமல்
போய்வாச வன்றருவை வேரினொடுங் கொணர்ந்தீர்
புதல்வனுர் தமக்குமுந்திப் பூவிருப்பென் றளித்தீர்
தூயகோ வியர்க்குமெல்ல விதழ்கொடுத்தீர் நம்புந்
தொண்டன்முடி மேற்றுளைச் சூட்டுவதுன் கடனே. (கஅ)

சந்தவிருத்தம்.

கடதாரை குன்றுத விபராசன் மூன்றுவு
ககராச னுந்தாமு நொடியூடே
வடமேரு வுஞ்சோனை மழைமேக மும்போல
வருமா லலங்காரர் பதிகேளீர்
சடகோபர் தம்பாட லெனவே பசுந்தேறல்
தவழ்சாரல் சங்கினு மணியாலே
திடராக மஞ்சீர நதியோ லிடுந்தூய
திருமா லிருஞ்சோலை மலைதானே.

வண்டுவிடுதூது.

நேரிசைவெண்பா.

மலையழகர் வண்டினமே வண்டுவரை யார்கண்
நிலைகொள் பொறியளியை நீங்கார்—தலைவரவர்
ஆழியுடை யாருமுக்குண் டாறுகால் பேர்சுமந்தீர்
வாழிசெல லாஞ்சொலலா மால்.

கட்டளைக் கலித்துறை.

மாலாகும் வேளையி னீலா சலமொத்து மாப்பறவை
மேலாக வந்தருள் வாயெங்கள் கோசலை மெய்வயிறென்
ஆலா னதிலிளஞ் சேயாயுறங்கி யசோதை கண்போல்
சேலா யெழுமழ காகுல பூதரச் சீதரனே.

அம்மானை.

மடக்குக் கலித்தாழிசை.

சீதராஞ் சோலைமலைச் செல்வரைமுன் சந்ததியா
மாதர சோதை வளர்த்தனள்கா ணம்மானை
மாதரசோதை வளர்த்தனளே யாமாகில்
ஆதரவில் லார்போ லடித்ததே னம்மானை
அடித்ததொரு வன்மத்தா லல்லவோ வம்மானை.

மடக்கு.

பதிநான்குசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மானமா லழகர் பதிகனூற் றெட்டே
மற்றவை யாவுநூற்றெட்டே
வளரக நந்த னந்தமா மனையே
வதைத்தது மந்தமா மனையே
ஏனமா யெடுத்த தெட்டுமா தரையே
யிணங்கிய தெட்டுமா தரையே
யேற்றது கயவர்க் குடையுமை வரையே
ஆனைகூப் பிடுமுன் புகுமிடங் கரையே (கக)
யன்றுகொன் றதுமிடங் கரையே
யன்னையுங் கனகன் கைபொருந் தூணே
யண்டகோ டிகள்பொருந் தூணே
பானமுங் கரும்பேய் வனமுலைப் பாலே
பயிற்சியும் வனமுலைப் பாலே
பாயலு மாவுக் கரசனு லிலையே
பாஞ்சட ரவனலா லிலையே. (உக)

கட்டளைக் கலித்துறை.

(உ0)

இலையும் பசும்புல்லுஞ் செஞ்சூட்டாவு மிடைச்சி மடித்
தலையுஞ் சயனங்கொண் டூரடி யேன்மனத் தாமரையின்
றலையுஞ் செயலொழித் திங்கிருந் தாலென்ன வஞ்சனமா
மலையுங் கடலும் பொருந்தமிறச் சோலை மலையரசே. (உச)

மறம்.

(உச)

பதினான்குசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அரசர்தூத கவிஞர்தூத ரயனொடுந் துதிக்கவே
யைவர்தூத ராயளித்த வழகர் நாட்டின் மறவர் யாம்
பாசிகால தூதரும் பறப்பரெங்கள் பேர்சொலிற்
பயமிலாது செல்லுமென்று பயமிலோலை வைத்தனை
சாசம்வாசி யென்றுசொல்வை சாணிதேடு காவலர்
தளமிணக்க மென்கிறாய் சாந்தொடுக்க வேண்டுமோ
சிரமிருக்க வேண்டிலுங்க டிருமுகங் கிழித்தெறி
சோர்பெண்ணை யீவர்போ சிறாரினுப் பொறார்களே. (உரு)

(உஉ)

வேறு.

பொறுபொறு ஆத பசிபொருய் மூந்திப்
புனைசுருட் டோலையைத் தின்னு
புரவலர் காதிற் சொருகுசந் திரிகை
புயனிறத் தழகர்சிர் பதியின்
மறவரென் றறிந்துங் காரிகை கேட்டாய்
மதமலோ வதுபுல வரைக்கேள்
வயலிலே யரிவை சிலையிலே நாரி
மாத்தினு மண்ணினும் பாவை
குறிதிகழ் தையல் பாணர்பால் வஞ்சி
குடக்கினிற் கோதையு மாங்கே
குன்றின்மேற் குன்ரு விளம்பிடி நல்ல
குமரியுண் டடவியி லுடனே
நறுமணங் கூடுஞ் சோறுமுண் டோடு
நங்கையைப் பார்வினை முகத்தில்
ஞாலமே னீங்கள் வாலையே படைத்தா
னரியொடுந் திரிவது திரமே.

மடக்கு.

கட்டளைக்கலிப்பா.

திரவி ருப்பணி தாமத் திகிரியே
செங்கை மேலணி தாமத் திகிரியே
வரதர் மொய்ம்பு குலவா விந்தமே
வாய்கண் கால்கை குலவா விந்தமே
உரமி லைக்கும் பன்ன கமலையே
யுறையு ஞங்கரும் பன்ன கமலையே
அரச ருக்கிட முத்தமர் சங்கமே
யழகர் சேரிட முத்தமர் சங்கமே.

கட்டளைக் கலித்துறை.

மேகங் கடல்மணி காளிந்தி பூவைமென் காவிகண்மை
மாகந் தொடுபச்சை நின்னுருக்காட்ட மனங்குளிர்ந்தேன்
சோகந் தவிர்ந்தனென் மாலிருஞ் சோலைச் சுரும்புசெய்த
யோகந் திகழழ காவவைவாழி யொளிசிறந்தே.

நேரிசைவெண்பா

சிறந்துன் பதந்தொழுவார் சேவடிதொ ழாமல்
இறந்தும் பிறந்து மிரைக்கே—பறந்தும்
மிகவேசற் றேனிடப வெற்பாவ சோதை
மகவேசற் றேகடைக்கண் வை. (உசு)

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

வைக்குமிடத் தன்புவையா மாந்தர் காளம்
மறலிகதை யறியீரோ வருமே நாளை
தக்ககதை புகுமேநுங் குணமும் போமே
சாரும்போ மேயெடுத்த தநுவும் போமே
திக்கிலேவே றிக்கணமே சோலை வெற்பிற்
சீதரசஞ் சீவிதனைத் தேடிக்கொள்ளும்
துக்கமறு நமனோடத் துரப்பீர் யார்க்குந்
தோற்றிடு ரொருமாலுந் தோற்றிடீரே. (ஙo)

(உசு)

கட்டளைக்கலிப்பா.

தோற்றும் பொய்கை விடாதா ருவியுந்
துலங்க வீட்டவர் சோலைவெற் பார்சந்தச்
சேற்று மொய்ம்ப ரிவர்க்கரி தோநம
திருக்குளக் குறை தீர்ப்பது மாவலி
ஊற்று நீரினி தென்றே குடங்கைகொண்
டுற்ற நாளங் கொருகாய்வின் னுச்சிகண்
டுற்ற நீர்தந்த திங்கொரு காலுல
களந்துபோக மனைத்துங் கொடுத்ததே. (ஙக)

(உஎ)

கட்டளைக்கலித்துறை.

கொடுக்கின்ற செங்கை யழகனென் றோதுங் குழகன் வெய்யோன்
னடுக்கின்ற சக்கரத் தேரோ டிலங்கு மிடபவெற்பில்
அடுக்கின்ற வாயிரம் பேரோ கிரணமஞ் ஞானவிருள்
தடுக்கின் றவருமுண் டோபணி சான்புன் சமயங்களே (ஙஉ)

(உஅ)

அறுசீர்க்கழிநெடில் வண்ணவிருத்தம்.

சமயமென முதுகடவு கடவியுயிர்கதுவிவரு சமனுமொரு திரணமிவனே
அமையுமென வழலும்யம படருமொரு மசகமெழுதயனுமவ னளவுநமர்காள்
கமையுரக கிரியிறைவர் கரிகிரியில் வரதர்வளர் கமலேதன கிரியை யகலார்
இமையகிரி ரசதகிரி கனககிரிபரவுநம திடபகிரி யழகர் துணையே. (௩௩)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

துணையென்று வந்தே மெம்மைத் தொடர்ந்துமா லாக்கிக் கொண்டாய்
அணையென்று நாக மீந்தா யாங்கரு டனைவி டேமால்
இணையொன்று மில்லாய நல்லா யீசசர் வேச முல்லும்
சுணையென்ற வழகா வெண்ணெய்க் களவனே துளவீனனே. (௩௪)

மடக்கு.

எண்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்

துளவழகர் கலக்கவர வஞ்சலிக்குங் காலந்
தொனித்திடிகள் கலக்கவர வஞ்சலிக்குங் காலம்
வளமலிவெற் பருகுகரு மஞ்சாருங் காலம்
வாடையுயிர் பருகுகரு மஞ்சாருங் காலம்
களிறுருளச் சிலையருவி யம்புதைக்குங் காலங்
காயமுறுஞ் சிலையருவி யம்புதைக்குங் காலம்
தளவமளி பாடரப் பூச்செறியுங் காலந்
தளவமளிப் பாடரப் பூச்செலியுங் காலம். (௩௫)

வேறு.

காலமுகந் தானு மோலமுகந் தானுங்
காமனைவாய்த் தானு மாமனைமாய்த் தானும்
ஞால மடுத்தானுஞ் சூல மெடுத்தானு
நளின விருப்பானும் புளின விருப்பானும்
நீல மதித்தானுஞ் சீலம் விதித்தானு
நீதி பொதிந்தானுஞ் சோதி வழிந்தானும்
சால நிறைந்தானு மால முறைந்தானுஞ்
சலமலை வென்றானுங் குலமலை நின்றானே. (௩௬)

கட்டளைக்கலித்துறை.

மலைதாங்கு மாயர் வனகிரிக் கேமழை தாங்கிச்சந்திர
கலைதாங்கி யிந்திர சிலைதாங்கிக் கஞ்சமுந் தாங்கியங்கே
கொலைதாங்கு நீலங் குமிழாம்ப ருங்கிக் கொடியொன்றின்மேல்
நிலைதாங்கு கோங்கமுந் தாங்கியொர் பூங்கொம்பு நிற்கின்றதே.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

தேனைப் பழித்த விசைக்குயில்காள் செம்மாந் தழைக்கப் புறப்பட்டீர்
சோனைப் புயல்போ லனங்கனம்பு தொடுத்தானினிமேற் றொடப்போமோ
ஆனைக் காச னிடுக்கணிருட் கருணோதயம்போ விமைத்த செம்பொற்
றூனைத் திருமா லலங்கார தந்தாரிந்தா தந்தாரே. (கஅ)

மடக்கு

தாழிசை.

தாரமருங்கா மனப்புள்ளே தைக்கு மருங்கா மனப்புள்ளே
சாக்கோ டங்கங் குலைபடவே தகுமோ வங்கங் குலைபடவே
வேரோ டின்ப வளவனமே விடமோ வின்ப வளவனமே
மேகம் பாவி வருந்திடரே விதிகாண்பாவி வருந்திடரே
மாரனுடைவாட் கேதகையே மயல்கொண் டுடைவாட்கேதகையே
மணந்த விராவம் போருகமே வந்த விராவம் போருகமே
ஆரங் கடுக்கு மென்னுரையே யாருக் கடுக்கு மென்னுரையே
லைக வாவெண் ணந்தினமே யழகர் வாவெண் ணந்தினமே. ()

நேரிசை வெண்பா.

தினகரனு மப்பால்வெண் டிங்களுங்கா ரென்ன
வனகிரிவாழ் காயாம்பூ வண்ணா—அனகா
அறவேத வித்தேநின் னம்புயத்தால் காணா
தறவேத வித்தே னருள். (சo)

கலி.

பன்னிருசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

அருணன் பரிபோற் பரியிலக
வமரில் விசயன் றேர்கடவு
மழக ரிணையில் குழகரெமை
யாளும் பெருமாள் வாளாக்கர்

செருவென் றிறுத்தார் மதுவார்க்குஞ்
செயலை முடித்தார் பின்னுமன்பர்
தேனுக்கலையா மற்கருணை
செய்தா ரவர்தந் திருவடிகள்

கருதுங் களியேங் கனமடத்தைக்
கழுவு மினிய வினையடையுங்
கஞ்சாக் கருக்கு வகைநிறையுங்
கற்பத் தயன்வீழ்ந் தனனன்று

குருவி சார மச்சமறுங்
குலவா ரணங்கள் முன்படியுங்
குறும்பாட் டையுமோ திடும்வாருங்
குடியும் படையும் வேண்டியவே. (சக)

பறவைவிடுதூது.

எழுசீர்க்கழிநெடில் சந்தவிருத்தம்.

வேண்டலர் நகைக்கவொரு பாங்கியும் வெறுக்கவனை
வேங்கையி னதட்டமதன் வில்லரலே
தூண்டில்படு மச்சமென நான்பதை பதைக்கும்விதி
தூங்கியிரை கொத்திநிமிர் புள்ளீரே
பாண்டவர் துதிக்குமயில் கூந்தல்சொரு கத்தவள
பாஞ்சசனி யத்தொனிசெய் செவ்வாயர்
ஆண்டுதுரு வற்குநிழ லீந்தவன வெற்பிலெனை
யாண்டவழ கர்க்கினிது சொல்லீரே. (சஉ)

கட்டளைக்கலித்துறை.

சொல்லிட பாசல மாயர்நன் னுட்டிற் சுடர்க் கொதுங்கும்
அல்லிடர் தீர்குழ லாய்நின் படாமூலை யானை கண்டால்
மல்லிட நுந்திண் புயத்தார் கனக வளைநிரைப்பார்
புல்லிட வுஞ்செய்வ ரீந்தார் பிடியென்றிப் பூந்தழையே (சங)

பாண்.

தாழிசை.

தழைவிருந்த வனத்தர்பூமிசை குழைவிருந்தவ னத்தனை
தந்தசுந்தர ராசகேசவர் தம்பதங்கவி னினைவினார்

இழைமருங்குடை வாணியுந்தொழ விங்கொர்பாணரு ளாரவ
ரிசைபுகுந்திடு காதின்மற்றவ ரிசைபுகாதுத காதுநீ
மழைதொடுங்கொடி மாடவீதியில் வந்ததேபிழை யிறையிவண்
வரத்தைவிட்டனர் ஞானம்வந்து பரத்தைநச்சினர் வீணையும்
பழையபேச்சுரை யுந்தொடுத்தனை புதியபேச்சுரை காணது
பாடினிக்கு மவட்கெழுந்தருள் பாடினிக்கு மணாளனே. (சச)

ஊசல்.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மணங்கமழ்பூ வையுமயிலுந் தமாலக் காடும்
வண்கிளியு நீலவெற்பு மடமான் கன்றும்
இணங்குகடலுந்துகிருங் காரு மின்னும்
யமுனையெனுந் திருநதியு மெகினப் பேடும்
கணங்குழைய கோசலைதே வகிய சோதை
கண்மணியும் பாவையும்போற் கமல வீட்டில்
அணங்கரசி னுடன்குலவி யாடி ரூச
லலங்கார மாயவரே யாடி ரூசல். (சரு)

தவம்.

எழுசீர்க்கழிநெடில் சந்தவிருத்தம்.

ஊசிமுனை நின்றுமென தாழ்குகைநு ழைந்துமென
ஆமரிலி ருந்துமென வளைபோலே
காசினிசு ழன்றுமென வானிடைப றந்துமென
காயமிதெ ழுந்துவிழும் வினைபோமோ
நீசரையு மண்டர்செய சோலைமலை யின்கண்முழு
நீலமலை யுண்டுதொழு மியலாதேல்
கேசவமு குந்தமது சூதனவ னந்தகக
கேதனவெ னுந்தளரி னினைவீரே. (சசு)

கட்டளைக் கலித்துறை.

நினையா தவர்தமை யாளலங் காரனை நேர்ந்து நந்தன்
தனையா தவர்கண்ப வென்றிட பாசலச் சாரலிற் போய்
முனையா தவர்தகை தீர்சிலம் பாற்றின் முடை யுடலை
நனையா தவர்சன்ம முஞ்சன்ம மோவிந்த நானிலத்தே. (சஎ)

சந்தவிருத்தம்.

நிலங்குலவு நாபர்பணி லங்குலவு முத்த
நிரைக்குமரு விக்குலவ ரைக்குமரு வியகார்
இலங்கையில்வெவ் வாளிகொடி லங்கையிலிருக்கு
மிராவணவி ராவணனி ராவணம றுத்தோர்
அலங்கலைய ளித்தனா லங்கலைக டற்கு
மந்தமத னுக்குமனை சந்தமத னுக்கும்
கலங்கலெ னெனக்கணிக லங்கலவை தம்மின்
கையிலமனை தாருமுலை சயிலமனை யாரே. (சஅ)

கொச்சகக் கலிப்பா.

ஆராம வெற்பி லழகர்சுரு திக்குமெட்டா
ஏரார் பதந்தீண்ட வெத்தவங்கள் செய்தனவோ
சூரான வன்சிலையுந் துந்துமியென் புஞ்சகடும்
காராய கட்டையும்வெங் காளியப்பேர் நாகமுமே. (சகூ)

மதங்கி

தாழிசை.

காளமேகமும் வெளிறமின்னிய கண்ணனூர்வன கிரியினில்
காமதங்கம தங்கமாமெழின் மாமதங்கம டந்தைகேள்
தாளநின்முலை யிடைகுறுந்துடி தவளசங்கதிர் களமுகம்
தக்கசந்திர வலையநூபுர சரணமென்பது மத்தளம்
நீளும்யாழின முன்கைகார்குழ னெற்றிவேடன தம்புரு
நிறுத்தினன்றொரு சற்றுடுக்கைநெ கிழ்க்கவேண்டுநின் சிந்தையே
நாளுநச்சின னுடைகத்தினி நட்டுவாவெனு மதிசயம்
நாட்டவாளினை சுழலுமுன்பல கூட்டவாள்சுழல் கின்றவே. ()

நேரிசைவெண்பா.

சுழல்காற்றை மாய்த்துஞ் சுடர்நெருப்பை யுண்டும்
நிழல்பார்த் திடபகிரி நின்றோன் - குழலூதிக்
கற்றூக் குவித்த கடவுளவ னேயனைத்தும்
பெற்றூக்கு வித்த பிரான். (ருக)

கூகூ-அடி நேரிசை ஆசிரியம்.

வித்தகர் கருத்துட் பத்தி பாய
நீலம் பழுத்த கோல மேனி
காற்கடன் முகந்த குற்புய லென்று
கதிரிளங் கொங்கைச் சதிரிள மங்கையர்
இயலுறு கலாப மயினட மாடக்
காயா மலர்விரி காயா வனமென
அரையா வல்லி வரையா மகளிர்
குழலிசை வண்டு குழலிசை பாட
அங்கையிற் றுங்குஞ் சங்கமுந் திகிரியும்
புதையிருள் சீக்கு மதிகதி ரென்ன
கவண்கலா லிசைசெய் சிவந்தவாய் மழலைக்
கொடிச்சியர் கண்போ லடிக்கடி சுனைதொறும்
பதுமச் செங்கா டிதழ்குவிந் தலர
இருவகைக் காந்தமும் பெருமுனி வர்க்குப்
புனலும் புகையாக் கனலுங் கொடுப்ப
வனந்திரி மேதி யினஞ்சொரி தீம்பால்
கங்கையிற் பரக்கப் பொங்குதேன் வெள்ளம்
சாம்புன தம்போன் மேம்படு சாரல்
சோலை மாமலை மேலினி தமர்ந்தோய்
அதிர்ந்துவெண் பரிக ளெதிர்ந்தவெண் றஞ்சி
பசும்பரி யேழும் விசும்பிடை மறுக
விரிதிரை கொழிக்கும் பரிபுர நதியோய்
மழுப்படைக் கடவுள் விழிக்குடை யாத
சித்தசர் கோடி யொத்தகட் டழக
சடைகொடு வேட்ட விடையுடை யவற்காப்
புரஞ்செற் றருளிய பரஞ்சுடர் மூர்த்தி
குருகூர் விளங்க வருசட கோபர்
வழுத்தவிர் நான்மறை விழுப்பொருள் பழுத்த
வாக்கெனு மமுதந் தேக்கிய வொருநீ
புவிமேற் சிற்சிலர் கவியுங் கொண்டனை
ஆங்கவை தமக்குப் பாங்கெனும் வளைகாய்ப்
புளியென மகிழ்ந்தனை போலும்
எளியேன் புன்கவி யேற்பதெத் திறமே. (இஉ)

குறம்.

எண்சீர்க்கழிலெடி லாசிரிய விருத்தம்.

ஏற்றபூங் கோதைகே ளிடபமால் வரையில்வா
ழிளங்குறப் பாவையான் விளங்குறப் பாவையும்
சாற்றுவேன் கண்ணார்முன் வெண்ணெயாக் குவியவே
தானடுக் குறிசொனேன் சயிலமா தினைமுதற்
போற்றினே னுழியின் னெல்லையுஞ் சங்கையும்
பூரியெட் டக்காஞ் சீரினிட் டெம்பிரான்
தோற்றுவார் வாக்குநன் கூழ்பெலங் கஞ்சியச்
சுதர்விடா ரம்பரத் துணிவையா யினியமே. (இங)

கைக்கிளை.

மருட்பா.

இனியஞ்ச னெஞ்சே யினியவிசை யேழும்
கனியாறு காலுமிரு காலும்—முனிவர்
தொழுதா ளழகர் சுரும்பில்
எழுபூ வாய்ந்த திவளணங் கலளே. (இச)

சித்து.

தாழிசை.

அலகைமாமுலை யுண்டகொண்டல்புள்
ளலகையன்றுப குந்தமா
லழகர்தாள்தெரி சித்தசித்தா
னுக்கிரகம்பெறு சித்தர்யாம்
சலனமேனொரு கடகநற்கரி
தனையழைப்பிமுன் னுகமா
தங்கமாக்குவெ மெய்தராவிடு
சந்தமிக்குயர் பணம்வரும்
இலகிரும்புத னைப்பொன்வெள்ளியொ
டேற்றுவோமுரை குறைபடா
தெடுத்ததாம்பிர மாழை மச்சநம்
மிரதவாதம தன்கையிற்

பலமருந்தறி வொருஞ்சொல்வோமதி
பசியவர்க்குப சரியையா
படியளப்பந மக்குமாவடை
பழவனம்பிரிய மப்பனே, (௫௫)

கட்டளைக் கலித்துறை.

அப்போத கத்துறை செந்திரு மார்பத் தழகர்பனைக்
கைப்போத கஞ்சொன்ன மாயரெக்காலங் கருணை செய்வார்
மெய்ப்போ தகநமக் கெந்நாள்வரும் வினை யென்றொழியும்
எப்போ தகமு மமதையும் போம்புக லேழைநெஞ்சே. (௫௬)

சம்பிரதம்

கச-சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஏழுலோ கமுமிக்க மண்டலத் தூடடைத்
திடுவோங் குணக்கு வெய்யோ
ரெமதிசை புகச்செய்வோ முத்தரத் தூடுபன்
னிருதிங்க ளெண்ணி விடுவோம்

வாழ்குகையு ளண்டரை யரம்பையரை நாரதனை
வரவழைப் போம் படர்கொடி
மருப்பங் கயங்கள்பல் குதிரைகுடை சுனையிலெழ
மாதேரை யடைய நினைவோம்

தாழ்வறும் புல்லையடு புலிசெய்வோந் திரணத்தை
யுந்திருத் தூணுக்கு வோம்
தருமெறும் பிதனைமத கரிசெய்வோந் துவரையைச்
சண்பகா டவியாக்கு வோம்

ஆழிநீர் முன்பொருப் பாக்குவோ மெய்யகலு
மாவிகள் வரப்பண்ணு வோ
மதிரகசி யங்களு மழகர்தாட் காளலா
வதிதெய்வ முன்விடுவ மே. (௫௭)

கலிவிருத்தம்.

விடலரு மறையினும் விடவ ராவினும்
நடமிடு மழகரெந் நாளி ரங்குவார்
தடமுலை பயிலொரு சரம் விடாமுனம்
அடன்மதன் விடுசர மனந்த கோடியே. (௫௮)

எண்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

கோடிதவ முயன்முனிவோர்க் கருள்பதத்தா மரையார்
குறியவரா கம்பெரிய நெடியவரா கமுமாய்
ஆடிரண சிங்கமுமா மெம்மான்பல் கலையோ
டம்புலிதாழ் கோட்டிடபத் தணிவரையைக் கண்டால்
மூடிருளைப் பொருதறுகண் மறலிகடா விடிலே
முடுகொருக டாமடங்கு மூன்றுகடா மடங்கா
தோடிவரக் குளிறிவெளி நியகளிறு வந்தே
யுறப்பிடரி னினைத்துலவும் பிறப்பிடர்மற் றிலையே (ருகூ)

தாழிசை.

இடர்களென்ற திரைகளாவி டிந்துதீரம் வீழவே
யெழுந்தபாவ சாகரத்தி னிடைமிதந்த திரணநான்
மடமைநெஞ்ச நாளிலே மகிழ்ச்சிகூர்ந்த தெம்பிரான்
மந்த்ரமூல சொருபகாந்தி யிந்த்ரநீல மல்லவோ
உடன்மறந்த மறவிராத னுறவிராத தறுகணு
ணெடுங்கவந்த னுவிபோயொ டுங்கவந்த நிருதரும்
திடமலைந்து விடமலைந்து தென்னிலங்கை வென்றவன்
திங்கள்குன்ற முத்திலங்கு நங்கள்குன்ற மாயனே. (சுo)

கட்டளைக் கலித்துறை.

மாய்கின்ற தேவர்க்கெ லாமண வாளர் வடிவழகர்
வேய்கின்றகுல்லையென் றேதரு வாரெங்கள் மின்கரும்பு
சாய்கின்ற பூவணை யாலைபொன் னேலையிற் றூவுங்கண்ணீர்
பாய்கின்ற சாறு குறுவேர் பிதுங்கிய பான்முத்தமே, (சுக)

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பாலிருந்த நீர்பிரிப்பீ ரொருநீ ருங்கள்
பங்கயத்தோன் றன்னுவைப் பாரா னென்கண்
போலிருந்தா ரையமெனை யும்பிரித்தா னிந்தப்
புண்ணியமுங் களையடையும் போமோ சொல்லீர்
சேலிருந்த கொடியோனைப் பெறுமால் சோலைச்
சிலம்பாற்றி னிறைதெவுட்டித் திரைமுத் துஞ்சல்
மேலிருந்து விளையாடிக் கமல வீட்டின்
மென்பேட்டி னுடன்செல்செங்கால் வெண்புள்ளீரே. (சுஉ)

பதினான்கு சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

புள்ளின்வாய்க் கிழித்தார் மருதிடந் தழித்தார்
பூதனை யாருயிர் கழித்தார்
புறஞ்சுழல் காற்றுண் டுதிரமொண் டிரைத்தார்
புரவியோ டிரவியை மறைத்தார்
துள்ளிய குயிலைப் பூத்ததே மாவைத்
தூற்றுமன் னையைச்சிறு காற்றைச்
சுடுமதி கோர மதியினை விடுத்தார்
தோன்றிய மதியையென் சொல்வேன்
விள்ளரும் பிலத்துட் பணிகளோ வென்று
விகங்க பூபதியெழக் கனகன்
வெங்குடர் பிடுங்கி யெறிந்துறங் கிழித்து
விடாய்க்குவெங் குருதிநீ ருறுஞ்சி
பிள்ளையைப் புரந்த வெள்ளெயிற் றகல்வாய்ப்
பெருங்குடற் சிங்கமெங் கணுந்தேன்
பெருக்கெறி சோலைப் பொருப்பலங் காரர்
பிறர்க்குப காரமொன் றிலரே. (அக)

கட்டளைக் கலித்துறை.

ஒன்றாகி மூன்று வடிவா யடியவ ருள்ளத்துள்ளே
நின்றாய் புறத்தும்புள் ளேறிவந் தாயெங்கு நீநிறைந்தாய்
நன்றாமுன் னுடல்பொன் னுடர்கை கூப்பிய நங்கள்குன்றிற்
குன்றா மரகதக் குன்றேந்து குணக்குன்றமே. (அச)

கலிவிருத்தம்.

குணசலதி யாமழகர் குலவரையின் முகில்காள்
மணமலரின் வண்டுநிகர் வன்கணர்பி ரிந்தார்
கணவரவர் நெஞ்சது கருங்கலல வோவென்
புனர் முலையில் வந்துவிளை பொன்னையுரை யீரே. (அரு)

மடக்கு
கொச்சகக் கலிப்பா.

சாமதிச் சோலைவரை யிறைவர்மதிச் சோலைவரை
சாரகவி மானமறூர் தாரகவி மானமறூர்
ஆரணந்தா மோதரனு ரயனுந்தா மோதரனுர்
சீரங்க மொழியாரோ தீயரங்க மொழியாரே. (அஅ)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மொழியு மினியீர் குழைவார்ந்தீர் மு,ந்த மிழச்செய்யுட்பயின்றீர், வழியு மாசா ரமுஞ்சிறந்தீர் மதுரக் கழைகாளினிக்கேளீர், பொழியுங் கொடையா ரழகர்வெற்பிற் புரரிக் கெதிர்போய்த் தழல்விழியால், அழியுங் காமன் பழிகாரனங்கே யிணக்க மாகாதே. (சுஎ)

நேரிசை வெண்பா.

அங்காப் பொழிய வருணனுக்குத் தேனருவி
அங்காப் பொழியேற் றசலமே—பங்கயமேல்
துங்கத் திருப்பிரியான் சுத்தத் தமிழ்ப்புலவர்
சங்கத் திருப்பிரியான் சார்பு. (சுஅ)

வஞ்சித்துறை.

சாரலங் காரமால்
சாரலங் காரமால்
நீரலங் காரமால்
நீரலங் காரமால். (சுகூ)

சந்தவிருத்தம்.

அலங்கார யமனும் புறஞ்சாய விதழ்மென்
றறுங்காது பொருகும்ப கனன்வீழா
இலங்கேசன் மகுடந் தகர்ந்தோட முனையம்
பெயுங்கார்மு கமன்முன்பென் மயல்கூறீர்
கலங்காம லாசன்முன் செலுங்காம துவசங்
களைந்தேவின் முதல்தின்று மகிழ்வாயே
சிலம்பாறு தனில்வந் திளம்பேடை குமுறும்
சிலம்போசை நறவுண்ட குருகாரே. (எ0)

நேரிசைவெண்பா.

காமனுர் வெள்ளைக் கருப்புவில்லே கீற்றுமதி
தாமவுடுச் சிந்து சரங்களே—ஆமாம்
வளைத்தெய் வசிகா மணிநிகரில் லாவெள்
வளைத்தெய் வசிகா மணி. (எக)

கட்டளைக்கலித்துறை.

மணியுந்தி யான நதிபாய் வனவெற்பன் மண்ணும்விண்ணும்
தணியுந்தி யானலங் காரனெங் கோவெனுந் தாமமென்னும்
பணியுந்தி யானந்த வேளென்னு நீலம் பசுங்குரும்பைக்
கணியுந்தி யான மிடுந்திசை பார்க்குமென் னாணங்கே. (எஉ)

நாரைவிடுதூது.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஆமா மலையிற் றோன்றி யங்கங்கோ டிச்செய் தீங்கால்
ஈமே வியதென் காற்று மிந்துவுஞ் சமனே கண்டீர்
வீமா லலங்காரர்க்கு விடவரா விடவ ராதோ
தீமே நாரை காணீர் செல்லுவீர் சொல்லுவீரே. (எங)

கட்டளைக் கலித்துறை.

சொல்லா ரணப்பொருண் மாலலங் காரர்தண் சோலைவெற்பில்,
வல்லா ரிளங்கொங்கை மங்கையெங் கேமனு நூல்வழியிற்,
செல்லாச் செலுத்தொரு கோல்போன் முடங்கிய தீங்கருப்பு,
வில்லானைங் கோல்வென்று முக்கோல் விழைந்திட்ட வேதியரே. (எச)

சந்தவிருத்தம்.

வேதாவெ னச்சொல்சுதர் பூமேல்வ ரத்தளரின்
மீதாம்வி சித்தர்மறை வேதாளர்
வாதாச னச்சயன ராராம வெற்பிறைவர்
வாராம லெய்த்ததுயர் சீராமா
சாதாரு ணத்ததல வேள்பூச லிப்பொழுது
தாரா மடைக்குருகு தூதாமோ
போதா வலைக்கறிவு போதாவெ னிற்பரிவர்
போதாம லர்த்துளவு போதாவே. (எரு)

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தாவுமன் புள்ளவர் மேவுமன் புள்ளவர்
தக்கதா மலையினர் மிக்கசே மலையின்மேல்
ஆவியுங் கூடுமா வோவியந் தேடுமே
வலகிலா வஞ்சன்முன் னுலகெலாங் கஞ்சமும்

காவியும் மகாமு நாவியுங் சிகாமுங்
காந்தளுஞ் சங்கமும் பாந்தருளுஞ் சிங்கமும்
கோவையு மாரமும் பூவையுங் கீரமுங்
கொஞ்சுமின் சொல்லுநீண் மஞ்சுமிண் வில்லுமே. (எசு)

நேரிசை வெண்பா.

மஞ்சுகா ளுங்களைப்போல் மாரன்பூ மாரிபெய்ய
விஞ்சியது பேராசை வெள்ளங்காண்—தஞ்சம்
வழுத்தீர் மதிச்செங்கண் மாலலங் காரர்க்கு
வழுத்தீர் மதிச்செங்கண் மால். (எஎ)

வஞ்சிவிருத்தம்.

செங்கண் மாயவர் சீபதி
மங்கை யாரிடம் வண்புனம்
கொங்கை யுங்கணுங் குதலையும்
அங் கரும்பினை யாகுமால். (எஅ)

தாழிசை.

மாலுநான்முகனு மானுமாமழகர்
மால் விடைச் சயில மயிலனீர்
நீலராமிறைவ ரின்னம்வந்திலர்கன்
னெஞ்சர்போலு மினியென்செய்வேன்
ஆலகாலம்வட காலதாகவெதி
ரம்புகாலவில் வளைத்ததால்
காலகாலர்கள மெனவிருண்டுபல
காறிறந்தமழை காலமே. (எகூ)

கட்டளைக்கலிப்பா.

மழையுறங்குத டஞ்சோலைமாமலை
வாணன்வாணன்க ரங்களைப்பூதங்கள்
விழையும்பாரவெ ழுக்களென்றேபற்றி
வீசுமாலும்பர் வேதாமவருக்கே
பழயநான்மறை சிங்காசனமலர்ப்
படுக்கைவீடுந டுக்கடல்வெண்ணெய்போல்
குழையுமன்பர்க ருத்தேயுபரிகை
குளிர்நிலாமுற்றங் கோகுலங்காணுமே. (அ0)

மடக்கு.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

குலமலையா யாவாழி கொடியவென்றன் சிந்தா
குலமலைமா யாவாழி கொடியமதி ளிலங்கை
நிலமலைய மாதவரி ஞனெறிந்தாய் மந்தா
நிலமலைய மாதவர்கை நின்னுமங் கண்டாய்
பலவருண வாரீச நயனமுழு நீலோற்
பலவருண வாரீசன் பயப்படவெற் பெடுத்து
நலவரிசைக் கவிகைபுனை காரேதென் குருகூர்
நலவரிசைக் கவிகைவிடா நளினமின்னு யகனே, (அக)

கலிநிலைத்துறை.

நளினவி லோசன ரழகர்பு லோமிசை நாதன்றன்
இளவலு மாயவர் மாயவர் வெற்பினி லிலையோகாண்
தளையவிழ் மல்விகை புல்லிய வண்டீர் தமியேன்போல்
வளைகலை நாண்மதி தோற்றிட நின்றே மருண்மாலை. (அஉ)

அறுசீர்க்கழிநெடில் லாசிரிய விருத்தம்.

மருதொடித்து விளவெறிந்து குருந்திலேறி
வடத்துறங்கிச் சோலைமலை வருமால் வெற்பில்
இருதலைப்புள் ளென்னவிருந் திமைப்புநீங்க
வெனைப்பிரிந்த பாதகர்நாட் டில்லைபோலும்
அருவிமத மிக்கனைமா தளைகடள்ளி
யடையலர்மாக் கோட்டையிடந் தாவிதேக்கித்
தெருவுதொறு மால்யானைக் கன்றுபோலத்
தென்றலிளங் கன்றோடித் திரியும் வேனில். (அங)

கட்டளைக் கலித்துறை.

திரியுங் கிரிக்கெதிர் சென்றோ ரழகர் திருமலைமேல்
பரியுங் கொடித்தடந் தேர்வல வாபரி போற்றிரைகள்
விரியும்புனற்கட லுண்டமை யாதுநம் மின்கொடிகண்
சொரியும் புனற்கடற் கோடுதல் பார்நுண் டுளிப்புயலே. (அச)

நேரிசை வெண்பா.

புயல்பார்க்குஞ் சாதகமே போன்றேன்பொன் னுட்டின்
இயல்பார்க்குஞ் சேமலைமே லெந்தாய்—தயையின்
நிலையா திருக்கவரு ணேயா மிடிதீர்த்
தலையா திருக்க வருள். (அரு)

வலைச்சியார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அலைகடலி னடுத்துயிலு மழகர்நாட்டி
லஞ்சொலெலாங் குளமாக வஞ்சனக்கண்
வலையெறிவீர் பொய்கைவிட்டென் னுவிதாங்கும்
வாலாறு கேளுமச்ச மருங்குநில்லும்
கலைமதியோ டாரலலர் வெளிச்சைமீறுங்
கவலைமுன்னீ ரிரையேர்க்குங் கனகருப்பம்
சிலையருவ ரால்மலங்கு படுதல்பாருந்
திருக்கைவையு மழைச்சுறவைத் தேடுவீரே. (அசு)

கோற்றியார்.

எண்சீர்க்கழிநெடி லாசியவிருத்தம்.

தெடுதமிழ் வடிவழகர் நெடியவிடை மலைமேற்
சிறியவிடைப் பெரியவிடைத் திருக்குலத்தி னமுதே
கூடுகின்ற வெண்ணெயொடும் வேனிலா னெய்யுங்
குறைவிலைவிற் போரதிகங் கொண்டதெழு படிகாண்
நாடறிந்த ததிமோக முறையிணக்கம் வையு
நவமணிசேர் பொன்னுழி நல்குவேன் மெல்ல
ஆடைதனை யொதுக்கிடுமென் பால்வாரு மிச்ச
மாமுழக்கு மோர்போது மகலேனந் தமையே. (அஎ)

தாழிசை.

நந்தனந்தன வென்றுகார்தனை நங்கைசெங்கைமு கிழ்க்குமின்
நளினமாதென விகலுமாரனை நமதுசாபம்வி டாதெனும்
சந்த்ரசூரியர் தங்களைச்செய சங்குசக்ர மெனத்தொழும்
சலதியாடுதல் யமுனைமூழ்குத றவமெனுந்தலை நாளிலே

ஐந்தலைப்பணி யுந்தருப்பையு மாகிலேனெனும் வேணுவா
யமுதமுண்டுயர் வம்சமானத திட்டமேயெனு மாசைநோய்
மந்திரத்தில ருதுதீர்க்குநின் வாசம்வீசிய துளவுகாண்
வாசவன்பதி பாவுசீபதி வாசசுந்தர ராசனே. (அஅ)

சுரம்போக்கு.

கட்டளைக் கலித்துறை.

சுந்தரத் தோள ரழகர்நன் னுட்டன்னத் தூவியந்தாள்
மந்தரத் தீஞ்சொற் கிளிசெல்லு மோசக்ர வாளஞ்சுற்றி
அந்தரப் பானுவு மோடச்செந் தீயுநெட் டாழிவிழக்
கந்தரத் தன்குளக் கண்போற் கொதிக்குங் கடுஞ்சுரமே. (அகூ)

பிச்சியார்.

மடக்கு - எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மேதினிபோற் றழகர்மலைத் திருப்பிச்சி யாரே
வெளிப்பட்டீர் முனிவர்மலைத் திருப்பிச்சியாரே
கோதுபடு குழல்போக விளங்குதலைச் சுகமே
கொள்ளைகொண்டீ ரிங்குவர விளங்குதலைச் சுகமே
காதிலிட்ட செம்பணியு நடுக்காவி யுடையும்
கபாலமுஞ்சூ லமுங்கண்டே நடுக்காவி யுடையும்
ஆதரியு முங்கள்சிவ மதவேடந் திரமே.
யறிவீரே யன்றெதிர்த்த மதவேடந் திரமே. (கூ0)

நேரிசை வெண்பா.

மதுசூத னுமுகுந்தா வாமனா மாயா
அதிருபா ராமா வழகர்—எதுவீரா
வெண்ணந் துளவா விமலா மகலாட்சா
தண்ணந் துளவா சரண். (கூக)

பதினான்குசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சரணகோ கனகங் கற்பக நாறத்
தண்டுழாய் முடிபரி மளிக்க
சங்குநே மியும்வெண் ணிலாவெயி லெறிக்கத்
தமனியத் துகில்பள பளக்க
மரகத மேனி யெழில்பழுத் தொழுக
மகரகுண் டலம்புயத் தலம்ப
வனசலோ சனங்க ளருண்மழை பொழிய
வந்தநின் கோலநான் மறவேன்
திரண்முலைக் கிராத நுணுகிடைக் கிராத
சிறுமிகள் முகமதி யெனவாய்
திறந்தவாம் பலையும் பறந்தவண் டையுஞ்செந்
தீயெழு புகையெனப் பதறி
விரனெரித் தடங்கா விழிபுதைத் தோடி
வெண்பளிக் கறைகுடி புகுங்கா
வெற்பலங் காரா வுற்பலங் காரா
மெய்யனே தெய்வநா யகனே. (கூஉ)

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

தெய்வசிகா மணியையெங்கள் சாரசோர
சிகாமணியைக் கண்மணியிற் சிறந்தோன்றன்னை
ஐவர்சகா யனைமுதலுந் தும்பியன்றோ
வழைத்ததின்னந் தும்பிகளே யழைத்துவாரும்
கைவருபந் தாடுமணி முற்றமெல்லாங்
கமழ்பனிநீ ரிறைத்திறைத்துக் கழுநீர்போலும்
மைவிழியார் குளமாக்கி விட்டாரென்ன
வன்பகையோ பொருமுதலை வளர்கின்றாரே. (கூங)

எழுசீர்க்கழிநெடில் சந்தவிருத்தம்.

வளங்குலவு தண்டலைநெ டுங்கிரிமு குந்தர்நல்வ
ரந்தினம்வ ழங்கழ கர்தாம்
இளங்குதலை கொஞ்சியப சுங்கிளிகள் கெஞ்சியுமி
ரங்கியினம் வந்தில ரையோ

உளங்கரையு மென்சொலமு னஞ்சமன டுங்கிடவு
தைந்தவர்வெ ருண்டு சுடவே
களங்கமற வெந்தும தன்சடல மென்றனர்க
ரும்புகையொ ழிந்த தலவே. (கச)

(இரங்கல்—மடக்கு)

பன்னிருசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அலமேந் தழகர் பதிச்சுனையே
யாடு மேமெய்ப் பதிச்சுனையே
யணில்வாற் கதிர்போ மருந்தினையே
யகன்றே மேய மருந்தினையே
குலவஞ் சுகமே கோகிலமே
கொம்பிற் புனத்திக் கோகிலமே
கூட வளர்மா தவிப்போதே
கொடியார்க் கென்மா தவிப்போதே
கலைமுன் பிரியக் கணக்கன்றே
கரும்பைப் பிரியக் கணக்கன்றே
கணியார் காட்டு மருவலரே
கணியார் காட்டு மருவலரே
சலதி முகக்கு முகமஞ்சே
தனித்தே நிமிட முகமஞ்சே
தைய லொதுங்கும் வரவழையே
தயையுண் டானல் வரவழையே. (கரு)

அ க வ ல்.

வரம்பெற் றிடுதலி னருந்தவக் கிழவரும்
கண்டகரை யடர்த்தலின் மண்டலத் தாசருங்
கற்பக மண்டலிற் கனக நாடருங்
கானமு ழக்கலி னனகந் திருவரு
மெழுதரு மறைகள்கூ றிடலால் வியாதனும்
போதக மோதலிற் புராணவே தியரும்
சாந்தமுற் றிடுதலிற் றனிஞா னிகளும்
மான்மத மடுத்தலின் வைணவக் குரவரும்
நவமணி விரித்தலி னன்ன வலரும்

அன்னம் வழங்கலி னகவாழ்க் கையரும்
செம்பொ னீட்டலிற் றிருப்பாற் கடலும்
அச்சங் களைதலி னமுதசஞ் சீவியும்
பூமிதந் திடுதலிற் புண்ட ரீகனும்
பொங்க ருளைதலிற் பூவை வண்ணனும்
அம்பிகை கலத்தலி னந்தி வண்ணனும்
பொருமலை யெறிதலிற் புலோமிசை கொழுநனும்
அகிலங் காட்டலி னலர்கதிர் ஞாயிறும்
முத்தமிழ் துதித்தலின் முழுமதிக் கடவுளும்
சிவணுங் கடவுட் சிலம்பாற் றிறைவ
இருபது சிகரத் தெண்ணிலாச் சிகரப்
பொன்மலை வளைத்த செம்மலை யேந்தும்
வெண்குன் றெடுத்த கருங்குன் றொருநாண்
முழைவாய் திறந்து மழைபோ லிடித்து
முடுகுசெங் களத்துக் கொடுமரம் வாங்கி
யடுசம ராட நடுநடு நடுங்கி
கொடுமுடி கவிழ்தலிற் குறுநகை பூத்து
நாளைவா வின்றுன நீள்பதிக் கேகென
விடைகொடுத் தருண்மால் விடைமலை வாண
உந்திக் கமலத் துச்சிவிட் டிறங்கி
கருத்திற் றெளிந்த காகநீ ராட்டிக்
கண்டகண் போற்குளிர் தண்டுழாய் சாத்தி
இசைமக ளுடன்றுதித் தெண்ணில் கோடி
பிரமர் போற்றிய பரம சாமீ
அளவறு பிறைகளுப களனுறு கறைகளுங்
கணக்கிலா மழுக்களும் குணக்கிலாக் கழுக்களும்
உடையார் புலித்தோ லுடையா ரிடையார்
அலகிலா வுமைகளு மிலகுபன் னதிகளும்
பதிகொ ளத்தனூர் குதிகொண் மத்தனூர்
வீரபத் திரன்முதற் கோபுரத் திரரொடு
மனந்த முருத்திரர் தினந்தினந் தொழுதிடுந்
திருவடி யுடைய பிரம மூர்த்தி
ஒருவிண் ணப்பமுன் பெருமுனி பின்னர்
நம்பிநன் னிழலிற் றம்பின் தொடரச்

செஞ்சிலை யொடும்போய்க் கருஞ்சிலை மிதித்து
மின்னிள மேகமும் வில்லும் பிறையும்
அரவிந் தமுமரங் கதிற்சில பூவும்
சங்கமுந் திகிரியும் பங்கய முகுளமுங்
காந்தளுங் கொடியும் பாந்தளுங் கதலியும்
மாவிளந் தளிரும் வகுத்தனை மீண்டும்
புன்மதி யுடைய வென்மனப் பாறையை
நற்பதப் படுத்தி யற்புதம் விளைக்கும்
கண்ணநீ யுண்ணக் கவர்ந்த
வெண்ணெய் செய்து விடுவதுன் கடனே. (கூசு)

பரண்.

வெண்ணெய்ஞறை கொண்டகொண்டன் மேனிமாயர் வனகிரி
விறலியென்ற கோகிலத்து மென்பெடைக்கொர் சேவல்கேள்
பண்ணுமிங்கி தங்குடைந்து பாணர்தம்மை வென்றபின்
பாதகற்கு மருமையோவோர் பாணநின்னை வெல்வது
வண்ணமார் பெழுந்தகொங்கை கிண்ணமென்ப துமெயா
வந்துபா னிறைந்ததுண்மை மதலைபால னென்பதும்
எண்ணையீது பசுநரம்பெ னும்கொடிக்கு விட்டநீ
ரேற்குமோ வளர்க்கும் யாழின் வீக்குகாய நிம்பமே. (கஎ)

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

(இரங்கல்)

காயரன் பிரமன்முத லோர்தொழுஞ் சனகர்நிமிர்
காளமஞ் சனவழகர் மா
மாயரம் புவியுநவ நீதமுங் கமழ்பவள
வாயர்கண் டிலர்கொ லளிகாள்
பாயும்வெம் புலிபொருத மாமனென் பவன்விடுமோர்
பாறைநெஞ் சினள் சிகரகேர்
ஆயகொங் கையிலொழுகு பால்பரந் தெனவிரிய
கோர சந்திர கிரணமே. (கூஅ)

சந்தவிருத்தம்.

சந்தன நிழற்குளிரு வந்ததகை தீரச்
சந்த்ரமுகி யேகவியு மிந்த்ரதரு மானும்
மைந்தலை யாவில்வரு மழகர்பழ மறைதே
டரியமுனை யார்முளரி தெரியமுனை போல
வந்தருணம்வைகையிது பொய்கையிது முத்தின்
வண்டலிது கொண்டறவழ் மண்டபமி தல்லாற்
செந்திருநன் னகரமிது சிகரமிது சோலைச்
சிலம்பிடைசி லம்பியசி லம்புநதி யிதுவே. (கக)

கட்டளைக்கலித்துறை.

நதிபெற்ற பாதர் மலையலங் கார்நன் னுட்டணங்கே
கதிபெற்ற னன்னந்த மீகாமன் காமன் கழைகழையே
பதிபெற்ற வவ்வங்க மிவ்வங்கஞ் சங்கம் பலித்ததங்கே
துதிபெற்ற முத்தங் கிடைத்ததொப் பேதுன் சுகக்கடற்கே. (ஈ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சுகமும் பிகமும் மறையோதும் சோலை மலையி லலங்காரர்
இகமும் பரமும் வகுத்தபிரா னெல்லாப் பதமும் தரவாழ்வீர்
மதகமுந் தவமுஞ் செய்ததொக்கும் மானந் தனைக்கும் பிடுவானு
செகமும் பரவுஞ் சிலம்பாற்றுத் திருநீர் படியு மொருநீரே.

அழகர்கலம்பகம்

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

அழகரந்தாதி.

நீராழிவண்ணனைப்பாலாழிநாதனைநின்மலனைச்
சீராழியங்கைத்திருமகள்கேள்வனைத்தெய்வப்புள்ளூர்
கூராழிமாயனைமாலலங்காரனைக்கொற்றவெய்யோ
னோராழித்தேர்மறைத்தானையெஞ்ஞான்றுமுரைநெஞ்சமே. (க)

உரைமாற்றமுண்டென்பொறியைந்துமுன்னிடத்தன்றியுண்ணு
மிரைமாற்றவேண்டுமிதுவேயென்விண்ணப்பமென்னப்பனே
யுரைமாற்றளவற்றபொன்னுடுத்தாய்வில்லெடுத்திலங்கை
வரைமாற்றலரைச்செற்றுயழகாகருமாணிக்கமே. (உ)

மாணிக்கனகம்புரைமேனிமாலுக்குவார்சடையோன்
பாணிக்கனகம்பலியொழித்தானுக்குப்பச்சைத்துழா
யாணிக்கனகமுடியலங்காரனுக்குக்கண்டமெல்லாம்
பேணிக்கனகனுக்குப்பித்தானவர்பித்தரன்றே. (ங)

பித்தரும்பாநின்றநெஞ்சனைவஞ்சனைப்பேருலகோர்
கைத்தரும்பாவியெனுங்கடையேனைக்கடைக்கணியாய்
முத்தரும்பாருந்தொழுமழகாவண்டுமுசுந்துழாய்ப்
புத்தரும்பார்முடியாயடியாரைப்புரப்பவனே. (ச)

புரந்தரனுமெனப்பூபதியாகிப்புகர்முகமா
துரந்தரசாளிலென்னல்குரவாகிலென்றெல்புவிக்கு
வரந்தாமாலிருஞ்சோலைநின்றார்க்கென்மனத்தினுள்ளே
நிரந்தரமாயலங்காரர்க்கிங்காட்டப்பட்டுநின்றபின்னே. (ரு)

நின்றபிரானன்கழலுமுன்னே நெஞ்சமே நினையாய்
சென்றபிராயம்வம்மேசென்றேதாற்றிருமங்கைகொங்கை
துன்றபிராமனைசசுந்தரத்தோளனைத்தோளின்மல்லைக்
கொன்றபிரானையடைந்தடியாரொடுங்கூடுகைக்கே. (சா)

கூடுகைக்குஞ்சமரத்தடியேற்குக்கொடியவஞ்சஞ்
சாடுகைக்குஞ்சரணந்தரவேண்டுந்தடத்தழுந்தி
வாடுகைக்குஞ்சரங்காத்தீர்வின்வாழ்க்கைக்கும்வாளகக்கர்
வீடுகைக்குஞ்சரங்கோத்தீர்விடைவெற்பின்வித்தகரே. (ஏ)

வித்தகரும்பர்க்கரசானவனும்விதியுங்கங்கை
மத்தகரும்பரவும்மலங்காரர்மழைகொண்டகா
ரொத்தகரும்பரஞ்சோதியர்நாமமுரைத்தன்னைமீ
ரித்தகரும்பரதெய்வமுங்கூத்தும்விட்டேத்துமினே. (அ)

ஏத்துமின்பத்தியினாலெட்டெழுத்துமினையடிக்கே
சாத்துமின்பத்திரத்தண்ணந்துழாய்மதிதாங்கிக்கஞ்சம்
பூத்துமின்பத்திசெய்யும்பச்சைமாமுகில்போலழகர்
காத்துமின்பத்திலிருத்தியும்வைப்பர்கருணைசெய்தே. (கூ)

செய்தவராகவருந்தியுந்தீர்த்தத்துறைபடிந்துங்
கைதவராகமங்கற்றுமென்னுங்கடற்பார்மருப்பிற்
பெய்தவராகனைமாலலங்காரனைப்பேரிலங்கை
யெய்தவராகவவென்றேத்தநீங்குமிருவினையே. (கo)

வினைக்குமருந்தரிக்கும்பிணிமூப்புக்கும்வீகின்றவே
தனைக்குமருந்தன்னதாளழகாசெய்யதாமரையங்
கனைக்குமருந்தமுதேயருளாய்நின்னைக்காதலித்து
நினைக்குமருந்ததிதன்னுயிர்வாழ்க்கைநிலைபெறவே. (கக)

நிலையாமையானவுடலுமுயிருநினைவுந்தம்மிற்
கலையாமையானங்கலக்குமுன்னேகங்கைவைத்தசடைத்
தலையாமையானனன்றுமரையான்றொழுந்தாளழக
னலையாமையானவன்மாலிருஞ்சோலையடைநெஞ்சமே. (கஉ)

நெஞ்சமுருக்குமுயிருக்குந்தொல்லைநீள்வினையின்
வஞ்சமுருக்கும்பவமுருக்கும்வண்டுழாயழகர்
கஞ்சமுருக்குமலர்வாய்த்திருநண்பர்கஞ்சனுக்கு
நஞ்சமுருக்குவளையாழியன்னவர்நாமங்களே. (கங)

நாமங்களாவிநழுவுந்தனையுநவின்றவரைத்
தாமங்களாவிமனத்துள்வைப்பார்தண்டலையினகிற்
றூமங்களாவிமணநாறுமாலிருஞ்சோலையன்பர்
சேமங்களாவின்கனியனையார்பதஞ்சேருவரே. (கச)

சேராதகாதநரேகேழ்தலைமுறைசேர்ந்தவர்க்கும்
வாராதகாதம்வசைபிணிபாவமறிகடன்முன்
றூராதகாதங்கடீர்த்தானைமாலிருஞ்சோலையிற்போ
யாராதகாதலுடன்பணிவீரென்னழகனையே. (கரு)

அழக்கன்றியகருங்கண்ணிக்குக்கண்ணியளித்திலரேல்
வழக்கன்றிமுன்கொண்டவால்வளைகேளுமறுத்ததுண்டேற்
குழக்கன்றின்பின்குழலூதலங்காரர்க்குக்கோதைநல்லீர்
சழக்கன்றில்வாய்பிளந்தாலுய்யலாமென்றுசாற்றுமினே. (கஅ)

சாற்றுக்கரும்பனைக்கூற்றென்னுமாசைத்தமிழ்மலயக்
காற்றுக்கரும்பனையுங்கண்படாளலங்காரற்கண்ட
ரேற்றுக்கரும்பனையக்கொங்கையாள்கொண்டவின்னலுக்கு
மாற்றுக்கரும்பனையல்லாதுவேறுமருந்தில்லையே. (கஎ)

மருந்துவந்தார்தொழுமாலிருஞ்சோலைமலையழக
ரருந்துவந்தாரணியென்றயின்றூடலாயிரவாய்
பொருந்துவந்தார்பணிப்பாயார்விதுரன்புதுமனையில்
விருந்துவந்தாரடியார்க்கில்லைநோயும்வெறுமையுமே. (கஅ)

வெறுத்தவரைக்கஞ்சனைச்செற்றுளார்விடைவெற்பற்வெங்கட்
கறுத்தவரைக்கஞ்சலென்றுவந்தார்கனகாம்பரத்தைப்
பொறுத்தவரைக்கஞ்சனமேனிக்காவிபுலர்ந்துருகிச்
சிறுத்தவரைக்கஞ்சங்கூப்புமென்பேதைக்கென்செப்புவதே. (கக)

செப்போதனஞ்செழுந்துப்போசெவ்வாயென்றுசேயிழையார்க்
கொப்போதனஞ்சுருகித்திரிவீர்கனலூதைமண்வி
ணப்போதனமென்றமுதுசெய்தாரலங்காரர்பொற்றூ
ளெப்போதனந்தறவிர்ந்தேத்தநீங்களிருக்கின்றதே. (உ0)

இருக்கந்தரத்தனைவோர்களுமோதியிடபகிரி
நெருக்கந்தரத்தனையேத்தநின்றானைநிறத்ததுப்பி
னுருக்கந்தரத்தனைத்துன்பொழித்தானையுலகமுண்ட
திருக்கந்தரத்தனையல்லாதெண்ணேனொருதெய்வத்தையே. (உக)

தெய்வம்பலவவர்நூலும்பலவவைதேர்பொழுதிற்
பொய்வம்பலவென்றுதோன்றும்புல்லோர்கட்குப்போதநல்லோ
ருய்வம்பலனுமவனேயென்றோதியுணர்வர்நெஞ்சே
கொய்வம்பலர்சொரியுஞ்சோலைமாமலைக்கொண்டலையே. (உஉ)

கொண்டலையாநிற்குமைம்புலக்கோண்மகரங்களினீர்ப்
புண்டலையார்பிறவிக்கடன்மூழ்குவருத்தமனைத்
தண்டலையார்திருமாலிருஞ்சோலைத்தனிச்சுடரைப்
புண்டலையால்வணங்காரணங்கார்வினைபோகவென்றே. (உங)

என்றுதரங்கலந்தேனற்றைநான்றுதொட்டிற்றைவரை
நின்றுதரங்கிக்கின்றேற்கருள்வாய்நெடுங்கான்கடந்து
சென்றுதரங்கக்கடறூர்த்திலங்கையிற்றீயரைக்
கொன்றுதரங்குவித்தாய்சோலைமாமலைக்கோவலனே. (உச)

கோவலன்பார்ப்புடன்கேகயஞ்சூழ்குளிர்சோலைமலைக்
காவலன்பாற்கடற்கண்டுயின்மாமலங்காரனென்றே
பாவலன்பாற்பணிவாரணிவானவராகிமறை
நாவலன்பார்ப்பதிநாதனண்ணுப்பதநண்ணுவரே. (உரு)

நன்னினனுகமுடிமேனடித்தென்னைநாசமறப்
பண்ணினனுகமும்பாருமளந்தனபண்டுதம்பி
மண்ணினனுகவனம்போயினவளர்சோலைமலைக்
கண்ணினனுகங்கரியான்சிவந்தகழலிணையே. (உசு)

கழலப்புகுந்தவளையறியாரென்கருத்தறியா
ரழலப்புகன்றொறுப்பாரன்னைமாரறுகாற்சுரும்பு
சுழலப்புணைந்ததுழாய்மார்பர்மாலிருஞ்சோலையென்னார்
தழலப்புவரென்றனங்கவிலேசந்தனங்களென்றே. (உஎ)

தனத்துக்காவியவேல்விழிக்கேக்கற்றுத்தையலாற்
றினத்துக்காகித்திரிவார்பலர்சிலர்செங்கமல
வனத்துக்காசலங்காத்தாற்குச்சோலைமலையினின்ற
கனத்துக்காவணையாற்கெம்பிராற்குள்ளங்காதலரே. (உஅ)

காதலைப்பத்தினிமேல்வைத்தநீசக்கருநிருதன்
மாதலைப்பத்தியைமண்ணிலிட்டாய்நின்னைவாழ்த்தித்தொண்டர்க்
கீதலைப்பத்தியைச்செய்வோர்கள்வாழுமிடபவெற்பா
தீதலைப்பத்தியங்கித்திரிவேற்கருள்செய்தருளே. (உகூ)

அருடருமங்கைவிடாதேத்துமன்பருக்கன்பரெல்லி
லிருடருமங்கையெறியாழியாரிசைக்கின்னரருங்
கெருடருமங்கையரும்வாழிடபகிரியிற்கல்லா
முருடருமங்கையலெய்திலன்றேயவர்முத்தரன்றே. (௩௦)

முத்தரன்றேநின்கழலொருகாற்கைமுகிழ்க்கப்பெற்றோர்
பித்தரன்றேநினக்கேபித்தராகிற்பிரமன்கங்கை
வைத்தரன்றேய்துயர்தீர்த்தாய்நின்சோலைமலைமருவும்
பத்தரன்றேபரிவாலென்னையாளும்பரமர்களே. (௩௧)

பரந்தாமரைத்திருமாலிருஞ்சோலைப்பரமரைக்கால்
கரந்தாமரையன்னகார்நிறத்தாரைக்கடல்கடக்குஞ்
சரந்தாமரைதிரிகான்போயிலங்கைத்தலைவன்பத்துச்
சிரந்தாமரைக்கணத்தெய்தாரையெய்தற்குத்தேர்மனமே. (௩௨)

தேராயிரவுபகலிரைதேடுவைதீமைநன்மை
பாராயிரங்குவைபாவையராற்பண்டுமாவலிபாற்
சோராயிருந்தவனைத்திருமாலிருஞ்சோலைநின்ற
பேராயிரமுடையானைநெஞ்சேயென்றுபேணுவையே. (௩௩)

பேணிக்கவித்தவரைக்குடையாய்பெரியோர்பதின்ம
ராணிக்கவித்ததமிழ்மாலைகொண்டாயழகாகரிய
மாணிக்கவித்தகமாமலையேவண்டுளவுக்கல்லாற்
பாணிக்கவித்தடங்காதுவெங்காமப்படர்கனலே. (௩௪)

படராகுவால்குவியக்குழலுதியபாலரைய
மடராகுவாகனன்றுதைக்கிட்டாரலங்காரர்துழாய்க்
கிடராகுவார்பலர்காண்டமியேனையெரிப்பதென்னீ
விடராகுவாய்க்கொண்டுடல்சுட்டுக்கான்றிட்டவெண்டிங்களே (௩௫)

திங்களப்பாநின்றசெந்தீக்கொழுந்திற்செழுஞ்சங்குபோ
லுங்களப்பாவையுருகுவதோர்கிலரும்பரெல்லா
மெங்களப்பாவெமைக்காவாயெனவுலகீரடியா
லங்களப்பான்வளர்ந்தார்சோலைமாமலையாதிபரே. (௩௬)

ஆதியாவிற்றுயிலலங்காராழகான்பாம்
வேதியாவுதிவீற்றிருப்பாரண்டமீதிருக்குஞ்
சோதியாவின்பின்போந்தாரையன்றித்தொழேனுடலைக்
காதியாவினும்பொன்மாமகுடங்கவிக்கினுமே. (௩௭)

கவித்தானைமன்னற்குநட்பாய்முடிகவித்தானையன்று
புவித்தானைவற்றப்பொழிசாத்தானைப்பொருதிலங்கை
யவித்தானைமாலிருஞ்சோலைநின்றுனையழகனைமுன்
றவித்தானைவாவெனவந்தானைப்பற்றினென்றஞ்சமென்றே. (௩௮)

தஞ்சந்தனமென்றுதேடிப்புல்லோர்தையலார்கடைக்கண்
வஞ்சந்தனங்கொள்ளவாளாவிழப்பர்மதியுடையோர்
செஞ்சந்தனப்பொழின்மாலிருஞ்சோலைத்திருநெடுமா
னெஞ்சந்தனக்குவப்பாகநல்காநிற்பர்நேர்படினே. (௩௯)

நோயவேதனைநெஞ்சிடந்தாய்நெடுஞ்சோலைமலைக்
காராயவேதனைமுன்படைத்தாய்நின்கழற்குத்தொண்டென்
றாராயவேதனைப்புன்பிறப்போயுமவாவழியிற்
பேராயவேதனையில்லுழைப்போரும்பிழைப்பர்களே. (௪௦)

பிழைத்தலையானெண்ணிப்பேசுகின்றேனிப்பிணிமற்றொன்றுன்
மழைத்தலைவார்குழலீர்தணியாதுவருணனைமு
னழைத்ததலையங்கடைத்தாரலங்கனலகீர்
முழைத்தலைநின்றுமலயாநிலம்வந்துமோதுமுன்னே. (௪௧)

மோதாகவந்தனைமூட்டிலங்கேசன்முடிந்துவிண்ணின்
மீதாகவந்தனைவில்லெடுத்தேவிடைவெற்பினின்ற
நாதாகவந்தனைச்செற்றுயுனையன்றிநான்மறந்துந்
தீதாகவந்தனைசெய்யேன்புறஞ்சிலதேவரையே. (சஉ)

தேவரையாதன்மனிதரையாதல்செழுங்கவிதை
நாவரையாமனவிலுகிற்பீர்நம்மையாளுஞ்செம்பொன்
மேவரையானையிருஞ்சோலைவேங்கடமெய்யமென்னு
மாவரையானையொருவனையேசொல்லிவாழுமினே. (சங)

வாழுமின்பங்கயச்சுந்தரவல்லிமணாளன்வெற்பைச்
சூழுமின்பந்தித்ததொல்வினைதீர்ந்துய்யத்தொங்கல்சுற்றுந்
தாழுமின்பஞ்சணைமேன்மடவார்தடமாமுலைக்கே
வீழுமின்பங்கருதித்துன்பயோனியில்வீழ்பவரே. (சச)

வீழமராமரமெய்தார்மதிதவழ்வெற்பைநெஞ்சே
தாழமாடச்சமன்குறுகானிச்சரீரமென்னும்
பாழமாமற்பரகதியேற்றுவர்பார்க்கில்விண்ணோர்
வாழமராவதியுந்நரகாமந்தமாநகர்க்கே. (சரு)

நகரமுனுடும்புரந்தவர்நண்ணலரால்வனமுஞ்
சிகரமுனுடுஞ்சிறுமைகண்டோமஞ்ஞைதேனிசைகள்
பகரமுனுடும்பனிச்சோலைவெற்பினிற்பார்க்குக்கஞ்சன்
றகரமுனுடுகைத்தார்க்கறிந்தீர்கள்சரண்புகுமே. (சசு)

சரணியனுகத்தனைநினைந்தாரைத்தன்போலவைக்கு
மாணியனுகத்தணையானரங்கனழகனெங்கோ
னிரணியனுகமிடந்தான்கதையன்றியீனர்தங்கண்
முரணியனுகத்தும்புன்குரலோரிமுதுக்குரலே. (சஎ)

முதுவிருந்தாவனத்தானிரைமேய்த்தவர்முன்விதுரன்
புதுவிருந்தானவர்மாலலங்காரர்பொலங்கழலா
மதுவிருந்தாமரைக்களாயிரார்க்குமதிநுட்பநூ
லெதுவிருந்தாலுமதனுல்விடாவிங்கிருவினையே. (சஅ)

வினையாட்டியேன்கொண்டவெங்காமநோய்வெறியாட்டினுமிச்
சினையாட்டினுந்தணியாதன்னைமீர்செய்யபூங்கமல
மனையாட்டிநாயகன்மாலிருஞ்சோலைமலைச்சிலம்பாற்
றெனையாட்டிவாருஞ்சொன்னேனெந்தநோயுமெனக்கில்லையே. (௪௯)

எனக்காவியங்குமுடலிங்குமாகியிருப்பதைச்சந்
தனக்காவியங்குந்தமரவண்டூர்சொல்லுந்தத்துவநூல்
கனக்காவியங்கவிவல்லோர்புகழலங்காரனுக்கு
வனக்காவியங்கண்ணிமாமலராண்மணவாளனுக்கே. (௫௦)

மணவாளராவிநிகர்திருமாதுக்குமாலழகர்
பணவாளராவிற்கண்பள்ளிகொள்வார்திருப்பாதமெண்ணக்
குணவாளராவிரின்யேபுயிர்காளும்மைக்கூற்றுவனார்
நிணவாளராவியறுக்குமப்போதுநினைப்பரிதே. (௫௧)

நினைப்பரியாயெளியாயும்பர்யார்க்குநின்னன்பருக்கும்
வினைப்பரியானவன்வாய்பிளந்தாய்வியன்சோலைமலை
தனைப்பரியாநின்றதாளழகாமுற்சனனத்துள்ளு
முனைப்பரியாமலன்றோபரித்தேனிவ்வுடலத்தையே. (௫௨)

உடலம்புயங்கத்துரிபோல்விடுமன்றுவணப்புள்ளி
னடலம்புயமிசைநீவரவேண்டுமையானனற்கு
மடலம்புயற்கும்வரந்தருஞ்சோலைமலைக்கரசே
கடலம்புயர்வரையாலடைத்தாயென்னைக்காப்பதற்கே. (௫௩)

காப்பவனந்தமலரோனையுங்கறைக்கண்டனையும்
பூப்பவனந்தாம்போக்கவைப்பான்புனல்பார்விசும்பு
தீப்பவனந்தருந்தெய்வசிகாமணிசேவடியை
நாப்பவனந்தப்புகழ்வார்க்கொப்பில்லைநவகண்டத்தே. (௫௪)

கண்டாகனன்கண்ணனல்லாற்கதியின்மைகண்டடைந்த
துண்டாகனம்பவொட்டாதுங்கவூழ்வினையுண்மையறிந்
தண்டாகனவண்ணனேயருளாயென்றழகனுக்கே
தொண்டாகனன்னெஞ்சினுலுரைப்பீர்பிறர்தொண்டர்களே (௫௫)

தொண்டுபடார் திருமாலிருஞ்சோலையிற்சோதிக்கன்பு
கொண்டுபடாமலரிட்டிறைஞ்சார்மடக்கோதையரைக்
கண்டுபடாமுலைதோயனுராகங்கருதியிரா
வுண்டுபடாநிற்கும்போதுநைவாரெங்ஙனுய்வதுவே, (ருசு)

உய்வந்தொழும்புசெய்தென்றிருப்போமையுய்யாமலைவர்
பெய்வந்தொழுவினைக்கேயென்பராற்பெருந்தேன்சிகரந்
தைவந்தொழுகுமலையலங்காரசதுமுகத்துத்
தெய்வந்தொழுந்தெய்வமேயென்கொலோவுன்றிருவுளமே. (ருஎ)

திருவிளையாடுதிண்டோட்செங்கண்மால்பலதேவருடன்
மருவிளையான்றிருமாலிருஞ்சோலைமலையெனவோ
ருருவிளையாமற்பிறப்பார்பலர்புகழோதிச்சிலர்
கருவிளையாநிற்கவித்தாவர்முத்தியிற்காமமற்றே (ருஅ)

காமத்தனைப்பொய்யழுக்காறுகோபங்களவுகொலை
யாமத்தனையுமுடையேனையாளுங்கொலான்பொருப்பாந்
தாமத்தனைவரும்போற்றநின்றான்பண்டுதாமரையோன்
பூமத்தனைச்செய்தநோய்துடைத்தானடிப்போதுகளே. (ருகூ)

போதகத்தானும்வெண்போதகத்தானும்புராந்தகனுந்
தீதகத்தானதுதீர்தருங்காலைத்திருவரைசேர்
பீதகத்தாயழகாவருளாயென்பர்பின்னையென்ன
பாதகத்தான்மறந்தோதனிநாயகம்பாவிப்பரே. (சூ0)

பாவிக்கமலவிரிஞ்சற்கிறையவர்பத்தர்தங்க
ளாவிக்கமலத்துவீற்றிருப்பாரளிப்பாடல்கொண்ட
வாவிக்கமலமணநாறுஞ்சோலைமலையைக்கண்ணுற்
சேவிக்கமலமறுமனமேயெழுசெல்லுதற்கே. (சூக)

செல்லுக்குவளைகுழனுட்டமென்றுதெரிவையர்பாற்
பல்லுக்குவளைமுதுகாந்தனையும்புன்பாட்டுரைப்பீ
ரல்லுக்குவளையுயுமும்பாண்டிநாட்டையடைந்துநுங்கள்
சொல்லுக்குவளையுண்டார்க்கலங்காரர்க்குச்கூட்டுவினே. (சூஉ)

சூட்டோதிமஞ்சென்றுசொல்லாதென்காதலைத்தும்பியிசைப்
பாட்டோதிமங்கையரும்பணியார்பண்டுகன்மழைக்காக்
கோட்டோதிமமெடுத்தார்சோலைமாமலைக்கோவலனார்
மாட்டோதிமஞ்சினங்காளுரைப்பீர்மறுவாசகமே. (சுஉ)

வாசம்பரந்ததுழாயுமென்பாடனுமாலையொளி
வீசம்பரம்பசும்பொன்னுமென்வேட்கையும்வீற்றிருக்குந்
தேசம்பரமபதமுமென்சிந்தையுந்தீவளியா
காசம்பரவைமண்கண்டுண்டுமாலலங்காரனுக்கே. (சுச)

அலங்காரன்சுந்தரத்தோளனழகணிமுடியி
லிலங்காரனேறுதிருவுடையானெட்டெழுத்துங்கற்றார்
கலங்காரனங்கன்கணையாலெச்செல்வமுங்காதலியார்
மலங்காரருந்துயர்மேவினுமாகுவர்வானவரே (சுரு)

வானவதாரணிசுந்தரத்தோளன்முன்மாவலியைத்
தானவதாரணிதாவென்றமாயன்றராதலத்து
மீனவதாரமுதலானவைவினையின்றியிச்சை
யானவதாரறிவாரவரேமுத்தராமவரே. (சுசு)

ஆமவரைப்பணித்தாள்வாரழகரயனுமையாள்
வாமவரைப்பணியான்பணிபாதத்தைவாழ்த்துங்கொங்கை
யேமவரைப்பணிபூணுள்சந்தேந்திழையாளுரைத்தால்
வேமவரைப்பணியாதேயெனுமெங்கண்மெல்லியலே. (சுஎ)

மெல்லியலைப்பரியங்கனையாரும்வெறுத்துவசை
சொல்லியலைப்பரியங்கவொட்டார்சுடர்மாமலையைப்
புல்லியலைப்பரியங்கத்திலேறும்புயல்பதின்மர்
நல்லியலைப்பரியங்கழற்றுமநயந்தபின்னே. (சுஅ)

பின்னிறப்பும்பிறப்புந்நரைமூப்பும்பிணியுமனை
முன்னிறப்பும்பிரித்தானிருந்தானவர்முதிலங்கை
மன்னிறப்புங்கக்கணைதொட்டசோலைமலையழகன்
பொன்னிறப்புண்டரிகத்திருத்தாளன்றிப்போற்றிலமே. (சுக)

போற்றியிராமவென்னார்சோலைமாமலைபோதவிடார்
மாற்றியிராவைப்பகலாக்கிலார்வண்டுழாய்குழன்மே
லேற்றியிராசதமாகவையாரென்னிடரையெல்லா
மாற்றிபிராரன்னைமாரென்னைவாய்வம்பளக்கின்றதே. (எ0)

அளப்பதுமங்கையினீரேற்பதுந்தந்தளிப்பதும்பின்
பிளப்பதுமங்கையில்வெண்கோட்டிற்கொள்வதும்பேருணவாக்
கிளப்பதுமங்கையெனத்தோள்புணர்வதுங்கேட்கில்வையம்
வளப்பதுமங்கையஞ்சேர்சோலைமாமலைமாதவரே (எக)

மாதவராலும்பராலறியார்மதுரைப்பிறந்த
யாதவராலிலைமேற்றுயின்றாரிருந்தாழ்சுனையிற்
போதவராலுகண்மாலிருஞ்சோலையிற்போம்பிறவித்
தீதவரால்லன்றியெத்தேவராலுந்தெறலரிதே. (எஉ)

அரியவரந்தந்தயன்முதலோர்க்கருள்செய்தவரைப்
பெரியவரந்தமில்வாழ்வினராக்கித்தம்பேரருளாற்
கரியவரந்தணர்கைதொழுமாலலங்காரர்வையத்
துரியவரந்தரங்கத்துயர்தீர்க்கவுலாவுவரே. (எங)

உலகுதிக்கும்படிசிந்தித்துத்தந்திவ்வுலகினுறு
நலகுதிக்கும்படிநின்றபிரானிடநானிலமு
மிலகுதிக்கும்விசும்புந்தொழவோங்கியிறுல்வருடை
பலகுதிக்குந்தோறுந்தேன்பாயுஞ்சோலைப்பருப்பதமே. (எச)

பருப்பதந்தாமன்னிநிற்பதுபாற்கடல்பள்ளிகொள்வ
திருப்பதந்தாமம்பண்டிப்பேரதெலாமிளஞாயிறன்ன
வுருப்பதந்தாமதர்க்கியாமலன்பர்க்குதவழகர்
திருப்பதந்தாமரைபோல்வாருகப்பதென்சிந்தனையே. (எரு)

சிந்திக்கலாரங்கொழிக்குந்திருச்சிலம்பாற்றழகும்
பந்திக்கலாபமயிலாடுஞ்சாரலும்பங்கயனே
டந்திக்கலாமதியாற்கரியாருறையான்பொருப்பும்
வந்திக்கலாமெனிற்சந்திக்கலாமுயர்வைகுந்தமே (எசு)

வைதாரையுமுன்மலைந்தாரையுமலர்த்தாளில்வைத்தாய்
மொய்தாரையத்தனைத்தீங்கிழைத்தேனையுமூதுலகிற்
பெய்தாரைவானிற்புரப்பானிடப்பெருங்கிரியாய்
கொய்தாரைவேய்ந்ததிருவடிக்கீழ்த்தொண்டுகொண்டருளே. (எஎ)

கொண்டமருந்துங்கடைவாயவழியுகக்கோழைவந்து
கண்டமருந்துயராம்போதுன்பாதங்கருதறியேன்
வண்டமருந்துளவோனேதென்சோலைமலைக்கரசே
யண்டமருந்தும்பிரானேயின்றேயுன்னடைக்கலமே. (எஅ)

அடைக்கலந்தானையிரந்தாள்புகலவவள்பொருட்டாற்
படைக்கலந்தானைத்தருமன்கெடாமல்வெம்பாரதப்போ
ரிடைக்கலந்தானையலங்காரனைச்சரணென்றடைந்தேன்
முடைக்கலந்தானையுமப்போதயர்ப்பினுமுத்தியுண்டே. (எகூ)

உண்டிறக்கும்புவனங்களைமீளவுமிழ்ந்திலையேற்
பண்டிறக்கும்பதுமத்தோன்புரந்தரன்பைந்தழல்போற்
கண்டிறக்குஞ்சங்கரன்முதலோர்களைக்கண்டவரார்
திண்டிறக்குஞ்சரஞ்சேர்சோலைமாமலைச்சீதரனே. (அ0)

சீரிதாழ்பெயழின்மாலிருஞ்சோலையிற்செல்வர்செங்கட்
போரிதாள்புனைதாரிதாகிற்றண்பூந்துளவின்
றாரிதாவுந்தழையரிதாகிற்றழைதொடுத்த
நாரிதாகிற்பிழைப்பதரிதாமெங்கணன்னுதற்கே. (அக)

நன்னுதலைப்பணிபூண்மார்பில்வைத்துவிண்ணாட்டிருப்பார்
மின்னுதலைப்பணிமேற்றுயில்வார்விடைவெற்பினிற்பார்
மன்னுதலைப்பணியன்பரைவைக்குமலரடிக்கீழ்த்
துன்னுதலைப்பணிசெய்வதெஞ்ஞான்றென்றுயர்தொலைந்தே. (அஉ)

தொலைந்தானையோதுந்தொலையானையன்னைசொய்லான்மகுடங்
கலைந்தானைஞானக்கலையானையாய்ச்சிகலைத்தொட்டிலோ
டலைந்தானைப்பாவினலையானைவாணன்கையற்றுவிழ
மலைந்தானைச்சோலைமலையானைவாழ்த்தென்மடநெஞ்சமே. (அங)

நெஞ்சிலம்பாற்றமுடியாதுவேளெய்துநீளிரவுந்
துஞ்சிலம்பாற்றுளியுந்நஞ்சமாஞ்சொரிகன்மழையை
யஞ்சிலம்பாற்றடுத்தாரலங்காராடிவிளக்குஞ்
செஞ்சிலம்பாற்றருகேகிடத்திருயிர்தேற்றுதற்கே. (அச)

தேற்றுவித்தாற்புனறேற்றுநர்போற்றிருவெட்டெழுத்தான்
மாற்றுவித்தானென்மயக்கமெல்லாமண்ணும்விண்ணுமுய்யப்
போற்றுவித்தாரப்புயலலங்காரன்பொன்மேருவைப்போற்
றோற்றுவித்தாரணியுஞ்சுந்தரத்திருத்தோளண்ணலே. (அடு)

அண்ணலைவான்மதிதோய்சோலைமாமலையச்சுதனைத்
தண்ணலைவானவனைத்தெய்வநாதனைத்தாளடைவா
னெண்ணலைவான்பகையாமைவரோடிசைந்தின்னமுடற்
புண்ணலைவானெண்ணினுய்மனமேயுன்புலமைநன்றே. (அசு)

புலமையிலேநிமிர்ந்தற்பரைப்போற்றிப்பொதுமகளைக்
குலமையிலேகுயிலேகொடியேயென்றுங்கூர்விழியாம்
பலமையிலேயென்றும்பாடாமற்பாடுமின்பாவலர்கா
ணலமையிலேய்முத்தமார்சோலைமாமலைநம்பனையே. (அஎ)

நம்பிநின்றேனுன்சரணாரவிந்தத்தைநன்னெஞ்சென்னுஞ்
செம்பிநின்றேபொறித்தேனுனக்காளென்றுதெய்வக்குழாம்
பம்பிநின்றேசெறிக்கும்பதங்காணப்பதறுகின்றேன்
கொம்பிநின்றேன்சொரியுஞ்சோலைமாமலைக்கொற்றவனே. (அஅ)

கொற்றவிராவணன்பொன்முடிவீழக்கொடுங்கண்டுஞ்ச
லுற்றவிராவணன்மாளவெய்தோனெண்பரதனிக்குச்
சொற்றவிராவணன்மாலிருஞ்சோலைதொழுதுவினை
முற்றவிராவணனற்றமிழ்மாலைமொழிந்தனனே. (அகூ)

மொழித்தத்தைகொஞ்சுமலையலங்காரமுன்னூற்றுவரை
யழித்தத்தைமைந்தர்க்கரசளித்தோனடிநாட்டொடர்ந்தென்
னுழித்தத்தைச்செய்தன்றிப்போகாவினையையொருநொடியிற்
கழித்தத்தையென்சொல்லுகேன்றனக்காட்பட்டகாலத்திலே. (கூ0)

காலமலைக்கும்புவனங்களைக்கரந்தாயுதிரங்
காலமலைக்குமைத்தாயழகாகமலத்துப்பஞ்சார்
காலமலைக்கும்புவிக்குமன்பாவுயிர்காயம்விடுங்
காலவலைக்குங்கடுங்கூற்றைக்காய்ந்தென்னைக்காத்தருளே. (௬௧)

அருளக்கொடியிடைப்பூமாதுநீயும்வந்தாளினுமா
மிருளக்கொடியநமன்வருங்காலத்திகழினுமாங்
கருளக்கொடியழகாவலங்காரவன்கஞ்சனெஞ்சத்
துருளக்கொடியவுதைத்தாயெனதுயிருன்னுயிரே. (௬௨)

உயிர்க்கும்படிக்குமுன்னுயிரம்பேரென்றுறுத்தன்னைமார்
செயிர்க்கும்படிக்குநின்றேனென்செய்கேன்செழுந்தேவர்களு
மயிர்க்கும்படிக்குறளாமழகாவலங்காரநெய்க்குந்
தயிர்க்கும்படிக்குஞ்செவ்வாய்மலர்ந்தாய்நின்னைத்தாள்பணிந்தே.
(௬௩)

பணிபதிவாடநின்றுடினநூற்றுவர்பாற்சென்றன
பணிபதினுலுபுவனமுந்தாயினபாப்பதின்மர்
பணிபதியெங்குமுவந்தனபங்கயப்பாவையுடன்
பணிபதிமார்பனலங்காரன்பொற்றிருப்பாதங்களே. (௬௪)

பாதகரத்தனைபேருங்கனகனும்பன்னகத்தா
லேதகரத்தனையற்கருளாளியையெட்டெழுத்து
ளோதகரத்தனைச்சுந்தரத்தோளுடையானைநவ
நீதகரத்தனைச்சேர்ந்தார்க்குத்தேவருநேரல்லரே. (௬௫)

அல்லலங்காரையுஞ்சேர்விக்குமைம்புலவாசையென்றும்
பல்லலங்காநைந்துகோலூன்றியும்பற்றறுதுகண்டாய்
மல்லலங்காரிகையார்மருவூர்ந்துவணங்குநெஞ்சே
தொல்லலங்காரனைத்தென்றிருமாலிருஞ்சோலையிலே. (௬௬)

சோலையிலாமையில்சேர்திருமாலிருஞ்சோலைநின்றான்
வேலையிலாமையில்வேடங்கொண்டான்புயமேவாப்பெறாச்
சேலையிலாமையிலங்குகண்ணாளவன்றேய்வத்துழாய்
மாலையிலாமையின்மாலையுற்றுளந்திமாலையிலே. (௬௭)

மாலைக்கரும்புசிறுகாறுகைக்கவருந்துமெங்க
ளாலைக்கரும்புதன்னுசையெல்லாஞ்சொல்லிலாயிரந்தோட்
டோலைக்கரும்புண்டொடமுடமாமதியூர்குடுமிச்
சோலைக்கரும்புயலேயருளாயுன்றுளவினையே. (கூஅ)

துளவிலையார்பொன்னடிமுடிசூட்டித்தொண்டாக்கியென்னை
வளவிலையாக்கொண்டநீகைவிடேன்மங்கலகுணங்க
ளளவிலையாவலங்காரசமயிகளாய்ந்தவண்ண
முளவிலையாயுருவாயருவாயவொருமுதலே. (கூகூ)

ஒருபாலமரரொருபான்முனிவருடனிருந்தெ
னிருபார்வையுங்கொண்டுவப்பதென்றேவிடபக்கிரிக்கும்
பொருபாற்கடற்குமயோத்திக்கும்பொற்றுவாரபதிக்கு
நிருபாவைகுந்தமுநீவீற்றிருக்கின்றநீர்மையுமே. (கஅஅ)

அலங்காரருக்குப்பரமச்சுவாமிக்கழகருக்குக்
கலங்காப்பெருநகரங்காட்டுவார்க்கருத்தன்பினு
னலங்காதசொற்றொடையந்தாதியைப்பற்பநாபப்பட்டன்
விலங்காதகீர்த்திமணவாளதாசன்விளம்பினனே. (கஅக)

அழகரந்தாதி

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

சிலப்பதிகாரம்

இரண்டாவது

மதுரைக் காண்டம்

11. காடுகாண் காதை.

திருமால் குன்றத்துச் செல்கு வீராயிற்
பெருமால் கெடுக்கும் பிலமுண்டாங்கு
விண்ணோரேத்தும் வியத்தகுமாயிற்
புண்ணிய சாவணம் பவகாரணியோ
டிட்டசித்தியெனும் பெயர் போகிய
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்றுளவாங்குப்
புண்ணிய சாவணம் பொருந்து வீராயின்
விண்ணவர் கோமான் விழுநூலெய்துவிர்
பவகாரணிபடிந்தாடு வீராயிற்
பவகாரணத்திற் பழம் பிறப்பெய்துவிர்
இட்டசித்தி யெய்து வீராயின்
இட்டசித்தி யெய்து விர் நீரே
ஆங்குப்பிலம்புக வேண்டு திராயின்
ஓங்குயர் மலையத்துயர்ந் தோற் றொழுது
சிந்தை யிலவன்றன் சேவடிவைத்து
வந்தனை மும்முறை மலைவலஞ் செய்தால்
நிலம்பக வீழ்ந்த சிலம் பாற்றகன்றலைப்
பொலங்கொடி மின்னிற் புயலைங்கூந்தற்
கடிமலர் விழ்ந்த கன்னிகாரத்துத்
தொடி வளைத்தோளி யொருத்தி தோன்றி
யிம்மைக்கின்பமு மறுமைக்கின்பமும்
இம்மையு மறுமையுமிரண்டு மின்றியோர்
செம்மையினிற்பதுஞ் செப்புமினீயிரிவ்

வரைத்தாள் வாழ்வேன் வரோத்தமையென்பேன்
உரைத்தார்க்குரியேனுரைத் தீராயின்
திருத்தக்கீர்க்குத் திறந்தேன் கதவெனும்
கதவந்திறந்தவள் காட்டிய நன்னெறிப்
புதவம் பலவுள போகிடை கழியன
வொட்டுப் புதவமொன் றுண்டதனும்பர்
வட்டிகைப் பூங்கொடி வந்து தோன்றி
இறுதியிலின்ப மெனக்கீங்குரைத்தாற்
பெறுதிர் போலு நீர் பேணிய பொருளெனும்
உரை யீராயினு மூறுகண் செய்யேன்
நெடுவழிப்புறத்து நீக்குவனும் மெனும்
உரைத்தாருளரெனினுரைத்த மூன்றின்
கரைப்படுத்தாங்குக் காட்டினள் பெயரும்
அருமறை மருங்கினைந்தினு மெட்டினும்
வருமுறை யெழுத்தின் மந்திரமிரண்டும்
ஒரு முறையாக வுளங்கொண்டோதி
வேண்டிய தொன்றின் விரும்பினீராடிற்
காண்டகுமரபின வல்ல மற்றவை
மற்றவை நினையாது மலைமிசை நின்றேன்
பொற்றுமரைத் தாளுள்ளம் பொருந்துமின்
உள்ளம் பொருந்து வீராயின் மற்றவன்
புள்ளணி நீள் கொடிப்புணர் நிலைதோன்றுந்
தோன்றிய பின்னவன்றுணை மலர்த்தாளிணை
யேன்று துயர்கெடுக்கு மின்ப மெய்தி
மாண்புடை மரபின் மதுரைக்கேகுமின்.

ll. 91—139.

ஸ்ரீ:

திருமுருகாற்றுப்படை

ஆறுவது

பழமுதிர்சோலை.

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினு
மார்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனுங்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பு
மன்றமும் பொதியினுங் கந்துடை நிலையினு
மாண்டலைக் கொடியொடு மண்ணிய மைவர
நெய்யோ டையவி யப்பியை துரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
மூரண்கொ ளுருவி னிரண்டுடை யுடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇத் தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையுற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை யருவியோ டின்னியங் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகண்
முருகிய நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனக

ராடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலு மறிந்த வாறே
ஆண்டாண் டாயினு மாகக் காண்டக
முந்துநீ கண்டுழி * முகனமர்ந் தேத்தி
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை
ஐவரு ளொருவ னங்கை யேற்ப
அறுவர் பயந்த வாறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகண் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறன் மள்ள
அந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றுக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையினர்க் கார்த்து மிசைபே ராள
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்று டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்

* முகமலர்ந்தேத்தி என்றும் பாடம்.

சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசிலு மெனப்பல
யானறி யளவையி னேத்தியா னுது
நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி யுள்ளி வந்தன னின்னொடு
புரைகுந நில்லாப் புலமை யோயெனக்
குறித்தது மொழியா வளவையிற் குறித்துடன்
வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் றானே முதுவா யிரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவு நல்லவு நனிபல வேத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
அணங்குசா லுயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
அஞ்ச லோம்புமதி யறிவனின் வரவென
அன்புடை நன்மொழி யளைஇ விளிவின்
றிருள்நிற முந்நீர் வளைஇய வுலகத்
* தொருநீ யாகத் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசி னல்குமதி பலவுடன்
வேறுபஃ றுகிலி னுடங்கி யகில்சுமந்
தா முழுமுத லுருட்டி வேரற்
பூவுடை யலங்குசினை புலம்பவோர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கமழ் மலரிறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர் பூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுத
லிரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று

* ஒருநீயாகி என்றும் பாடம்.

முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன்மணிநிறங் கிளர்ப்பொன்கொழியா
வாழை முழுமுத றுமியத் தாழை
இளநீர் விழுக்குலை யுதிரத் தாங்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலோ
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக்கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

முற்றிற்று.

ஸ்ரீ:

பரிபாடல்

பதினைந்தாம் பாடல்

திருமால்.

புலவரை யறியாப் புகழொடு பொலிந்து
நிலவரை தாங்கிய நிலைமையிற் பெயராத்
தொலையாநேமி முத லெல்லிசை யமையும்
புலவராய் புரைத்த புனை நெடுங்குன்றம்
பலவெனி னுங்கவை பலவே பலவினும்
நிலவரை யாற்றி நிறைபயனொருங்குடன்
நின்றுபெற நிகழுங் குன்றவை சிலவே
சிலவினுஞ் சிறந்தன தெய்வம் பெட்புறு
மலரகன் மார்பின் மைபடி குடுமிய
குலவரை சிலவே குலவரைசி லவினும்
சிறந்தது, கல்லறை கடலுங் கானலுங் போலவும்
புல்லிய சொல்லும் பொருளும் போலவும்
எல்லாம், வேறு வேறுருவினொரு தொழி லிருவர்த்
தாங்குநீணிலை யோங்கிருங்குன்றம்
நாறிணர்த்துழாயோ னல்கி னல்லதை
ஏறுதலெளிதோ வீறுபெறு துறக்கம்
அரிதிற் பெறு துறக்க மாலிருங்குன்றம்
எளிதிற் பெறலுரிமை யேத்துக ஞ்சிலம்ப
அராவணர் கயந்தலைத் தம்முன் மார்பின்
மராமலர்த்தாரின் மாண்வரத்தோன்றி
அலங்குமருவியார்த்திமிழ் பிழியச்
சிலம்பாறணிந்த சீர்கெழு திருவிற்
சோலையொடு தொடர்மொழி மாலிருங்குன்றந்
தாம்வீழ் காமம் வித்துபு விளைக்கு
நாமத்தன்மை நன்கனம் படியெழ
யாமத்தன்மை யிவ்வை யிருங்குன்றத்து
மன்புனலிளவெயில் வளாவவிருள் வளர்வெனப்
பொன்புனை யுடுக்கையோன் புணர்ந்தமர் நிலையே
நினைமின் மாந்தீர் கேண்மின் கமழ்சீர்

சுனையெலா நீலமலரச் சுனைசூழ்
சினையெலாஞ் செயலை மலரக்காய்கனி
உறழநனை வேங்கை யொள்ளிணர் மலர
மாயோ னொத்தவின் னிலைத்தே
சென்று தொழு கல்லீர் கண்டு பணிமினமே
இருங்குன்றென்னும் பெயர் பரந்ததுவே
பெருங்கலி ஞாலத்துத் தொன்றியல் புகழது
கண்டு மயரறுக்குங் காமக் கடவுள்
மகமுயங்கு மந்திவரை வரை பாய
முகிழ் மயங்குமுல்லை முறை நிகழ்வு காட்ட
மணி மருணன்னீர்ச்சினை மடமயிலகவக்
குருகிலை யுதிரக்கு யிலினங் கூவப்
பகர்குழல் பாண்டிலியம்பவகவுநர்
நாநவில் பாடன் முழ வெதிர்ந்தன்ன
சிலம்பிற்சிலம் பிசை யோவாதொன்னார்க்
கடந்தட்டான் கேழிருங்குன்று
தையல வரொடுந் தந்தாரவரொடும்
கைம் மகவோடுங் காதலவரொடும்
தெய்வம் பேணித் திசை தொழுதனிர் சென்மின்
புவ்வத்தாமரை புரையுங் கண்ணன்
வெளவற் காரிருண் மயங்குமணி மேனியன்
எவ்வயி னுலகத்துந்தோன்றி யவ்வயின்
மன்மது மறுக்கத் துன்பங்களைவோன்
அன்பதுமேள யிருங்குன்றத்தான்
கள்ளணி பசுந்துளவினவை கருங்குன்றனையவை
ஒள்ளொளியவை யொரு குழயவை
புள்ளணிபொலங் கொடியவை
வள்ளணி வளைநாஞ்சிலவை
சலம்புரி தண்டேந்தினவை
வலம்புரி வயநேமியவை
வரிசிலை வயவம்பினவை
புகரிணர்சூழ் வட்டத்தவை புகர்வாளவை
எனவாங்கு
நலம்புரி இயஞ்சீர் நாம வாய்மொழி
இதுவென வுரைத்த னெமுள்ளமர்ந்திசைத்திறை
இருங்குன்றத்தடியுறை யியைகெனப்
பெரும்பெய ரிருவரைப் பரவுதுந்தொழுதே.

பரிபாடல் பதினைந்தாம்பாடல் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

திருப்புகழ்

பழமுதிர்சோலை.

தன தன தான தான தன தன தான தான
தன தன தான தான தன தான.

510. இலகிதழ் கோதி * நேதி மதகலை ஆர வார
இளநகை ஆட வாடி மிகவாதுற்
றெதிர்பொரு கோர பார ம்ருகமத கோல கால
இணைமுலை மார்பி லேற மதராஜன்
கலவியி லோடி நீடு வெகுவித தாக போக
கரணப்ர தாப பாப மடமாதர்
கலவியின் மூழ்கி யாழு மிழிதொழி லேனு மீது
கருதிய ஞான போதம் அடைவேனோ
கொலைபுரி காளி சூலி வயிரவி நீலி மோடி
குலிசகு டாரி ஆயி மகமாயி
குமரிவ ராகி மோகி பகவதி ஆதி சோதி
குணவதி † ஆல ஆணி அபிராமி
பலிகொள்க பாலி யோகி பரமகல் யாணி லோல
பதிவ்ரதை வேத ஞானி புதல்வோனே
படையொடு சூரன் மாள முடுகிய சூர தீர
பழமுதிர் சோலை மேவு பெருமாளே.

தான தன தான தந்த தான தன தான தந்த
தான தன தான தந்த தன தான.

511. சீலமுள தாயர் தந்தை மாதுமனை யான மைந்தர்
சேருபொரு ளாசை நெஞ்சு தடுமாறித்
தீமையுறு மாயை கொண்டு வாழ்வுசத மாமிதென்று
தேடினது போகவென்று தெருவூடே
வாலவய தான கொங்கை மேறுநுத லான திங்கள்
மாதர்மய லோடு சிந்தை மெலியாமல்

வாழுமயில் மீது வந்து தாளிணைகள் தாழுமென்றன்
மாயவினை தீர அன்பு புரிவாயே
சேலவள நாட னங்கள் ஆரவயல் சூழு * மிஞ்சி
சேணிலவு தாவு செம்பொன் மணிமேடை
சேருமம ரேசர் தங்கள் ஊரிதென வாழ்வு கந்த
தீரமிகு சூரரை வென்ற திறல்வீரா
ஆலவிட மேவு கண்டர் கோலமுட னீடு மன்று
ளாடல்புரி ஈசர் தந்தை களிகூர
ஆனமொழி யேப கர்ந்து சோலைமலை மேவு கந்த
ஆதிமுத லாக வந்த பெருமாளே. (உ)

---

512. வீரமத னூல்வி ளம்பு போகமட மாதர் தங்கள்
வேல்விழியி னுல்ம யங்கி நிலமீதே
வீசுகையி னுலி தங்கள் பேசுமவர் வாயி தஞ்சொல்
வேலைசெய்து மால்மி குந்து விரகாகிப்
† பாரவச மான வங்க ணீடுபொருள் போன பின்பு
பாதகனு மாகி நின்று பதையாமல்
† பாகம்வர மேவ அன்பு நீபமலர் சூடு கின்ற
பாதமலர் நாடியென்று பணிவேனோ
* பூரணம தான திங்கள் சூடுமர னாரிடங்கொள்
பூவையரு ளால்வ ளர்ந்த முருகோனே
பூவுலகெ லாமடங்க ஓரடியி னுல ளந்த
† பூவைவடி வானுகந்த மருகோனே
சூர்களை யேத டிந்து பாரமுடி யேய ரிந்து
தூள்கள்பட நீறு கண்ட வடிவேலா
சோலைதனி லேப றந்து லாவுமயி லேறி வந்து
சோலைமலை மேல மர்ந்த பெருமாளே.

தான தன தந்த தந்த தான தன தந்த தந்த
தான தன தந்த தந்த தன தான.

513. வாரணமு கங்கி ழிந்து வீழவும் ரும்ப லர்ந்து
மால்வரைய சைந்தனங்கள் முடிசாய
வாளகிரி அண்ட ரண்ட கோளமுற நின்றெ ழுந்து
மாதவம றந்து றந்து நிலைபேறப்
பூரணகு டங்க டிந்து சீதகள பம்பு னைந்து
பூசலைவி ரும்பு கொங்கை மடவார்தம்
போகசய னந்த விர்ந்து ஞடகப தம்ப ணிந்து
பூசனைசெய் தொண்ட னென்ப தொருநாளே
ஆரணமு ழங்கு கின்ற ஆயிரம டந்த வங்கள்
ஆகுதியி டங்கள் பொங்கு நிறைவீதி
ஆயிரமு கங்கள் கொண்ட நூபுரமி ரங்கு கங்கை
யாரமர வந்த லம்பு துறைசேரத்
தோரணம லங்கு துங்க கோபுரநெ ருங்கு கின்ற
சூழ்மணிபொன் மண்டபங்கள் ரவிபோலச்
சோதியின்மி குந்த செம்பொன் மாளிகைவி ளங்கு கின்ற
சோலைமலை வந்து கந்த பெருமாளே.

தான தன தத்த தான தன தத்த
தான தன தத்த தன தான.

514. வார்குழையை எட்டி வேளினைம ருட்டி
மாயநம னுக்கும் உறவாகி
மாதவம ழித்து லீலைகள் மிகுத்து
மாவடுவை ஒத்த விழிமாதர்
சீருடன மைத்து வாய்கனிவு வைத்த
தேனிதழ ளித்து அநுபோக
சேர்வைதனை உற்று மோசம்விளை வித்து
சீர்மைகெட வைப்பர் உறவாமோ
வாரினை அறுத்து மேருவை மறித்து
மாகனக மொத்த குடமாகி

வாரவணி வைத்து மாலளித முற்று
மாலைகளு மொய்த்த தனமாது
* தோரணி புயத்தி யோகினி சமர்த்தி
தோகையுமை பெற்ற புதல்வோனே
சூர்கிளை மடித்து வேல்கர மெடுத்து
சோலைமலை உற்ற பெருமாளே.

தான தான தன தத்ததன தத்ததன
தான தான தன தத்ததன தத்ததன
தான தான தன தத்ததன தத்ததன தனதான.

515. ஆசை நாலுசது ரக்கமல முத்திநெளி
வீசி ஓடியிரு பக்கமொடு றச்செல் வளி
ஆவல் கூர மண்மு தற்சலச பொற்சபையும் இந்துவாகு
ஆர மூணுபதி யிற்கொளநி றுத்திவெளி
யாரு சோதி நறுபத்தினுட னெட்டுவித
மாகி யேழுமள விட்டருண விற்பதியின் விந்துநாத
ஓசை சாலுமொரு சத்தமதி கப்படிக
மோடு கூடியொரு மித் தமுத சித்தியொடு
மோது வேத சர சத்தியடி உற்றதிரு நதியூடே
ஊமை யோனையொளிர் வித்துனது முத்திபெற
மூல வாசல்வெளி விட்டுனது ரத்திலொளிர்
யோக பேதவகை எட்டுமிதி லொட்டும் வகை இன்றுதாராய்
வாசி வாணிகனெ னக்குதிரை விற்றுமகிழ்
வாத ஆரனடி மைக்கொள்கிரு பைக்கடவுள்
மாழைரூபன்முக மத்திகைவி தத்தருண செங்கையாளி
வாகு பாதியுறை சத்திகவு ரிக்குதலை
வாயின் மாதுதுகிற் பச்சைவடி விச்சிவையென்
மாசு சேரெழுபி றப்பையும றுத்தவுமை தந்தவாழ்வே
காசி ராமெசுரம் ரத்நகிரி சர்ப்பகிரி
ஆரூர் வேலூர் தெவுர் கச்சிமது ரைப்பறியல்
காவை மூதுரரு ணக்கிரிதி ருத்தணியல் செந்தில்நாகை

காழி வேளூர்பழ நிக்கிரிகு றுக்கைதிரு
நாவ லூர்திருவெ ணெய்ப்பதியின் மிக்க திகழ்
காதல் சோலைவளர் வெற்பிலுறை முத்தர்புகழ் தம்பிரானே.

தன தானன தானன தத்தன
தன தானன தானன தத்தன
தன தானன தானன தத்தன தன தான.

516. கருவாகியெ தாயுத ரத்தினி
லுருவாகவெ கால்கையு றுப்பொடு
கனிவாய்விழி நாசியு டற்செவி நரைமாதர்
கையிலேவிழ வேகிய ணைத்துயி
லெனவேமிக மீதது யிற்றிய
கருதாய்முலை ஆரமு கத்தினில் இனிதாகித்
தருதா ரமு மாகிய சுற்றமு
நலவாழ்வும்நி லாதபொ ருட்பதி
சதமாமிது தானென உற்றுனை நினையாத
சதுராயுன தாளிணை யைத்தொழ
அறியாத நிர்மூடனை நிற்புகழ்
தனையோதிமெய் ஞானமு தச்செய்வ தொருநாளே
செருவாயெதி ராமசு ரத்திரள்
தலைமூளைக ளோடுநி ணத்தசை
திமிர்தாதுள பூதக ணத்தொடு வருபேய்கள்
திகுகாவுண வாயுதி ரத்தினை
பலநாய்நரி யோடுகு டித்திட
சிலகூகைகள் தாமுந டித்திட அடுதீரா
அருமாமறை யோர்கள்து தித்திடு
புசர்வாரண மாதுத னைத்திக
ழளிசேர்குழல் மேவுகு றத்தியை அணைவோனே
அழகானபொன் மேடையு யர்த்திடு
முகில்தாவிய சோலைவி யப்புறு
அலையாமலை மேவிய பத்தர்கள் பெருமாளே.

தான தன தான தந்த தன தான.

517. காரணமதாக வந்து புவிமீதே
காலனணுகா திசைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞான நடமே புரிந்து வருவாயே
ஆறுமுத மானதந்தி மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூரர்கிளை மாள வென்ற கதிர்வேலா
சோலைமலை மேவிநின்ற பெருமாளே.

தான தத்த தான தனு தனுதன
தான தத்த தான தனு தனுதன
தான தத்த தான தனு தனுதன தன தான.

518. சீர்சிறக்குமேனி பசேல் பசேலென
நூபுரத்தினோசை கலீர் கலீரென
சேரவிட்டதாள்கள் செவேல் செவேலன வருமானார்
சேகரத்தின் வாலை சிலோர் சிலோர்களும்
நூறுலக்ஷ கோடி மயால் மயால்கொடு
தேடி ஒக்கவாடி ஐயோ ஐயோவென மடமாதர்
மார்படைத்த கோடு பளீர் பளீரென
ஏமலித்தெனவி பகீர் பகீரென
மாமசக்கிலாசை உளோமுளோமென நினைவோடி
வாடைபற்றுவேளை அடா அடாவென
நீமயக்கமேது சொலாய் சொலாயென
வாரம்வைத்த பாதமிதோ இதோவென அருள்வாயே
பாரதத்தை மேரு வெளீ வெளீதிகழ்
கோடடித்தநாளில் வரை வரைபவர்
பானிறக் கணேசர்குவாகு வானகர் இளையோனே
பாடன்முக்ய மாது தமீழ் தமீழிரை
மாமுநிக்கு காதிலுணர் உணர்விடு
பாசமற்ற வேதகுரு குருபர குமரேசா

போர்மிகுத்த சூரன் விடோம் விடோமென
நேரெதிர்க்கவேலை படீர் படீரென
போயறுத்தபோது குபீர் குபீரென வெகுசோரி
பூமிஉக்க வீசுகுகா குகாதிகழ்
சோலைவெற்பின் மேவு தெய்வா தெய்வானை தொள்
பூணி இச்சை ஆறுபுயா புயறுள பெருமாளே.

தானத் தானன தத்தன தத்தன
தானத் தானன தத்தன தத்தன
தானத் தானன தத்தன தத்தன தன தான.

519. பாசத்தால் விலை கட்டிய பொட்டிகள்
நேசித் தாரவர் சித்தமருட்டிகள்
பாரப்பூதர மொத்த தனத்திகள் மிகவேதான்
பாவத்தால் மெயெடுத்திடு பட்டிகள்
சீவிக்கோதி முடித்தளகத்திகள்
பார்வைக்கே மயலைத்தரு துட்டிகள் ஒழியாத
மாசுற்றேறிய பித்தளையிற்பணி
நீறிட்டே யொளிபற்ற விளக்கிகள்
மார்பிற்காதினி லிட்டபி லுக்கிகள் அதிமோக
வாய்வித் தாரமுரைக்குமபத்திகள்
நேசித்தாரையு மெத்தியடிப்பவர்
மாயைக்கே மனம்வைத்த தனுட்டினம் அலைவேனோ
தேசிக்கானக முற்றதினைப்புன
மேவிக்காவல் கவட்கல் சுழற்றுவள்
சீதப்பாதகுறப் பெண் மகிழ்ச்சிகொள் மணவாளா
தேடிப்பாடிய சொற்புலவர்க்கித
மாகத்தூது செலத்தரில் கற்பக
தேவர்க்காதி திருப்புக விப்பதி வருவோனே
ஆசித்தார் மனதிற் புகுமுத்தம
கூடற்கேவைகையிற் கரைகட்டிட
ஆளொப்பாயுதிர் பிட்டமுதுக்கடி படுவானோ
டாரத்தோடகி லுற்றத ருக்குல
மேகத்தோடொருமித்து நெருக்கிய
ஆதிச் சோலைமலைப் பதியிற்றிகழ் பெருமாளே.

தனன தனதன தனத்தத் தாத்த
தனன தனதன தனத்தத் தாத்த
தனன தனதன தனத்தத் தாத்த தன தான.

520. அழகுதவழ் குழல்விரித்துக் காட்டி
விழிகள் கடையினை புரட்டிக் காட்டி
அணிபொ னணி குழை புரித்துக்காட்டி — அநுராக
அவச இதமொழி பிடித்துக் காட்டி
அதர மளிதுவர் வெளுப்பைக் காட்டி
அமர்செய் நகநுதி அழுத்திக் காட்டி — அணியாரம்
ஒழுகு மிருதன மசைத்துக் காட்டி
எழுத அரியிடை வளைத்துக் காட்டி
உலவு முடைதனை கெகிழ்த்துக் காட்டி — உறவாடி
உருகு மவயவ மொளித்துக் காட்டி
உபய பரிபுர பதத்தைக் காட்டி
உயிரை விலை கொளுமவர்க்குத் தேட்டம் — ஒழிவேனோ
முழுகுமருமறை முகத்துப் பாட்டி
கொழுநர் குடும்பியை அறுத்துப் போட்ட
முதல்வ குகைபடு திருப்பொற் கோட்டு — முனிநாடா
முடுகு முதலையை வரித்துக் கோட்டி
அடியர் தொழமக வழைத்துக் கூட்டி
முறைசெய் தமிழினை விரித்துக்கேட்ட — முதுநீதர்
பழைய கடதட முகத்துக் கோட்டு
வழுமை உரியணிமறைச் சொற்கூட்டு
பரமர் பகிரதி சடைக்குட் சூட்டு — பரமேசர்
பணிய அருள் சிவமயத்தைக் காட்டு
குமர குலமலை உயர்த்திக் காட்டு
பரிவொடணி மயில் நடத்திக் காட்டு — பெருமாளே

தனதன தத்தத் தத்தன தத்தத்
தனதன தத்தத் தத்தன தத்தத்
தனதன தத்தத் தத்தன தத்தத் தனதான.

521 தலைமயிர் கொக்குக் கொக்கந ரைத்துக்
கலகலெனப் பற்கட்டது விட்டுத்
தளர்நடை பட்டு தத்தடி இட்டு — தடுமாறி

தடிகொடு தத்திக் கக்கல் பெருத்திட்
டசனமும் விக்கிச் சத்தியெடுத்துச்
சளியுமி குத்துப் பித்தமு முற்றிப் பலகாலும்
திலதயி லத்திட் டொக்க வெரிக்கத்
திரிபலை சுக்குத் திப்பிலி இட்டுத்
தெளிய வடித்துற் றுய்த்துடல் செத்துட்டுயிர் போமுன்
திகழ் தமிழ் கற்றுச் சொற்கள் பயிற்றித்
திருவடியைப் பற்றித்தொழு துற்றுச்
சொனன மறுக்கைக் குப்பமுத்திக் கருள்தாராய்
கலணைவி சித்துப் பக்கரை இட்டுப்
புடவிசெ லுத்திக் கைக்கொடு வெற்பைக்
கடுகநடத்தித் திட்டென எட்டிப் பொருசூரன்
கனபடை கெட்டுத் தட்டற விட்டுத்
திரைகடலுக்குட் புக்கிட எற்றிக்
களிமயிலைச் சித்ரத்தில் நடத்திப் பொருகோவே
குலிசன்ம கட்குத் தப்பியு மற்றக்
குறவர்ம கட்கு சித்தமும் வைத்துக்
குளிர்தினை மெத்தத் தத்துபுனத்திற் றிரிவோனே
கொடிய பொருப்பை குத்தி முறித்துச்
சமரம் விளைத்துதற்பர முற்றுக்
குலகிரி யிற்புக்குற் றுரை உக்ரப் பெருமாளே

தனதன தனந்த தான தனதன தனந்த தான
தனதன தனந்த தான தன தான.

522 மலரணை ததும்ப மேக குழல்முடி சரிந்து வீழ
மணபரி மளங்கள் வேர்வை அதனோடே
வழிபட இடங்கணுட பிறைநுதல் புரண்டு மாழ்க
வனகலை நெகிழ்ந்துபோக இளநீரின்
முலையினை ததும்ப நூலின் வரிகிடை சுழன்றுவாட
முகமுக மொடொன்றுபாயல் அதனூடே
முதுமயல் கலந்து மூழ்கி மகிழ்கினும் அலங்கலாடு
முடிவடி வொடங்கை வேலு மறவேனே
சிலைநுத லிளம் பெண் மோகி சடையளகியெந்தை பாதி
திகழ்மர கதம்பொன்மேனி உமைபாலா

சிறுநகை புரிந்து சூரர்கிரிகட லெரிந்துபோக
திகழயி லெறிந்த ஞான முருகோனே
கொலை மிகை பயின்ற வேடர்மகள் வளி மணந்ததோள
குணவலர் கடம்பமாலை அணிமார்பா
கொடிமின லடைந்த சோதிமழ கதிர்தவழ்ந்தஞான
குலகிரி மகிழ்ந்து மேவு பெருமாளே

தான தன தந்த தான தன தந்த
தான தன தந்த தனதான.

523 வாதினையடர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயம தொழிந்து தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபத மணிந்து பணியேனே
ஆதியொடு மந்தமாகியந லங்கள்
ஆறுமுக மென்று தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயிலென்ப தறியேனே
நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானிலமலைந்து திரிவேனே
நாகமணிகின்ற நாத நிலை கண்டு
நாடியதில் நின்று தொழுகேனே
சோதியுணர் கின்ற வாழ்வு சிவமென்ற
சோகமதுதந்து எனையாள்வாய்
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற பெருமாளே

தானதனத் தானதனத் தானதனத் தானதனத்
தானதனத் தானதனத் தன தான.

524 சோலையடர்த் தாலமிகுத் தேயுழையை சீறிவிதிர்த்
தூறுசிவப் பேறுவிழிக் கடையாலே
தேனிரதத் தேமுழுகிப் பாகுநிகர்த் தாரமுதத்
தேறலெனக் கூறுமொழிச் செயலாலே

ஆலிலையைப்போலும் வயிற்றுளைகத் தாரமுதத்
தாலிரத்தாலும் வளைப் பிடுவோர் மேல்
ஆசையினைத் தூரவிடுத்தே புகழ்வுற்றேப்ரியநற்
றுளிணையைச் சேரவெனக் கருள்வாயே
காலனை மெய்ப் பாத மெடுத்தே யுதையிட்டேமதனைக்
காயவெரித்தே விதியிற் றலையூடே
காசினியிற் காணவிரப்போன் மதியை சூடியெருத்
தேறிவிரித்தூருதிரைக் கடல்மீதில்
ஆலமிடற் றுணையிபத் தோலையுடுத் தீமமதுற்
றுடியிடத்தே யுமைபெற் றருள்வாழ்வே
ஆழியினைச் சூரனைவெற் பேழயில் தொட்டாவிதுணித்
தாதிதிருச் சோலைமலைப் பெருமாளே

தனனதந்த தத்தான தனனதந்த தத்தான
தனனதந்த தத்தான தனதான.

525 களவுகொண்டு கைக்காசி னளவறிந்து கர்ப்பூர
களபதுங்க வித்தார முலைமீதே
கலவியின்பம் விற்பார்க ளவயவங்களைப்பாடு
கவிதெரிந்து கற்பார்கள் சிலர்தாமே
உளநெகிழ்ந்த சத்தான உரைமறந்து சத்தான
உனையுணர்ந்து கத்தூரி மணநாறும்
உபயபங்க யத்தாளி லபயமென் றுனைப்பாடி
உருகிநெஞ்சுகற் றேதில் இழிவாமோ
அளவில்வன்க விச்சேனைபரவ வந்த சுக்ரீவ
அரசுடன்க டற்றாளி எழவேபோய்
அடலிலங்கை சுட்டாடி நிசிசரன்த சக்ரீவ
மறவொரம்பு தொட்டார்த மருகோனே
ளருமந்தரச் சோலை மலையுகந்த முற்பாலை
வனவர் கொம்பினைத் தேடி ஒருவேட
வரவுகொண்டு பித்தாகி உருகிவெந்த முற்கானில்
மறவர் குன்றி னிற்போன பெருமாளே

போகமுனிவர்

அருளிச்செய்த

ஜெனனசாகரம்.

காணப்பா வழுகண்ணிச் சித்தருண்டு
கமண்டலநீர் தொட்டியிலே வந்து பாயும்
தோணப்பா பிள்ளைகளொன்பது பேருண்டு
துலங்கிடவே கன்னியொன்றுவவர் பாலுண்டு.

பூணப்பா வதனடியிற் றெப்பமுண்டு
புகழான திரவியங்களேகமுண்டு
மாணப்பா வழகர்மலையென்று பேருமாச்சரியம்
நீலகிரிக்கதிகம்பாரே.

அழகர் மலைவளங் கூறல்.

1. பாரென் றேனம்மலையினுயரஞ் சென்றால்
பதிவான கருப்பானுட கோவிலொன்று
நீரென்றேன் கோவிலுக்குத் தெற்கேசென்றால்
நெடியதொரு பாரையொன்றுஞ் சுனையொன்றுண்டு
பேரென்றேன்வனம் வொன்றுபெருந்துக்காணும்
பெரிதாக குகையொன்று கதவுந்தோணும்
சேரென்றே குகையுள்ளே சென்றுயாணுச்
செயமானவைகப்பாசித்த ரிருப்பார்தானே.

2. தானென்ற சப்தரிஷி சப்தகன்னி
தற்பரமாந் திருமாலும் மதனிலுண்டாம்
கோனென்ற பச்சைவர்ணக் குதிரையுண்டு
கோடிதான வாகரசப் புரவியுண்டு
மானென்ற நீலவர்ணக் கல்லுமுண்டு
மாணிக்கமேவுமடா சுனையிலப்பா
தேனென்ற தேவைகளநேகமுண்டு
ஜெயமான கமண்டல நீராருண்டாமே.

3. உண்டடா நீலஞ்சோதி மாமுமுண்டு
வுயர்ந்ததொரு மூலிகையு மதிலேயுண்டு.

"தனங்களிருக்குந்தலம் அழகர்மலை"

என்ற தலையங்கம் (39 பக்கம்)

---

1. பண்ணயிலே தனங்கிடைக்கும் தலங்கள் சொல்லேன்
உரைக்கின்றேன் அழகர்மலை யுயரத்தானும்
உண்ணியதோர் மதுரைக்கு வடமேற்காகப்
பாரிலே யலையாதே பாங்கு கேளாய்
நண்ணியிலே சுனையருகில் விருட்சமொன்று
நலமாக அதின்கீழே சுனைதானொன்று
உண்ணயிலே அருபியுட ஊறலப்பா
உலகத்தோ ரெலார் தீர்த்தமென்றே.

2. தீர்த்த மென்ற அச்சுனைமா கிடாரமொன்று
செயமான ஆயுகலில் தன்னில் தூங்கும்
நீத்தமென்ற ஓரா லுக்குள்ளேயப்பா
நேரான சித்தர் வைப்பு நெடுங்காலமாச்சு
காத்தமென்ற காயசித்தி செய்ய வேண்டில்
காசினியில் அதை யெடுத்துச் செலவு செய்து
போத மென்ற கற்பமுண்டு வாழ்வோர்க் காகும்
வையகத்தோர் கை வைத்தால் வாயா தென்னே.

நவரத்தின சிந்தாமணி சுருக்கம் '100'

(39 பக்கம்)

ஸ்ரீ:

ஆழ்வார்கள் அருளிச்செய்த பாசுரங்களும் அவர்கள் காலமும்.

கிர்.	ஆழ்வார்கள்	காலம்			நக்ஷத்திரம்	திதி	பாசுரம் எண்	திருமாலிருஞ் சோலைமலையைப் பற்றிய பாசுரம்.
1	பொய்கையாழ்வார்	துவாபரயுகம்	861902ஆ	B. C. 4202	திருவோணம்	சு. அஷ்டமி	100	—
2	பூதத்தாழ்வார்	ஷை	ஷை	ஷை	அவிட்டம்	சு. நவமி	100	2
3	பேயாழ்வார்	ஷை	ஷை	ஷை	சதயம்	சு. தசமி	100	1
4	திருமழிசையாழ்வார்	ஷை	862982ஆ	B, C, 3122	மகம்	கி. பிரதமை	216	—
5	மதுரகவியாழ்வார்	ஷை	863879ஆ	B, C. 2225	சித்திரை	பௌர்ணமி	11	—
6	நம்மாழ்வார்	கலியுகம்	43-ம் நாள்	B. C. 3102	விசாகம்	ஷை	1296	46
7	குலசேகராழ்வார்	ஷை	28ஆ	B. C. 3074	புனர்பூசம்	சு. துவாதசி	105	—
8	பெரியாழ்வார்	ஷை	47ஆ	B. C. 3055	சுவாதி	சு. ஏகாதசி	473	34
9	ஆண்டாள்	ஷை	97ஆ	B. C. 3005	பூரம்	சு. சதுர்த்தி	473	10
10	தொண்டரடிப்பொடி யாழ்வார்	ஷை	289ஆ	B. C. 2813	கேட்டை	கி. சதுர்த்தசி	55	—
11	திருப்பாணாழ்வார்	ஷை	342ஆ	B. C. 2760	ரோகணி	கி. துதியை	10	—
12	திருமங்கையாழ்வார்	ஷை	397ஆ	B. C. 2705	கார்த்திகை	பௌர்ணமி	1361	30

श्रीः

உனக்குப் பணிசெய்திருக்கும் தவமுடையேன், இனிப்போய்ஒருவன்
தனக்குப்பணிந்து கடைத்தலை நிற்கை நின்சாயை யழிவுகண்டாய்
புனத்தினைக்கிள்ளிப் புதுவிகாட்டி உன்பொன்னடி வாழ்கவென்று
இனக்குறவர் புதியதுண்ணும் எழில்மாலிருஞ்சோலையெந்தாய்!

—ஸ்ரீ பெரியாழ்வார்.

॥ ओं तत्सत् ॥

॥ श्रीसुन्दरराजार्पणमस्तु ॥